உ

சங்கற்ப நிராகரணம்

சைவசித்தாந்த சபை
சங்கரன்கோவில்

CSS

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.

ஸ்ரீமத் உமாபதி சிவாசாரிய சுவாமிகள்
அருளிச் செய்த

சங்கற்ப நிராகரணம்.

(வ்ருஷத்பவஜ உரையுடன்)

உரையாசிரியர்:
திருவாவடுதுறையாதீன வித்துவான்,
சித்தாந்த பண்டிதபூஷணம்,
சிவஸ்ரீ. ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை அவர்கள்.
(நிறுவனர், சைவசித்தாந்த சபை, சங்கரன்கோவில்)

நன்கொடையாளர்:
ஸ்ரீமாந். G. நந்தகோபால் நாடார் அவர்கள்,
53, சிவன் சந்நிதித் தெரு, தூத்துக்குடி-2.

சைவ சித்தாந்த சபை,
சங்கரன்கோவில்.
1988.

வெளியீடு எண்: 43.

உ
சிவமயம்

சமர்ப்பணம்

தாயில்பட்டி ஸ்ரீ குருசாமி நாடார் அவர்கள் குமாரர்,
தூத்துக்குடி, ஸ்ரீ. G. நந்தகோபால் நாடார் அவர்கள் மனைவி

திருமதி கமலம் அம்மாள் அவர்கள்

நினைவாக

சங்கற்ப நிராகரணம் என்னுமிச் சித்தாந்த
சாத்திர நூலை வ்ருஷபத்வஜ உரையுடன்

திருவாவடுதுறையாதீனத்து,
பிரதம பரமாசாரிய சுவாமிகள்

ஸ்ரீலஸ்ரீ நமசிவாய மூர்த்திகள்

திருவடி மலர்களில் சமர்ப்பிக்கிறோம்.

இவ்வண்ணம்,

G. N. பிரபாகரன்,
G. N. மனோகர்,
G. N. ராஜமூர்த்தி,
G. N. தியாகராஜன்,
G. N. பார்த்திபன்,

ஸௌ. சியாமளா தேவி, சாந்தி, உமா மகேஸ்வரி,

பதிப்பாசிரியர்,
வித்துவான். ச. இரத்நவேலன் அவர்கள்,
(துணைச்செயலர், சைவசிந்தாந்த சபை, சங்கரன்கோவில்,)

உ

சிவமயம்



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்,

23-ஆவது குருமஹா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக

பரமாச்சாரிய சுவாமிகள்.

தவப்ரகா சஞ்செய் சிவப்ரகாச தேவ
அவப்பே ரிருள்அழுந்து வேமை —நவப்ரகா
சஞ்செய்து நல்லடி சேர்த்துன் னடியராக்கி
அஞ்சலென்றன் னையா யருள்.

உ
சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
23-ஆவது குரு மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக பண்டாரச் சந்நிதிகள்,
திருவாவடுதுறை.

18—5—88

அருளாசியுரை

சாத்திர நூல்கள் பரபக்கம் சுபக்கம் என்னும் இருபடி நிலைகளில் நின்று பொருளை உணர்த்தும். மெய்கண்ட நூல்களில் பரபக்க ஆய்வுகள் பரவலாயிருப்பினும் அவை கற்பார்க்குக் கண்டுகொளல் அரிதாயிருத்தலின் அருள்மிகக் கொண்ட ஆசிரியர் இருவர் அவற்றைத் தனியே கூறித் தகை பெற விளக்கியும் உள்ளனர். அருணந்தி சிவம் செய்த சிவஞான சித்தியார் பரபக்கப் பகுதியும் உமாபதிசிவம் செய்த சங்கற்ப நிராகரணமும் அவ்வகை இருநூல்களாகும்.

அவற்றுள்ளும் ஈரிரண்டு அறுவகைச் சமயங்களுள் முன்னதாய புறச் சமயக் கொள்கைகளின் பொருந்தாமையைப் புலப்படக் காட்டுவது சித்தியார் பரபக்கம். இறுதிக்கண் நின்ற அகச் சமயங்களின் பொருந்தாக் கருத்துக்களையும், அத்துடன் அருளில் மாந்தரை வெருளுற மயக்கும் ஆற்றல் சிறந்த மாயா வாதக் கொள்கையையும் ஒருங்கெடுத்து ஆய்ந்துரைத்துக் காட்டுவது சங்கற்ப நிராகரணம்.

சித்தாந்த சைவம் இதுவெனத் தெளிவார்க்கு உற்றதோர் உயர்பெருந்துணை சங்கற்பநிராகரணம். இந்நூலின் மொழி நடையின் பழமையும் பொருளுணர் அருமையும் காண்பார் பலர் இந்நூலினைக் கற்றறியும் வலியிலராய் நீங்கினும் நீங்குவர்,

ஆயினும், இவ்வரும் பெரும் நூலின் பொருளையும் உணர் வாரே சித்தாந்த சைவத்தைத் தெளிந்தவர் ஆவர் என்ற கருத்தினை உளங்கொண்ட, முன்னைநாள் நமது ஆதீனத்துப் புலவராகிய திரு. ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளையவர்கள் இக்காலத் தார்க்கேற்றதோர் எளிய நடையில், பதவுரை கருத்துரை

களோடும், மதமும் மறுப்புமாய முறையில் வகுத்துரை செய்துள்ளார்.

இருமொழிப் புலமையும் சித்தாந்த சைவத்தில் உறைப்புற்ற உள்ளமும் கொண்ட அன்னார் செய்த உரையினைத் தமிழ் உலகத்திற்குப் பயன்படச் செய்யவேண்டும் என்ற நல்லெண்ணங் கொண்டு, இத்தகைய பணிகளை ஆர்வத்துடன் செய்துவரும் சங்கரநயினார்கோவில், சைவசிந்தாந்த சபையினர் இப்போது அதனை வெளியிடுவது அறிந்தோம்.

இவ்வெளியீட்டுச் செலவு முழுவதும் தூத்துக்குடி அன்பர் ஜி. நந்தகோபால் நாடார் & பிரபாகரன் ஏற்றுக்கொண்டது பாராட்டுக்குரியதாகும். அன்னார்க்கு நீண்ட ஆயுளும் நிறைந்த செல்வமும் சிறக்கவும். சித்தாந்த சைவத்திற்குச் சீரிய பணிபல செய்துவரும் இச்சபை நெடிது நின்று நிலவவும் அருளவல்ல பெருமான் நாம் வழிபடும் கடவுள் ஸ்ரீ ஞானமா நடராஜப் பெருமானின் திருவடி மலர்களைச் சிந்தையிற் கொள்வாம்.

குரு வணக்கம்

பண்ணிசைவெம் பரிதிமதி திலதயிலந்
 தீயிரும்பு பாணி யுப்பு
விண்ணநில முடலுயிர்நீர் நிழலுச்சிப்
 பளிங்குபகல் விளக்குப் பானீர்
கண்ணிரவி யுணர்வொளிபோற் பிரிவரிய
 வத்துவிதக் கலவி காட்டித்
தண்ணளிவைத் தெனையாண்ட துறைமங்க
 சிவாயகுரு சரணம் போற்றி

— மாதவச் சிவஞான யோகிகள்

உ

திருச்சிற்றம்பலம்

பதிப்புரை

உவலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம்
சவலைக் கடலுளனாய்க் கிடந்து தடுமாறுங்
கவலைக் கெடுத்துக் கழலிணைகள் தந்தருளுஞ்
செயலைப் பரவிநாம் தெள்ளேணங் கொட்டாமோ.

—திருவாசகம்

நமது சமயம் சித்தாந்த சைவம். நாம் வழிபடுங் கடவுள் ஸ்ரீபார்வதி சமேத ஸ்ரீ பரமசிவனார். அவர் அருளியன சம்ஸ்கிருத மொழியிலுள்ள இருக்காதி நான்கு வேதங்களும், காமிகாதி இருபத்தெட்டுச் சிவாகமங்களுமாம். அவவேதாகமப் பொருளைத் தமிழ்ச் சைவர்களாகிய நாம் அறிந்துய்தற் பொருட்டு நந்தமிழ் மொழியிலே பன்னிரு திருமுறைகளும் பதினான்கு சித்தாந்த சாத்திரங்களும் பரமசிவனார் திருவருளால் உளவாயின. அவற்றை அருளிச் செய்தவர்கள் திருஞான சம்பந்தராதி சமயாசிரியன் மார்களும் மெய்கண்ட தேவராதி சந்தான ஆசிரியன்மார்களு மாவர். பன்னிரு திருமுறைகள் வேதப்பொருளைத் தமிழில் எடுத்தோதும் தோத்திர வடிவின. பதினான்கு சித்தாந்த சாத்தி ரங்களும் சிவாகமத்தின் ஞானபாதப் பொருளை விளக்கும் சாத்திர வடிவின. சித்தாந்த சாத்திரங்களுக்கு தொல்லாசிரியர் பலரது நல்லுரை உண்டு. அவை இலக்கண இலக்கிய தருக்க நெறி பிறழாது நூற்பொருளை உளங்கொள்ளத் தக்க வல்லார்க்கே விளங்குவன.

சமயநூற் பிரவேசம் செய்யும் இக்காலத்துள்ளார்க்கு அவ் வல்லமையில்லாமையாலே சாஸ்திரங்களது நுண்மையும் அருமையும் எளிதிற் புலப்படாவாறு போயின. அவர்கள் பால் இரக்கங் கொண்ட இச்சபையை நிறுவிய எங்கள் ஆசிரியர் பெருமாள் சிவஸ்ரீ. ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளையவர்கள் 1926 முதலே ஆரம்பர்க்கும் விளங்குமாறு சித்தாந்த சாத்திரங்களுக்குப் புத்துரை யாக்கி வெளியிட்டார்கள். அவை பல அச்சேறி சைவ நல்லறிஞர் பாராட்டைப் பெற்று நல்லோர் பயிற்சியிலும் இருந்து வருகின்றன. இனி இச் 'சங்கற்ப நிராகரணம்' என்னும் சித்தாந்த சாத்திரத்துக்கு 1942-இல் உரைசெய்து தமது ஆசிரியராகிய சிவஸ்ரீ வி. சிதம்பர ராமலிங்க பிள்ளையவர்களிடம் காட்டிச் செப்பம் செய்து வாங்கிக் கொண்டார்கள். ஆயினும்

நூல் பெரிதாகலின் அச்சேறத் தாமதமாயிற்று. 1968இல் ஆசிரியர் அவர்கள் துறைசையாதீன வித்துவான் ஆயினர்கள். அப் பொழுது 'அத்வைதம்' என்ற நூல் திருமடத்து வெளியீடாக வெளியாயிற்று. 1970-இல் இச் சங்கற்ப நிராகரணத்தையும் உரையுடன் திருமடத்து வெளியீடாக்க விரும்பிச் சமர்ப்பித் தார்கள். யாது காரணத்தாலோ இந்நூல் அதுபோழ்து வெளி வரவில்லை. இது பற்றி ஆசிரியர் சிவஸ்ரீ. ஆ ஈசுரமூர்த்திப் பிள்ளையவர்கள் செய்த முன்னுரை வருமாறு:-

ஸ்ரீமத் உமாமதி சிவசாரிய சுவாமிகள் அருளிச் செய்த 'சங்கற்ப நிராகரணம்' என்னும் இந்நூலைத் திருவருளை முன்னிட்டு நான் படித்தேன். இதன் உரை என் அறிவில் விளங்குவது எளிதாக இல்லை. ஆயினும் சிரமப்பட்டு உரைகாண முயன்றேன். நூலைப் பதச் சேதம் பண்ணி உரையை எழுதிப் பார்க்கவேண்டும் என்பது அச்சிரமங்களுள் ஒன்று. உரையை ஒருவகையாக எழுதிப் பூர்த்தி செய்து, எனக்குச் சித்தாந்தங் கற்பித்த ஆசிரியர் துறைசையாதீன மஹாவித்துவான் சிவஸ்ரீ வி. சிதம்பர ராமலிங்க பிள்ளையவர்களிடங் கொடுத்துத் திருத்தித் தரும்படி வேண்டிக் கொண்டேன். அவர்கள் நன்மனம் வைத்து அவ்வுரையைச் சரிபார்த்து உருப்படுத்தித் தந்தார்கள்- தரும்போது *'சங்கற்ப நிராகரணத்திற்கு ஸ்ரீமாந்— ஆ. ஈசுர மூர்த்திப் பிள்ளையவர்கள் எழுதிய வுரையை நான் முற்றிலும் பார்வையிட்டுச் செப்பம் செய்திருக்கிறேன்.*

திருவாவடுதுறை,
17—10—1942. } *வி. சிதம்பர ராமலிங்க பிள்ளை'*

என அவர்கள் தம் அருமைத் திருக்கரத்தால் எழுதியும் அவ் வுரையை என்னிடம் தந்தார்கள், அவர்களை வணங்கி நான் அவ் வுரையைப் பெற்றேன். இஃது அச்சேறினல் உரை சாண்பதில் நான் பட்ட கஷ்டம் என் போன்ற மற்றவர்களுக்காவது குறையலா மென நான் எண்ணினேன். இவ்வுரை ஆரம்பர்களுக்கேனும் பயன் படலாம் என்பது என் நம்பிக்கை. ஆனல் இஃது இதுவரை அச் சேருமல் என்னிடமே யிருந்தது.

நூல் பதவுரை கருத்துக்களிலுள்ள சிறிய வடிவிலுள்ள 1, 2, 3 முதலிய எண்கள் சங்கற்பங்களையும் நிராகரணங்களையும் காட்டும். பெரிய வடிவிலான எண்கள், பாடல் அடிகளின் எண்ணிக்கையைக் காட்டுவன.

ஞானராஜதானியாகிய திருவாடுதுறை யாதீனம் 22ஆவது பட்டத்தில் வீற்றிருந்து ஞானச் செங்கோல் செலுத்தியருளும் குரு மஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமி

களின் திருவுள்ளத்துக்கு இவ்வுரை பற்றிய அடியேனது ஆசையை விண்ணப்பிக்கும் நன்னாள் அடியேனுக்குக் கிட்டலாயிற்று. ஸௌமிய ஹு தை மீ 29உ (11-2-1970) புதன்கிழமையில் துறைசையாதீன பிரதமாசாரிய சுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ நமசிவாய குருமூர்த்திகளின் குருபூஜா விசேடம் வந்தது. அன்று அவர்களை வணங்கித் திருவருட் பிரசாதம் பெற அடியேன் சென்றபோது இந்நூலுரையை ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானமவர்களின் திரு முன் வைத்து வணங்கி நின்றேன். ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம் அவர்களும் இந்நூலுரையைத் திருக்கரந்தொட்டு அடியேனையும் ஆசீர்வதித்தருளினார்கள். அவர்களின் உபய சரணார விந்தங்களையும் அடியேன் வெகு விநயத்தோடு வணங்கிக் கொள்கிறேன்.

அடியேன்,
ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை,
துறைசையாதீன வித்துவான்.

ஆசிரியர், சங்கரன்கோவில் சைவ சித்தாந்த சபையைத் தமது சொந்தப்பிள்ளையாகக் கருதியமையால் அவர்களது கை எழுத்துப் படிகளையெல்லாம் சபையில் ஒப்படைத்தார். சங்கற்ப நிராகரண உரையும் அவற்றுள் ஒன்று, காலம் வரும்பொழுது அச்சிட்டு வெளிப்படுத்துமாறும் ஆணை தந்தார்கள். 1971இல் ஆசிரியர் அவர்கள் பரிபூரணம் அடைந்தார்கள். பின்னர் சபை அவர்கள் வழி நின்று சிவபணி செய்து வருகிறது. இந்நூலுரை சபையினர்க்கு ஆசிரியர் அவர்களால் பாடம் சொல்லப்பட்டது. அப்பொழுதே இதனை அச்சிட விருப்பம் சபைக்கு உண்டு. ஆரம்பர்களுக்கேயன்றிப் பெரியோர்களுக்கும் இவ்வுரை வழிகாட்டுவது இதுகாறும் வெளியான சங்கற்ப நிராகரண உரைகளுடன் இதனையும் ஒப்பிட்டுப் பார்ப்பார்க்கு அவ்வுண்மை விளங்கும்.

இவ்வாண்டு ஆசிரியர் அவர்களது சங்கற்ப நிராகரண உரையை அச்சிட்டு வெளிப்படுத்தும் புண்ணியம் எங்களுக்கு வாய்த்தது. இவ்வுரை ஆக்கப்பட்டு 46 ஆண்டுகளின் பின்னே அச்சேறும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு நந்தமிழ்ச் சைவ நூல்கள் பல அச்சேறாது எவ்வளவின மறைந்துள்ளனவோ? சிவபிரானாரே அதனை யறிவார்.

நிற்க, சித்தாந்த சாத்திரங்கள் 14-இல் எட்டு நூல்களை அருளிச் செய்தவர் ஸ்ரீமத் உமாபதி சிவம் அவர்கள். அவை பழைய உரையுடனும், புத்துரையுடனும் பலபல காலங்களில் பல்லோரால் அச்சிடப்பட்டுள்ளன. சைவத் திருமடங்களும் அச்சிட்டு வெளியிட்டுள்ளன. சங்கற்ப நிராகரணம் தெளிவுரையுடன் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் வெளியீடு எண் 45, ஆக

வெளியாயிற்று. பதிப்பாசிரியர் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் அவர்கள். அப்பேராசிரியர் அவர்கள் 'மெய் கண்ட நூல்கள் பதினுன்கனுள் உமாபதி சிவாசாரியார் அருளி யவை ஏழாகும்' எனக் குறித்துள்ளார்கள். ஆயினும் அப் பேராசிரியர் அவர்களே 1978-இல் வெளியிட்ட திருவருட்பயன் (தெளிவுரையுடன்) என்னும் நூலுக்கு எழுதிய ஆராய்ச்சி முன் னுரையில் நூலாசிரியர் என்ற தலைப்பில் 'மறைஞான சம்பந்தர் தமது மாணவருக்குச் சித்தாந்த நுண்பொருளை நன்கு விளக்கி வந்தனர். அதன் பயனாக உமாபதி சிவம் அருளிய நூல்கள் எட்டாகும் அவை சித்தாந்த அட்டகம் எனப் பெயர் பெறும். அவையாவன:— 1. சிவப்பிரகாசம், 2. திருவருட்பயன் 3. வினா வெண்பா 4. போற்றிப் பஃறொடை 5. கொடிக் கவி. 6. நெஞ்சு விடு தூது. 7. உண்மை நெறி விளக்கம் 8. சங்கற்ப நிராகரணம். இவற்றுள் உண்மை நெறி விளக்கம் இவ்வாசிரியரால் செய்யப்பட்ட தன்று என்று கூறுவர் திரு எஸ் அனவரத விநாயகம் பிள்ளை அவர்கள்' என எழுதி முன்னையோர் நெறியை உடன்பட்டார்கள். பின்னர், பேராசிரியர் பதிப்பித்த நெஞ்சு விடு தூது (1982) போற்றிப் பஃறொடை (1981) ஆகிய நூல்கள் பதிப்புரை, ஆராய்ச்சி முன்னுரைகளில் உமாபதி சிவாசாரியார் ஆக்கியன ஏழு நூல்களே என்ற பிள்ளையவர்களின் கொள்கையைத் தமதாக்கி எவ்வகைக் காரணமும் தம் கொள்கைக்கு ஆதரவாகக் காட்டாது உண்மை நெறி விளக்கத் தைக் கைவிட்டார்கள்.

திருவாவடுதுறை யாதீன வித்துவான் திரு. க வச்சிரவேல் முதலியார் அவர்கள் 1976-இல் வெளியிட்ட திருவாவடுதுறை யாதீனத்து வெளியிடாகிய திருவருட்பயன் (விளக்க உரை களுடன்) என்னும் நூலில், நூலாசிரியர் வரலாற்றுச் சுருக்கம் என்ற பகுதியில் 'இவற்றுள் உண்மை நெறி விளக்கம் என்பதை. சீகாழிச் சிற்றம் பல நாடிகள் மாணுக்கராகிய சீகாழித் தத்துவ நாதர் இயற்றியது எனத் துணிதல் பொருந்துவதன்று. இந்த நூல் சிற்றம்பல நாடிகள் காலத்திற்கு முன் உள்ளது என்பது முத்தி நிச்சயப் பேருரையால் விளங்குதலின், தத்துவநாதர் செய்தது இந்த நூலுக்கும் துகளறு போதத்திற்கும் உள்ள ஒற்றுமையே என ஆய்வாளர் கொள்கின்றனர்'. என எஸ். அனவரத விநாயகம் பிள்ளையவர்கள் கூற்றை மறுத்துள் ளார்கள். எம் ஆசிரியர் திலகராகிய சிவஸ்ரீ. ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளையவர்களும் 'உண்மை நெறி விளக்கம்—புத்துரை' ஒன்றைத் திருநெல்வேலி சித்தாந்த சைவச் செந்நெறிக்கழகத்தாரது ஆதரவில் 29—5—61 இல் வெளியிட்டார்கள். அதன் பதிப்

புரையில் விரிவாக இவ்விஷயம் ஆராயப்பட்டு உண்மை நெறி விளக்கம் ஸ்ரீமத் உமாபதி சிவாசாரியார் ஆக்கியதே என நிலை யிடப்பட்டுள்ளது மேலும் 'ஆராய்ச்சி யென்ற பெயரால் சைவ சமூகத்தைப் பலபடியாலும் மயங்க வைத்தல் சைவ சேவை யாகுமா?'' என்ற வினவும் கேட்கப் பட்டுள்ளது. பேராசிரியர் அவர்கள் தாம் ஆக்கி வெளியிட்ட உரை நூல்களுக்கு முன் வெளிவந்த உரை நூல்களை ஒரு முறையேனும் பார்த்ததுண்டா? பார்த்தும் அதனை மறைக்க முயல்கிறார்களா?

ஸ்ரீ உமாபதி சிவாசாரிய ஸ்வாமிகள் அருளிய சித்தாந்த அஷ்டகம் என்னும் எட்டு நூல்களில் 'சங்கற்ப நிராகரணம்'' எட்டாவதாகும். புறச்சமயமாகிய மாயாவாதமும், அகப்புறச் சமயமாகிய ஐக்கியவாதி சமயமும் அகச் சமயங்களாகிய பேத வாதம், பாடணவாதம், சிவசமவாதம், சங்கிராந்த வாதம். ஈசுர அவிகார வாதம், நிமித்த காரண பரிணும வாதம் (சிவாத்து வித சைவம்), சைவவாதம் என்னும் சமயங்களின் சங்கற்பமும் நிராகரணமும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

சமயங்கள் புறப்புறம், புறம். அகப்புறம், அகம் என நான்கு ஆறுவகைப்படும். அவை யாவன:-

I புறப்புறச் சமயங்கள்:- 1. உலகாயதம், 2. மாத்திய மிகம், 3 யோகாசாரம். 4. சௌத்திராந்திகம் 5. வைபாடிகம். 6 ஆருகதம்.

II புறச்சமயங்கள்:- 1. தார்க்கிகம் 2. மீமாஞ்சகம் 3. ஏகான்ம வாதம் (மாயாவாதம்) 4. சாங்கியம் 5. யோகம், 6. பாஞ்சராத்திரம்.

III அகப்புறச் சமயங்கள்;- 1. பாசுபதம் 2. மாவிரதம் 3. காபாலம், 4. வாமம், 5. வயிரவம் 6. ஐக்கியவாத சைவம்.

IV அகச் சமயங்கள்:- 1. பாடாணவாத சைவம். 2 பேத வாத சைவம் 3. (சிவ) சமவாத சைவம் 4. சங்கிராந்த வாத சைவம். 5. ஈசுர அவிகாரவாத சைவம், 6 சிவாத்துவித சைவம்.

இனிச் சுத்த சைவம் என்பது இந்நூலுள் சைவவாதம் எனப் பெயரிடப்பட்டு ஏழாவதாகக் கூறப்பட்டுள்ளது. பக் 7-இல் அதன் விபரம் காண்க. பிறசமயங்கள் இவ்விருபத்து நான்கனுள் அடக்கப்படும்.

இவ்விருபத்து நான்கு சமயங்களுக்கு மேலாய் விளக்கமுற்று. அவையெல்லாந் தன்கண் ஏகதேசமாய் அடங்கக் கொண்டு நிற்பது நமது சமயமாகிய சித்தாந்த சைவம் அது வேதாகம மிரண்டானுந் தலையான சன்மார்க்க மென்றெடுத்துப் புகழப் படுஞ் சுத்தாத்துவித சித்தாந்த சமயம்.

சிவஞானசித்தியார் பரபக்கத்துள் 14 மதங்களும் அவற் றின் மறுதலைகளும் கூறப்பட்டன. அவை புறப்புறம், புறம் என்னுமிருவகைச் சமயங்களாம்.

அருணந்தி சிவமும், உமாபதி சிவமும் இவ்வாறு மதமும் மறுப்புமாகக் கூறியதைக் குறைகூறும் இக்காலைச் சைவர்களும் உண்டு. சங்கற்ப நிராகரணம் பாயிரப் பகுதியில் அதற்குத் தக்க பதில் அருளிச் செய்யப்பட்டுள்ளது. திராவிட மஹாபாஷ்ய காரராகிய ஸ்ரீமத் சிவஞான சுவாமிகள் ஸ்ரீ சிவஞான போத திராவிட மஹாபாஷ்யத்தில் இவ்விஷயத்தை சைவாகமப் பிராமாணியங் கூறுமிடத்து ஆராய்கிறார்கள். ஆண்டுக் காண்க.

உலகாயதம் முதல் எல்லாச் சமயங்களும் வேண்டு மென் பதைச் சைவம் உடன்படுகிறது. ஆனால் எல்லாச் சமயங்களும் ஒன்று ஆகமாட்டா. கணிதத்தில் 1. 2. 3 முதலிய எண்கள் யாவும் வேண்டும். ஆனால் ஒன்றும் கோடியும் எண் எனப் பெயர் பொதுமை பற்றிச் சமமாக மாட்டா. இக்காலைச் சமய சமரசம் பேசுவார் ஒன்றும் கோடியும் சமம் என்னுங் கொள்கையினர். அதனால் விளையும் பெருந்தீங்கு கணித பாடத்தையே பொல்லாங் காக்கிவிடும். எனவே சமய தாரதம்மியம் அறிந்து - அவற்றின் வன்மை மென்மைகள் அறிந்து—போற்றல் வேண்டும்

புறப்புறச் சமயங்களினும் புறச்சமயங்கள் மேல். புறச் சமயங்களினும் அகப்புறச் சமயம் மேல். அகப்புறச் சமயங் களினும் அகச்சமயங்கள் மேல். யாவற்றினும் மேலானது வைதிக சைவம் என்னும் சித்தாந்த சைவம். அதனாலன்றோ தாயுமான சுவாமிகளும் 'ராஜாங்கத்தமர்ந்த வைதிக சைவம்' என அருளிச் செய்தார்கள். ஆகலின் சமய தாரதம்மியமறிந்து சைவர் நன்மை கடைப்பிடிக்கச் சிவஞான சித்தியார் சங்கற்ப நிரா கரணம் ஆகிய சாத்திரங்கள் அவசியம் வேண்டுமென்க.

இத்தகைய மேன்மையான சைவசமயத்தில் பிறந்தும் இவ்வளவு மேன்மையான நூல்களைக் கற்று ஒழுகும் உரிமை யுடையராயிருந்தும் சமய தாரதம்மியங்களை உணராது அந்தோ! புறச்சமயக் குருமார்கள் காலில் விழுந்து கோடிகோடியாய்ப் பணத்தைக் கொட்டியும் இம்மை மறுமைப் பயன்களை இழந்தும்

நிற்கிறது சைவ சமுகம். சைவருள் லௌகீக கல்வி கற்று சைவ சமயக் கல்வி சிறிதும் கல்லாத உயரதிகாரிகள், ஆராய்ச்சி வல்லவர் எனத் தம்மைத் தாமே நன்கு மதித்துச் செருக்கும் பேராசிரியர்கள், தமிழே யாவும் எனக் கருதிச் சைவசமயத்தைப் புறம்போக்கும் அரசியல்வாதிகள், நாத்திகர் கையில் அகப்பட்டுத் தவிக்கும் திருக்கோயிலாதி சைவ நிறுவனங்களின் அதிகாரிகள் போன்ருேர் சைவ சமுகத்தைப் பலவகையானும் சிதறுண்டு போகுமாறு செய்கிருர்கள்.

இவர்கள் மத்தியிலே—ஆம் இத்திணிந்த இருளின் ஊடே—சிவபணி என்னும் ஒளிவிளக்கேந்தி எம் சபை முன்னே நிற்கிறது. சைவசற்சம்பிரதாயத்தை விட்டு விலகாமலும், மொழி இன அபிமானத்திற்கு அடிமைப்படாமலும். புகழவா பொருளவா விற்குள் வீழாமலும் பணியாற்றுவது சங்கரன்கோவில் சைவ சிந்தாந்த சபை என்பதை நன்கறிந்த திருவாவடுதுறை யாதீனத்து ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானங்கள் அநுக்கிரகித்து அருளுகிருர்கள். எமது பணிக்கு அவர்கள் அருளிப்பாடு பேராறுதல், பெருவலிமை.

இற்றை ஞான்று திருவாவடுதுறை யாதீனத்து ஞானச் செங் கோலோச்சி வரும் 23-ஆவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய ஸ்வாமிகள் இந்நூலுரையைத் திருக்கண் சாத்தி அருளாசியுரை ஒன்று மருளி அடியேங்களுக்குப் பேரநுக்கிரகம் செய்தருளினர்கள். அத்தேசிகோத்தமர் திரு வடித் தாமரைகளைச் சென்னி மன்னித் திகழச் செய்து போற்றித் துதிக்கிருேம்.

இவ்வரிய நூல் வெளிவர நன்கொடை தந்து சைவஉலகுக்குப் பேருபகாரம் செய்தவர்கள் சிவஸ்ரீ. G. நந்தகோபால் நாடார் அவர்களும் அவர்கள் அருமைச் செல்வர்கள் சிவஸ்ரீ பிராபகரன் முதலியோருமாவர். ஸ்ரீ நந்தகோபால் நாடார் அவர்கள் துணைவியாரும் பிரபாகரன் ஆதியோர் தாயாருமாகிய ஸ்ரீகமலத் தம்மாள் நினைவாக இந்நூல் வெளியிடப்படுகிறது. இந்நூலை அச்சிட்டு வெளிப்படுத்துவது சிறந்ததோர் சிவஞான தான மாகும். இதனினும் உயர்ந்த புண்ணியம் வேறு இல்லை. அப் பேற்றுக்கு உரிய அவர்கள் அனைவர்க்கும் சபை தனது நன்றி யோடு கூடிய வாழ்த்துக்களைச் சைவசமுக சார்பில் நின்று தெரிவித்துக் கொள்கிறது. ஸ்ரீமாந் நந்தகோபால் நாடார் அவர்கள் குடும்பம் பன்னலங்கள் பெற்றுச் சிறக்க ஸ்ரீ கோமதி சமேத ஸ்ரீசங்கரலிங்கப் பிரபுவின் திருவடி மலர்களைச் சபை பிரார்த்திக்கிறது.

சபையின் துணைச்செயலரும், ஆசிரியருமாகிய வித்துவான் ச. இரத்நவேலன் அவர்கள் இந்நூலைப் பதிப்பிக்கும் பொறுப்பை ஏற்றுச் செவ்வனே ஆற்றியுள்ளார்கள். உரையாசிரியரின் நன் மாணவருமாகிய ஸ்ரீஇரத்நவேலன் அவர்கள் வாரத்திற்கு 5 வேறிடங்களில் சித்தாந்த பாடம் நடத்தி வருகிறார்கள். பேச்சாலும், எழுத்தாலும் சிவபணி செய்கிறார்கள். சிரமம் பாராது அவர்கள் இப்பணி செய்தமைக்குச் சபை நன்றிகூறிக் கொள்கிறது. இந்நூலின் பிற்சேர்க்கைகள் இரண்டனையும் சேர்த்து அமைத்தது ஒரு தனிச்சிறப்பு.

இந்நூலில் எவ்வளவு கவனமாகப் பார்த்தும் சில அச்சுப் பிழைகள் நிகழ்ந்துவிட்டன. பெரியோர்கள் இதனைப் பொறுத்துப் பிழைகளைத் திருத்திக் கொண்டு வாசிக்குமாறு வேண்டுகிறோம்.

இந்நூலை அச்சிடும் பணியில் உதவிய யாவர்க்கும் எங்கள் நன்றி.

பழைய வைதிக சைவம் பரக்கவே.

சைவசித்தாந்த சபையார்,
சங்கரன்கோவில்.

உ

வேண்டேன்புகழ் வேண்டேன் செல்வம்
வேண்டேன்மண்ணும் விண்ணும்
வேண்டேன்பிறப் பிறப்புச்சிவம்
வேண்டார்தமை நாளும்
தீண்டேன்சென்று சேர்ந்தேன்மன்னு
திருப்பெருந்துறை யிறைதான்
பூண்டேன்புறம் போகேனினிப்
புறம்போகலொட் டேனே.

நடித்து மண்ணிடைப் பொய்யினைப்
பலசெய்து நானென தெனுமாயக்
கடித்த வாயிலே நின்றுமுன்
வினைமிகக் கழறியே திரிவேனைப்
பிடித்து முனின்றப் பெருமறை
தேடிய அரும்பொருள் அடியேனை
அடித்த டித்துவக் காரமுன்
தீற்றிய அற்புத மறியேனே

—திருவாசகம்

XI

உ

சந்தானகுரவராகிய

கொற்றவன்குடி

ஸ்ரீமத் உமாபதி சிவாச்சாரிய சுவாமிகள்

வரலாற்றுச் சுருக்கம்

(சிவஸ்ரீ J. M, நல்லசாமி பிள்ளை, பி.ஏ.பி.எல்.
அவர்கள் இயற்றியது)

குறைவிலருண் ஞானமுதல் கொற்றங் குடியடிக
ளறைமலர்த்தாட் கன்புபெற்று நாமிருப்ப தெந்நாளோ

—தாயுமான சுவாமிகள்

ஸ்ரீமத் உமாபதி சிவாச்சாரிய சுவாமிகள் தில்லை தீக்ஷதர்களில் ஒருவர். (வடமொழி, தென்மொழி ஆகிய) இருமொழியிலும் எல்லாக் கலைகளையும் ஒதியுணர்ந்தவர். இவர் ஒருநாள் சிவிகையின் மீது ஊர்ந்து செல்லும்போது மறைஞான சம்பந்த வாமிகள் திருக்கண்கடை சாந்தி பகற்குருடன் போகின்றான் எனப்பகர்ந்தனர், இதைக் கேட்டவுடன் பல்லக்கை விட்டிறங்கி அவர் அடியில் வீழ்ந்து தெண்டனிடவும், அவரால் தீக்ஷிக்கப் பட்டு உபதேசம் பெற்றனர். அவருடனிருந்து அவர் உண்டபின் அவர் எச்சிலைப் புசித்து வந்தாரானதால், தில்லை மூவாயிரவர் சாதியினின்றும் தள்ளிவைத்தனர். அதுமுதல் தில்லைக்குக் கிழக்கிலுள்ள கொற்றவன்குடி யென்னுமூரிலே வசித்து வந்தார். ஓர்கால், உற்சவ ஆரம்பத்தில், கொடியேற்றம் செய்யும்போது அது ஏற மாட்டாமையால். அசரீரி வாக்கின்படி. உமாபதி சிவத்தைத் தீக்ஷதர்கள் எல்லா மரியாதைகளுடன் அழைத்துப் போய் வேண்டவும், அவர் கொடிக்கவி என்னும் நூலை யருளிச் செய்து, அக்கொடியினை ஏறச் செய்தனர். இவர் இன்னும் செய்த அற்புதங்களாவது பெற்றான் சாம்பான் என்னும் ஓர் புலையனுக்கும், முள்ளிச்செடிக்கும் முத்தி கொடுத்தருளியது. இவர் சித்தாந்த சத்திரங்கள் 14-இல் சிவப்பிரகாசம், திருவருட்

பயன், வினா வெண்பா, கொடிக்கவி, உண்மை நெறி விளக்கம், போற்றிப் பஃறொடை, நெஞ்சு விடு தூது, சங்கற்ப நிராகரணம் ஆகிய எட்டு நூல்களையும் செய்தது மல்லாமல், வடமொழியில் பௌஷ்கர ஆகமத்துக்கு விருத்தியொன்றும் தமிழில் கோயிற் புராணம், திருத்தொண்டர் புராணசாரம், திருமுறை கண்ட புராணம், சேக்கிழார் நாயனார் புராணம், திருப்பதிக் கோவை, சிவக்ஷேத்திர சிவநாமக்கலி வெண்பா முதலியவற்றையும் செய் தருளினார்.

.........இவர்களியற்றிய சித்தாந்த சாத்திரங்களைப் பெரும் பாலும் யான் ஆங்கிலத்தில் விருத்தியுரைகளுடன் இயற்றி யுள்ளேன். அவைகளைக் கண்ணுற்ற புறநாட்டாரும் அவற்றின் பெருமையினைப் புகழாதார் இல்லை :- மெய்கண்டான் சந்ததி வாழ்க.

ஸ்ரீ உமாபதி சிவாசாரியார் பல நல்லாசிரியர்க்குச் சிவ ஞானோபதேசஞ்செய்து பலநாள் ஞானநிஷ்டை செய்து கொண்டி ருந்து கொற்றவன் குடிக்கண்ணே சித்திரைமதியிலே அத்த நட்சத் திரத்திலே சுத்தாத்துவித முத்தியடைந்தார்.

உ

ஸ்ரீ உமாபதி தேவ நாயனார் துதி

திருவார் கயிலைத் திருநந்தி தேவர் திருமரபில்
வருமா சிரியன் மறைஞான சம்பந்த மாகுரவன்
அருள்சார் உமாபதி தேசிகன் செஞ்சர ணாம்புயமென்
மருவார் மலரிணை யுள்கி வழுத்தி வணங்குதுமே

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீமெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க

உரையாசிரியர்

சிவஸ்ரீ ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளையவர்கள்

(சுருக்க வரலாறு)

''சங்கற்ப நிராகரணம்'' என்னுமிச் சித்தாந்த சாத்திர நூலுக்குப்புத்தம் புத்துரை ஆக்கிச் சைவத் தமிழுலகுக்கு உபகரித்தவர் துறைசை யாதீன வித்வான் சித்தாந்த பண்டித பூஷணம் சிவஸ்ரீ ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளையவர்கள். திருநெல்வேலியைச் சார்ந்த பேட்டை என்னுந் திருமங்கை நகர் இவர்கள் ஜன்ம ஸ்தானம். தந்தையார் சிவஸ்ரீ த. ஆறுமுகநயினுர் பிள்ளையவர்கள். தாயார் மாதுஸ்ரீ ஈசுரவடிவு அம்மையார். 12-3-1897 இல் இவர்கள் இவ்வுலகில் தோன்றினுர்கள். கல்லூரியில் F.A வரை பயின்று இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றுத் திருநெல்வேலி மாவட்டத்தில் 4 ஆண்டுகள் ஆசிரியர் பணியாற்றினுர்கள். 1926 முதல் 1948 வரை செங்கற்பட்டு மாவட்டத்தில் ஆசிரியர் பணியாற்றினுர்கள். 1948 முதல் 1958 வரை திருநெல்வேலி மாவட்டத்துச் சங்கரநயினுர் கோயிலிலேயே ஆசிரியர் பணியாற்றினுர்கள். ஏறத்தாழ 36 ஆண்டுகள் ஆசிரியர் பணியாற்றிப் பல்லாயிரம் மாணவர்களுக்கும் எழுத்தறிவித்த இறைவனுயதோடல்லாமல் இடையருது சிவ பணியும் செய்தார்கள். 40-க்கும் மேற்பட்ட நூல்களும் பன்னூறு கட்டுரைகளும் இவர்கள் ஆக்கியன. 1) திருவருட் பயன் 2) கொடிக்கவி 3) போற்றிப் பஃறொடை 4) வினு வெண்பா 5) இருபா இருபஃது 6) உண்மை நெறி விளக்கம் 7) உண்மை விளக்கம் ஆகிய சாத்திரங்களுக்கு இவர்கள் உரையாக்கி வெளியிட்டுள்ளார்கள். சிவஞானபோதச் சூத்திர விளக்கங்களாக 1) அந்தம் ஆதி 2) சிவ சிவா 3) நான் 4) பயனியல் சூத்திரக் கட்டுரைகள் வெளியாகியுள்ளன. சிவ பரத்துவ விளக்கமாக 1) சுலோக பஞ்விஷயம் 2) சிவபரத்துவ நிச்சயம் என்ற இருநூல்கள் ஆக்கியுள்ளார்கள். ஆய்வு நூல்களாக 1) அத்வைதம் 2) திருக்குறள் பொதுநூலா? 3) சைவாலயங்களில் சம்ஸ்கிருத மந்திரங்களே வேண்டும் 4) நாடும் நவீனரும் 5) நம;பார்வதீ பதயே 6) திருக் கல்யாணம் 7) சிவஞானபோதம் தமிழ் முதல் நூலன்று, மொழிபெயர்ப்பே (120 காரண மறுப்பு) 8) சமணர் கழு

வேற்றும் 9) பொதுமொழி 10) சைவ வைணவப் பாவைகள் ஆராய்ச்சி 11) சங்கரநயினர்கோவில் 12) கற்பு என்னுந் திண்மை முதலிய பல வெளியாயின. இவர்கள் ஆக்கிய சுய மரியாதை இயக்கச் சூருவளி வினவடிவில் மட்டுமே அமைந்த முதல் நூல். தமிழில் உரைநடையில் இவர்களுக்கு முன்னரோ பின்னரோ வினா வடிவிலேயே நூல் ஆக்கியார் இதுவரை நாம் அறியவில்லை. செய்யுள்வடிவில் 1) கோமதி சதரத்ந மாலை 2) மேரூர் முருகன் பதிற்றுப்பத்தந்தாதி 3) சிவபரத்துவ நிச்சயம் ஆகிய மூன்று நூல்கள் ஆக்கியுள்ளார். இவர்கள் உரை ஆக்கி வெளிவராது கையெழுத்து வடிவில் உள்ளன 1) சங்கற்ப நிராகரணம்—புத்துரை 2) சிவப்பிரகாசம்—புத்துரை 3) நெஞ்சு விடுதூது—புத்துரை.

இவற்றுள் சங்கற்ப நிராகரணம் இப்பொழுது உரையுடன் அச்சேறி உங்கள் கையிலுள்ளது. விரைவில் எஞ்சிய இரு நூல்களும் எங்கள் சபையாரால் அச்சிடப்பட்டு வெளிவரும்.

ஆசிரியர் அவர்கள் சிதம்பரம், சங்கரன்கோவில்' திருநெல்வேலி ஆகிய ஊர்களில் சித்தாந்த சாத்திர பாடங்களும் நடத்தியுள்ளார்கள். இவ்வாசிரியர் நிறுவியதே சங்கரன்கோவில் சைவசித்தாந்த சபை. 'எனது உண்மையான வாரிசு இச் சபையே' என்று ஒரு முறை குறிப்பிட்டார்கள். ஆம் அவர்களது வாரிசாகவே இச்சபை சிவ பணியாற்றி வருகிறது. சைவத் தமிழர்க்கு ஆசிரியர் ஆற்றிய பணிகள் வியக்கத் தக்கன; போற்றி வணங்கத் தக்கன.

30–5—1968 அன்று கல்லிடைக்குறிச்சிக்கு எழுந்தருளிய திருவாவடுதுறையாதீனத்து இருபத்திரண்டாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாச்சாரிய சுவாமிகள் ஆசிரியர் அவர்களை அழைத்து அநுக்கிரகித்து ஆதீன வித்து வானுகவும் நியமித்தருளினுர்கள். அதன் பயனுக ஆதீன வெளியீடாக 29-6-69 அன்று ஆசிரியர் ஆக்கிய 'அத்வைதம்' என்ற நூல் வெளிப்பட்டது. லோகோபகாரமாக பல்வேறு சிவ பணியாற்றிய இவ்வாசிரியர் பெருந்தகை 19-10-71 மாலை 6-45 மணியளவில் ஐப்பசி மீ சுக்கிலபக்ஷ பிரதமை தியன்று தமது 75-ஆம் வயதில் இவ்வுலக வாழ்வை நீத்து ஸ்ரீ கோமதி சமேத ஸ்ரீசங்கரலிங்கப்பெருமான் குஞ்சிதபாத நீழல் எய்தினுர்கள். சைவமானமும் அஞ்சாநெஞ்சமும் புகழவா பொருளவா இல்லாத தீரமும் உடைய சிங்கவேறு ஒன்று தமிழ்ச்சைவ உலகை விட்டுப் போய்விட்டது.

ஆயினும் அவர்கள் விட்டுச் சென்ற சிவபணியை அவர்களது வழிநின்று தொடர்ந்து எம் சபை ஆற்றும்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.
பழைய வைதிக சைவம் பரக்கவே.

உ
சிவமயம்

திருமதி கமலம் அம்மாள்.

அன்னை யுனதருட் பாதம் பணிந்தோம்எம்
முன்னை வினைமுடிக்க முக்கண்ணல் — லன்னை
அனையான் பதம்பணிந்தோம் நன்னய வாழ்வு
தனையடைவோம் தண்ணருள் சார்ந்து.

இங்ஙனம்,
புத்திர — புத்திரிகள்.

அன்னையை வணங்குகிறேன்

G. N. பிரபாகரன், B A., தூத்துக்குடி.

திருச்சிற்றம்பலம்

தாயுநீயே தந்தைநீயே சங்கரனே யடியேன்
ஆயுநின்பா லன்புசெய்வா னுதரிக்கின் றதுள்ளம்
ஆயமாய காயந்தன்னு ளைவர்நின்ருென் றலொட்டார்
மாயமேயென் றஞ்சுகின்றேன் வலிவலமே யவனே.

திருச்சிற்றம்பலம்

(1—50—7)

''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' என்பது ஔவையின் அமுதமொழி, என் அன்னை திருமதி கமலம் அம்மாள். பிதா திருவாளர் G. நந்த கோபால் நாடார் அவர்கள்.

என் தாயார் சிவகாசியைச் சேர்ந்த திரு. A. கருப்பையா நாடார்க்கு வள்ளியம்மாள் பால் 1—5—36 அன்று பிறந்தார். முறையாக வளர்ந்து பயில்வன பயின்று தமது பதினாரும் வயதில் 12—12—51 அன்று என் தந்தையார்க்கு வாழ்க்கைப் பட்டார். என் தந்தையார் சிவகாசியை அடுத்த தாயில்பட்டியைச் சேர்ந்த குருசாமி நாடார் அவர்களது செல்வக் குமாரர். ஆயினும் தந்தையார் அவர்கள் 1948 முதல் தூத்துக்குடியிலே வியாபார விஷயமாக வாழ்ந்து வருகிருர்கள்.

எந்தையும் தாயும் ஆண்மக்கள் ஐவரையும் பெண் மக்கள் மூவரையும் பயந்தனர். அவர்களில் ஆண்மக்கள் G.N. பிரபாகரன் G. N. இராஜமூர்த்தி, G. N. மனோகர், G. N. தியாகராஜன், G. N. பார்த்திபன் என்னும் ஐவர். பெண்மக்கள் ஸௌ. சியாமளாதேவி. சாந்தி, உமாமகேஸ்வரி ஆகியோர்.

32 ஆண்டுகள் எம் தந்தைக்கு ஏற்ற மனைவியாய், எங்களது இனிய தாயாய் இல்லறமாம் நல்லறத்தை எம் தாய் நடத்தினர். எம் தந்தையார் காரியம் யாவினும் கைகொடுத்து நின்ருர் எம் தாய். கனிவும் பணிவும் எம் தாயின் சொத்துக்கள். ஆடம்பர மில்லாமல் எம் தாய் எளிய வாழ்வு வாழ்ந்தார்.

எங்கள் தந்தையார் 1973 முதல் சொந்த வியாபாரம் தொடங்கி நடத்தி வருகிருர்கள். பிள்ளைகளாகிய நாங்களும் உறுதுணையாக உடன் நிற்கிறோம். என் தாயார் பின்னளில் உடல் நலிவுற்ருர்கள். 18—12—83 அன்று எங்களை யெல்லாம் கை

விட்டு இவ்வுலக வாழ்வை தமது 48ஆம் வயதில் நீத்தார்கள். பரிவும், கருணையும் நிறைந்த கமலமுகம் வாய்ந்த கமலத்தம்மையைக் காண வழியில்லாது நாங்கள் வாடுகிறோம்.

உலக வாழ்வு நிலையற்றதுதான். ஆயினும் அன்னையை இழத்தல். அதனிலும் இளமைக்காலத்தில் இழத்தல் கொடுமையே அன்னையின் நினைவு எங்களை விட்டு அகலவில்லை. அவ்வம்மையின் நினைவாகச் 'சங்கற்ப நிராகரணம்' என்னும் சித்தாந்த சாத்திர நூலை உரையுடன் வெளியிடுவது எங்களது புண்ணிய வசமே. எங்கள் தந்தையார் இந்நூல் வெளிவர உதவினார்கள். 'நல்ல தாய் தந்தை ஏவ நானிது செய்யப் பெற்றேன்' என்ற அப்பூதியடிகள் மூத்தமகனார் திருநாவுக்கரசு கூறிய பூரிப்பான தொடரே எங்கள் எண்ணத்தில் தங்கி நிற்கிறது.

இவ்வகையில் எங்களை ஊக்கப்படுத்த இந்நூற்பணியைச் செவ்வையாய்ச் செய்து உதவிய ஆசிரியர். வித்துவான். ச. இரத்நவேலன் அவர்களுக்கும், சங்கரன்கோவில் சைவ சித்தாந்த சபையார்க்கும் என் பணிவான வணக்கங்கள்.

திருச்சிற்றம்பலம்

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஒரு ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்று வாய்நீ
துணையாயென் நெஞ்சந்து றப்பில் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத் தும்நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

திருச்சிற்றம்பலம்.

—அப்பர் சுவாமிகள்

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீமெய்கண்டதேசிகன் திருவடி வாழ்க

ஸ்ரீமத் உமாபதி சிவாசாரிய சுவாமிகள்
அருளிய

சங்கற்ப நிராகரணம்

(மூலமும் 'வ்ருஷப த்வஜம்' என்னும் உரையும்)

*இடபத் துவச னிணையடி யேத்தியா
னிடபத் துவச வுரையியற் றிடுவனே.

விநாயக வணக்கம்

திருந்திய வருந்தவம் பொருந்துபன் முனிவர்
கமையாக் காத லமையாது பழிச்சும்
நிகரில் செக்கர்ப் புகர்முகத் தெழுந்த
புனிற்று வெண்பிறைத் தனிப்பெருங் கோட்டுத்
தழைசெவி மழைமதப் புழைநெடுந் தடக்கை

வாட்டரு மும்மை நாட்ட நால்வாய்ப்
பாச மங்குசந் தேசுறு மெயிறெண்
கனியிவை தாங்கும் புனித நாற்கரத்
தங்கதங் கடகம் பொங்கிழை யார
நிறைமணிச் சுடிகைக் கறையணற் கட்செவி

கொண்ட திண்பெரும் பண்டிக் குறுந்தாட்
களிறுத னிருகழல் கருதா
வெளிறுறு துயரம் வீட்டினம் பெரிதே.

---

*இஃது உரையாசிரியர் செய்து கொண்ட காப்பு

(பதவுரை):- திருந்திய — சிறந்த; அருந்தவம்—அரியதவங்கள்; பொருந்து — நிறைந்துள்ள; பல் முனிவர் — எல்லா முனிவரும்; கமையா — அளவுபடாத; காதல் — பத்தியுடன்; அமையாது — —இடையீடில்லாமல்; பழிச்சும் — தோத்திரிக்கிற; நிகர் இல் — ஒப்பில்லாத; செக்கர் — சிவந்த; புகர் — புள்ளிகள் (மலிந்த); முகத்து—முகத்தையும்; எழுந்த—தோன்றிய; புனிற்று— இளைய; வெள்—வெள்ளிய; பிறை — பிறைச் சந்திரன் (போன்ற); தனி பெரும் — ஒரு பெரிய; கோட்டு — கொம்பையும்; தழைசெவி— பரந்த காது; மழை - மழை (போற் பொழிகிற); மதம் – மதநீர்; புழை — துவாரம் (பொருந்திய); நெடும் — நீண்ட; தடகை— பருத்த துதிக்கை; வாள்தரு — ஒளியைத் தருகிற; மும்மை — மூன்று; நாட்டம் — கண்கள்; நால்வாய்—தொங்குகின்ற வாய் (என்கிற இவற்றையும்); பாசம் — கயிறு; அங்குசம்— தோட்டி; தேசுஉறும்—ஒளி பொருந்துகிற (மற்றொரு); எயிறு — கொம்பு; ஒள்கனி — அழகிய (மாங்) கனி (என்கிற); இவை — இவற்றை; தாங்கும்—பிடித்துள்ள; புனித—சுத்தமான; நால் — நான்கு; கரத்து—கைகளையும் (கொண்டதாயும்); அங்கதம் தோள்வளை; கடகம்—கைவளை; பொங்கு—சிறந்த; இழை - ஆபரணம்; ஆரம்— மாலை (ஆகிய இவற்றைக் கொண்டதாயும்); மணி — இரத்தி னங்கள்; நிறை – நிறைந்த; சுடிகை—தலையையும்; கறை—விஷம் (பொருந்திய ; அணல் — மிடற்றையும் (உடைய ; கட்செவி— பாம்பை; கொண்ட — கொண்டதாயும்; திண் — உறுதியான; பெரும்-பெரிய; பண்டி — வயிறு; குறும் — குறுகிய; தாள் — கால்கள் (என்கிற இவற்றைக் கொண்டதாயுமுள்ள) களிறுதன்— யானையின்; இரு—இரண்டு; கழல்—திருவடிகளையும்; கருதா— தியானித்து; வெளிறு — குற்றம்; உறு — சேர்ந்த; துயரம் — துக்கங்களை; பெரிது — முழுவதும்; வீட்டினம் — தொலைத்துக் கொண்டோம் (யாம்).

முகத்து, கோட்டு, கரத்துக்களிறு எனவும், கொண்ட களிறு எனவும் முடிக்க.

பழிச்சும் இருகழல் என்க. அக்கழலை யாமுங் கருதித்துயரம் வீட்டினம் என்பது. கட்செவி ஈண்டுப்பெயர். களிறு ஸ்ரீவிநாயகப் பெருமானர்.

பாயிரம்

பெருங்கட லுதவுங் கருங்கடு வாங்கிக்
கந்தரத் தமைத்த வந்தமில் கடவுள்
பாலரை யுணர்த்து மேலவர் போலக்
கேட்போ ரளவைக் கோட்படு பொருளா
லருளிய கலைக ளலகில வாலவை

பலபல சமயப் பான்மைத் தன்றே
யஃதா
லந்நூற் றன்மை யுன்னிய மாந்த
ரிதுவே பொருளென் றதனிலை யறைதலின்
வேற்ரோர் பனுவ லேற்ரோர்க் கிசையா

மாறு பாடு கூறுவ ரத்துற்
புறச்சம யங்கள சிறப்பில வாகி
யருளின் மாந்தரை வெருளுற மயக்கி
யலகைத் தேரி னிலையிற் றிரு
மீங்கிவை நிற்க நீங்காச் சமய

மூவிரு தகுதி மேவிய தாமு
மொன்ரே டொன்று சென்றுறு நிலையி
லாறு மாரு வீறுடைத் திவற்று
ளெவ்வ மில்லாச் சைவநற் சமயத்
தலகி லாகம நிலவுத லுளவவை

கனக மிரணியங் காஞ்சன மீழந்
தனநிதி யாடகந் தமனிய மென்றிப்
பலபெயர் பயப்பதோர் பொருளே போலப்
பதிபசு பாச விதிமுறை கிளக்கும்
வாய்ந்த நூல்க ளாய்ந்தன ராகி

யாசா ஞகி வீசிய சமத்துட
னேழஞ் சிருநூ றெடுத்த வாயிரம்
வாழுநற் சகன மருவா நிற்பப்
பொற்பொது மலிந்த வற்புத ஞனி
யாரும் விழவிற் பொற்றே ராலயத்

தேரு வெண்மர் நிரையி லிருப்ப
மயங்கு வாத மாயா வாதி
முயங்கிட வொருதலை முதுவெதிர் மணிசேர்
பெண்ணை சூழ்ந்த வெண்ணையம் பதிதிகழ்
மெய்கண் டவனருள் கைகண் டவர்களி

லொருவ ரொருதலை மருவி யிருப்ப
வஞ்சப் பிறவிக் கஞ்சிவந் தொருவ
னேதிறை யருளென வீதெனு மாயா
வாதியை யயலினர் மறுதலைத் தருடர
மற்றவ ரயலின ரவருரை மறுத்துச்

சொற்றர வயலின ரவருந் தொலைவுற்
றின்னே யெவரு முன்னே கழியுழி
யாங்கய லிருந்த வருளின ரழகிது
நீங்கள்சங் கற்ப நிராகரித் தமையென
மற்றவ ருரைத்த சொற்றரு பொருள்கொடு

வாத செற்ப விதண்டையு மேதுவு
மோது நால்வகை யுவமையுந் நிகழ்தர
வருள்சேர் மாந்தர் வெருள்சே ராமற்
றர்க்கமு விடயமுங் கற்க
நற்கவி மாந்தர் நகநவிற் றுவனே.

(பதவுரை:-) பெருங்கடல்—பெரிய திருப்பாற்கடல்; உதவும்—கொடுத்த; கருங் கடு—கரிய விஷத்தை; வாங்கி—உண்டு; கந்தரத்து — கண்டத்தில்; அமைத்த — அடக்கிய; அந்தம் இல் — அழிவில்லாத; கடவுள்—சிவபிரான்; பாலரை-சிறுபிள்ளைகளுக்கு (அவர் பக்குவத்தின் அளவை யறிந்து அவராற் கொள்ளப்படக் கூடிய கல்வியை); உணர்த்தும் — புகட்டுகிற; மேலவர்போல—ஆசிரியர்போல; கேட்போர்—கிரகிக்கிறவருடைய (பக்குவத்தின்) அளவை—அளவை (அறிந்து அவரால்); கோட்படு — கொள்ளப் படக்கூடிய; பொருளால் — சமயங்களை வைத்து; அருளிய — ஆக்கிய; கலைகள்—சாத்திரங்கள்; அலகுஇல – கணக்கில்லாதன. (ஆகையால்); அவை — அச்சாத்திரங்கள்; பலபல — பலவேறு; சமயம் — சமயங்களுக்கு; பான்மைத்து — உரியவாயுள்ளன; அஃதால்—அதனால்; அந்நூல் — அச்சாத்திரங்களின்; தன்மை—

இயல்பு (சமயங்களை; உன்னிய – ஆராயத்தொடங்கிய (ஒருசார்); மாந்தர் – மனிதர் (தாம் ஆராய்ந்த சாத்திரத்தளவில் திருப்தி யடைந்து); இதுவே – இச்சமயந்தான்; பொருள் என்று – மெய் யென்று; அதன் – அச்சாத்திரத்திற்கண்ட; நிலை – சமயத்தையே (அங்கீகரித்து); அறைதலின் — பேசுகிறபடியால்; வேறு ஓர் — மற்றொரு; பனுவல் - சாத்திரத்தில் (கண்ட சமயத்தை இச்சமயந் தான் மெய்யென்று); ஏற்றோர்க்கு — அங்கீகரித்துப் பேசுகிற மற்றொரு சார் மனிதருடன்; இசையா — ஒத்துப்போகாத; மாறுபாடு — வாதம்; கூறுவர் — பேசுவர்; அதனுல் — அவ்வாதத் தால் (இருக்கு முதலிய நான்கு வேதங்களும், காமிக முதலிய இரு பத்தெட்டாகமங்களுமாகிய இவ்வரம்புக்குளடங்காத மூன்று வகை); புறச்சமயங்கள் — புறச்சமயங்களுர்; சிறப்பு – மதிப்பு; இலஆகி — இல்லாதனவாகி (தம்மை யாசரியாவிடில் நரகமே பிராப்த மென்று சிவபிரானுடைய); அருள் — அருளுக்கு (யோக்கியர்); இல் – ஆகாத; மாந்தரை – சாமானியரை; வெருள் — அச்சம்; உற — கொள்ளும்படி (தமக்கு); மயக்கி – வசமாக்கி (முடிவில்); அலகைத் தேரின் நிலையில் – கானல் நீர்போல (பயன் படாமல்); தீரும் – கழியும்; ஈங்கு – இந்த அளவில்; இவை – இச் சமயங்கள்; நிற்க – நிற்க. (இனி, வேத வரம்புக்குள் நின்று); நீங்கா – விலகாத (நான்காம் வகையைச் சேர்ந்த, மூவிரு தகுதி மேவிய – ஆறுகிய (அக); சமயம் தாமும் – சமயங்களும்; ஒன்றோ டொன்று – தம்முள்; சென்று உறுநிலையின் — ஒப்பிடப்படுகிற போது (இந்த); ஆறும்-ஆறு சமயங்களும்; (பதி பசு பாச சொரூப லக்கணங்கள் சிலவற்றில் தவிர மற்றைப் பகுதிகளில்); மாறு — முரணாத; வீறு உடைத்து – சிறப்பையுடையன; இவற்றுள் — இச் சமயங்களுள் (சேர்ந்து); எவ்வம் இல்லா — குற்றமடையாத; (சித்தாந்த சைவம் — சைவம் (என்கிற); நல்சமயத்து – அதீத சமயத்துக்கென; அலகு இல் — கணக்கில்லாத; ஆகமம் – ஆகம சாத்திரங்கள்; நிலவுதல் உள – நிலைத்துள்ளன; அவை – அவ்வாக மங்கள் (பலவாயினும்); கனகம், இரணியம் காஞ்சனம் ஈழம் தனம் நிதி ஆடகம் தமனியம் என்று – கனகம் முதலியவாகிய; இப் பல பெயர் – இந்தப் பல பெயர்களும் (பொன் என்கிற); ஓர் பொருளே – ஒரு பொருளையே; பயப்பது போல – தருவன போல; பதி பசு பாச விதி — பதி பசு பாச வியல்பு (என்கிற ஒரு பொரு ளையே); முறை – ஒழுங்காகத் (தருக்கித்து); கிளக்கும் – விளக்கும் (நிற்க. அவ்வச்சமயங்களுக்கு ; வாய்ந்த – உரிய; நூல்கள் — சாத்திரங்களை; ஆய்ந்தனர் ஆகி — ஆராய்ந்து; ஆசான் ஆகி — ஆசிரியராகி (உள்ளத்தில்); விசிய — பரந்த; சமத்துடன் — பொறுமையோடு; எண்மர் — எட்டுப்பேர்; வாழும் — நிகழும்;

நல்—நல்ல; சகனம் — சகவருஷம்; ஏழ் அஞ்சு இருநூறு எடுத்த ஆயிரம்—ஆயிரத்து இருநூற்று முப்பத்தைந்து; மருவா நிற்ப—வர (அவ்வாண்டில் சிதம்பரத்து ; பொன்பொது-கனக சபையில் (எழுந்தருளியுள்ள : மலிந்த அற்புதன் — பூரண ஞான சொரூப ஸ்ரீநடராஜப் பெருமானுரின்; ஆனி—ஆனி மாத; ஆரும் விழாவில் —ஆருந் திருவிழாநாளன்று; பொன்—அழகிய; தேர் ஆலயத்து—தேர் மண்டபத்தில்; ஏரு—ஏறி; நிரையில்—வரிசையாக; இருப்ப —இருந்தனராக; (அப்போது அவ்வரிசையில் ; மயங்கு—குழறு படையான; வாத—வாதமேபேசுகிற; மாயாவாதி—மாயாவாத சமயி (ஒருவன்); ஒரு தலை—ஒரு கோடியில்; முயங்கிட-பொருந்தி யிருப்ப; முதுவெதிர்—முதிர்ந்த மூங்கிலின்; மணி — முத்துக்களை (நீர் கரைகளில்); சேர்—சேர்க்கிற; பெண்ணை—பெண்ணையாறு; சூழ்ந்த — வளைந்த; வெண்ணை — திருவெண்ணெய்நல்லூர் (என்கிற); அம்பதி — அழகிய நகரில்; திகழ்—அவதரித்தருளிய; மெய்கண்டவன் — ஸ்ரீமெய்கண்டதேசிக சுவாமிகளின்; அருள் அனுக்கிரகத்தை; கை கண்டவர்களில்—பெற்றவர்களுள்; ஒருவர் — ஒருவர்; ஒருதலை — மற்றொரு கோடியில்; மருவியிருப்ப — பொருந்தியிருப்ப (அப்போது பக்குவி ; ஒருவன் — ஒருவன்; வஞ்ச—பொல்லாத; பிறவிக்கு-பிறவி நோய்க்கு; அஞ்சி—பயந்து (அம்மண்டபத்துக்கு); வந்து—வந்து; (ஒருகோடியில் மாயாவாதி யும், மற்றொரு கோடியில் அவ்வனுக்கிரகம் பெற்றாரும் இடையிற் பிறசமயவாதியர் எட்டுப்பேரும ஆகப் பத்துப்பேர் கூடியிருந்த அச்சபையைப் பார்த்து); இறை அருள் — 'சிவனருள்; ஏது—எப்படிப்பட்டது ?' என—என்று வினவ (அஃது); ஈது — இப்படிப் பட்டது; எனும்-என்று (தன் சமயக் கொள்கையை விடையாகக்) கூறிய; (அந்த) மாயாவாதியை—மாயாவாத சமயியை; அயலினர் —அருகிலிருந்த (மற்றொரு) சமயி; மறுதலைத்து—நிராகரித்து (அந்த); அருள் — அருள் (இப்படிப்பட்டதென்று தன் சமயக் கொள்கையை விடையாக); தர-கூற; அவர்-அவனுடைய; உரை-சமயக்கொள்கையை; அவர்-அவனுக்கு; அயலினர்-அருகிலிருந்து (வேறொரு) சமயி; மறுத்து-நிராகரித்து (அவ்வருள் இப்படிப்பட்ட தென்று தன் சமயக்கொள்கையை); சொல்தர-விடையாகக் கூற; அயலினர வரும்-அந்தச்சமயியும் (அவனுக்கருகிலிருந்த இன்னொரு சமயியால் அப்படியே நிராகரிக்கப்பட்டு); தொலைவுஉற்று-ஒழிந்து; இன்னே — இப்படியாக (அந்த); எவரும்—எல்லாச் சமயிகளும்; முன்னே — முதலில் (பேசி); கழியுழி — அடங்கியபின்; அங்கு — அவ்வரிசையில்; அயல்—மற்றொரு கோடியில்; இருந்த—இருந்த (அந்த); அருளினர் — அனுக்கிரகம் பெற்றவர் (அச்சமயவாதி களைப் பார்த்து); நீங்கள் — 'நீங்கள்; சங்கற்பம்—சங்கற்பங்களை; நிராகரித்தமை — நிராகரித்தது; அழகிது—வெகு நேர்த்தி'; என

— என்று கூறி (வியந்து பிறகு தம்மையடுத்து முன்னிருந்த சமயி அவ்வருள் இப்படிப்பட்டதென்று விடையாகக்கூறிய அவனுடைய சமயக்கொள்கையை மறுத்து); அவர் -- அவ்வனுக்கிரகம் பெற்ற வர்; உரைத்த--பேசிய; சொல் -- நிராகரணம் (வரை ; தரு—வெளியான; பொருள் -- சங்கற்ப நிராகரணங்களை (நான் உள்ளு றையாக ; கொடு - கொண்டு; வாத செற்ப விதண்டையும் -- வாதமும், செற்பமும், விதண்டையும்; ஏதுவும்-ஹேதுவும்; (வினை பயன் மெய் உரு என்று நால்வகை—நான்காக; ஓது—சொல்லப் படுகிற; உவமையும்-உவமையும்; (ஆகிய அளவை யிலக்கணங்கள்) திகழ்தர நிரம்ப வைத்துச் சிவபிரானுடைய); அருள்—அருளை; சேர் பெற நிற்கிற; மாந்தர் — சாதகர்; வெருள்சேராமல் — அஞ்சாமல்; தர்க்கமும்-தர்க்க முறையையும் (அதனுற் சித்திக்கக் கூடிய); விடயமும்—விஷயத்தையும்; கற்க—கற்றுக்கொள்ளவும்; நல்கவி—நல்ல புலமை (மிக்க); மாந்தர்—மனிதர் (சபாஷ் என்று கூறி); நக-மெச்சவும் (சங்கற்ப நிராகரண மென்கிற இந்நூலாக); நவிற்றுவன்—சொல்லுவேன்.

புறச்சமயங்கள் புறப்புறம், புறம், அகப்புறம் என மூன்று வகையினவாய் வகைக்கு ஆருக உலகாயத முதல் ஐக்கியவாத மீருகவுள்ள பதினெட்டு.

சகன்—சாலிவாகனன். அவன் பெயராலுள்ள வருடம் சகனம். சகனம் எனினும் சகாப்தம் எனினும் ஒன்றே. சக+ அப்தம். அப்தம்—வருஷம்; ‘ வாழும் ’ சகனத்துக்கும், ‘ நல் ’ சகனுக்கும் அடை.

மாயாவாதிமுதல் அவ்வனுக்கிரகம் பெற்றவர் வரைப் மகின்மர் கூடியது அச்சபை. அதில் முன்னவன் நிராகரணமும், பின்னவர் சங்கற்பமுங் கூறவில்லை, இரண்டுங் கூறியவர் இடைப் பட்ட எண்மரே. ஆகையால் அச்சபை எண்மர் கூடிய சபை எனப் பட்டது.

பாடாணவாத சைவம், பேதவாதசைவம், சிவசமவாத சைவம், சிவ சங்கிராந்தவாத சைவம், ஈசுர அவிகாரவாத சைவம், நிமித்த காரண பரிணாமவாத சைவம், சுத்த சைவம் என்கிற ஏழும் நாலாம் வகையாகிய அகச் சமயங்கள். ஒருசாரார் பேதவாதத்தைப் பாடாணவாதத்தில் அடக்குவர். இன்னொரு சாரார் அது செய்யார். ஆனுல் சுத்த சைவத்தை விடுவர். அதனுல் அவையும் பெரும்பாலும் ஆறென்றே சொல்லப்படும். இந்நூலில் அவை ஏழாகவே வகுக்கப்பட்டுள்ளன. நிமித்தகாரண பரிணாம வாதமென்பதும் சிவாத்துவிதமென்பதும் ஒன்றே. சுத்த சைவத் துக்குச் சைவவாத மென்பதும் பெயர். சித்தாந்த சைவம் அக் கூட்டத்துள்ளுஞ் சேராது. அது அதீத சமயமாய் நிலைபெறும்.

மாயாவாதியும், ஐக்கியவாதியும் அச்சபையிலிருந்து வாதத்திற் கலந்துகொண்டார். ஆகலின் அவர் சமயங்களும் இந்நூலில் இடம் பெற்றன.

வாதம்:- குரு சிடராவது, சகபாடிகளாவது பிரமாணங்களாற் பெறப்பட்ட அருத்தங்களை மாறுபாடின்றித் தருக்கித்து வழுக் களைந்து நிர்ணயித்தல்.

செற்பம்:- பிறரது கோட்பாட்டை மறுத்துத் தன் கோட்பாட்டை நிறுத்தல்.

விதண்டை:- பிறரது கோட்பாட்டை மறுத்துத் தன் கோட்பாட்டைச் சொல்லாமல் விட்டு வைத்தல்.

ஆசிரியர் கொள்கையை நோக்க இந்நூல் தன்னளவில் விதண்டையே. ஆயினும் அது சிவப்பிரகாசத்துடன் சேர அவ்விரண்டுஞ் செற்பமாகும். சித்தியாரின் சுபக்கம் போல்வது சிவப்பிரகாசம். பரபக்கம் போல்வது இந்நூல்.

ஏது:- அன்னுவய வியதிரேகி, கேவலாந்நுவயி, கேவலவியதிரேகி என மூவகை இயல்பு, காரியம், அனுப லப்தி, காரணம் என நால்வகையென்பது மற்றொன்று

'நக' என்பது எள்ளி நகையாடுமாறு எனப் பொருள்பட்டு அவையடக்கமுமாம்.

நவிலுவன் என்பது 'நவிற்றுவன்' என நின்றது, இந்நூல் சங்கற்பத்தில் தொடங்கி நிராகரணத்தில் முடிகிறது. அதனால் சங்கற்ப நிராகணம் எனப் பெயர் கொண்டதென்பதுமொன்று.

அச்சபையினருள் ஒருவராகிய அவ்வனுக்கிரகம் பெற்றவர் இந்நூலிற் படர்க்கையிற் பேசப்பட்டுள்ளார். அதனால் இந்நூலாசிரியராகிய ஸ்ரீமத் உமாபதி சிவாசாரிய சுவாமிகளே அவரென்று சொல்லலாமா? அவ்வாசாரிய மூர்த்திகள் அங்கு நடந்த மத மறுப்புக்களை வேறிருந்து கவனித்து இந்நூலை ஆக்கியருளினார்களென்று தெரிகிறது.

மற்றைச் சமயவாதிகள் மதமறுப்புச்செய்வது யானைகண்ட குருடர் அதன் வடிவத்தைப் பற்றித் தம்முள் வாதித்துக் கலாய்த்தல் போல்வது. சித்தாந்த சைவர் பரமத கண்டனஞ் செய்வது யானையின் வடிவத்தைப்பற்றி அக்குருடர் கொண்டுள்ள அபிப்பிராய பேதத்தைக் கண்ணுடையார் பரிசீலித்தல் போல்வது இந்நூல் அப்பரிசிலனை முறையில் அமைக்கப்பட்டிருப்பது இதற்கொரு தனிச்சிறப்பாகும்.

நூல்

மாயாவாதி சங்கற்பம்

நவிற்றிய நிரையி னவித்தையி னேனுரை
நித்த னறிவன் சுத்த னகண்டித
னிருவி கற்பனிர்த் தத்துவ னிரஞ்சனன்
சொல்வகை யெவையுந் தொடராத் தூமணி
வரம்பில் வேதச் சிரந்தரு பரம்பொருள்

சத்தா யெவையுந் தானு யவித்தை
தொத்தா துயர்ந்த தொல்சுடர் மூவா
வின்ன தன்மைய னேக னனேகன்
[2]கன்னற் பெருஞ்சுவை தன்னிற் பிறவாப்
பெற்றியி னிருந்து [3]பொற்பணி யியல்பினின்

வான்வளி யனனீர் மண்மருந் தன்ன
மான தாது வாறைங் கோசத்
தொகுதி யாக்கைப் பகுதிய தொருபுடை
[4]சுத்தி வெள்ளி யொத்தன மித்தையிற்
[5]ருனென லாகுந் தன்மைத் [6]துலூதையிற்

சின்னூற் றகையின் வேற்றுமை மரீஇய
தென்னப் பன்மைய தெனி[7]னிலை பழம்பூத்
தோனுர் வயிரந் தருத்தரும் தொன்மையின்
வானு ரந்திரை நுரைதரு வாய்மையிற்
கூடு [8]மசித்தைச் சித்துத வாதெனி

நெற்பதர் பலாலத் திற்பரந் தரு[9]மிது
தன்னியல் பென்றும் [10]விளையாட் டென்று
[1]முன்னுள மறைகண் மொழிதலி [11]னெருநூற்
பன்மணி நிலையும் பசுப்பா லெனவும்
பலவக னீரி லலர்கதி ரெனவுங்

கூவ லாழி குளஞ்சிறு குழிகால்
வாவி யாவையும் வருபுன லெனவு
மவ்வவற் றடங்கி [12]யாடியு ணிழலெனத்
தோன்றி [13]யாக்கைநற் காந்தத் திரும்புங்
[14]கனவிற் றிங்குங் கங்குலிற் கயிறும்

புனலிற் றேன்றும் பேய்த்தேர்ச் செய்தியு
மன்ன துன்பி [15]னன்னிறப் பளிங்கெனப்
[16]பதினுற் கரணத் தொருமுன் றவத்தை
நாளு நாளு நயந்துறு [17]மிருபயன்
றன்னிற் சாராத் தொன்மைத் தன்மை

தற்பண நிழற்கட் குற்றிபாய்ந் தற்றே
[18]யிவ்வியற் பந்தப் பௌவம தகல
விண்முத றந்த கொண்மூப் படலத்
திருளற வுதித்த காறக விவேகந்
தன்னிற் றேன்றிச் [19]சாதக மனைத்தையு

மன்னகப் பிரிப்பு மடியிழை வாங்கலும்
போல ஞாலம் பொய்யறக் கழீஇத்
[20]தானே தானுய்த் [21]தன்னிற் றன்னைத்
தானே கண்டு [22]தன்னல முற்று
[23]வசையி றத்துவ மசிபதத் தெளிவா

லகமே பிரம மாயின னெனவறிந்
[24]தசல னுகிநற் சலசல மதியெனக்
கண்டிடு [25]முடலம் விண்டகல் கடத்து
மங்குல துடைதர வெங்குமாந் தகைத்தே
[26]யிவ்வகை யுணர்ந்து செய்தொழி லருத

மடவோர் தாமுங் கடனு வியற்றுங்
கன்ம காண்டத் தொன்மைப் புரிவாற்
றேற்றிய வித்தை [27]மேற்கடை யரணியி
லெழுந்தெரி யவற்றை விழுங்கிய தென்னத்
தன்னெழிந் துள்ள தானு யழியு

மந்நிலை யன்றி யழிவறு முத்தி
யேயா தென்றுதன் னியல்பை
மாயா வாதி வகுத்துரைத் தனனே.

(பதவுரை) :-

1 (மேற்பாயிரத்து) நவிற்றிய—சொல்லிய; நிரையின்— வரிசையில்; அவித்தையினேன்—மாயாவாதியின்; உரை—சங்கற்பம் (வருமாறு:-); நித்தன்-அழியாதவன்; அறிவன்-சர்வஞ்ஞன்; சுத்தன்—நிர்மலன்; அகண்டிதன்—வரையறைப் படாதவன்; நிருவிகற்பன்-விகற்பமில்லாதவன்; நிர்த்தத்துவன்-தத்துவங்களைக் கடந்தவன்; நிரஞ்சனன்-மறைப்பில்லாதவன்; சொல்வகை—வேதமுதலிய; எவையும் — எல்லாக் கலைஞானமும்; தொடரா - எட்டாத; தூமணி-சுத்த ரத்தினம் (ஆயினும்); வரம்பு இல்-எல்லையில்லாத; வேதச்சிரம்-வேதாந்த ஞானம்; தரு—தரத்தக்க; பரம்பொருள்-பெரிய பொருள்; சத்த ஆய்-உள்பொருளாக இருந்து (பிரபஞ்சம்); எவையும் - அனைத்தும்;

தான் ஆய்-தானேயாகி (அந்த); அவித்தை-பிரபஞ்சவுபாதிகள் (தன்னை); தொத்தாது—பந்தியாமல் (அவற்றை ; உயர்ந்த—கடந்த; தொல்சுடர் — அநாதிச்சோதி (என்று); மூவா .... கெடாத; இன்ன – இத்தகைய; தன்மையன்-இலக்கணங்களை யுடையவன்; ஏகன்—ஒருவன்; (அவன் பிரமமென்கிற பெய ருடையான். அப்பிரமமே) அனேகன்—சீவர்.

2 (ஆயுமிருக்கிறது. அது) கன்னல்—கரும்பின்; பெருஞ்சுவை ... இனிய சுவை; தன்னில்—கரும்புக்கு; பிறவா—தெரியாத; பெற்றியின்-தன்மை போல(தன் இன்பந் தனக்குத் தெரியாத நிலையில்); இருந்து—இருந்து;

3. பொன்—தங்கம்; பணி-ஆபரணமாக (விரிகிற), இயல்பினின் தன்மைபோல; வான் வளி அனல் நீர் மண் மருந்து அன்னம் —ஆகாசம், வாயு, தேயு, அப்பு, பிருதிவி, ஔடதம், அன்னம் ஆன—பொருந்திய; தாது ஆறு-ஆறு தாதுக்கள்; ஐங்கோசம் — ஐந்து கோசங்கள் (என்கிற இவற்றின்); தொகுதி-கூட்டம் (ஆகிய); யாக்கை—உடம்பு (முதலிய சடப்பிரபஞ்ச); பகுதி யது—பாகமாயிருக்கிறது; ஒருபுடை—ஒருபுறம்.

4 (அப்பிரபஞ்சப் பொருள்கள்) மித்தையில் — விவகாரத்தில் நித்தமாகத் தோன்றுதல்); சுத்தி—சிப்பி; வெள்ளி—வெள்ளி யாக (தோன்றுதலை); ஒத்தன—போன்று இருப்பன.

5 (ஆனால்) அத்தோற்றம் பரமார்த்தத்தில் இல்லையா யொழிய அந்த); தான் எனல்—பிரமமென்ப தொன்றுதான்; ஆகும்—உளதாகும்; தன்மைத்து—இயல்பினையுடையது;

6 (சித்தான) உலூதையின் — சிலந்திப்பூச்சியின்; சில்நூல் — மெல்லிய நூல் (சடமான); தகையின் — தன்மைபோல் (பிரமந் தோன்றிய பிரபஞ்சமுஞ் சடமாகிய); வேற்றுமை—வேறுபாட்டை; மரீஇயது—அடைந்தது. (ஆனாற் பிரபஞ்சம் பலவான தன்மைகளையுடையது. அது) என் — எப்படி; அப்பன்மையது – அப்பலதன்மைகளையுடையது (ஆகும்); எனின்—என்றால்;

7 தரு—மரம்; இலை பழம் பூ தோல் நார் வயிரம்—இலைமுதலிய பலதரப் பொருள்களை; தரும் — தருகிற; தொன்மையின் — இயல்புபோலவும்; வால்நாரம் — நல்லநீர்; திரை நுரை — அலை நுரை (முதலிய பலதரப் பொருள்களை); தரு—தருகிற; வாய்மையின்—இயல்பு போலவும்; கூடும் – (அப்பலதன்மை களை) உடையதாகும்;

8 சித்து – அறிவுப்பொருள் (ஆகிய பிரமம் அறியாமைப் பொருளாகிய); அசித்தை – பிரபஞ்சத்தை (தன்னிடமிருந்து); உதவாது எனின் – உண்டாக்காதென்ருல்; நெல் – நெல்விதை (தன்னிடமிருந்து); பதர் – சாவியையும்; பலாலத்தின் — வைக்கோலையும் (உளவாக்குவது) போன்று; பரம்-பிரமமும் (அப்பிரபஞ்சத்தை) தரும் – உண்டாக்குதல் கூடும்;

9 (அதனை) இது — இவ்விதம் உண்டாக்குதல்; தன் – பிரமத்துக்கு; இயல்பு என்றும் — இயற்கை என்றும்;

10 விளையாட்டு என்றும் — லீலையென்றும்;
முன்உள — அநாதியாயுள்ள; மறைகள் — வேதங்கள்; மொழிதலின் — சொல்லுகின்றன. ஆகலின், (பிரமம்);

11 பல்மணி – பலமணிகளில் (கோப்புண்டு); நிலை — நிற்றலை (உடைய); ஒருநூல் (என) உம் — ஒரு நூல் போன்றும்; பசு — பசுக்கள்; (தோறும் சுரக்கிற); பால் எனவும் — பால் போன்றும்; பல அகல் — பல கிண்ணங்களில் (உள்ள); நீரில் – நீரில் (பிரதிபிம்பிக்கிற); அலர் – விரிந்த; கதிர் – கிரணங்களை (உடைய சூரியன்); எனவும் – போன்று; கூவல் ஆழி குளம் சிறுகுழி கால் வாவி – கிணறு கடல் முதலிய; யாவையும் — எல்லாவற்றிலும்; வரும் – வந்து நிரம்புகிற; புனல் எனவும் — நீர் போன்றும் (ஒன்ருகவேயிருந்து); அவ்வவற்று – அந்த அந்தச் சரீரத்தில்; அடங்கி – அகப்பட்டு;

12 ஆடியுள் — கண்ணுடிக்குள்; நிழல் என — பிரதிபிம்பம்போன்று (உயிரென); தோன்றி — பிரதிபிம்பித்து (அதன் சன்னிதியில்);

13 யாக்கை – சரீரம்; நல் காந்தத்து – நல்ல காந்தத்தின் (சன்னிதியில்;) இரும்பும் – இரும்பு (இயங்குவது) போலும் (இயங்க);

14 கனவில்-கனவில் (தோன்றுகிற); தீங்கும்-பயமும்; கங்குலில்-இருளில் (புற்றருகில் பாம்பெனத் தோன்றுகிற); கயிறும் — கயிறும்; (பாலையில் தூரத்தில்) புனலின் — நீர்போல; தோன்றும் — தோன்றுகிற; பேய்த்தேர்ச் செய்தியும் — கானல் நீர்க்கதையும்; அன்ன — போன்ற; துன்பின் — துன்ப நுகர்ச்சியில்;

15 நல்நிறம் — நல்ல நிறத்தை (அடுத்த); பளிங்கு என — பளிங்கு போல் (தோயாமலிருந்து);

16 பதினுல்—பதினுன்கு; கரணத்து — கரணங்களில் (கூடி); ஒரு மூன்று — ஒப்பற்ற மூன்று; அவத்தை — அவத்தைகளேயும்; நாளு நாளும்-நாள்தோறும்; நயந்துஉறும்-விரும்பியடையும்

17 இருபயன் — இன்பத் துன்பங்கள்; தன்னில்-அதனிடம்; சாரா — தாக்காத (அதன்); தொன்மைத் தன்மை — அநாதித் தன்மை; தற்பணம் — கண்ணுடியில் (உள்ள); நிழல் கண்— பிரதிபிம்பக் கண்ணில்; குற்றி — கோல்; பாய்ந்தற்று — பாய்ந்தது போலாம்;

18 (அதற்கு) இவ்வியல் — இந்த இயல்பு (உள்ள); பந்தப் பௌவமது—பந்த சாகரம்; அகல—நீங்கும் பொருட்டு; விண் — ஆகாசம் (ஆகிய); முதல்—உபாதானத்தில்; தந்த—தோன்றிய; கொண்மூப்படலத்து—மேகக்கூட்டத்தின்; இருள்அற-இருள்விலகும்படி (அவ்வுபாதானத்திலேயே); உதித்த — தோன்றிய; கால்தக—காற்றுப்போன்று; தன்னில் — அதனிலிருந்தே; விவேகம் — ஞானம்; தோன்றி—வெளிப்பட்டு;

19 சாதகம்—தத்துவங்கள்; அனைத்தையும்—எல்லாவற்றையும்; மன்—உள்ளனவாகிய; அகம்—வீடு (அதன் உறுப்புக்களின்); பிரிப்பும்—பிரிவாலும்; மடி-துணி (அதன் உறுப்புக்களாகிய); இழை-நூல்களின்; வாங்கலும்-பிரிவாலும் (மித்தையாவன); போல—போன்று; ஞாலம்—பிரபஞ்சமும்; பொய்—மித்தை (என்கிற உண்மை விளங்கும்படி ஒவ்வொன்ருகச் சோதித்து) அறக்கழீஇ — துவரக் கழித்து (முன் உபாதியால் சீவனுய் நின்ற);

20 தானே—பிரமமே (அந்த ஞானத்தால் உபாதி நீங்கப்பெற்று மீண்டும்; தான்ஆய்—பிரமமாகி (அந்த);

21 தானே—பிரமமே; தன்னில்; தன்னே — தன் சொரூபத்தை; கண்டு—தரிசித்து;

22 தன்நலம்—தன்இன்பத்தை; உற்று—அனுபவித்து;

23 வசை இல் — குற்றமில்லாத; தத்துவமஸி — தத் த்வம் அஸி (என்கிற); பதம்—மஹாவாக்கியத்தின்; தெளிவால்-அர்த்த விசேடத்தால்; அகமே — நானே; பிரமம் ஆயினன்—பிரமம் ஆயினேன்; என - என்று (நன்கு); அறிந்து—தேர்ந்து;

24 அசலன் ஆகி — அசைவற்றிருந்து; நல்சலம் — நல்ல நீரின் (அசைவே ; சலமதி — சலசந்திரனின் (அசைவாமெனக் காணுதல்); என — போன்று (அதுவரை தன்பாற் கண்ட துன்ப நுகர்ச்சிகள் தன் சரீரத்துக்குரியனவா மென்று); கண்டிடும்—காணும்;

25 (இந்தச் சீவன் முத்தப் பிரமம்) உடலம் விண்டு—சரீரம் நீங்கி (பரப்பிரமமாதல்); அகல்—விசாலமான; கடத்து– குடத்தி லுள்ள; மங்குல் — ஆகாசம்; அது — அக்குடம்; உடைதர— உடைந்தபோது; எங்கும் ஆம்—மகாகாசமாகும்; தகைத்து- தன்மையது;

26 இவ்வகை — இந்த அகம்பிரம ஞானத்தை; உணர்ந்து — தெரிந்து; செய்தொழில் — கருமகாண்டத்தை; அறுத — நீங்காத; மடவோர் தாமும்—மூடரும் (அந்த ஞானத்துக்கு) கடன் ஆ — சாதனமாக; இயற்றும் — அனுட்டிக்கிற; கன்ம காண்டம் — கரும காண்டத்தின்; தொன்மை — ஆரம்ப; புரிவால் — அனுட்டானத்தால் (அவர் பால்); தோற்றிய— விளங்கிய (அகம்பிரம); வித்தை - ஞானம்;

27 மேல்—மேலே (கோலை நட்டு); கடை – கடைந்த; அரணியில் —கட்டையில்; எரி எழுந்து — தீ வெளிப்பட்டு; அவற்றை - அக்கோலையுங் கட்டையையுங் (சேரச் சுட்டு); விழுங்கி - இல்லையாக்கி (தான் மாத்திரமாய் விளங்குகிற); அது என்ன அத்திப் போன்று; தான் ஒழிந்து — தன் மாத்திரம் எஞ்சி (நிற்ப, அந்த); உள்ள—கரும காண்டம் (அந்த); தான் ஆய் — கோலுங்கட்டையும் போன்று; அழியும் - இல்லையாய்ப் போம்; அந்நிலை அன்றி—அந்த ஞான நிலை தவிர; அழிவுஅறு —கெடாத; முத்தி—முத்தி (வேறு கூறல்); ஏயாது என்று — பொருந்தாதென்று (இப்படியெல்லாம்); தன் — தனது; இயல்பை—மத சங்கற்பத்தை (அந்த); மாயாவாதி—**மாயா வாத சமயி** (சிவனருள் எப்படிப்பட்டதென்று வினவிய அப் பக்குவிக்கு); வகுத்து—வகைப்படுத்தி (விடையாக); உரைத் தனன்—கூறினன்.

வரி 12:- தாது ஆறு — தோல், எலும்பு, நரம்பு, மச்சை, இரத்தம், சுக்கிலம்.

ஐங்கோசம் — அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம்.

வரி 33:- பதினாற் கரணம் — மெய், வாய், கண், மூக்கு, செவி வாக்கு, பாதம், பாணி, பாயுறு, உபத்தம், மனம், புத்தி ஆங்காரம், சித்தம்.

மூன்றவத்தை — அப்பதினான்கு கரணங்களுந் தொழிற் படுஞ் சாக்கிரம். மனம் புத்தி ஆங்காரம் சித்தம் ஆகிய நான்கு மட்டில் தொழிற்படுஞ் சுழுத்தி.

வரி 53:- 'தோன்றிய' தோன்றிய என்கிற தன்வினைப்பொருளில் வந்தது.

மாயாவாதி சங்கற்ப நிராகரணம்.

உரைதரு பிரம மொன்றெனு முரைக்கண்
வருபிர மாண மறையெனி லருமறை
யொன்றென்ற தன்றி யிருபொரு ளுரைத்த
னன்றன் றபேத நாடிய பொருளேற்
பேதமு மபேதமு மோத வேண்டா

பேத மெனினு மபேத மெனினும்
பேதா பேத மெனினு மமையுநின்
னையமி லுரையிற் பையவந் துளதாந்
திகழ்பிர மாண விகழ்வுமுண் டன்றிப்
பெத்தம் பேத முத்தி யபேதமே

லனவத் திதமா மவையிரு திறனு
மினியப் பழமொழி யிரண்டல வொன்றே
யன்றியும் பெத்தம் பேதத் தறைதலு
மொன்றிய முத்தி யபேதத் துரைத்தலும்
பழுதா மித்திறம் பதையா தாய்கமற்

றெழுதா மறையெனு மிப்பிர மாண
மாருரை தானே யாயின தேலுன
தேக மனேக முறுமியம் பாமற்
சத்த ரூபந் தகாதெனில் வானத்
தொத்தொலி யுறழு மெனில்வறி துதியா

தன்றியும் பதமும் பாழியு மனைத்து
மின்றியோ ரொலியா யெழுந்திடு மதனுக்
கறிவில துருவில தறியா தறையா
தன்றியு மவ்வகை யகண்டித மதுவிது
வென்றது குறிப்ப தெவ்வகை யாவு

மொன்றெனு முறையு மொழிந்தனை யன்றே
யருமறை பிரம வுரையெனி னதற்குத்
தந்த தாலு முதனவில் பொறியில
தென்னிலோ ருடற்கண் மன்னிய வல்கை
யறைந்தற் றென்ப தார்சொல தமலத்

திறம்பெற் றின்றே செய்தோர் பெயராற்
சுயம்பு வென்றுல கியம்புமென் றறியினித்
தற்கீழ்த் தலைவரைத் தான்றொழு துரைக்குஞ்
சொற்கேற் புரவல னேவ லமைச்சரை
யடிகண் மற்றெங் குடிமுழு தாண்மினென்

றேத்தி யிறைஞ்சக் காப்பர்க ளென்றாங்
கீச னாஞ்செயப் பேசின னன்றி
யினையவை பிறரிற் கனவிலு மிலனே
தன்னைத் துதிக்குஞ் சொன்னலந் தானுமத்
துறையறி வாணர்க் கறைவதொன் றன்றியுந்

தனக்குத் தானே தன்னலம் பகரா
தசத்துக் குரையா தார்க்குரை யுயிர்க்கெனி
லுரைபிர மாண மிறைபிர மேய
நீபிர மாதா நின்பிர மிதியென
நால்வகை யுளதுன தேகநன் றன்றே

நற்பிர மாண நிற்பதொன் றன்றா
லப்பிர மேயமு மதனியல் பன்றே
[2]கன்னற் சுவையி லன்னிய மிலதா
லினிமை தோன்றாத் தனிமைத் தென்றனை
யறிவிற் குவமை யசத்தாங் கட்டி

பிறிவித் தொட்டினு பேற துறாதே
[3]தற்பர விரிவு பொற்பணி தகுமெனிற்
செய்வோ ரின்றிச் செய்வினை யின்மையிற்
பொன்பணி யாகை தன்பணி யன்றே
செய்வோர் போலாச் செயப்படு பொருண்முதற்

செய்வோ ரேயாச் செய்யவும் படுமே
[4]சுத்தி வெள்ளியிற் றோன்றிற் றாயிற்
சத்துல கேதுந் தாரா தருமெனி
னுலக மித்தையென் றோரா துரைத்தனை
நிலவுநின் மரபு நினைந்திலை யாங்கொல்

[5]விவகா ரத்தில் வேண்டுது முலகம்
பரமார்த் தத்திற் பகரா மென்னிற்
பரத்துள தேலிவை யும்பர மார்த்தம்
பரத்தில தேலொழி முன்பகர் மாற்ற
மதன்முத லிதுவென வுதவுக வன்றியும்

விவகரிக் குங்காற் றிகழ்பர மார்த்த
நிலையது தெரியி னிதுநீ யேற்
றெரியா தாயி னஃதுந் தெரியா
துரையா ரளவையு மொழிந்தனை யன்றே
யளவை காண்டல் கருத லுரையென

வுளதவை மூன்றின் மொழிவழி நுழையி
னின்பிர மேய மென்ப தெனுங்கொல்
பொற்பிதிர் பிதிர்ந்தும் பொன்னே யாகின்
றற்பர மசித்தைத் தருமா றென்னெனிற்
[6]சிலம்பி நூறரு நலம்போற் றோன்று

மென்றனை யதுவ தன்றொழி லன்றியு
மொன்றத னியல்புல கோரியல் பன்றெனப்
[7]பலமிலை பழம்பூப் பாதவந் தருநீர்
திரைநுரை திவலை சிலதரு மிவைபோற்
றானே பலவா மெனநீ சாற்றினை

சத்தசத் தாகவுஞ் சத்தினி லசத்தின்
கொத்துள தாகவுங் கூறின ரிலரால்
வித்திலை கனிநனி விழுதா றருநெறி
சத்தல தொன்று தான்றர வேண்டு
[8]நெற்பதர் பலாலத் திற்குபா தானமென்

காரண மின்றிக் காரியம் பிறவா
பாரிடை யொருபடம் பண்ணவும் படுமே.
[9]யந்தமில் பிரம மவித்தைகா ரணமெனத்
தந்தனை யவித்தை தானெய் துறுத
றன்னியல் பென்னில் வன்னிதன் வெம்மையிற்

சத்தின தியல்புஞ் சத்தே யசத்தெனில்
வைத்தத னியல்பெனும் வழக்கொழி யன்றியு
மிருள்பொதி விளக்கென வருமரு விளக்கிற்
கருமை பயந்த பெருகொளி தகுமெனிற்
றன்னியல் பன்றத னுபாதி வசத்தான்

மன்னிய தன்றிமை தான்றனின் மாயா
தொன்றான சுத்த னன்றா மன்றே
யாங்கொரு காலத் தோங்கிய தாயி
னந்தமி லவித்தை வந்தணை வதற்கோ
ரேது வேண்டும் புயலியல் பெனின்வீ

டோத வேண்டா வொழிந்தோ ரினுமுறுங்
[10]களங்கம துறவுறு மவித்தைதற் கவித்தல்
விளங்கிய பிரம விளையாட் டாயி
னவித்தை யென்பதொன் றன்னியந் தன்னி
லுதிக்கு மென்றமுன் னுரையு மறந்தனை

நுண்ணூற் குடம்பை நுந்துழி போலுட்
படுநெறி யதனால் விடுநெறி யிலதாற்
றலைமையு மறிவு மிலதெ னவித்தையை
விடுத்தெடுத் தாணரும் வேற்றோ ரன்றே
யொளிகொ டாமிரங் குளிகைபெற் றாங்கத

னவித்தையை வித்தை தவிர்க்குமென் றுரைக்கி
னித்த னறிவன் சுத்தனென் றுரைத்த
வித்தக மென்னீ வித்தையும் வேறான்
றெம்ம னோரி லொருவ னின்னிறை
யம்ம சைவந் தவனீ யன்றே

[11]பன்மணி பானற் பாத்திர மெனவு
நன்னூல் பானீர் நற்கதி ரெனவு
முடலையு முணர்வையு முவமித் தனையேற்
றடமணி சரடொடு தான்கூ டலவே
யுணர்வுணர் வொழியி னுலகுணர் வுறினின்

பாலும் பசுவுஞ் சாலுஞ் சாலக்
கலம்பல வன்றிச் சலம்பல வில்தெனக்
காணுந ரின்றி வீணில் விளம்பினை
[12]யாடியு ணிழல்போற் கூடுதல் கூறிற்
றன்னிழல் கொண்டு தற்பணஞ் சலிக்கின்

மன்னிழல் கொண்டுடல் வந்தகன் றிடுமே
[13]மன்னயக் காந்த மெனவுடல் பிரம
சன்னிதி யளவிற் சலித்திடு மாயி
னகண்டிதன் சன்னிதி யலதில தெவையு
நடந்திட வேண்டுங் கிடந்திடப் பெருவே

காந்தத் திரும்பு காட்டுநர்ப் பெறிலயஞ்
சேர்ந்திடு நீக்குஞ் செயலதற் கிலதே
[14]கனாத்துயர் கயிற்றர வெனாச்சில தொடுத்தனை
கனவின் பயனு நனவின் பயனும்
வினையின் பயனவை பொய்யென வேண்டா

வுடன்மா ருட்டக் கடனது கருதுக
வுற்ற புற்று மற்றதிற் கயிறு
முடலுங் கூடச் சடமென வறிதி
யறிவு கயிறென் றறியா தன்றே
யச்சம தடைதல் கொச்சைமை யுடைத்தே

யின்னுமக் கனவி லிருளுறு கயிற்றிற்
பின்னுநின் பிரமம் பிரமித் திடுமே
[15]துன்னிய வினையிற் செம்மலர்ப் பளிங்கெனத்
தானாந் தகைமை யானால் மலரென
வொருபய னன்றிப் பலபயன் மரீஇய

திருவினை தருபய னெனநனி வேண்டி
லாண்ட வித்தையு மவித்தைகொ டாக்கையு
மீண்டிரு வினையு மியம்பினை பரத்தைக்
கள்வரைப் பிணிக்குங் காவல ரெனமுய
றெல்வினைத் தொடக்கிற் றோன்றுடற் சிறையிட்

டிருவினை யூட்டு மெம்மா னம்மா
[16]னருவினை யுடற்க ணவத்தைக ளுரைத்தனை
யாருறு பவர்பர மகண்டித மடங்கா
தோர்வில துடல்சட முறுநெறி யாதெனின்
மன்னிய கரண மாருட் டத்திற்

பன்னின மென்னி னிவையோ பரமோ
முதலிய தாயி னிவைபிறழ் வெய்தா
திவையெனி லுனது மொழிபழு துளதே
யுடற்படு பிரம முறுமெனிற் சாளரத்
திடத்தகு முறுவிர னுதியளி யெறிதுய

ரங்குலி தானே யருந்திடி லுடற்கட்
டங்கிய வறிவு தனித்துறு மன்றே
[17]தற்பண நிழற்கட் குற்றிபாய்ந் தற்று
னற்கணிற் றுயர நணுகாத் தகைத்தெனி
னின்மொழி விரோதமுங் காட்சி விரோதத்

தன்மையு முறுமவை தவறில வாகா
யாமுடைப் பதிவகை யாவரும் பலகலை
சொல்லுத லெளிதரி தத்தொழில் புரிவெனப்
புல்லிய பழமொழி புதுக்கினை யன்றே
யகண்டித மெனநீ பகர்ந்தமை தனக்குப்

பந்த மிதுவெனத் தந்தமை கருதில்
வானி னடக்குங் காலினைப் பிடித்துப்
பருவிலங் கிட்ட வொருவனி யன்றே
[18]பந்தம தகல வுந்து விவேகம்
வான்வளி யெனத்தனிற் றானே தோன்றின்

முன்புள தாயின் மயங்கா திலதெனிற்
பின்புள தாகா திலதுள தெனின்வெளி
மலரது தருமனல் மரக்கணின் றுகித்
தருவது தகுமெனிற் றானே தோன்று
விறகி னுதித்த கனறகு மாயி

னவித்தையி னுதித்த வித்தை யம்மரத்
துதித்த விவேகம் வித்தெயென் றுரைத்த
வெந்தழ லனைய விவேக முதித்த
திந்தன மனைய திறையிலன் றற்றே
[19]யிற்படப் பிரிப்பின் மெய்ப்படு மெவற்றையு

மிதுவன் றிதுவன் றெனக்கழி காலை
யதுவே தானே யாயின தென்றனை
வித்தை முன்ன ரவித்தையு மவித்தைமுன்
வித்தையு நில்லா வியனொளி யிருளென
விருளல வொளிக்கு மொளியல விருட்கு

மொருகா லத்து மொருபய னிலதா
லிரண்டையு நுகரு முரண்டரு விழியென
வித்தையு மவித்தையு முய்த்ததொன் றுளதே
[20]தானே தானு மானுற் பயனென்
[21]றன்னிற் றன்னைத் தானே காணிற்

கண்ணிற் கண்ணை காணவும் படுமே
[22]தன்னல மதனைத் தானே நுகரு
மென்னின் முன்னல மெய்தா திருந்ததென்
கட்டி போலெனக் கதறினை யின்பம்வந்
தொட்டிடும் வித்தை யுடையையா யிடினே

[23]தத்துவ மசியென வைத்தமுப் பதத்திற்
கொன்றே பொருளென் றன்றே பகர்வது
நீபுலி யாயினை யென்றுங் குணரி
லாயினை யென்ற தாகுவ மைத்தா
ஞேயா யினமே லாயா யென்று

லகமே பிரம மாயின தென்ஞற்
சகமே யறியத் தான்வே றன்றே
[24]யுண்மையிற் சலமில வுடற்சஞ் சலமுறும்
வெண்மதி போல விளங்கிடு மென்றனை
யசல ஞகிச் சஞ்சல சலத்துச்

சலன மேவின மெனமதி காண
வேண்டும தன்றிக் காண்பவர் பிறரே
லீண்டுன தேகமென் செய்த தியம்புக
[25]வுடல்விடக் கடத்துட் படுவெளி போலெனில்
விட்டென் பெறவுடற் பட்டென் படமற்

றிகலற வொருவ னிவ்வகை தெளியி
லகிலமு முத்தி யடைந்திட வேண்டு
மறிந்தோர் முத்தி யடைந்தோ ராயின்
பிறிந்தோ ருயிர்பல பேதத் தன்றே
[26]கன்ம காண்டங் காரண மாக

மன்னும் விவேக மென்னி லவித்தைக்
கேது காரண மோதினை யில்லை
யிதற்குங் காரணம் விதித்தல்வேண் டின்றே
[27]யரணியி லுதித்த கனலவை கவர்வென
விரதத் துதித்த விவேக மழித்தல்

வருந்தி யாயினுந் திருந்திய வேத
நீதி யெல்லா நீத்துப் போதமொன்
றறியோர் தாமு மல்வழி நடத்தல்
பொறியோ போத நெறியோ விதுபவ
நீங்கிடு நெறிதரு பங்கினைப் பழித்த

னன்றி கொன்ற லன்றே யன்றியு
ஞால நீதியு நான்மறை நீதியும்
பாலருன் மத்தர் பசாசரி லெனவு
முறங்கி னோன்கை வெறும்பாக் கெனவுந்
தானே தவிரா தானாற் புரியா

தொழிந்திடி னிரயத் தழுந்துத றிடமே
யுய்த்தோ னன்றி முத்தி யுரைத்தல்
பித்தோ பிரமஞ் செத்தோ பெறுவ
துடலையு நீயே சடமெனச் சாற்றினை
வையினு வாழ்த்தினுங் கொய்யினுங் கொளுத்தினும்

வணங்கினு முதைப்பினும் பிணங்குதல் செய்யாப்
பிரமத் தன்மை பெறுவதெக் கால
மிருக்கு நாள்சில வெண்ணினூல் கதறித்
தருக்கம் பேசித் தலைபறி யுற்றுக்
கண்டோ ரீந்த பிண்டமுண் டலறிப்

பன்னோ யாக்கை தன்னோ யுற்றுடல்
விடவரு மென்று நடுநடு நடுங்கி
விட்டோர் தெய்வத் தொட்டின் றன்றியும்
யானே யெவரு மானே னென்றலி
னவ்வவர் சீறிய வவ்வவர் வானாட்

செவ்விதி னிரயஞ் சேர்த்துவ ரதனால்
மாயா வாதப் பேயா வுனக்குத்
தேவரி லொருவருண் டாக
மேவரு நரகம் விடுத்தலோ வரிதோ

(பதவுரை):-

1 (உன்னுடைய) உரை — சங்கற்பம்; தரு — வெளியிடுகிற; பிரமம்—பிரமப்பொருள்; ஒன்று—ஒன்றே (உளது); எனும்—என்கிற (உன்); உரைக்கண் — கொள்கைக்கு (ஆதாரமாய்) வரு—உள்ள; பிரமாணம் — பிரமாணநூல்; மறை எனில்—வேதமேயென்றால் (அந்த); அருமறை-அரியவேதம் (பிரமம்); ஒன்று—ஒன்றே (உளது); என்றது-என்று சொன்னது; அன்றி —அல்லாமல் (பிரமம் உயிர் என); இரு பொருள்—இரண்டு பொருள்கள் (உளவென்றும்); உரைத்தல் — சொன்னது; நன்று அன்று — பொருந்தாது. (அப்படி இரண்டெனச்

சொன்னதற்கும் பிரமம்); அபேதம்— ஒன்றே (உள்பொருள் என்பதுதான்); நாடிய — விசாரணையாற் கிடைத்த; பொருளேல் — பொருளென்றல் (அவ்வேதம் அவ்வுள்பொருளை); பேதமும் — பேதமெ (இரண்டெ) ன்றும்; அபேதமும் — அபேதமெ ஒன்றெ)ன்றும் (இரண்டுவிதமாக ; ஓதவேண்டா — சொல்லவேண்டுவதில்லை. (அதனை); பேதம் எனினும் — பேதமென்றாலும்; அபேதம் எனினுங்—அபேதமென்றாலும்; பேதாபேதம் எனினும்— பேதாபேதம் என்றாலும்; அமையும் —குற்றமில்லை; நின் — உனது; ஐயம் இல்-சந்தேகம் இல்லாத; உரையில் — அவ் வார்த்தைகளில் (வேதத்தினது); திகழ் — சிறந்த; பிரமாணம் — பிரமாணத்தன்மைக்கு; இகழ்வும் — நிந்தையும்; பைய—மெல்ல; வந்துளது — வருகிறது; (அது) உண்டன்று — சரியன்று; (பிரமப்பொருள்) இப்பெத்தம் — இந்தப் பெத்தத்தில்; பேதம்—பேதமும்; முத்தி—முத்தியில்; அபேதமேல் — அபேதமுமா மென்றால்; அவை இரு — அவ்விரண்டு; திறனும்—தன்மைகளும்; அனவத்திதம்-அனவஸ்த தோஷம்; ஆம் — ஆகும்; இனி நிற்க; அப்பழமொழி — அவ் வேதம் (பிரமம் உயிர் எனப் பொருள்கள்); இரண்டு அல— இரண்டில்லை (பிரமப்பொருள்); ஒன்றே—ஒன்றே (உண்டெனப் பேசுதல்); அன்றியும்—அல்லாமலும்; பேதத்து—பேதத்தில் (பிரிந்த); பெத்தம்—பெத்தம் (என்று); அறைதலும்— பேசுதலும்; அபேதத்து — அபேதத்தில்; ஒன்றிய — கூடிய; முத்தி—முத்தி (என்று); உரைத்தலும்—பேசுதலும்; பழுது ஆம் -குற்றமாகும்; இத்திறம்-இவ்வுண்மையை; பதையாது— பதறாமல்; ஆய்க—ஆராய்; மற்று—இனி; எழுதா—எழுதப் படாத; மறைஎனும் — வேதமென்கிற; இப்பிரமாணம் — இந்தப்பிரமாண நூல்; ஆர் உரை — யாருடைய வாக்கு ? (அது); தானே ஆயினதேல் — சுயம்புவென்றால்; உனது — உன்னுடைய; ஏகம் — ஏகவஸ்துப் பிரசங்கம்; அனேகம் — பலவஸ்துப் பிரசங்கம்; உறும் — ஆய்விடும்; (அன்றியும் ஒருவன்) இயம்பாமல் — உச்சரியாமல்; சத்தரூபம் — ஒலி வடிவம்; தகாது — பிறவாது; எனில்—என்று (நான்) சொன்னால்; ஒலி — அச் சத்தம்; வானத்து - ஆகாசத்து(ச்சத்தம்); ஒத்து உறழும்—போன்றிருக்கும்; எனில் — என்றாய். ஆனால் (ஆகாச சத்தம்); வறிது — காரணமின்றி; உதியாது - உண்டாகாது அன்றியும்—அல்லாமலும்; பதமும்-வார்த்தையும்; பாழியும்—வாக்கியமும் (அவைபோன்ற பிற); அனைத்தும் — எல்லாமும்; இன்றி — இல்லாமல்; ஓர் ஒலி ஆய் - ஒரே சத்தமாக; எழுந்திடும்- எழுகிற; அதனுக்கு-அதற்கு (பொருளை);

அறிவு – உணர்த்துஞ் சத்தி; இலது — இல்லை. (தான் சுயம்பு என வேதமே சொல்கிற தென்றால்); அது—அவ்வேதம்(சத்த) உருவில் — வடிவத்தில் (இருப்பதால்); அறியாது – சடம்; (ஆகலின் தன்னைச் சுயம்பு என்று அறிந்து) அறையாது — சொல்லமாட்டாது; அவ்வகை அனறியும் – அஃதல்லாமலும்; அகண்டிதம்—அகண்டம் (ஆகிய பிரமத்தை); அது-அப்படிப் பட்டது; இது — இப்படிப்பட்டது; என்று — என்று (கூறி); அது - அவ்வேதம்; குறிப்பது - சுட்டி விளக்குவது; எவ்வகை — எப்படி?; (அதனால் நீ) யாவுப் ஒன்று — சர்வமும் ஏகம்; எனும் — என்கிற; உரையும் — (உன்) கொள்கையையும்; ஒழிந்தனை – கைவிட்டாய்; அருமறை – அரியவேதம்; பிரம உரை எனின்-பிரமத்தின் வாக்கு என்றால்; (அகண்டமாகிய) அதற்கு—அப்பிரமத்துக்கு; தந்தம் தாலு முதல்—பல் நாக்கு முதலிய; நவில்பொறி—பேச்சுக்கருவிகள்; இலது — இல்லை; (ஆகலின் அது பேசாது) என்னில்-என்று நான்) மறுத்தால் (அது பேசுவது) ஓர் உடற்கண்-ஒருவனது சரீரத்தில்; மன்னிய ஆவேசித்த; அலகை-பேய்; அறைந்தற்கு-பேசுவது போலாம் என்பது—என்று (நீ) சொல்லவேண்டும்; (அப்படியானால் அவ் வேதம் பிரமம் ஆவேசித்த) ஆர்சொல் – யாருடைய வாக்கு? (அதனால்); அது—அவ்வேதம் (பசுவாக்காகி); அமலத்திறம் — நின்மலத்தன்மையை; பெற்றின்று – பெற்றது மாகாது. (ஆகையால் பிரமமே திருமேனி தாங்கி வேதத்தைச் சொல்லி யிருக்க வேண்டுமென்பதுதான் சித்தம். (அவ்வேதத்தை); செய்தோர் — செய்த பிரமத்தினது; (சுயம்பு என்கிற) பெய ரால் பெயர்கொண்டு; சுயம்பு என்று – சுயம்புவென; உலகு —அறிஞர்; இயம்பும் என்று—வழங்குவர் என்று; அறி-அறி; இனி — நிற்க (அதில்); தான் — ஈசன்; தன்கீழ் — தனக்குக் கீழ்ப்பட்ட (மற்றை); தலைவரை — தேவர்களை; தொழுது— வணங்கி; உரைக்கும்-துதிக்கிற; சொற்கேல்-தோத்திரங்கள் இருப்பது ஏனென்றால்; புரவலன் - அரசன் (தன்கீழ்க் குடிக ளுக்கு "நீங்கள் என்); ஏவல் — ஆணை வழி (நிற்கிற); அமைச்சரை-மந்திரியை (நோக்கி); அடிகள் -'அரசே! (நீர்); எம்குடிமுழுது – எம் குடும்ப முழுவதையும்; ஆள்மின் – காத் தருள்க'; என்று ஏத்தி-என்று துதித்து; இறைஞ்ச-வணங்கி னீர்களாயின் (அவர் உங்களை); காப்பர்கள்-காப்பார்கள்"; என்றாங்கு – என்று (ஏத்தி இறைஞ்சுமுறையைச்) சொல்லிக் காட்டுவது போல்; (அத்தோத்திரங்களை) ஈசன்-முதல்வனும் நாம் — அபக்குவான்மாக்கள்; செய — செய்தற் பொருட்டு; பேசினன் – சொல்லிக் காட்டினான்; அன்றி-அல்லாமல் (தன்

பொருட்டு); இனையவை - அவற்றை; பிறரில்-பிற தேவர்கள் பால்; கனவிலும் - சொப்பனத்திலும்; இலன் - செய்யான், (அவன் அதில்); தன்னைத் துதிக்கும் — தன்னைத் துதிக்கிற; சொல்நலம் உம் — தோத்திர சமூகமும்; அத்துறை — தன் வழிபாட்டில் (நிற்கிற); அறிவாணர்க்கு - பக்குவான்மாக்கள் (செய்தற்) பொருட்டு; அறைவது ஒன்று-சொல்லிக்காட்டிய தொன்ருகும்; அன்றியும்-இன்னும்; தான்-பிரமம்; தன்நலம் - தனது பெருமை (நிறைந்த அத்தோத்திர சமூகத்தை); தனக்கு — தன் மகிழ்ச்சிக்காக; பகராது — சொல்லிக்கொள் ளாது. (நம் சரீரமாகிய); அசத்துக்கு — அழிபொருளின் மகிழ்ச்சிக்காகவும்; உரையாது-சொல்லாது; (பின்னை அந்த) உரை—வேதம்; ஆர்க்கு— யாருக்காகச் (சொல்லப்பட்டது;); உயிர்க்கு—உயிர்களுக்காக; எனில்—என்ருல்; உரை-வேதம்; பிரமாணம் — பிரமாணமும்; இறை—பிரமப்; பிரமேயம்— பிரமேயமும்; நீ - உயிர்; பிரமாதா — பிரமாதாவும்; நின்— உயிரறிவு; பிரமிதி—பிரமிதியும்; என—என்று; நால்வகை— நான்கு பொருள்கள்; உளது — உளவாகின்றன. (அதனுல்); உனது —உன்னுடைய; ஏகம்—ஏகவஸ்துப் பிரசங்கம்; நன்று அன்று-பிழைபடுகிறது; (ஆகலின் வேதமாகிய) நல்பிரமாணம் — நல்ல பிரமாணம் (உனக்கு ஆதாரமாய்); நிற்பது ஒன்று அன்று — நிற்றலில்லை. (இனி உனது ; அப்பிரமேயமும் — அந்தப் பிரமேயமும்; அதன்-அந்தப் பிரமாணத்தின்; இயல்பு — போக்கே போன்றது.

2 (எப்படியென்ருல் பிரமத்துக்குத் தன்னின்பம் அறிய வாராமை) கன்னல்-கரும்பு; சுவையில்-சுவைக்கு; அன்னியம் இலது-வேறில்லை; (ஆயினும்) இனிமை-சுவை (கரும்புக்கு); தோன்ரு — அறியவாராத; தனிமைத்து — தன்மையைப் போன்றது; என்றனே—என்ருய். (அதில்); அறிவிற்கு-சித்துப் பொருளுக்கு; அசத்து—சடப்பொருள்; உவவைஆம்-உவமை யாகிறது. (மேலும்); கட்டி — கருப்பஞ்சாற்றை (கரும்பிலி ருந்து); பிறிவித்து — நீங்கச் செய்து (மீண்டுங் கரும்போடு ; ஒட்டினும் — சேரச் செய்தாலும் (கரும்பு அதனை); பேறது — பெற்றதனுலுண்டாகிய இன்பத்தை; உருது - நுகராது.

3 தற்பரம்— பிரமம் (பிரபஞ்சப் பொருள்களாக); விரிவு-மாறு வது; பொன்பணி — தங்கம் ஆபரணமாக (மாறுவதை); தகும்- போன்றது; எனில்—என்ருல்; செய்வோர் - கர்த்தா; இன்றி — இல்லாமல்; செய்வினை — கிரியை; இன்மையின் — இல்லை ஆகையால்; பொன் — தங்கம்; ஆகை — ஆபரணம்

ஆதல் (என்கிற காரியம் தட்டானுகிய கர்த்தாவின் கிரியை யன்றி உபாதானமாகிய); தன் பணி அன்று — தங்கத்தின் செயலன்று; செய்வோர் — கர்த்தா; போலா — போன்று (காரண வகைகளிற்) சேராத; செயப்படுபொருள்—காரியத் தின்; முதல் — உபாதானத்தில்; செய்வோர் ஏயா—கர்த்தா கூடாமல் (காரியம்); செய்யவும் படுமே — தோன்றுதலும் உண்டோ ?

4 (பிரபஞ்சப்பகுதிகள்) சுத்தி-இப்பியில்; வெள்ளியின்-வெள்ளி போல; (பிரமத்தில் பொய்யாக) தோன்றிற்று ஆயின் — தோன்றினவென்றால்; சத்து—பிரமம்; உலகு-பிரபஞ்சத்தில்; ஏதும் — எந்தப் பகுதியையும்; தாரா — சிருட்டித்ததென்று சொல்லமுடியாது; தரும் எனின் — சிருட்டிக்கும் என்றால்; உலகம்-பிரபஞ்சம்; மித்தை என்று-பொய்த்தோற்றம் என்று; ஓராது-ஆராயாமல்; உரைத்தனை-சொன்னாய்; (ஆங்காங்கே) நிலவும்—பரவிக்கிடக்கிற; நின்மரபு—உன்மதக்கொள்கையை (அதனால்); நினைந்திலை—மறந்தாய்.

5 உலகம் — பிரபஞ்சத்தை (உண்டென்று); விவகாரத்தில் — விவகார தசையில்; வேண்டுதும்—சம்மதிப்போம்; பரமார்த் தத்தில் — பரமார்த்த தசையில்; பகராம் என்னில் — சம்மதி யோம் என்றால்; (பிரபஞ்சம்) பரத்து—பிரமவுபாதானத்தில்; உளதேல்—தோன்றிற்றாயின்: இவையும் — அப்பிரபஞ்சமும்; பரமார்த்தம்—பரமார்த்தத்திலும் (உள்ளது தான் ; பரத்து —பரமார்த்தத்தில்; இலதேல் — இல்லையாயின்; (பிரபஞ்சம் பிரமவுபாதானத்தில் உண்டாயிற்றென்று) முன் — முதலில் பகர்மாற்றம்—சொன்ன சொல்லை; ஒழி—விடு; அதன் — அப் பிரபஞ்சத்துக்கு; முதல்-உபாதானம்; இது என-இதுவென்று பிரமத்துக்கு வேறாக ஏதேனும் ஒன்றைத்தேடி); உதவுக-தா; அன்றியும் — இன்னமும் (பிரமத்தை); விவகரிக்குங்கால் — ஆராயுமிடத்து; அது — அப்பிரமம்; திகழ் — விளங்குகிற; பரமார்த்த நிலை—பரமார்த்த நிலை (ஆன்மாவை); தெரியின்- ஆராயுமிடத்து; நீ—ஆன்மா; இது - விவகாரநிலை (என்றால்); நீயேல் — ஆன்மாவாயின்; (அது) தெரியாது — முற்றறிவில் லாதது; ஆயின்—ஆகையால்; அஃதும்-பிரமமும்: தெரியாது- முற்றறிவில்லாதது (என்ன வேண்டும். அதனால் ஆன்மாச் சிற்றறிவுடையது, பிரமம் முற்றறிவுடையது என்கிற); உரை ஆர் அளவையும் — சுருதிப் பிரமாணத்தையும்; ஒழிந்தனை— தள்ளினாய்; (இன்னும்) அளவை—பிரமாணம்; காண்டல்— பிரத்தியக்ஷமும்; கருதல் — அனுமானமும்; உரை என —

ஆகமமும் என்று (மூன்றுக); உளது-இருக்கிறது; (ஆன்மாப் பொருள் நிச்சயம் செய்ய) அவை மூன்றின்—அம்மூன்றிலும்; மொழிவழி—சொல்லப்பட்ட பிரகாரம்; நுழையின்-ஆராய்ந் தால்; நின் பிரமேயம்-உன் பிரமம்; என் ஆம்-என்ன ஆகும்?; பொன்பிதிர் — தங்கத்துகள்கள் (பலவாய்); பிதிர்ந்தும் — சிதறினும்; பொன்னே ஆம் — தங்கமே யாகும். (ஆனல்); நின்-உனது (சித்தாகிய); தற்பரம்-பிரமம் (தனக்கு மாறுன); அசித்தை - சடப்பிரபஞ்சத்தை (தன்னிடத்திலிருந்து); தரும் ஆறு-சிதறவிட்ட விதம்; என்-எப்படி; எனில்-என்று (நான்) வினவில்;

6 (சித்தாகிய) சிலம்பி-சிலந்தி (தன்னிடத்திலிருந்து சடமாகிய; நூல்தரும் — நூலைத் தருகிற; நலம்போல் — தன்மைபோல (அதுவும்); தோன்றும்—இருக்கும்; என்றனை — என்று விடுத் தாய்; அது—அந்நூல்; அதன்—அச்சிலந்தியின்; தொழில் — கிரியைக்கு (ப்பயனே); அன்றியும் — அல்லாமலும்; அதன் இயல்பு — அந்நூலின் தன்மை; ஒன்று — ஒருபடித்தானது. (ஆனல்); உலகு — பிரபஞ்சம்; ஓர் இயல்பு—ஒருபடித்தாய்; அன்று—இல்லை; என-என்று (அவ்விடையை நான்) மறுத்த போது;

7 பாதவம்—மரம்; பலம் இலை பழம் பூ—காய் முதலியவற்றை, தரும் - தருகிறது; நீர்—நீர்; திரை நுரை திவலை சில—அலை முதலிய சிலவற்றை; தரும் — தருகிறது; இவைபோல் — அப்படியே; தான்—பிரமமும்; பல—பல (ஆகிய தன்மைகளை யுடைய பிரபஞ்சத்தைத் தருவது); ஆம் என—ஆகுமென்று; நீ சாற்றினை — நீ சொன்னும். சத்து—உள்ளதாகிய அறிவுப் பொருளில்; அசத்து—அழியக்கூடிய சடப்பொருள்; (உளது) ஆகவும் — தோன்றுகிறதென்றும்; சத்தினில் — அவ்வறிவுப் பொருளில் (பல தன்மையவான); அசத்தின் — அவ்வறிவில் பொருள்களின்; கொத்து — கூட்டம்; உளது ஆகவும் — தோன்றுகிறதென்றும்; கூறினர்-சொன்னவர் (வேறுயாரும்) இலர் — இலர்; (ஆலின்) வித்து — விதை (உபாதானமாய் நின்றே); இலை கனி விழுது-இலை முதலியவற்றை (உடைய); ஆல்-ஆலமரத்தை; நனிதருநெறி-நன்முக வெளிப்படுத்துவது போன்று; சத்துஅலது — பிரமமல்லாததாய (வேறு); ஒன்று தான்-ஒரு பொருளே (உபாதானமாய் நின்று பிரபஞ்சத்தை) தரவேண்டும்—வெளிப்படுத்தவேண்டும்;

8 (அப்படியே) நெல்—நெல்விதையும்; பதர்—சாவி; பலாலத் திற்கு—வைக்கோல்களுக்கு; உபாதானம் என்-உபாதானமே யென்க; (தன்னுேடியைபுடைய) காரணம்-உபாதானத்தில்; இன்றி—அல்லாமல்; (மற்ற வுபாதானத்தில் எந்த) காரியம்-காரியமும்; பிறவா — தோன்றமாட்டாது; (தோன்றுமென் ருல்) பாரிடை—மண்ணை (உபாதானமாகக் கொண்டு); ஒரு படம்—துணியாகிய ஒரு காரியம்; பண்ணவும் படும்—தோன் றவும் வேண்டும்.

9 அந்தம் இல் பிரமம் — அழிவில்லாத பிரமம்; அவித்தை — பிரபஞ்சத்துக்கு; காரணம் என-உபாதானமென்று; தந்தனை —சொன்னுய். (அதன்பால்); அவித்தை – பிரபஞ்சம்; எய்து றுதல் — தோன்றுதல்; தன் இயல்பு — அதற்கு இயற்கை; என்னில்—என்ருல்; வன்னி—தீயின் (உபாதானத்தில் காரிய மாகத் தோன்றி); தன் — அதனுடைய (இயற்கையாகிற); வெம்மையின் – சூடு (தீ உள்ளவரை அழியாமல் இருப்பது) போல; சத்தினது—பிரமத்தி (னுபாதானத்தில் காரியமாகத் தோன்றி அத) னுடைய; இயல்பும் — இயற்கையாகிற பிர பஞ்சமும் (பிரமம் உள்ளவரை); சத்து — அழியாமலிருக்க வேண்டும்; (பிரபஞ்சம்) அசத்து — அழிவுடையதுதான்; எனில்-என்ருல்; (உபாதானமென) வைத்த-கொள்ளப்பட்ட தன் - பிரமத்தின்; இயல்பு — இயற்கைத் தோற்றம் (அது); எனும்—என்கின்ற (உன்); வழக்கு ஒழி-பேச்சை விடு; அன்றி யும் — அல்லாமலும் (பிரபஞ்சத்தைத் தந்த பிரமம்); இருள் பொதி—இருளை விழுங்குகிற; விளக்கு என—பிரகாசமென்று (மதிக்கப்பட்டு); வரும் — வருகிற; அருவிளக்கில் — அரிய தீபத்தில்; கருமை பயந்த — கரியைத் தந்த; பெருகு ஒளி — பெரிய பிரகாசத்தை; தகும் எனில் — ஒக்குமென்ருல்; தன் இயல்பு அன்று — (கரி) தீபத்தின் இயற்கை யன்று; அதன் — அத்தீபத்தினது; உபாதி வசத்தால்—சேர்க்கையால்; மன்னி யது — உண்டாயிற்று; அன்றி — அல்லாமலும்; மை — கரி; தனின் — தீபத்தில்; மாயாது — ஒடுங்காது; (ஆனுல் பிரமம் எவ்வித உபாதியுமில்லாத) ஒன்று ஆன—ஒப்பற்ற; சுத்தன்—அதிபரிசுத்தன்; அதனிடம் அபரிசுத்தமாகிய பிரபஞ்சந் தோன்றுமென்றல்) நன்று அன்று—பிழை; (பிரபஞ்சவுபாதி) ஆங்கு—பிரமத்தினிடம்; ஒரு காலத்து — இடைக்காலத்தில் ஓங்கியதாயின்—தோன்றியதென்ருல்; அந்தம் இல்—அழிவில் லாத; அவித்தை — அவ்வுபாதி (அவாந்தரத்தில்); வந்து அணைவதற்கு—வந்து தோன்றுவதற்கு (ஏதேனும்); ஓர் ஏது-ஒரு காரணம்; வேண்டும்—அவசியம்; (அது யாது? ஆகாசத்

தில் காரணமின்றி இடைக்காலத்தில் தோன்றுதல்) புயல் இயல்பு — மேகத்திற்குச் சுபாவம். (அப்படியே பிரமத்தில் பிரபஞ்சத்தின் அவாந்தரத் தோற்றத்திற்கும் காரணம் வேண்டாம்) எனில்—என்ருல்; விடு—முத்திநிலே (உண்டெனு நீ); ஓத வேண்டா — பேச வேண்டாம். (ஏனென்ருல் வந்து பற்றுவதற்குக் காரணம் வேண்டாமையால் அவ்வுபாதி); ஒழிந்தோரினும் - முத்தரிடமும்; உறும்—வந்து பற்றக்கூடும்.

10 களங்கமது—குற்றம்; உற—பொருந்தும்படி; உறும்—பந்திக்கிற; அவித்தை — அவ்வுபாதிகள்; தன்கவித்தல் — தன்னே மூடுதல்; விளங்கிய — பரிசுத்தமான; பிரம விளேயாட்டு — பிரமத்துக்கு லீலே; ஆயின் — என்ருல்; (விளேயாட்டுப் பொருள்கள் விளேயாடுகிறவனுக்கு வேருதல் போல) அவித்தை என்பது—உபாதிகள் என; ஒன்று—ஒன்று (பிரமத்துக்கு); அனனியம்—வேருதல் வேண்டும்; தன்னில்—பிரமத்தில் (அந்த அவித்தை); உதிக்கும் என்ற — தோன்றுமென்ற (உனது); முன் உரையும்—முந்திய சொல்லேயும்; மறந்தனே-மறந்தாய். (தன்); நுண்நூல் — மெல்லிய நூலால் (தான் செய்த); குடம்பை-கூட்டினுள்; (தானே அகப்பட்டுப் பிறகு அதிலிருந்து மீளுகிற வகையை அறியாத); நுந்துழி போல்—உலட்டுப் புழுப்போல் (பிரமமும் லீலேயாகப் பந்தத்தில் அகப்பட்டுப் பிறகு); உட்படு — அகப்பட்ட; நெறியதனுல் — வழியாக (அதிலிருந்து ; விடுநெறி—மீளுகிற வகையை; இலது—அறியாது. (அதனுல் அப்பிரமத்துக்கு); தலேமையும் — சர்வகர்த்திருத்துவமும்; அறிவும்-சர்வஞ்ஞத்துவமும்; இலது என் — இலவென்க (ஆகலின் அப்பிரமத்தை); அவித்தையை — உபாதியிலிருந்து; விடுத்து — நீக்கி; எடுத்து — தூயதாக்கி; ஆள்நரும் — ஆளுகிறவரும் (அஃதல்லாத); வேற்ருேர் — வேருெருவரே; நீ—நீ; ஒளிகொள் — பிரகாசம் பொருந்திய; தாமிரம — செம்பு (தன் களிம்பை நீக்கிக் கொள்வதற்கு) குளிகை—இரசகுளிகையை; பெற்ருங்கு — பெற்ருேற் போல் (பிரமம்); அதன் அவித்தையை—தன் உபாதியை; வித்தை—ஞானத்தால்; தவிர்க்கும் என்று — நீக்கிக்கொள்ளும் என்று; உரைக்கின்—சொன்னுல்; (அப்பிரமத்தை) நித்தன் அறிவன் சுத்தன் என்று — நித்தன் முதலியவாக (உன் சங்கற்பத்தில் பெருமைப்படுத்தி ,; உரைத்த—பேசிய; வித்தகம்—அதிசயம் என்—என்னவாகும்? (அந்த); வித்தையும்—ஞானமும் (உன் பிரமத்துக் கல்லாமல் அந்த); வேறு-வேருெருவருக்கு; ஒன்று —உரித்தானதே; நின் இறை—உன் பிரமம் (பசுக்களாகிய); எம்மனேரில்—எங்களில்; ஒருவன்—ஒருவனே; அம்ம-ஐயோ! (உலகத்தார்); சைவந்தவன்—சீயென இகழ நின்ருய்; நீ—நீ.

11 பல்மணி—பல இரத்தினங்கள்; பசு-பசுக்கள்; நல் பாத்திரம் —நல்ல பாத்திரங்கள்; (கூவல் ஆழிகள்) எனவும் — என்றும்; உடலையும்—சரீரத்தையும்; நல்நூல்-நல்லநூல்; பால்-பால்; நல்கதிர் — நல்ல சூரியன்; நீர் — நீர்; எனவும் — என்றும்; உணர்வையும்—பிரமத்தையும்; உவமித்தனையேல்—உவமித்தாயாகில்; தடமணிஒடு—பெரியஇரத்தினங்களோடு; சரடு-நூல்; தான் — தானே; கூடல — இயைந்துகொள்ளவில்லை; உணர்வு — பிரமம்; உணர்வு ஒழியின் — அறிவில்லாததாய்; உலகு — சரீரம்; உணர்வு — அறிவு; உறின்—உள்ளதாயின்; நின் — உன்னுடைய; பாலும் பசுவும் — பாற்பசு உவமை; சாலும் — பொருந்தும்; கலம் பல — பாத்திரங்கள் தான் அநேகம் (ஆனல் சூரியன் ஒன்றே); அன்றி-அல்லாமல்; சலம்-நீர்; பல இலது — பலவன்று. (ஆனல் கூவல் ஆழிகள் தான் பல); என—என்று; சால காணுநர்-நன்கு காண்பவர்; (உன் பிரமத்துக்கு வேருக) இன்றி — இல்லை. ஆகையால் (அவ்வுவமைகளை) வீணில்—வீணாக; விளம்பினை—பிதற்றினுய்.

12 ஆடியுள்—கண்ணாடிக்குள்; நிழல்போல்—பிரதிபிம்பம்போல் (பிரமம் சரீரந்தோறும் உயிரென); கூடுதல்-பிரதிபிம்பிப்பது (என்று); கூறின்—சொன்னுல்; தற்பணம்—கண்ணுடி; தன்—தன்பாலுள்ள; நிழல்கொண்டு-பிரதிபிம்பத்தினுல்; சலிக்கின்-இயங்குமாகில்; மன் — பிரமத்தினுடைய; நிழல்கொண்டு—பிரதிபிம்பத்தினுல்; உடல் — சரீரங்களுர்; வந்து — பிறந்து (இருந்து); அகன்றிடும்—இறக்கும்.

13 மன்—விளங்குகிற; அயம் – இரும்பு; காந்தம்-காந்த சன்னிதியில் (இயங்குவது); என – போன்று; உடல்—சரீரம்; பிரம—பிரமத்தின்; சன்னிதி அளவில் — சன்னிதி மாத்திரையால்; சலித்திடும்-இயங்கும்; ஆயின்-என்றுல்: அகண்டிதன் – வரையறைப்படாத பிரமத்தின்; சன்னிதி அலது-சன்னிதியல்லாத இடம் (எங்கும்); இலது — இல்லை. (ஆகையால் கடம்பட முதலிய); எவையும் — எல்லாப்பொருள்களுமே; நடந்திட வேண்டும்—இயங்க வேண்டும். (வாளா); கிடந்திடப்பெரு—கிடக்கமாட்டா; (மேலும்) காந்தத்து— காந்த சன்னிதியில்; இரும்பு (தன்னையெடுத்து நேரே); காட்டுநர்—காட்டுபவரை; பெறில்-பெற்றுற்றுன்; அயம்-அவ்விரும்பு (காந்தத்தோடு); சேர்ந்திடும் — ஒட்டிக்கொள்ளும்; (ஆனல் அதனை) நீக்கும் செயல்—விடுந்தொழில்; அதற்கு — அக்காந்தத்திற்கு; இலது-இல்லை.

14 (துன்ப நுகர்ச்சிக்கு) கனுத் துயர் — கனவிற் பயம்; கயிற்று அரவு எனு — கயிற்றிற் பாம்பு என்று; சில தொடுத்தனை — சிலவற்றை உவமித்தாய்; கனவின் பயனும் — கனவில் அனுபவிப்பதும்; நனவின் பயனும்—நனவில் அனுபவிப்பதும்; வினையின் பயன்—வினைப்பயனே. (ஆகலின்); அவை பொய்—அவற்றைப் பொய்; என வேண்டா — என்று சொல்லாதே. (கனவு நனவுகள் முறையே சூக்குமம் தூலம் என்கிற); உடல்-சரீரங்களில் (உயிர்); மாருட்ட — மாறிச் சஞ்சரிப்பதால் (வருகிற); கடன்-வினைவே(நீ); அது கருதுக-அதனை யாராய். (நீ); உற்ற-சென்ற (பாம்பின்); புற்றும்—புற்றும்; அதில்-அதனருகில் (கிடக்கிற); கயிறும் - கயிறும் (உன்); உடலும்-சரீரமும்; கூட -ஒருசேர; சடம்என-சடங்கள் என்று; அறிதி — அறி. (எஞ்சிய உன்); அறிவு — பிரமம் (அக்கயிற்றை); கயிறு என்று—கயிறேயென்று; அறியாது-அறியமாட்டாமல் (பாம்பென மயங்கி); அச்சமது அடைதல் — அஞ்சுதல்; கொச்சைமை — இழிவை; உடைத்து — அடைந்தபடியாம்; இன்னும்—அன்றியும்; அக்கனவில்-அந்தக் கனவிலும்; இருள் —இருளில் (புற்றருகில்); உறுகயிற்றில் — கிடக்கிற கயிற்றிலும்; பின்னும் — அடிக்கடி; நின்பிரமம் — உன் பிரமமும்; பிரமித்திடும்—மயங்குகிறது; (அஃது ஏன்?)

15 துன்னிய—கூடிய; வினையில்—வினையனுபவத்தில்; செம்மலர் — சிவந்த பூ (சேர்வதால் தானுஞ் சிவந்ததுபோற் காணப் பட்டாலும், அதில் தோயாமலும் தன் இயற்கை நிறம் மாருமலும் இருக்கிற) பளிங்கு என — பளிங்கு போன்று; தான்—பிரமமும் (வினை சேர்வதால் அதனை அனுபவிப்பது போற் காணப்பட்டாலும் அதில் தோயாமலும் தன் இயல்பு மாருமலும்); ஆம் — இருக்கிற; தகைமையானுல் — தன்மையையுடையதென்றுல் (பளிங்கு ஒரு நிறமாகவே யிருக்கும்படி சேருகிற); மலர் என—பூப்போன்று (வினையும் பிரமம்); ஒரு பயன்—ஒரு படித்தாகவே (இருத்தற்கு); அன்றி—இல்லாமல் பல பயன்—பல படித்தாக (இருக்குமாறு); மரீஇயது -சேர்ந்தது. (அஃதேன்? அக்காரணம்); இரு — இரண்டாகி (பலவான); வினை—வினைகள்; தருபயன்—தருகிற அனுபவமேயாம்; என—என்று கூற (நீ ; நனிவேண்டில்—மிகவும் விரும்பினுல்; ஆண்ட-ஆளுகிற; வித்தையும்-ஞானமும்; அவித்தை கொடு—மூடங்கொண்டுள்ள; ஆக்கையும்—சரீரமும்; ஈண்டு-நெருங்குகிற; இவ்வினையும் — புண்ணிய பாவங்களும் (உளவென); இயம்பினை — சொன்னுய். (ஆகலின்); கள்வரை—திருடரை; பிணிக்கும்—கட்டிச் சிறையிடுகிற; காவலர் என-

அரசர் போன்று; முயல்-ஈட்டிய; தொல்வினை-பழவினையின்; தொடக்கின்—பந்தத்தால்; தோன்று—வருகிற; உடல்-சரீர மாகிய; சிறை — சிறையில்(உன்); பரத்தை — பிரமத்தை; இட்டு—அடைத்து; இருவினை-இன்பத் துன்பங்களை; ஊட்டும் -அருத்துகிற; எம்மான்-எமது பெருமான் (ஆகிய சிவபிரான் ருன்); நம்மான்—சர்வலோக ஏக நாயகன்.

16 அரு வினை – அரிய வினைப்பயனாகிய; உடற்கண் — சரீரத்தில்; அவத்தைகள் — அவத்தைகள் (உளவென); உரைத்தனை— சொன்னாய். (அவற்றை); உறுபவர்—அனுபவிப்பவர்; ஆர்-யார்; பரம்—பிரமம்; அகண்டிதம்—வரையறைப்படாதது. (ஆகலின் அது அவற்றில்); அடங்காது—அகப்படாது; உடல் சடம்–சரீரம் அறிவில்லாதது. (ஆகலின் அதுவும் அவற்றை) ஓர்வுஇலது – அனுபவித்தலில்லை. (மேலும் நான் அவத்தைகள்) உறுநெறி—நிகழ்கிற முறைதான்; யாது எனின்—எது என்று வினவில்; மன்னிய — கிடைத்த; கரணம் — கருவிகளின் (சேர்தல் பிரிதல்களாகிய); மாருட்டத்தில் – மாற்றத்தில் (அது நிகழ்கிறதென்று நாம்); பன்னினம் — சொன்னோம்; என்னின் — என்று (நீ) விடுப்பாய். ஆனால்; இவையோ — கரண சமூகமோ; பரமோ—பிரமமோ; முதலி — முதன்மை யையுடையது?; அது ஆயின் — பிரமமென்றால் (அதன் சம்மதமின்றி); இவை — கரண சமூகம்; பிறழ்வு —சேர்தல் பிரிதல்களை; எய்தாது—கிடையாது; இவை எனில் – கரண சமூகமென்றால் (பிரமமே முதலியென்கிற); உனது மொழி — உன் பேச்சு; பழுது உளது — பிழையுளதாயிற்று; (அவத்தைகளை) உடல் — சரீரத்தில்; படுபிரமம்—அகப்பட்ட சீவப் பிரமம்; உறும் எனில் – அனுபவிக்குமென்றால்; சாளரத்து —பலகணி வழியாக (உள்ளே); இட—நீட்டவும்; தகும்உறு— தகுந்த வலிய; விரல்நுதி — விரலின் நுனியில்; அளி-வண்டு; எறிதுயர்-கொட்டின துன்பத்தை (அந்த); அங்குலிஏ – விரல் மட்டுமே; அருந்திடில்-அனுபவிப்பதானால் (பரப்பிரமமல்லாமல்); உடற்கண்—சரீரத்தில்; தங்கிய-அகப்பட்ட; அறிவு— சீவப்பிரமம்; தனித்து-தான் மட்டில்; உறும் - அனுபவித்தல் கூடும்.

17 (பிரமத்தில் துன்பந் தாக்காமை) தற்பணம் — கண்ணாடியில் (உள்ள); நிழல்கண்-பிரதிபிம்பக் கண்ணில்; குற்றி பாய்ந்து-கோல் பாய; அற்றால்—அதனால் (கண்ணாடி உடைவதன்றி); நல்கணில் – உண்மைக்கண்ணில்; துயரம்-துன்பம்; நணுகா—

தாக்காத; தகைத்து — தன்மையைப் போன்றது; எனில் — என்றால் (நீ முதலிற் சொன்ன); நின்மொழி — உன் சொல்லுக்கு; விரோதமும் — விரோதமும்; உறும் — உளவாகும்; அவை—அவ்விரண்டு விரோதங்களும்; தவறு இல — பொய் யாவன வல்ல; (அதனால்) ஆகா-ஆஹா; யாமுடை-உன்னுடைய; பதிவகையா — பிரமத்தின் இலக்கணமாக; வரும்— நிலவுகிற; பலகலை — பலசாத்திரங்களையும்; சொல்லுதல் எளிது அரிது அத்தொழில் புரிவு என—'சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ். சொல்லிய வண்ணஞ் செயல்' என்று (அவற்றின்); புல்லிய-இழிவை புலப்படுத்துகிற; பழமொழி-குறளுக்கு (இலக்கியமாமாறு நீ); புதுக்கினை-புதுப்பித்தாய்; அகண்டிதம் என — அகண்டம் என்று; நீ பகர்ந்தமை — நீ சொன்ன; தனக்கு-பிரமத்துக்கு; பந்தம்-பந்தமாவது; இது என-இது என்று; தந்தமை-கூறியதை; கருதில்-யோசித்தால்; வானின் — ஆகாசத்தில்; நடக்கும்—இயங்குகிற; காலினைப் பிடித்து - காற்றைப் பிடித்து; பருவிலங்கு - பருத்த விலங்கு; இட்ட-பூட்டிய; ஒருவன்-சமர்த்தன்; நீ-நீ (என்பது விளங்கும். அந்த)

18 பந்தமது - பந்தம்; அகல - நீங்கும்படி; உந்து - துரத்துகிற; விவேகம்-ஞானம்; வான்-ஆகாசத்தில் (தோன்றுகிற); வளி என — காற்றுப்போல்; தனில் தானே — பிரமத்திற்றானே; தோன்றின் — உதிக்குமென்றால் (பிரமம் பந்தப்படுதற்கு); முன்பு-முன் (அதன்பால் அந்த ஞானம்); உளதாயின்-இருந்ததாயின் (பிரமம்); மயங்காது—பந்தப்படாது; இலது எனில் —இல்லையாயின் (பந்தப்பட்ட); பின்—பின் (அதன்பால்); உளதாகாது—உண்டாகாது முன்; இலது-இல்லாதது (பின்) உளது எனின்—உண்டாகுமென்றால்; வெளி—ஆகாசம் (தன் பால் இதுவரை யில்லாத); மலரது-தாமரைப் பூவை (புதுவ தாக); தரும்-தரவுங்கூடும்.(அப்படியன்று, அஃதுண்டாதல்); அனல்-தீ; மரக்கண்-மரத்தில் (முன்); இன்றாகி—இல்லையாகி (பின்); தருவது-வெளிப்படுவது; தரும் எனில்—போலுமென்றால்; (கடைவாரின்றி அத்தீ) தானே-தானாகவே; தோன்றா-வெளிப்படாது (நிற்க); அவித்தையின்-பெத்தத்தில்; உதித்த —தோன்றிய; வித்தை - ஞானம்; விறகின்-விறகில்; உதித்த -தோன்றிய; கனல் தகும்-தீயை யொக்கும்; ஆயின்-என்றால்; வித்தை என்று-ஞானம் என்கிற பெயரால் (நீ); உரைத்த — சொன்ன; விவேகம்—விவேகம்; அம்மரத்து—அந்த மரத்தில்; உதித்த-தோன்றிய; வெம்—வெம்மையாகிய; தழல் அனைய-தீக்குச்சமம்;விவேகம்—விவேக ஞானம்;உதித்தது—தோன்று

வதற்கிடமாகிய பெத்தம்; இந்தனம் அனையது மரத்துக்குச் சமம் (ஆகையால் அந்த ஞானம்); இறையில் — பிரமத்தில்; (தோன்றியது) அன்று — அன்று; அற்று — அப்பெத்தத்தில் தோன்றியதாதல் வேண்டும்.

19 இல்பட — வீடு இல்லையாம்படி (அதனை உறுப்புறுப்பாக); பிரிப்பின்—பிரித்தல்போன்று; மெய்ப்படும்—உள்ளனவாகத் தோன்றுகிற (தத்துவங்கள்); எவற்றையும்—எல்லாவற்றையும்; இது – இத்தத்துவம் (நான்); அன்று – அன்று; என-என்று (ஒவ்வொன்றாகச் சோதித்து); கழிகாலை—கழிந்தபின் (அப்படி கழித்த); அதுவே-அந்த ஞானமே; தான் ஆயினது-பிரமமாயிற்று; என்றனை—என்றாய்; (இருள்முன்) வியன்ஒளி —பெரிய ஒளியும்; (ஒளிமுன்) இருள்-இருளும் (நிலைபெறுமை); என— போல; வித்தை முன்னர்—ஞானத்தின்முன்; அவித்தையும்— அஞ்ஞானமும்; அவித்தைமுன் — அஞ்ஞானத்தின் முன்; வித்தையும் – ஞானமும்; நில்லா-நிலைபெறா; இருள்அல-இருள் சந்திக்கமாட்டாத; ஒளிக்கும் — ஒளிக்கும்; ஒளி அல — ஒளி சந்திக்க மாட்டாத; இருட்டும் — இருளுக்கும் (முறையே இருளின் பாலும், ஒளியின் பாலும்); ஒரு காலத்தும் — எக்காலத்திலும்; ஒரு பயன் - சிறிதனுபவமும்; இலது - இல்லை; இரண்டையும்—இருளையும் ஒளியையும்; நுகரும் — அனுபவிக்கிற (அவற்றிற்கு); முரண்தரு — வேறாய; விழி என — கண் போன்று; வித்தையும்—ஞானத்தையும; அவித்தையும்—அஞ்ஞானத்தையும் (தன்பால்); உய்த்தது - பொருத்தியனுபவிப்பதாகிய (ஆன்மா என்கிற); ஒன்று — ஒரு பொருள் (அவற்றிற்கு வேறாய்); உளது-உள்ளது.

20 (பிரமமே உபாதியினாற் சீவனாயிருந்தது. விவேக ஞானத்தினால் மீண்டும் பிரமமாயிற்று என்றாயாகலின் அந்த தானே- பிரமமே (இம்முத்தியில் மீண்டும்); தான் ஆம் - பிரமமாகும் (என்பதாயிற்று. அப்படி); ஆனால்—ஆயினால் (அப்பிரமத்துக்கு வருகிற); பயன் என் – பயன் யாது ?

21 தன்னில்-பிரமத்தில்; தன்னை - பிரமசொரூபத்தை; தானே- பிரமமே; காணின்—காணுமென்றால்; கண்ணில் – கண்ணில்; கண்ணை — கண் சொரூபத்தை (கண்ணே); காணவும்படும்— காணவும் கூடும்.

22 (அப்பிரமம்) தன் — தன்மாட்டுள்ள; நலமதனை-இன்பத்தை தானே--தானே; நுகரும் என்னின்—அனுபவிக்குமென்றால்; (அது சீவனாக உபாதிப்படுதற்கு) முன்—முன்னே (அதனனுபவத்திற்கு அந்த); நலம்—இன்பம்; எய்தாதிருந்தது—வாராமலிருந்தது; என்-ஏன் ?; (அது, கரும்பிலிருந்துங் கரும்பினனுபவத்திற்கு வாராமலிருக்கிற) கட்டிபோல் என—சாறுபோலுமென்று (நீ முன்); கதறினை — பிதற்றினாய்; (பிரமமல்லாத ஆன்மாவாகிய நீ பிரமத்தின்) வித்தை — ஞானத்தை; உடையை ஆயிடின் -- பெற்றாயானால் (அதன்); இன்பம் — இன்பம் (உனக்கு அனுபவமாய்); வந்து ஒட்டிடும் - வந்து சேரும்.

23 தத்துவமசிஎன-தத் த்வம் அஸியென்று; வைத்த-கூறப்பட்ட முப்பதத்திற்கு-மூன்று சொற்களுக்கும்; பொருள் - வஸ்து; ஒன்றேஒன்று—ஒன்றுதான் என்று(உரை); பகர்வது-கூறுவது; அன்று — கூடாது(ஏனென்றால்); நீ புலிஆயினை – நீ புலிஆனாய்; என்றாங்கு—என்றவிடத்து; உணரில்—ஆராய்ந்தால்; ஆயினை என்றது — ஆயினை என்ற சொல்; ஆகு — நிகர் (என்கிற); உவமைத்து–உவமைப் பொருளுடையதாகும் (யாம்); நோய் ஆயின மேல்—நோய் ஆயினம் என்றால் (அதிலுள்ள ஆயினம் என்பதையும்); ஆய் – ஆராய்; ஆய் என்றால் – ஆராய் என்று (நான்) சொன்னால் (அது); அகமே-சீவனே; பிரமம்-பிரமம் ஆயினது-ஆயிற்று; என்றால்-என்று சொன்னதாலேயே; சகம் —உலகம்; அறிய – அறியும்படி; தான் - பிரமம் (சீவனுக்கு); வேறு - வேறாகவேயுள்ளது (என்கிற உண்மை உனக்குப் புலப்படுமென்பதற்கேயாம். பிரபஞ்சம்)

24 உண்மையில் – மெய்ப்பார்வையில் (ஆன்மாவின்); சலம் இல-அனுபவமாகாது; உடல் – சரீரத்தின்; சஞ்சலம்—அனுபவமாகவே; உறும் – இருக்கும்; (ஆன்மா நீரிலுள்ள பிரதிபிம்பமாகிய) வெண்மதிபோல – வெள்ளிய சந்திரன்போன்று (சலனமற்றுச்சரீரத்தில்); விளங்கிடும்-விளங்கும்; என்றனை—என்றாய் (அந்தப் பிரதிபிம்ப) மதி – சந்திரனே; அசலன் ஆகி – சலனத்திலிருந்து நீங்கினவனாய்; சஞ்சலசலத்து—சலிக்கின்ற நீரின்; சலனம் — சலனத்தை; (நாம்) மேவினம் என—நம்மதென்றிருந்தோமென; காணவேண்டும்-உணரவேண்டும்; அது அன்றி-அப்படியல்லாமல் (அச் சந்திரசலனத்தை); காண்பவர் — பார்ப்பவர் (அச்சந்திரனுக்கு); பிறரேல் – வேறாவர் ஆகலின்; ஈண்டு — இங்கு; உனது—உன்னுடைய; ஏகம்—ஏக வஸ்துப் பிரசங்கம்; என் செய்தது – என்ன கதியாயிற்று? இயம்புக—சொல்.

25 (சீவன் முத்தப் பிரமம்) உடல்விட — சரீரத்தைவிட்டதும் (பரப்பிரமத்தோடு ஒன்ருதல்); கடத்துள்படு — குடத்துள் இருக்கிற; வெளி—ஆகாசம் (குடம் உடைந்ததும் மகா ஆகா சமே ஆதல்); போல் எனில் — போலும் என்ருல் (அது சரீரத்தை); விட்டு—நீக்கி; என்-என்ன (இன்பத்தை); பெற —அடைய? உடல்பட்டு-சரீரத்தில் அகப்பட்டு; என் —என்ன (துன்பத்தை); பட-அடைய?; மற்று — இன்னும்; இகல்அற— துன்பம்நீங்க; ஒருவன்-ஒருசீவன்; இவ்வகை—இப்படி; தெளி யில்—முத்திசேர்ந்தால் (நானு சீவர் கிடையாவென்கிற உன் மதப்படி); அகிலமும் — சர்வசீவரும்; முத்தி — முத்தியை; அடைந்தோர் — அடைந்தவர்;ஆயின் — என்ருல்(ஞானம்பெரு மல் அவருக்கு); பிறிந்தோர் — வேருனவரும் (உளரெனப் பட்டு); உயிர்-சீவர்; பலபேதத்து—பலவாக இருத்தல் வேண் டும் (என்பது பெறப்படும். உயிருக்கு)

26 கன்மகாண்டம்—கருமகாண்டம்; காரணம் ஆக—வாயிலாக; விவேகம்—ஞானம்; மன்னும் என்னில்—உண்டாகுமென்ருல்; அவித்தைக்கு—உபாதியுண்டானதற்கு;காரணம் ஏது-வாயில் யாது ? (அதனை); ஓதினையில்லை — சொன்னுயில்லை (அப்படி யிருக்க); இதற்கும் - ஞானம் உண்டாவதற்கும்; காரணம்— வாயில் (இதுவென நீ); விதித்தல்—கூறுதல்; வேண்டின்று— வேண்டாம்.

27 (கோல்கொண்டு கடைந்ததால்) அரணியில் — கட்டையில்; உதித்த—வெளியான;கனல்—தீ;அவை-அக்கோலையுங்கட்டை யையும்; கவர்வு என — அழிப்பதுபோல்; விரதத்து — கரும காண்டத்து; உதித்த—விளங்கிய; விவேகம் — ஞானம் (அக் கரும காண்டத்தை); அழித்தல்—நாசம் (செய்யுமென்ருல்); போதம் ஒன்று - ஞானம் சிறிதேனும்; அறியோர் உம்-இல்லா தவரும்; வருந்தியாயினும் — வேண்டுமென்றே; திருந்திய— செப்பமாகிய; வேதநீதி—வேதவொழுக்கங்கள்; எல்லாம்— எல்லாவற்றையும்; நீத்து — கைவிட்டு (தமக்கு ஞானம் உண்டாயிற்றெனச் சொல்லி); அல்வழி—துன்மார்க்கத்தில்; நடத்தல்-திரிதல் (கூடுமாகலின் அஃதவரது ; பொறியோ— தலையெழுத்தோ ? (ஆம்); போதநெறியோ-ஞானுசாரமோ? (அன்று); இதுபவம் — இந்தப் பந்தம்; நீங்கிடு—நீங்குதற்கு; நெறிதரு — ஞானத்தை யுதவுகிற; பாங்கினை — கருமகாண் டத்தை; பழித்தல்-நிந்திப்பது; (அக்கரும காண்டஞ் செய்த) நன்றி-உபகாரத்தை; கொன்றல்-கொல்லுதலாகும்; அன்றி யும் — அல்லாமலும் (ஞானியராவார்); பாலர் — கைக் குழந்தைகள்; உன்மத்தர்-பித்தர்; பசாசரில்-பேய் பிடியுண்ட

வர் போல (இருப்பர்); எனவும்—என்றும் (அவர் பாலுள்ள): ஞால நீதியும் — உலகவொழுக்கமும்; நால்மறை — நான்கு வேத; நீதியும் — ஒழுக்கமும்; உறங்கினேன் கை— உறங்கின வனது கையில் (உள்ள); வெறும் பாக்கு — வெறும் பாக்கு (போல் தாமே நழுவவேண்டும்); எனவும் — என்றும் (அறி. அவை அவரிடமிருந்து); தானே — தாமாகவே; தவிரா தானுல் — நழுவவில்லையானுல் (அவர் அவற்றை ஆசரிக்கவே வேண்டும்); (முனைப்பால்) புரியாது — ஆசரியாமல்; ஒழிந்தி டின்—விடுவாராயின் (ஞானியராகாமல்); நிரயத்து— நரகத்தில்; அழுந்துதல் — மூழ்குதல்; திடம் — திண்ணம்; (கரும காண்டத்தை) உய்த்தோன் — ஆசரிப்பவனுக்கு; அன்றி—அல்லாமல் (வேண்டுமென்று விட்ட போலி ஞானிக்கு); முத்தி — முத்தி (உண்டென்று நீ); உரைத்தல்— சொல்லுதல் (உனக்கு); பித்தோ—பைத்தியமோ?; பிரமம்— பிரமஞானம்; செத்தோ — மரணத்துக்குப் பிறகோ; பெறு வது—அடையப்படுவது?; நீயே — நீயுந்தானே; உடலையும்— சரீரத்தையும்; சடம் என—அறிவற்றதென்று; சாற்றினை— சொன்னுய் (ஆகையால் அதனை); வையினும் — ஏசினுலும்; வாழ்த்தினும்—ஆசீர்வதித்தாலும்: கொய்யினும் — வெட்டி னுலும்; கொளுத்தினும் — சுட்டாலும்; வணங்கினும் — கும் பிட்டாலும்; உதைப்பினும் — உதைத்தாலும் (அதற்கோ ரனுபவமுமில்லை. அவற்றிலெல்லாம்); பிணங்குதல் — விருப்பு வெறுப்பு; செய்யா—கொள்ளாத; பிரமத்தன்மை— பிரம ஞானத்தை; பெறுவது — அடைவது (உயிரே. அது உடலுள்ள போதின்றி வேறு); எக்காலம்—எப்போது (அந்த ஞானத்தை யடையும்? மக்களுக்கு); இருக்கும் நாள்—ஆயுள்; சில—சுருக்கமே (அதற்குள்); எண் இல் — கணக்கில்லாத; நூல் கதறி — சுவடிகளைப் படித்து (கண்டவரோடெல்லாம்); தருக்கம் பேசி—தருக்கித்து; தலை பறி உற்று—தலை மயிர் பறி போய்; கண்டோர்—எவரேனும்; ஈந்த—இட்ட; பிண்டம்— பிச்சைச் சோற்றை; உண்டு—தின்று; (பிறருக்கு ஞானத்தை யுபதேசிப்பதாக) அலறி — கூச்சலிட்டு; பல நோய் — பல நோய்களுக்கு (இடமாய); யாக்கை — சரீரத்தில் (அதற்கு); தன் — இயல்பாயுள்ள (ஏதேனுமொரு கொடிய); நோய் உற்று —நோய் மேலிட (அதனுல்); உடல்—சரீரத்தை; விட— இழக்க; வரும் என்று — நேருமேயென்று; நடுநடு நடுங்கி — மிகவும் பதை பதைத்து; யானே — நானே (பிரமவிட்டுணு வாதி); எவரும்— எல்லாத் தெய்வங்களும்; ஆனேன் — ஆயி னேன்; என்றலின் — என்று பேசித் திரிகிருயாகலின் (சரீரத்தை); விட்டு — விட்ட பிறகு (உனக்கு அத் தெய்வங்

களுள்); ஓர் தெய்வத்து — எந்தத் தெய்வத்தினது; ஒட்டு — சகாயமும்; இன்று—இல்லாமற்போம்; அன்றியும் — அல்லாமலும்; அவ்வவர்—அவ்வத் தெய்வங்கள்; சீறிய—கோபித்து; அவ்வவர் — தத்தமக்குரிய; வாழ்நாள் – ஆயுளளவும்; செவ்வின் — நிச்சயமாக; நிரயம்—நரகத்தில் (உன்னை); சேர்த்துவர் —அழுத்தி வைக்கும்; அதனுல் – ஆகையால்; மாயாவாத— மாயாவாதமென்கிற; பேயா—பேய்மதப் பிடியுண்டவனே! (அப்போது); உனக்கு — உனக்கு (கை கொடுப்பவராக); தேவரில் — தேவர்களுக்கெல்லாம்,—ஒருவர் — முதலாவாரே; உண்டாக—வருவதாக் விருந்தாலும்; மேவரு — நெருங்க முடியாத (கொடிய; நரகம் — நரகம் (உன்னை எளிதில் ; விடுத்தல் அரிது—விட விரும்பாது. (என்று இப்படியெல்லாம் அம்மாயாவாதியின் சங்கற்பத்தை அவனுக்கருகிலிருந்து ஐக்கியவாதி நிராகரணம் பண்ணிஞன்).

கருத்து

நிராகரணத்துக் கேற்பச் சங்கற்பத்திலுள்ள 'முன்னுள மறைகள்' (23) என்ற பகுதி 1-ஆவது சங்கற்பமாகக் கொள்ளப் பட்டது. மற்றைச் சங்கற்பங்களும் நிராகரணங்களும் இரண்டிலும் வரிசையாகவுள்ளன.

பிரமாண மறுப்பு

1. சங்:- பிரமம் ஒன்றே உள்பொருள்; அதற்குப் பிரமாணம் வேதம்.

நிரா:- பிரமம் ஒன்றே உள்பொருள்; அப்படி வேதஞ் சொல்கிறது என்றும் வேதம் அப்படிச் சொல்கிறதோடு நிற்கவில்லை; பிரமம் உயிர் என இரண்டு பொருள்கள் உளவென்றுஞ் சொல்கிறது.

சங்:- வாஸ்தவம்-ஆனுல் அவற்றையும் நுணுகி யாராய்ந்தால் பிரமமொன்றே யுள்பொருள் என்பது வேதத்தின் முடிந்த கருத்தாகக் கிடைக்கும்.

நிரா:- உள்பொருள் பிரமமொன்றென்பதே வேதத்தின் கருத்தாயின் அக்கருத்தை அவ்வேதம் யாண்டும் ஒரு படித்தாகவே சொல்லி வரவேண்டும். அங்ஙனமின்றி உள்பொருள் பிரமமொன்றே யெனச் சிலவிடங்களில் அபேதமாயும், பிரமம் சீவனென் றிரண்டெனச் சிலவிடங்களில் பேதமாயும் அவ்வேதம் சொல்லவேண்டாம்.

சங்:- உள்பொருள் பிரமம் ஒன்றுதான். வேதம் அதனைப் பேதமென்றாலும், அபேதமென்றாலும், பேதாபேதமென்றாலுங் குற்றமில்லை.

நிரா:- பேதம், அபேதம், பேதாபேதம் என்கிற மூன்று பதங்களும் வேறு வேறு பொருளுடையன, அதனால் பிரமமொன்றே உள்பொருளென்கிற உனது கொள்கையை அவை பலப்படுத்த மாட்டா. உன் கொள்கையில் சிறிது சந்தேகமும் உனக்குத் தோன்றவில்லை. எனவே நீ அப்பதங்களுக்கு வலிந்து ஒருமைப் பொருள் கூறினாய். அது பொருள் நிச்சயத்துக்கு ஏலாது. ஏலாதாகவே வேதத்தின் சர்வ பிரமாணத் தன்மை பரிகாசத்துக்குட் படுகிறது. அது வேத நிந்தை.

சங்:- வேதத்திற் பயின்றுவருகிற அப்பதங்களுக்கு நான் பொருள் கூறுகிற முறை வேதத்தை நிந்தியாமல் நிந்திப்பதாகும் என்பது சரியன்று உள்பொருள் பிரமம் ஒன்றுதான். ஆயினும் அதற்கு நிலைகள் இரண்டு அவற்றுள் ஒன்று பெத்தம் என்பது. பிரமப்பொருள் தானெனச் சீவனெனப் பிரிந்தநிலை அது. இன்னொன்று முத்தியென்பது பிரமமும் சீவனுங் கூடிப் பிரமமே யென நின்ற நிலை அது. ஆகலின் பிரமம் பெத்தத்திற் பேதமெனவும், முத்தியில் அபேதமெனவும் படும், பொருள் ஒன்றெனவும், இரண்டெனவும் வேதங் கூறுவதன் தாற்பரியம் இது தானென்று நான் சொன்னால் அது எப்படி வேத நிந்தையாகும்?

நிரா;- உள்பொருள் ஒன்று? இரண்டா? என்பது வினா? அஃதொன்று அல்லது இரண்டு என இரண்டிலொன்றையே விடையாகக் கூறவேண்டும். விடை கூறுதற்கு அதுதான் நேர்மையான முறை நீ மாறான அவ்விரண்டையுமே விடையாகக் கூறினாய். ஒரு வினாவுக்கு ஒரே விடைதானுண்டு. தெளிவில்லாதவனே அப்படிப் பலவிடைகள் சொல்லித் தப்பப்பார்ப்பான். அத்தனை விடைகளும் அனவஸ்தை யென்னுங் குற்றமுடையன வாகும. மேலும்பெத்தம் முத்தியென இரண்டு நிலைகளைப் புகுத்தினாய். பிரமந் தவிர வேறு பொருள்களில்லாத போது அதன் பேதத்துக்கொரு பெத்தநிலையையும், அபேதத்துக்கொரு முத்திநிலையையுந் தந்ததெது? ஒன்றுமில்லை, ஆகையால் அந்நிலைகள் கற்பனையே. நிற்க, வேதம் யாருடைய வாக்கு?

சங்:- வேதம் சுயம்பு (தானே யுண்டானது); ஆகையால் அநாதி.

நிரா:- முதலில் பிரமம் ஒன்றே யுண்டென்றுய். இப்போது வேதமுஞ் சுயம்பு வென்கிறுய் ஆகவே உள்பொருள்கள் இரண்டென்பது சித்தித்தது. அதனுல் உன் ஏக வஸ்துப் பிரசங்கம் பல வஸ்துப் பிரசங்க மாயிற்று. அன்றியும் வேதம் சத்த வடிவம், சத்தம் ஒருவன் உச்சரியாமற் பிறவாது. ஆகலின் வேதமுந் தானே யுண்டாக மாட்டாது.

சங்:- ஆகாச சத்தம் ஒருவன் உச்சரித்தா பிறக்கிறது? இல்லை; தானே யுண்டாகிறது. அதுபோல் வேதமுந் தானே யுண்டாகக் கூடும்.

நிரா:- ஆகாச சத்தம் ஒருவன் உச்சரித்துப் பிறக்கவில்லை, அதுமெய். ஆனுல் அது தாஞக வுண்டாகவுமில்லை அதனையுந் தெரி. மேலும் அச்சத்தம் ஒரே கூச்சல், பதம் வாக்கியம் முதலியன அதிற் கிடையா. ஆகலின் பொருளை யுணர்த்துஞ் சத்தி அதற்கில்லை. வேதம் அப்படியன்று. அது பத வாக்கிய முதலியவற்ருனியன்று பொருளை யுணர்த்துஞ் சத்த சமூகம். அது ஒருவன் உச்சரித்தன்றிப் பிறவாது.

சங்:- வேதமே தன்னைச் சுயம்புவெனச் சொல்கிறது. அதனை நிராகரிப்பதே அவைதிகம்.

நிரா:- வேதம் சத்தரூபம்; ஆகலின் சடம். அதனுல் தன்னைச் சுயம்புவென்று எப்படி அறிய முடியும்? சொல்ல முடியும்? மேலும் பிரமும் சுட்டியறியப்படாத அகண்டப் பொருள் வேதம் கண்டப் பொருள். அப்பிரமத்தை அப்படிப்பட்டது இப்படிப் பட்டது என்று சுட்டி விளக்க அவ்வேதத்தால் எப்படி முடியும்? அன்றியும் உன் ஏக வஸ்துவின் உண்மையை விளக்குவது மற்றெரு சுயம்பு வஸ்து வென்றுய். அதனுலும் உன் ஏக வஸ்துப் பிரசங்கந் தொலைந்தது.

சங்:- வேதம் பிரமத்தின் வாக்கு. ஆகலின் அது பிரமத்தைச் சுட்டி விளக்குதல் கூடும்.

நிரா:- பல் நாக்கு முதலியன பேச்சுக் கருவிகள் அவற்றின் சகாயமின்றி வாக்குக்கள் பிறவா. பிரமம் அகண்டப் பொருள். அதற்கு அக்கருவிகள் இருக்க முடியா. ஆகலின் அது பேசாது.

சங்:- பேய்க்கு அக்கருவிகளில்லை. அது ஒருவனை ஆவேசித்துப் பேசுகிறது அப்போது அவனுடைய பல் நாக்குக்கள் அதற்குப் பேச்சுக் கருவிகளாக வுதவுகின்றன. அப்படியே பிரமமும் ஒருவனை ஆவேசித்து அவனுடைய பேச்சுறுப்புக்களைத் துணைக்கொண்டு

வேதத்தைச் சொன்னதாகும், பிரமமும் ஆவேசிக்கப்பட்டவர் யாரெனின் அவர் எவரேனுமாக.

நிரா:- அக்கருவிகள் மாயாகாரியம் அவை பசுக்களுக்கு உதவும். ஏன்? பசுக்களெல்லாம் மல சம்பந்தமுடையன. ஆகை யால் அக்கருவிகளின் சகாயமின்றி அவற்றூற் பேசமுடியாது, பேயும் பசுவே அதற்கெனப் பேச்சுக் கருவிகளில்லை, ஆயினும் அது தான் பிடித்த மனிதனை அறியாமையுட்படுத்தி அவனுடைய பேச்சுக் கருவிகளையாவது துணைக்கொண்டுதான் பேசியாக வேண்டும், அப்பேச்சுக்களும் அக்காரணத்தால் பசுவாக்கெனவே படும். அதற்கு நின்மலத்துவம் இல்லை. பிரமமுந் தான் ஆவேசித்த மனிதனை மயக்கி அவனுடைய மாயாகாரியப் பேச் சுறுப்புக்களைத் துணைக்கொண்டு வேதத்தைச் சொன்னதென்றூல் அவ்வேதமும் பசுவாக்கெனப் பட்டு நின்மலத்துவம் நீங்கியது தான். அதனை யறி. மேலும் பிரதம சிருட்டிக்குமுன் சர்வான் மாக்களும் பசுக்களே மூவகையான்மாக்களுக்கும் ஆணவ பீடை யுண்டு. அப்போதே வேதம் வாக்குருவத்தில் இன்றியமையாது வேண்டப்படும். பிரமம் ஆவேசிக்கத் தக்க வகையில் அப்போது எந்தப் பசுவும் இருந்திருக்க முடியாது. ஆகையால் வேதத்தை வாக்குருவில் ஆக்குவதற்குப் பிரமமே பல்நாக்கு முதலிய பேச் சுறுப்புக்களோடு கூடிய திருமேனி தாங்கியாக வேண்டும். அப் படித் தாங்கித்தான் அது வேதத்தை வாக்குவடிவில் ஆக்கி யருளியது.

சங்:- வேதம் ஆக்கப்பட்டதாயின் அதற்குச் சுயம்பு வென்கிற பெயர் கூடாது,

நிரா:- பிரம்மத்துக்குச் சுயம்பு வென்பதும் பெயர். அச் சுயம்பு ஆக்கியதால் வேதமும் சுயம்புவெனப் பெயர் கொண்டது. ஆசிரியன் பெயர் நூலுக்கும் வருவது மரபே.

சங்:- பிரமம் முழுமுதற்பொருள். விஷ்ணு பிரமன் இந்தி ரன் முதலியோரெல்லாம் அதனிற் கீழிட்ட தெய்வங்கள். அத் தெய்வங்களை நோக்கிச் செய்த துதிகளும் வேதத்திலுள்ளன. பிரமமே வேதத்தைச் செய்ததாயின் பிரமமே அத்தெய்வங்களை நோக்கி அத்துதிகளைச் செய்த தென்றூகிறது. பிரமவியல்புக்கு அது பொருந்தாது.

நிரா:- அரசன் தன்குடிகளைப் பார்த்து, "நீங்கள் எம் மந்திரி யிடஞ் சென்று, 'பிரபுவே! நீர்தான் அடியேங்களுக்குத் தலைவர். எங்களை யாதரியும், வேறு கதியில்லேம்' என்று பிரார்த்தியுங்கள். அவர் உங்களைக் காப்பார்" என்று கட்டளையிடுகிறூன். அக் கட்டளையிலுள்ள 'பிரபுவே! நீர்தான் அடியேங்களுக்குத் தலைவர்.

எங்களை ஆதரியும். வேறு கதியில்லேம்.' என்பதும் அரசன் கூறியது தான். ஆனால் மந்திரியை நோக்கி அவன் தன் பொருட்டுச் செய்த துதியா அது? இல்லை. குடிகள் மந்திரியிடம் பிரார்த்திக்கு முறையை அவன் அக்குடிகளுக்குச் சொல்லிக் காட்டினான். அவ்வளவே. அப்படியே அபக்குவான்மாக்கள் அச்சிறு தெய்வங்களை வணங்க வேண்டின் இன்னவாறு தோத்திரிக்கவெனப் பிரமம் சொல்லிக் காட்டிற்று. அச் சொற்களே அத்துதிகள். பிரமத்துக்கு அத்தெய்வங்களைத் தன்பொருட்டுத் துதித்தல் சொப்பனத்திலுமில்லை

சங்:- பிரமம் தான் ஆக்கிய வேதத்தில் தன்னையுந் துதித்திருக்கிறதே. அத்துதிகள் ஏன்?

நிரா:- பக்குவான்மாக்கள் பிரமத்தையே துதிக்க வேண்டும். அத்துதியிலும் முறையுண்டு. அதனையும் பிரம்மந்தான் வகுத்துக் காட்டவேண்டும். அதுவும் பிரம்மத்திற்குக் கடன். அக்கடனை அது செய்தது. அங்ஙனம் வகுத்துக் காட்டியனவே அத்துதிகள். இனி வேதத்தில் அத்துதிகள் இருப்பதை நீ தெரிகிறாய். பிரமம் அவற்றின் மூலம் தன் பெருமைகளைத் தனக்கே சொல்லிக் கொள்ளாது. சரீரம் சடம். ஆகலின் அதற்குஞ் சொல்லாது. பின்னை யார் பொருட்டு அத்துதிகள் நிறைந்த வேதம் உண்டாயிருக்கும்? பிரமம் ஒன்றே உள்பொருளென்கிற நீ அதற்கு விடை சொல்.

சங்:- அது உயிர்கள் பொருட்டு உண்டாயிருக்க வேண்டும்.

நிரா:- அப்படியானால் வேதம் பிரமாணம், பிரமம் பிரமேயம், உயிர் பிரமாதா, உயிரறிவு பிரமிதி எனப் பிரிவுகள் ஏற்பட்டுப் பொருள்கள் நான்கு உளவாகின்றன இதனாலும் உன் ஏக வஸ்துப் பிரசங்கம் தொலைந்தது. வேதம் உனக்குப் பிரமாணம் அன்று என்பதூஉ மாயிற்று.

(பிரமேய மறுப்பு)

2. **சங்:-** கரும்பு சுவை மயம், அச்சுவை கரும்புக்குத் தெரியாது. அப்படியே பிரமம் இன்பமயம். அவ்வின்பம் பிரமத்துக்குத் தெரியாது.

நிரா:- உன் மதத்துக்கு வேதம் பிரமாணம் என்றாய். அஃதில்லை யென்பது காட்டப்பட்டது. அந்தப் பிரமாணத்தா லறியப்படுகிற பிரமேயந்தான் பிரமமென்பது. அதுவும் அவ்வேதத்தின் கதியையே யடைகிறது. எப்படி? கரும்புஞ் சுவையுந் தம்மிற் பிரியாமலிருந்தும் கரும்புக்குத் தன் சுவை தெரியாதது போல் பிரமும் இன்பமும் தம்மிற் பிரியாமலிருந்தும் பிரம்மத்துக்குத்

தன்னின்பம் தெரியாது என்ருய். கரும்பு அறிவில்லாத பொருள், அது தன்சுவையை அறியமாட்டாது. அது சரி. பிரமமோ அறிவுப் பொருள். அது தன்னின்பத்தை யறியாமலிருக்க முடியாது. அறிவுப் பொருளாகிய பிரமத்துக்கு அறியாமைப் பொருளாகிய கரும்பை உவமை கூறினுய். அதனுல் பிரமத்துக்கும் அறியாமை யுண்டெண்பதாயிற்று. இன்னுங் கரும்பிலிருந்து சுவையை முதலிற் பிரியச் செய்து மீண்டுஞ் சேரவைத்தால் அப்போதும் கரும்பு அச் சுவையை நுகராது. அப்படியே பிரமத்தினின்றும் உபாதியில் முதலிற் பிரிந்த இன்பம் பிரமத்தோடு முத்தியில் மீண்டுஞ் சேர்ந்தால் அப்போதும் பிரமம் அதனை அறியமாட்டாது. அதனுல் முத்தியென்பது பொருளற்றுப்போம்.

3. சங்:- தங்கம் பலவகை யாபரணங்களாக மாறும். அப்படியே பிரமமும் ஐம்பெரும் பூதங்கள், ஔடதம், அன்னம், ஆறு தாதுக்கள், ஐந்து கோசங்கள் என்கிற இவற்றின் கூட்டமாகிய சரீர முதலிய சடப்பிரபஞ்சமாக மாறும்.

நிரா:- தங்கம் ஆபரணமாக மாறுவது போன்று பிரமம் பிரபஞ்சமாக மாறுமென்ருய், ஆபரணத்துக்குத் தங்கம் உபாதான காரணம். அப்படியே பிரபஞ்சத்துக்குப் பிரமம் உபாதான காரணம் ஆதல் வேண்டும். அப்படித்தானு? ஆனுல் நிமித்த காரணம் வேண்டாமல் எந்த உபதானமுங் காரியப்படாது. ஆபரணமாகிய காரியத்துக்குத் தட்டான் நிமித்த காரணம். அவன் தங்கமாகிய உபாதானத்திலிருந்து ஆபரணமாகிய காரியத்தைச் செய்தான். தங்கம் தன் சமார்த்தியத்தினுல் ஆபரணமாக மாறிவிடவில்லை. பிரமும் உபதானமானுல் தன் சாமார்த்தியத்தினுல் பிரபஞ்சமாக மாறிவிட மாட்டாது. பிரமமாகிய உபாதானத்திலிருந்து பிரபஞ்சமாகிய காரியத்தை யுண்டாக்க நிமித்தமாவான் ஒருவன் வேண்டும். அவன் உளனு? எவன்? எந்தக் காரியமுங் காரணக் கூட்டத்து ளடங்காது. எந்தக் காரியத்தின் நிமித்தமும் அந்தக் காரியத்தின் உபாதான மல்லாததே. அதாவது நிமித்தமும் உபதானமும் வேறு வேறு காரணங்களென்பது காரியம் உளதாவதற்குக் கர்த்தா கிரியை உபாதானம் எல்கிற மூன்றும் இன்றியமையாதன நிமித்தம் கர்த்தா. வினை முதல் என்பன ஒன்றே. கிரியை—செயல்.

4. சங்:- திரிபுணர்ச்சியில் சிப்பி வெள்ளி போலத் தோன்றும். அப்படியே விவகாரதசையில் பிரபஞ்சம் நித்தப் பொருள் போலத் தோன்றும்.

நிரா:- சிப்பியில் வெள்ளியின் தோற்றம் பொய்த் தோற்றமாவது போல் பிரமத்தில் பிரபஞ்சம் நித்தப் பொருள் போலத்

தோன்றுவதும் பொய்த்தோற்றமே யென்ருய். பிரபஞ்சம் வெறுந் தோற்றமே யெனின் அதனைப் பொருளெனக் கொண்டு பிரமஞ் சிருட்டித்த தென்று நீ 3ஆவது சங்கற்பத்திற் கூறியது தவறு. பிரபஞ்சம் பொருள்தான், பிரமத்தாற் சிருட்டிக்கப் பட்டது தானெனின் அதனை வெறுந்தோற்ற மென்று நீ இச் சங் கற்பத்திற் கூறியது தவறு. உன்மதக் கொள்கை உன் மனதிற் சரியாய் நிற்பதில்லைப் போலும்.

5 சங்:- பரமார்த்த தசையில் பிரபஞ்சம் இல்லையா யொழியும்; பிரமம் ஒன்றுதான் உள்பொருளாயிருக்கும்.

நிரா:- பிரபஞ்சம் விவகார தசையில் உள்பொருள், பர மார்த்த தசையில் இல்பொருளே யென்ருய். பிரபஞ்சம் உள் பொருளாகிய பிர்மவுபாதனத்தில் உண்டானதாயின் பரமார்த் தத்திலும் உள்பொருளாய்த்தானிருக்கும். அது பரமார்த்தத்தில் இல்பொருள்தானெனின் உள்பொருளாகிய பிரமவுபாதானத்தி லுண்டாயிற் றென்கிற உன் பேச்சை விடு, இல்பொருளாகிய காரியத்துக்கு உள்பொருள் ஒருக்காலும் உபாதானமாகாது. ஆகலின் அக்காரியத்துக்கு வேரு ருபாதானத்தைக் கண்டு சொல். அநிர்வசனப் பொருள் உள்பொருளென்றன நீ சொல் வாய்,

சங்:- பிரமம் பரமார்த்த நிலை. பிரமத்தின் விவகார நிலை தான் சீவன்.

நிரா:- சீவனுக்கு முற்றறி வில்லை. அதனுல் சீவனின் மற் ெருரு நிலையாகிய பிரமத்துக்கும் அஃதில்லையென்பது சித்திக்கும். சித்திக்கவே, பிரமம் முற்றறிவுடைய தென்கிற சுருதிக்கு நீ விலக் காவாய். இன்னும் அளவைகள் மூன்று. அவை சுருதி, யுக்தி, அனுபவம் என்பன சுருதி — ஆகமம். யுக்தி — அனுமானம், அனுபவம் – பிரத்தியக்ஷம்— உயிர் அவற்றின் சகாயங்கொண்டே பொருள் நிச்சயம் பண்ணமுடியும். உயிரே பிரமமாயின் பிரமம் உணர்தற்கும் அச்சகாயம் வேண்டப்படும் என்பதாகும். அதனுல் பிரமத்துக்குத் தானே யறியுஞ் சாமர்த்தியம் இல்லையென்பது முடிவு. பொன்கட்டி துகள்களாகி நாலுதிசைகளிலுஞ் சிதறு கிறது. அத்துகள்களும் தம் பொன்னியல்பிற் குறையவோ மாறவோ செய்யா. பிரமம் பிரபஞ்சங்களாகச் சிதறிய போது அப்பிரபஞ்சங்கள் மாத்திரம் பிரமவியல்பிற் குறைந்தும் மாறியுங் கிடப்பானேன்?

6. சங்:- சிலந்திப்பூச்சி அறிவுப்பொருள். அது தன் உபாதா னத்தில் நூலையுண்டாக்குகிறது. அந்நூல் சடம். அப்படியே

பிரமம் அறிவுப்பொருள்: அது தன் உபாதானத்தில் பிரபஞ்சத்தை யுண்டாக்கும். அப்பிரபஞ்சமும் சடமாயிருக்கலாம்.

நிரா:- சிலந்திப் பூச்சியைப் பிரமத்துக்கும், அதன் நூலைப் பிரபஞ்சத்துக்கும் உவமையாக்கினுய். அந்நூல் வெறும் பொய்த் தோற்றமன்று. அப்பூச்சிபோல் ஒரு பொருளே. ஆகையால் பிரமத்திற் பிரபஞ்சம் பொய்த்தோற்றமென்ற உன் 4ஆவது சங்கற்பத்துக்கு அவ்வுவமை பொருந்தாது. இனி அந்நூல் சடமாயினும் ஒரே வகையான சடமாயிருக்கிறது. பிரபஞ்சம் அப்படியன்று. அது சடமாயினும் பலவகையான சடமாயிருக்கிறது. ஆகையால் அந்நூல் பிரபஞ்சத்துக்குச் சரியான உவமையாத லில்லை. ஆகவே சித்தாகிய பிரமம் தன் உபாதானத்தில் சடமாகிய பிரபஞ்சத்தை யுண்டாக்குமெங்கிற உன் 3-ஆவது சங்கற்பத்துக்கும் அவ்வுவமை ஏலாது. நூலை யுண்டாக்குதல் சிலந்தியின் கிரியை. அதுபோலப் பிரபஞ்சத்தை யுண்டாக்குதல் பிரமத்தின் கிரியையா? ஆ மெனின் பிரமம் நிஷ்கிரியன் என்ற உன்கொள்கைக்கு அது விரோதமாகிறது. நிஷ்கிரியன்—தொழில்லாதவன்.

7. **சங்:-** மரம் என்கிற ஒரு பொருள் இலை பழம் பூ முதலியவற்றைத் தருகிறது. அவை பலவகைப்பட்ட சடங்கள். நீரென்கிற ஒரு பொருள் அலை நுரை முதலியவற்றைத் தருகிறது. அவையும் பலவகையாகிய சடங்கள். அப்படியே பிரமமும் பலவகைப்பட்ட பிரபஞ்ச சடங்களைத் தருதல் கூடும்.

நிரா:- இலை, காய் முதலியவற்றை மரந் தருகிறது, அலை நுரை முதலியவற்றை நீர் தருகிறது. அப்படியே பலவகைப் பட்ட பிரபஞ்சத்தைப் பிரமந் தரும் என்ருய். சித்துப் பொருளாகிய பிரமவுபாதானத்தில் சடப்பிரபஞ்சந் தோன்றும், அது பலவகைப்பட்ட சடங்களாகவுந் தோன்றும் என்று சொன்ன மதவாதியர் மயாவாதியாகிய நீ தவிர வேறு யாரு மிலர். ஆலம் விதை உபாதானம். அவ்வுபாதானமே இலை பழம் விழுது என்கிற பலவகைகளையுடைய ஆலமரத்தை வெளிப்படுத்துகிறது. அப்படியே சடப்பிரபஞ்சத்துக்கும், அதன் பலவகைகளுக்கும் சித்தாகிய பிரமமல்லாத வேருெரு சடப் பொருளே உபாதானமாய் நின்று அவற்றை யுளவாக்கும்.

8 **சங்:-** சித்துப்பொருள் -தன் உபதானத்தில் சடப்பிரபஞ்சத்தையும் அதன் வகைகளையும் உளவாக்காதென்றல் ஏன்? நெல்விதை சத்துள்ளது. அவ்வுபாதானத்தி லிருந்து சாவி

வைக்கோலென்பன உளவாகின்றன. அவை சத்தல்லாத பொருள்கள். அப்படியே பிரமம் சித்துப்பொருளாயினும் அதனை யுபாதானமாகக் கொண்டு சடப்பிரபஞ்சமும் அதன் வகைகளும் உளவாகலாம்.

நிரா:- நான் சொன்ன ஆலம்விதை ஆலமரத்துக்கு உபாதானமாவது போல் நீ சொல்கிற நெல்விதையும் சித்தன்றாய்ச் சத்துள்ளதாயினுஞ் சடமேயாய்ச் சாவிக்கும் வைக்கோலுக்கும் உபதானமே யாகும். ஆகையால் உன் நெல் விதை யுவமை என் கருத்தை மறுத்து உன்கருத்தை நிறுத்த வில்லை. எந்தக் காரியமுந் தன்னோ டியைபுடைய உபதானத் திற்றான் தோன்றும். அம்முறையில் சடப்பிரபஞ்சமாகிய காரியமும் தன்னோ டியைபுடைய சடவுபாதானத்திற்றான் தோன்றுதல் கூடும், துணியாகிய காரியம் தன்னோ டியைபுடைய நூலாகிய வுபாதானத்திலிருந்தே தோன்று வதைக் காண்.

சங்:- தன்னோ டியைபில்லாத உபாதானத்திலுங் காரியந் தோன்றும்.

நிரா:- அப்படியானால் அத்துணியாகிய காரியந் தன்னோ டியைபில்லாத மண்ணாகிய வுபாதானத்திலுந் தோன்ற வேண்டும். தோன்றுமா?

9. சங்.- பிரம வுபாதானத்தில் பிரபஞ்சம் உண்டாதல் பிரமத்தின் இயற்கை.

நிரா:- பிரமம் பிரபஞ்சத்துக்கு உபதானமென்றும் பிரமத்தில் பிரபஞ்சந் தோன்றுவது பிரமத்தின் இயற்கையென்றுஞ் சொன்னாய், தீ உபாதானம். அதிற்சூடு கர்த்தாவின் கிரியை யில்லாமல் தோன்றுகிறது. தீக்கு அச்சூடு இயற்கைத் தோற்றம், தீ யிருக்கும்வரை அச்சூடும் இருக்கவே செய்யும். தீயிருக்கும் போது அச்சூடு மாய்ந்துவிடாது. அப்படியே பிரமம் உள்ளவரை அதன் இயற்கைத் தோற்றமென்கிற பிரபஞ்சமும் இருக்கவே வேண்டும்.

சங்- பிரமம் இருக்கும். பிரபஞ்சம் இடையில் அழியும்.

நிரா:- அழியுமாயின் பிரமத்தின் இயற்கைத் தோற்றம் பிரபஞ்சமென்கிற உன்பேச்சை விடு.

சங்:- விளக்கு வெளிச்சம் இருளை விழுங்குகிறது. அம்

மதிப்பையுடைய விளக்குக் கரியையுந் தருகிறது. அது விளக்குக் கியற்கை. அவ்வியற்கைத் தோற்றமாகிய கரி தீபமிருக்கும் போதே நசிக்கவுஞ் செய்கிறது. விளக்குப் போன்றது பிரமம். கரிப்போன்றது பிரபஞ்சம். அது பிரமமிருக்கிறபோதே நசிக்கலாம்.

நிரா:- கரி தீபத்துக் இயற்கையன்று. திரி. நெய் முதலிய வற்ருேடு தீபஞ் சேர்வதால் அத்திரி முதலியவற்றிலுண்டாகிற செயற்கையே அது. அது தீபமிருக்கிற போதே நசிக்கலாமெனின் பிரமம் வேறேதேனு மொன்றனேடு சேர்வதால் அவ்வேருென்றிலிருந்து தோன்றிய செயற்கையாய்த் தானிருக்க வேண்டும். மேலும் கரி தீபத்தி லுண்டாகிறதென வைத்துக் கொண்டாலும் அதிலொடுங்காது, நீயோ பிரபஞ்சம் பிரமத்தி லொடுங்குமென்ருய். இன்னும் பிரமம் சுத்த வஸ்து. பிரபஞ்சம் அசுத்தப்பொருள், சுத்தத்தி லசுத்தந் தோன்ருது.

சங்:- பிரபஞ்சம் பிரமத்தில் இடையில் தோன்றியதனுல் இடையில் நசித்தல் கூடும்.

நிரா:- பிரபஞ்சம் பிரமத்தில் இடையில் தோன்றியதென்ருய். இடையில் தோன்றியதாயின் காரணம் வேண்டும். அஃதென்னே?

சங்:- ஆகாசத்தில் மேகங்கள் இடைக்காலங்களில் தோன்றுகின்றன. அதற்குக் காரணமில்லை. அப்படியே பிரமத்திற்பிரபஞ்சம் இடைக்காலங்களிற்ருன் தோன்றுகிறது. அதற்குங்காரணம் வேண்டாம். அது சுபாவம்.

நிரா:- காரணம் வேண்டாமலே பிரபஞ்ச வுபாதிகள் பிரமத்தைப் பற்றுமென்ருய். அப்படியானுல் முத்திநிலை யென்பதே உன்மதத்தில் இல்லாமற்போம். ஏன்? அவ்வுபாதிகள் முத்தரையும் போய்ப் பீடிக்கும்.

10 **சங்:-** பிரபஞ்சம் பிரமத்தில் தோன்றிப் பிரமத்தை உபாதிப்படுத்தல் பிரமத்துக்கு லீலை.

நிரா:- துன்பந் தருகிற பிரபஞ்ச வுபாதிகள் தன்னை மூடிக் கொள்ளுமாறு பிரமம் இடங் கொடுத்தது பிரமத்துக்கு லீலை யென்ருய். பிரமம் விளையாடுகிற பொருள். பிரபஞ்சப் பகுதிகள் விளையாட்டுப் பொருள்கள். விளையாடுகிற பொருளே விளையாட்டுப் பொருள்களாகவு மிருக்குமா? இரண்டும் வேறு வேறு பொருள்களல்லவா? ஆனுல் உன் 9ஆவது சங்கற்பத்தில்

பிரபஞ்சம் பிரமத்தில் தோன்றுமென்ருய். இதில் அவ்வு பாதிகளை விளையாட்டுப் பொருள்களாக்கி அதனுல் பிரமத்தில் தோன்றக் கூடாத பொருள்களென வைத்துப் பேசினுய். முன் சங்கற்பம் மறக்கப்பட்டது. அன்றியும் உலட்டுப் புழுவென வொன்றுண்டு. அது தன்னைச் சுற்றிக் கூடுகட்டி அதற்குள் அகப்பட்டுக் கொள்ளும், அப்படியே பிரமமும் பிரபஞ்ச வுபாதிக்குள் அகப்பட்டுக் கொண்டதாகும். அகப்பட்ட புழு வெளியே வரமாட்டாமல் அக்கூட்டினுள்ளிருந்தபடியே சாகும். அப்படியே பிரமும் வெளிப்பட மாட்டாமல் அவ்வுபாதிக்குள் ளிருந்தபடியே துயருறும். அதனுல் சர்வ கர்த்திருத்துவம் சர்வஞ்ஞத்துவம் என்கிற இறைமைக் குணங்கள் உன் பிரமத் துக் கில்லையாவது நிச்சயம். அப்பிரமத்தை அவ்வுபாதிகளி லிருந்து வெளியாக்கியருள அதற்கு வேருய் அவவிறைமைக் குணங்களை யுடையதும், உபாதிப்படாததுமாகிய வொரு தலைமைப்பொருள் வேண்டும்.

(பிரமித்தீ மறுப்பு)

சங்:- செம்பு இரசகுளிகையைச் சேர்ந்து தன்களிம்பு நீங்கப்பெறும். அப்படியே பிரமம் ஞானத்தை யடைந்து தன் பிரபஞ்ச வுபாதிகள் நீங்கப்பெறும்.

நிரா:- உபாதிப்பட்ட பிரமம் செம்புக்கும், உபாதி களிம்புக்கும் ஞானம் இரசகுளிகைக்கும் சமமென்ருய். அவ்வு பாதிப்பட்ட பிரமத்தையே நித்தன் அறிவன் சுத்தன் முதலிய வாக உன் சங்கற்பத்திற் புகழ்ந்தாய், அதிசயந்தான், இரச குளிகை செம்புக்குரியதன்று. அப்படியே அக்குளிகை போன்ற ஞானமும் அச்செம்புபோன்ற உன் பிரமத்துக்குரியதன்று. அக்குளிகை செம்புக்கு வேருனது போல் அந்த ஞானமும் அப் பிரமத்துக்கு வேருகும் ஆகலின் அது மற்ருென்றற்குரித் தென்பதாயிற்று. உன் பிரமம் பாசபந்தமுடையவுயிரே, உயிரைப் பிரமமென்கிற நீ உலகஞ் சிரிக்கவே உடலெடுத்தாய்.

(பிரமாதூ மறுப்பு)

11 **சங்:-** மணிகள் பல அவற்றிற் கோப்புண்கிற நூல் ஒன்று. பசுக்கள் பல. அவற்றிற் சுரக்கிற பால் ஒன்று. நீர் நிறைந்த கிண்ணங்கள் பல, அவற்றிற் பிரதிபிம்பிக்கிற சூரியன் ஒன்று. கிணறு குளம் முதலிய நீர்நிலைகள் பல. அவற்றில் வந்து நிறைகிற நீர் ஒன்று. அப்படியே சரீரங்கள் பல. அவற்றில் உயிர்களெனத் தங்குகிற பிரமம் ஒன்று.

நிரா: சரீரங்களுக்குப் பல இரத்தினங்களையும், பல பசுக்களையும், பல நீர்க்கிண்ணங்களையும், பல நீர்நிலைகளையும், பிரமத்துக்கு நூலையும், பாலையும், சூரியனையும், நீரையும் உவமித்தாய். நூல் இரத்தினங்களில் தானே நுழைந்து கொள்ளாது. அதனை அவற்றில் ஒருவர் நுழைக்க வேண்டும். நுழைத்தவர் யார்? உன் கொள்கைப்படி எவருமிலர். ஆகவே முதலுவமை தப்பு. பசுக்கள் அறிவுடைப் பொருள்கள். அவற்றை அறிவில் பொருள்களாகிய சரீரங்களுக்கு உவமையாக்கலாமா? பால் அறிவில் பொருள். அதனை அறிவுப் பொருளாகிய பிரமத்துக்கு உவமையாக்கலாமா? பிரமம் அறிவில் பொருளாகவும், சரீரங்கள் அறிவுப் பொருள்களாகவும் இருந்தால் இரண்டாவதாகிய உன் பாற்பசு வுவமை பொருந்தும். மூன்றுவது உவமையுஞ் சரியன்று, சூரியன் தன் பிரதிபிம்பத்தைத் தன் பிரதிபிம்பமெனக் காணுது. அப்படியே பிரமம் சரீரங்களிலுள்ள தன் பிரதிபிம்பங்களைத் தன் பிரதிபிம்பங்களென்று தானே காணுது. நாலாவது உவமையும் பிழையே. நீர் ஒன்றுதான். கிணறு. குளம் முதலியன தான் பல. ஆனுல் அந்நீர் அவற்றைப் பலவெனச் காணுது. அப்பிரதிபிம்பங்களை பிரதிபிம்பங்களெனச் சூரியனுக்கும், அக்கிணறு குளம் முதலியன பலவென நீருக்கும் வேருனவரே காண்பர். அப்படியே சரீரங்களில் தன் பிரதிபிம்பங்களாகிய சீவரையும் அச்சரீரங்களையும் பிரமங் காணுமல் வேறெருவரே காணவேண்டும். உன் மதத்தில் அவருக்கிட மில்லை

12 சங் - பிம்பம் கண்ணுடியிற் பிரதிபிம்பிக்கிறது அப்படியே பிரமமும் சரீரந்தோறும் பிரதிபிம்பிக்கும். அப்பிரதிபிம்பமே உயிர்.

நிரா:- பிம்பம் கண்ணுடியிற் பிரதிபிம்பிப்பது போன்று பிரமஞ்சரீரந்தோறும் சீவனெனப் பிரதிபிம்பித்த தென்ருய் பிம்பத்தின் பிரதிபிம்பம் கண்ணுடியை யியங்கச் செய்யாது. அப்படியே சீவனெனப்படுகிற பிரமப்பிரதி பிம்பம் சரீரத்தை யியக்காமைவேண்டும். ஆனுல் அச்சீவன் சரீரத்தையியக்குகிறது. அதனுல் சீவனைப் பிரதிபிம்பமெனல் கூடாது. சரீரத்தை யியக்குதலாவது அதனைப் பிறந்து இருந்து இறக்கும்படி செய்தல்.

13 சங்:- காந்தத்தின் சன்னிதியளவில் இரும்பு இயங்குகிறது. அப்படியே பிரமத்தின் சன்னிதியளவில் சரீரங்கள் பிறப்பதும் இருப்பதும் இறப்பதுமா யியங்கும்.

நிரா:- காந்தத்தின் சன்னிதியளவில் இரும்பு இயங்குகிறது. அப்படியே பிரமத்தின் சன்னிதியளவில் சரீரங்கள் பிறப்பதும் இருப்பதும் இறப்பதுமா யியங்கும.

நிரா:- காந்தத்தின் சன்னிதியளவில் இரும்பு சலிப்பது போல் பிரமத்தின் சன்னிதியளவில் சரீரங்கள் சலிக்குமென்ருய். பிரமம் வரையறைப்படாத பொருள். அதன் சன்னிதியில்லாத இடம் எங்குமில்லை. ஆகலின் கடம் படம் முதலிய எங்குமுள்ள எல்லாப் பொருள்களுமே சலித்திடவேண்டும். அவை வறிதே கிடந்தாங்கு கிடத்தல் கூடாது. ஆனுல் அவை யப்படியே கிடக்கின்றன. அன்றியும் இரும்பைக் காந்தத்தின் முன் ஒருவர் நேரொக்கக் காட்டினுல் மட்டும் அது காந்தத்தோடு ஒட்டிக்கொள்ளும். அப்படியே பிரமம் சரீரங்களை யெடுப்பதற்கு அதன்முன் அவற்றை நேரொக்கக் காட்டினுர் யார்? இன்னுங் காந்தத்துக்கு இரும்பை யிழுக்குஞ் சக்தியே யுண்டு. விடுஞ் சக்தி யில்லை. அப்படியே பிரமத்துக்கும் சரீரங்களை யெடுக்குஞ் சக்தியே யுண்டு. விடுஞ் சத்தி யில்லை. அப்படியே பிரமத்துக்கும் சரீரங்களை யெடுக்குஞ் சக்தியே யுண்டு, விடுஞ் சத்தி யிலதென்ருகும்.

14 சங்:- கனவிலுண்டாகிற பயம், இருளிற் புற்றருகிற் கிடக்கிற கயிற்றில் தோன்றுகிற பாம்பு. தூரத்திற் கானலில் தோன்றுகிற நீர் என்பனவெல்லாம் பொய். அப்படியே பிரமம் அனுபவிக்கிற துன்பங்களும் பொய்யே. இன்பமுந் துன்பத்துள் அடங்கும்.

நிரா:- பிரமம் அனுபவிக்கிற துன்பங்களுக்குக் கனவிற் பயம், கயிற்றிற் பாம்பு முதலியவற்றை உவமித்தாய் சீவருக்குச் கனவினனுபவமும், நனவினனுபவமும் வினைப்பயனே. ஆகலின் அவற்றைப் பொய்யென்னுதே. கனவில் தொழிற்படுவது சூக்கும வுடல், நனவில் தொழிற்படுவது தூலவுடல். இச்சரீர வேறுபாடே கனவுக்கும் நனவுக்கும் உள்ள வேறுபாடு. அனுபவத்தில் வேறு பாடில்லை. புற்றுங் கயிறுஞ் சரீரமுஞ் சடம். எஞ்சியிருப்பது பிரமம். அதுவே கயிற்றைப் பாம்பென மருளல் வேண்டும். அதுதான் மருளு மென்ருல் அங்ஙனம் மருளுதல் அதற்கு இழிவேயாம். அன்றியும ஒருதரம் கனவிற் பயம் பொய்யெனக் கண்ட பிரமம் மீண்டும் மீண்டும் கனுக்களி லஞ்சுவானேன்? ஒரு தரம் கயிற்றரவைப் பொய்யெனக் கண்ட பிரமம் மீண்டும் மீண்டும் இருளின்கட் கயிற்றைப் பாம்பெனக் கண்டு மருளுவானேன்? ஒரு தரம்

கானல்நீரைக் கண்டு ஏமாறிய பிரமம் அதனைக் காணுகிற போதெல்லாம் ஏமாறுவானேன்?

15 சங். பளிங்கு ஏதேனுமொரு நல்ல நிறத்தைச் சேர்ந்து அந்நிறமுடையது போலாகிறது. ஆயினும் அந்நிறத்தில் அப் பளிங்கு தோய்வதில்லை. அப்படியே பிரமம் வினைகளையனுப விப்பது போற் காணப்பட்டாலும் அவற்றில் அகப்படுவதில்லை.

நிரா:— செந்நிறப்பூச் சேர்ந்த பளிங்குஞ் செந்நிறமுடையது போல் தன்னைக் காட்டுகிறது: ஆயினும் அப்பளிங்கு அந் நிறத்தில் தோய்ந்து அந்நிறமுடையதாக மாறுவதில்லை; அப்படியே பிரமும் தன்னை யடுத்த வினைப்பயன்களை நுகர்வது போற் காட்டுமேயன்றி அவற்றில் மொத்துண்ணுது, தன்னியல் பில் மாறுது என்ருய். ஒரு நிறத்தை யடுத்த பளிங்கு அந் நிறத்தை மட்டும் உடையது போலிருக்கிறது. பிரமமோ அப்படியன்றிப் பலவகைப்பட்ட சரீரங்களில் வினைப்பயன்களைப் பலபடியாக நுகர்ந்து பலவேருக இருக்கின்றது அஃதேன்?

சங்:— வினைகள் இரண்டாகிப் பலவாகலின் அவ்வனுப வங்களும் பலவாயின.

நிரா:— ஆயின் ஆளுகிற ஞானமும், மூடங்கொண்ட சரீரங் களும், துன்புறுத்துகிற புண்ணிய பாவங்களும் உன் பிரமத்துக் குளவென்று சம்மதித்தாய். ஆகவே தீங்கு செய்தாரைச் சிறையிலிட்டு வருத்துகிற அரசன்போலக் கொடுவினை செய்த அப்பிரமத்தை அவ்வினையனுபவத்தின் பொருட்டு சரீரமாகிய சிறையிலிட்டுத் துன்பங்களைப் புசிப்பித்து ஆளுகிற எம் சிவ பிரானே சர்வலோகைக கர்த்தாவென்பதை யறி.

16. சங்:— பிரமம் அங்ஙனம் வினைகளில் தோயாமலிருந்து கொண்டு பதினன்கு கரணங்களிற் கூடி மூன்று அவத்தை களையும் தினந்தோறும் விரும்பியடையும்.

நிரா:— வினைப் பயனுகிய சரீரத்தில் மூன்று அவத்தைகள் உளவென்ருய். அவற்றை யனுபவிப்பவர் யார்? பிரமமாயின் அது வரையறைப் படாதது. ஆகலின் அவத்தைகளில் அகப் படாது. சரீரமாயின் அது அறிவில்லாதது, ஆகலின் அவத்தைகளை யனுபவியாது. இனி அவத்தைகளென்பன தான் யாவை? அதையாவது சொல்.

சங்:— கரணங்கள் தம்மிற் கூடுவதும் பிரிவதுமே அவத்தைகள்.

நிரா:- முதன்மையுடையது கரண சமூகமா? பிரமமா? பிரமமாயின் கருவிகளுக்குத் தம்முட் கூட்டமும் பிரிவும் சுதந்திரமாயிருக்க முடியா. கரண சமூகமாயின் பிரமமே முழு முதன்மையுடைய தென்கிற உன் மதம் பாழ்படும்.

ச:ங்- சரீரத்தி லகப்பட்ட சீவனுகிய உபாதிப் பிரமம் அவத்தைகளை யடையும்.

நிரா: பலகணி வழியே உள்ளே நீட்டிய விரலில் வண்டு கொட்ட அதனுலுண்டாகிய நோய் அவ்விரலின் வேருகாத சரீரமுழுவதற்கு மாகாமல் அவ்விரலுக்கு மட்டிலா ஆகிறது? இல்லை. அப்படியே சீவப்பிரமத்தைத் தாக்குகிற அவத்தை யனுபவம் அப்பிரமத்தின் வேருகாத பரப்பிரமத்தையுந் தாக்கவே செய்யும்.

17 சங்:- கண்ணுடியின் கண் பிரதிபிம்பிக்கிறது. அப்பிரதி பிம்பக் கண்ணைக் கோல்கொண்டு இடித்தால் அந்த இடி கண்ணுடியிலே விழுகிறது. அப்படியே வினைத்துன்பங்கள் சரீரத்தையே தாக்கும், அதிற் சீவனுகப் பிரதிபிம்பத்துள்ள பிரமத்தைத் தாக்காது.

நிரா:- கோலிடி கண்ணுடிக்கே யுண்டன்றிக் கண்ணுக்கில்லை யாதல் போல வினையனுபவம் உடலுக்கே உண்டன்றி அதிற் பிரதிபிம்பித்துள்ள பிரமத்துக்கில்லை யென்ருய். உன் 16ஆவது சங்கற்பத்தில் அவத்தைகளைச் சீவப்பிரமமே யனுபவிக்கு மென்ற நீ இச்சங்கற்பத்தில் அறிவில்லாத சரீரம் அனுபவிக்க மென்று கூறி அதனேடு மாறுபட்டாய். அன்றியும் வினைப் பயனை நீயே யனுபவிக்கிருய். அது உனக்கே தெரிகிறது. ஆனுல் அவ்வனுபவம் உனக்கில்லையென்று துணிந்து பேசுகிருய். நீ துன்பங்களில் அடிபட்டுக் கொண்டு 'நான் அடிபடவில்லை, என் சரீரமே அடிபடுகிறது' என்று சொல்வது எளிது. ஆனுல் சொல்கிறபடி அத்துன்பங்களை யனுபவியாமல் மட்டுமிருக்க மாட்டாய் உன் மதநூல்கள் பல. அவையனைத்தும் 'சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ் சொல்லிய வண்ணஞ் செயல்' என்ற குறளுக்கு இலக்கியமாகும். நிற்க, நீயும் பிரமத்தை அகண்ட மென்ருய். அதற்குப் பந்தம் வந்த வகை யிதுவென்று நீ கூறுகிறதை யோசிக்கையில் வானத்தி லியங்குகிற காற்றைப் பிடித்து விலங்கிட்ட சமர்த்த ஞெருவன் உளனுயின் அவனுக்கு அகண்டிதமாகிய பிரமத்தைப் பந்தத் துட் படுத்திய நீ சகோதரனுவா யென்பது போதரும்.

(பிரமாணம் பிரமேயம் பிரமி பிரமாதா வெங்கிற இவற்றின் மறுப்பு மாயாவாதியின் பெத்த விலக்கணம் பற்றிய தாகும்)

(சீவன் முத்தி மறுப்பு)

18 சங்:- ஆகாசமாகிய வுபாதானத்தில் மேகக்கூட்டந் தோன்றி ஆகாசத்தை யிருள்மூடச் செய்கிறது. அப்படியே பிரமவுபாதானத்தில் உபாதி தோன்றிப் பிரமத்தைப் பந்தித்தது. அவ்விருள் ஆகாசத்துக்கில்லையாம்படி செய்வது அம்மேகக் கூட்டத்தை விலக்குகிற காற்று. அப்படியே அவ்வு பாதிப் பந்தம் பிரமத்துக் கில்லையாம்படி செய்வது அவ்வுபாதியைப் போக்குகிற ஞானம்' அக்காற்றும் அவ்வாகாச வுபாதானத்திலேயே தோன்றுகிறது. அப்படியே அந்த ஞானமும் அப்பிரமவுபாதானத்திலேயே தோன்றும்.

நிரா:- ஆகாசவுபாதானத்தில் தோன்றிய மேகக்கூட்டத்தை நீக்க அவ்வுபாதானத்திலேயே காற்றுத் தோன்றுகிறதுபோல பிரம வுபாதானத்தில் தோன்றிய உபாதியைப் போக்க அவ்வுபாதானத்திலேயே ஞானந்தோன்று மென்றாய். பிரமம் உபாதிப்படுதற்கு முன் பிரமத்தில் ஞானம் இருந்ததா? இல்லையா? இருந்த தாயின் பிரமம் உபாதிப்பட மாட்டாது. இல்லையாயின் பிரமத்தின் உபாதிக்குப் பின் அந்த ஞானம் உண்டாகாது. இல்லது என்றும் இல்லதே. உள்ளதே தோன்றும்.

சங்:- முன் இல்லாதது பின் உண்டாதல் கூடும்.

நிரா:- அப்படியானால் ஆகாசத்தில் தாமரை உண்டாக வேண்டும்.

சங்:- கட்டையில் தீ முன் இல்லையாய்ப் பின் உண்டாகிறது

நிரா:- அத்தீக் கடைவாரின்றித் தானே யுண்டாகாது. அப்படியே அந்த ஞானமும் உதிப்பிப் பாரின்றித் தானே யுதியாது. அன்றியும் பெத்தத்தில் தோன்றிய ஞானத்தையே விறகில் தோன்றிய தீக்குச் சமமென்றாய். நீ சொல்லுகிற அந்த ஞானம் தீக்குச் சமமானால் அந்தப் பெத்தம் விறகுக்குச் சமமாதல் வேண்டும் ஆகலின் அந்த ஞானம் பிரமத்தில் தோன்றியதன்று; ஸத்தத்தில் தோன்றியதேயாம்.

19 சங்.- தூண் கதவு கல் முதலிய வுறுப்புக்களை வேறு வேறு

பிரித்து விட்டால் வீடு என்கிற பொருள் இல்லையாய்விடும். நூலாகிய வுறுப்புக்களை வேறு வேறு பிரித்து விட்டால் துணி யென்கிற பொருள் இல்லையாய் விடும். அப்படியே அந்த ஞானம் தத்துவங்களை யெல்லாம் மித்தை யென்கிற வுண்மை விளங்கும்படி ஒவ்வொன்ருகச் சோதித்துக் கழித்துவிட்டால் அத்தத்துவங்களின் கூட்டமாகிய பிரபஞ்சமும் இல்லையாய் விடும்.

நிரா:- வீடு துணி யென்பன இல்லையாம்படி அவற்றின் உறுப்புக்களைத் தனித்தனி பிரித்தல் போன்று தத்துவங்களை ஒவ்வொன்ருகச் சோதித்து இது நானன்று. இது நானன்று என்று கழித்தபின் அங்ஙனம் கழித்த ஞானமே பிரமமென நிற்குமென்ருய். இருள்முன் ஒளியும் ஒளிமுன் இருளும் நிலைத்தலில்லை. அப்படியே ஞானத்தின் முன் பிரபஞ்சமும், பிரபஞ்சத்தின் முன் ஞானமும் விளங்கித் தோன்ரு. அந்த ஞானம் தத்துவங்களைக் கழிப்பதும் சோதிப்பதும் எப்படி? அன்றியும், இருளை ஒளியும், ஒளியை இருளும் சந்தியா வாதலால் அனுபவித்தலில்லை. அவ்விரண்டையும், அவையல்லாத வேருென்றே சந்திக்கவும் அனுபவிக்கவுஞ் செய்கிறது. அது தான் கண். அப்படியே ஞானத்தையும் பிரபஞ்சத்தையும் அவ்விரண்டு மல்லாத வேருென்றே அனுபவிக்கும். அதுதான் உயிர்.

20. சங்.- முன் உபாதியாற் சீவனுயிருந்த பிரமம் அந்த ஞானத்தைப் பெற்றபின் மீண்டும் பிரமமாய் விடும். அதுவே சிவப்பிரமம் பரப்பிரமமாய்விட்ட தென்ப தாகும்.

நிரா:- பிரமமே சீவனு யிருந்து மீண்டும் பிரமமாய்விடும் என்ருய். அப்படி யாவதால் பிரமத்துக்கு வரும் பயன் யாது? ஒன்றுமில்லை.

21 சங்:- அப்பிரமம் தன்னில் தன்னைத் தரிசிக்கும்.

நிரா:- பிரமத்தில் பிரமத்தைப் பிரமம் தரிசிக்கும் என்ருய். அப்படியானுல் கண்ணிற் கண்ணைக் கண்ணுங் காணலாம்; காணுமா? மாட்டாதே.

22. சங்:- அப்போது பிரமம் தன் னின்பத்தைத் தானே நுகரும்.

நிரா:- பிரமம் தன் னின்பத்தைத் தானே யனுபவிக்கு

மென்றாய். அது உபாதிப்படுதற்கு முன் அவ்வின்பத்தை ஏன் அனுபவிக்கவில்லை? கரும்பு தன் சுவையை யனுபவியாதது போலும் அதுவென உன் 3ஆவது சங்கற்பத்தில் பிதற்றினாய் அது அங்கேயே நிராகரிக்கப்பட்டது. சிவன் பிரமம் என்பன வேறு வேறு பொருள்களே, சிவனுக்குப் பிரமஞானம் பிரகாசித்தல் பிரமவின்பம் அனுபவமாய் வரும்.

23.சங் - அப்போதுதான் தத் தவம் அஸி யென்கிற மஹாவாக்கியத்துக்கு நானே பிரமம் ஆயினேன் என்கிற அகம் பிரமார்த்தத்தைப் பிரமம் விளங்கக் காணும். அகம் பிரமார்த்த மாவது சீவனும் பிரமமும் பொருளால் ஒன்றேயென்கிற அர்த்தம்.

நிரா:- தத் த்வம் அஸி என்கிற மஹாவாக்கியம் அது நீ ஆகிறாய் என்கிற பொருளுடையது. அது—பிரமம், நீ—சீவன், அதற்குப்பிரமுமஞ் சீவனும் ஒரே பொருளென்பதுதான் தாற்பரிய மென்றாய். அது கூடாது. நீ புலி ஆயினாய், என்பது ஒரு வாக்கியம். அதற்கு நீயும் புலியும் ஒன்றென்பதுதான் தாற்பரியமோ? ஆயினாய் என்பதிலுள்ள 'ஆதல்' உவம உருபு. ஆகவே நீ புலி போன்றாய் என்பதே அதற் கருத்தம். அதிலிருந்து பொருளால் நீ வேறு புலி வேறு என்பதே உண்மையென அறி. நான் நோய் ஆயினேன் என்பது இன்னொரு வாக்கியம். அதற்கு நான் நோயின் வசப்பட்டேன் என்பதே பொருள். அதனாலும் பொருளால் நானும் நோயும் ஒன்றல்ல, வேறு வேறென்பதே உண்மை யென அறி. அப்படியே அது நீ ஆகிறாய், சீவன் பிரமம் ஆயிற்று, நான் பிரமம் ஆனேன் என்றவற்றில் பொருளால் சிவன் வேறு, பிரமம் வேறு என்பதே உண்மைப் பொருளாய்க் கிடத்தலைக் காண்.

24. சங்:- நீரின் அசைவைப் பிரதிபிம்ப சந்திரனின் அசைவென்று கண்டுகொண்டிருந்த வொருவன் அது பிரதிபிம்ப சந்திரனின் அசைவன்று, நீரின் அசைவே; நீர் தன் அசைவைப் பிரதிபிம்பச் சந்திரனின் அசைவுபோற் காட்டிற்றெனக் காண்கிறான். அப்படியே தன் சரீரத்தின்பா லிருந்த துன்ப நுகர்ச்சிகளைத் தன்பாலிருந்தனவாகக் கண்டு கொண்டிருந்த உபாதிப் பிரமம்அவ்வுபாதி நீங்கிச் சீவன்முத்தப் பிரமமான பிறகு அச் சீவன் முத்தப் பிரமம் அவ்வகம் பிரம ஞானத்தில் உறைத்து நின்று அத்துன்ப நுகர்ச்சிகளைத் தனக்குரியன வல்ல, தன் சரீரத்துக்குரியனவேயெனக் கண்டு கொண்டிருக்கும்.

நிரா:- மெய்ப் பார்வையில் அச்சீவன்முத்தப் பிரமம் பிர

பஞ்சானுபவம் தனக்குரியதன்று, சரீரத்துக்கே யுரியது எனக் கண்டு கொண்டு நீரிலுள்ள பிரதி பிம்ப சந்திரன் அசைவின்றி யிருப்பதுபோல் பிரபஞ்சத்தை யனுபவியாமல் அசைவின்றிச் சரீரத்தில் விளங்கு மென்ருய். பிரதிபிம்பச் சந்திரன் தான் அசைவது போலத் தோன்றுவதினின்றும் விலக வேண்டும். பிறகு அதுவே 'ஆகாச சந்திரன் போன்று அதனின் வேறல் லாத நான் அசையவில்லை அசைவது நீரே. அவ்வசைவே எனக்குள்ளது போல் நான் இதுவரை கண்டிருந்தேன். இப் போதுதான் என் அசையாமை எனக்குத் தெரிகிறது? என்று உணர்தலும் வேண்டும். அப்படியானுல் அதனேடு உவமிக்கப் பட்ட சீவனும் பிரபஞ்சானுபவம் தனக்கில்லையெனக் காணு மென்பது பொருந்தும். ஆனுற் பிரதி பிம்ப சந்திரனுக்கு அவ்வுணர்ச்சி யில்லை, அசைவு நீருக்குத் தான், பிரதி பிம்ப சந்திரனுக்கன்று என்றறிபவர் அவ்விரண்டு மல்லாத பிறரே. ஆகவே இங்கும் உன் ஏகவஸ்துப் பிரசங்கம் தொலைந்தது.

(பரமுத்தி மறுப்பு)

25. **சங்:-** குடத்துக்குள் ளிருப்பது குடாகாசம். வெளியி லிருப்பது மகாகாசம் குடம் உடைந்ததும் அக்குடாகாசம் மகாகாசத்தோடு ஒன்ருய் விடும். அப்படியே சரீரத்திலிருக்கிற சீவன்முத்தப் பிரமம் சரீரம் நீங்கியதும் பரப்பிரமத்தோடு ஒன்ருய் விடும். அதுவே அச்சீவன் முத்தப்பிரமம் பரமுத்தி யடைந்தென்பதாம்.

நிரா:- குடம் உடைந்ததும் குடாகாசம் மகாகாசத்தோடு ஒன்ருய் விடுவது போலச் சரீரம் நீங்கினதும் அதனுள்ளிருந்த சீவன் முத்தப் பிரமம் பரப்பிரமத்தோடு ஒன்ருகிப் பரமுத்தி யடைந்து விடும் என்ருல், சீவப் பிரமம் எத்தகைய அனுப வத்தின் பொருட்டு முதலிற் சரீரத்திற் கிடந்தது? அது சரீரத் தினின்று விடுபட்டுப் பரப்பிரமத்தோடு ஒன்ருகிப் பரமுத்தி யெய்திய விடத்து அடையும் இன்பந்தான் யாது? இன்னுஞ் சீவரும் தம்மிற் பலவல்லாதன வென்கிறது உன்மதம், ஆகலின் ஒரு சீவன் முத்தியடைந்தால் சர்வ சீவரும் முத்தியடைதல் வேண்டும்.

சங்:- எல்லாச் சீவரும் முத்தியடையா ஞானம் பெற்ற சீவனே முத்தியடையும்,

நிரா:- அப்படியானுல் ஞானம் பெருத சீவரும் உளவெனப் பட்டுச் சீவர் பல வுள வென்பது சித்திக்கும்.

(சீவன் முத்தி பரமுத்தி யென்கிற இவற்றின் மறுப்பு அவனுடைய முத்தியிலக்கணம் பற்றியதாகும்)

(கரும காண்ட நிந்தை மறுப்பு)

26 சங்:- அகம் பிரம ஞானத்தை யடைந்து கருமகாண்டத்தை விட்டவனே உண்மை ஞானி. கரும காண்டத்தை வைத்துக் கொண்டிருக்கிற ஏனையோரெல்லாம் மூடரே. அந்த மூடரும் தமக்கு அந்த ஞானம் சித்தித்தற் பொருட்டுக் கருமகாண்டத்தை முதலில் ஆசரிப்பர், அது தன்னைப் பிழையற ஆசரிப்பார்க்கு அவவகம் பிரம ஞானத்தைக் கொடுக்கும்.

நிரா:- உயிர்களுக்குக் கருமகாண்ட வாயிலாய் ஞானம் பிறக்கு மென்றாய் ஆனால் அவற்றிற்கு அஞ்ஞானமிருக்கிறதே. அது வந்ததற்கு வாயில் எது? அதனைச் சொன்னாயல்லை. ஆகையால் அஞ்ஞானம் நீங்கி ஞானம் பிறக்கக் கரும காண்டத்தை வாயிலென நீ கூறுதல் பயன்தராது.

27 சங்:- ஒரு கட்டையில் மற்றொரு கட்டையை வைத்துக் கடையத் தீ யுண்டாகிறது பின்னர் அத்தீ தான் தோன்றுதற்கு வாயிலாயிருந்த அக்கட்டைகளைச் சுட்டு அழித்து விடுகிறது. அப்படியே கருமகாண்ட வாயிலாய் அகம் பிரம ஞானம் பிறக்கிறது பின்னர் அந்த ஞானம் தான் தோன்றுதற்கு வாயிலாயிருந்த கருமகாண்டத்தை யழித்து இல்லையாக்கி விடுகிறது. ஆகையால் அகம்பிரம ஞானி கரும 'காண்டத்தை யாசரியான். அந்த ஞானநிலையே அழிவற்ற முத்தியாகும்.

நிரா : கட்டையில் தோன்றிய தீ கட்டையை யழித்தல் போலக் கருமகாண்ட வாயிலாகவந்த ஞானம் கருமகாண்டத்தை யழிக்கு மென்றாய். அப்படியானால் மூடரும் ஞானிகளெனத் திரியலாம். ஆகலினன்றோ அநேக மூடர் தமக்கு ஞானம் வந்து விட்டதெனக் கூறி உலகை வஞ்சித்து வேண்டுமென்றே வேதா சாரமாகிய கருமகாண்டத்தைக் கைவிட்டு அலைகின்றனர். அஃதவர் தலையெழுத்தே தவிர ஞானாசாரமன்று. பந்தம் நீங்கு தற்கு ஞானத்தை யுதவுகித கருமகாண்டத்தை அந்த ஞானம் அழித்து விடுமெனக் கூறுவது கருமகாண்டஞ் செய்த நன்றியை அந்த ஞானங் கொல்கிற தென்பதாம். அது ஞானத்தைப் பழித்த படியாம். கைக்குழந்தைகள் விதி விலக்குகளை அறவே யொழிந்து நிற்பர். பித்தர் அவற்றைச் சிலவேளைகளிற் செய்து சிலவேளை களில் விட்டு நிற்பர். பேய் பிடியுண்டவர் தம்வசமிழந்து பரவசப் பட்டு நிற்பர். மெய்ஞ்ஞானியர் அம் முத்திறத்தாரையும் போல்வர். தூங்குகிறவனது கையிலுள்ள பாக்கு அவனது முனைப்

பின்றித் தானே நழுவும், அப்படியே உலகவொழுக்கமும் வேதாசாரமாகிய கருமகாண்டமும் அந்த ஞானியரின் முனைப்பின்றித் தானே நழுவவேண்டும். அங்ஙனமின்றி அதனை முனைப்பால் நீக்குபவர் முழுமூடராவதோடு நரக வேதனைக்கும் ஆளாவர். அவருக்கு முத்தி யுண்டென்று கூறுகிற நீ பித்தன்.

சீவன் சரீரத்திலிருக்கிற போதே பிரம ஞானத்தைப் பெறவேண்டும். சரீரம் சடமென்பது உனக்குஞ் சம்மதம். அதனையொருவன் ஏசினாலும் வாழ்த்தினாலும் வெட்டினாலுஞ் சுட்டாலும் கும்பிட்டாலும் உதைத்தாலும் அதற்கொன்றுமில்லை. அவற்றிலெல்லாம் விருப்பு வெறுப்புக் கொள்ளாத பிரம ஞானத்தைப் பெறவேண்டுவது உயிரே, அவ்வுயிரும் உடலில் உள்ளபோது தான் அதனைப் பெறமுடியும். உயிர் உடலை விட்டுப்போய் விட்டால் அந்த ஞானத்தைப் பெறுவ தெப்போது?

மக்களுக்கு ஆயுள் சுருக்கம். அதற்குள் கணக்கில்லாத சுவடிகளைப் படித்துக், கண்டவரோ டெல்லாம் வாதிட்டுத் தலையை மொட்டையடித்துக் கொண்டு, எவரிட்ட பிச்சைச் சோற்றையுந் தின்று, பிறருக்கு ஞானம் உபதேசிப்பதாக விளம்பர மடித்து, மரணபயம் சமீபிக்கும் போது 'நானே பிரம விட்டுணுவாதி எல்லாத் தேவரு மாயினேன்' என்று புலம்பித் திரிகிறாய் நீ. அதனால் அத்தெய்வங்கள் உன்மேற் சீறிக் கொண்டேயிருக்கும். நீ செத்த பிறகு அத்தெய்வங்களுள் எதுவும் உனக்குச் சகாயம் செய்ய வரவேமாட்டாது. அவற்றுள் ஒவ்வொன்றும் தன்தன் வாழ்நாள் முழுவதிலும் உன்னைத் தீரா நரகத்தில் அழுத்தி வைத்தே மகிழும் ஏ மாயவாதப் பேயனே! பரம கருணா மூர்த்தியும், வல்லவரும் அத்தெய்வங்களுக் கெல்லாம் முதலாவாரு மாகிய ஸ்ரீ சிவபிரானே உனக்கிரங்கி வந்தாலும் அந்நரகம் உன்னை எளிதிற் கரையேற விடாது.

ஐக்கியவாதி சங்கற்பம்

அரிதேர்ந் துணராப் பெரியோ னுரைத்த
பதிபசு பாச விதிமுறை கிளக்கி
லீச னேக னெண்ணிலி பசுக்கள்
[3]பாச மிருவகைப் பரிசின துலகத்
தாயவ னுயிர்க்கு மாயையி னருளா

லிருவினைத் தொகையி லுருவினைத் தருமாற்
கருமுகி லடர விரிதரு கதிர்போ
னறிவா முயிரிற் பிறியா தேயு
மீட்டு மிருபய னூட்டிடு நியதிக்
கொருபொழு திருபய னுகர்வுற மருவுத

லின்மை யாதன் முன்னிய காலைச்
சத்தி நிபாத முற்றிறை யருளா
லுருவுகொ டுலகு தெரிவுற மருவி
மாசுறுந் தூசு தேசுற விளக்குந்
தன்மையி னுணர்த்தும் புன்மைக ணீங்கி
[4]நீரு நீருஞ் சேருந் தகைமையி
னறிவினோ டறிவு செறிவுறப் பொருந்தி
யொன்று மென்பதை யுலகோர்
நன்று முத்தி யெனநவின் றனரே.

(பதவுரை) அரி—விஷ்ணு; தேர்ந்து—தேடி; உணரா—காணாத (திருவடிகளையுடைய); பெரியோன்—சிவபிரான்; உரைத்த—சொல்லிய; பதி பசு பாச விதி—முப்பொருளுண்மைகளை; முறை—முறையே; கிளக்கின்—சொல்லுமிடத்து; ஈசன் ஏகன்—பதிஒன்று; பசுக்கள்—பசுக்கள்; எண் இலி—அநேகம்; 3. பாசம்—பாசம் (மாயை கருமம் என); இருவகைப் பரிசினது—இரண்டு.

2. உலகத் தாயவன்—உலகத்துக்குத் தாய் போன்றவர் (ஆகிய சிவபிரான்); அருளால்—கிருபையால்; உயிர்க்கு—உயிர்களுக்கு; மாயையின்—மாயையிலிருந்து; இருவினைத் தொகையின்—புண்ணிய பாவங்களின் (பயனாக); உருவினை—சரீரங்களை; தரும்—கொடுப்பார். (அச்சரீரங்கள்); 1. கருமுகில் — கரியமேகங்கள் (வானில்); அடர — நெருங்குவதால்; இரிதரு—மறைகிற (சூரியனின்); கதிர்போன்று ஒளிபோன்று; அறிவு ஆம்—ஞான மயமாயுள்ள; உயிரில்—உயிர்களிடத்தில் (அந்த ஞானம் மறையும் படி); பிறியாது — விலகாமல்; ஏயும்—பொருந்தும் (உயிர்கள்); ஈட்டும்— ஆர்ச்சிக்கிற (வினைகளின் வாயிலாய் வருகிற); இரு பயன்—இன்பத் துன்பங்களை (சிவபிரான் அவ்வுயிர்களுக்கு); ஊட்டிடும்— புசிப்பிக்கிற; நியதிக்கு — முறையில் (தவத்தாற் கிடைத்த); ஒரு பொழுது—ஒப்பற்ற பிறப்பில் (அந்த—இருபயன்; இன்பத் துன்பங்களை; நுகர்வு உற—அனுபவிக்க (அவ்வுயிர்கள் அவற்றோடு); மருவுதல் இன்மை—பொருந்தாமை; ஆதல்—ஆதல் (ஆகிய இருவினை யொப்பு); முன்னியகாலை—நேர்ந்த போது; சத்திநிபாதம் — சத்திநிபாதம்; உற்று—வந்தெய்த; இறை—சிவபிரான் (தமது); அருளால்—அருளினால்; உருவுகொடு — திரு மேனி தாங்கி (ஆசாரியராய்); உலகு—உலகமெல்லாம்; தெரிவு உற—காணும்படி; மருவி—வெளிப்பட்டு (வண்ணான்); மாசு உறும்—அழுக்குப் படிந்த; தூசு—துணியை; தேசு—வெளுப்பு; உற—உண்டாகும்படி; விளக்குந் தன்மையின்—சுத்தப்படுத்துவது போல (மாயாகரும பந்தங்களைப் போக்கி ; உணர்த்தும்—ஞானத் தை விளக்குவர். (உடனே அவ்வுயிர்கள் அந்த); புன்மைகள்—

பந்தங்கள்; நீங்க—விலகுதலால் 4. நீரும் நீரும்—நீரும் நீரும் (தம்மில்); சேரும் தகைமையின் — கலந்து ஒன்றாதல் போல; அறிவினோடு—சிவஞானத்தோடு (மேலே சொல்லியபடி விளக்கப் பட்ட தமது) அறிவு—ஞானம் (பொருளால் சிவம் வேறு தாம் வேறென்ப தில்லையாம்படி); செறிவு உற பொருந்தி-மிகக் கலந்து; ஒன்று ஆம்—ஒன்றாய்ப்போம்; என்பதை—இதனையே (ஆன்மாச் சிவமாகி); நன்று ஆம்—இன்புறுகிற; முத்தி என—முத்திநிலை யென்று; உலகோர்—பெரியோர்; நவின்றனர்—சொன்னார்.

(என்று இப்படியெல்லாம் தனது மத சங்கற்பத்தை அந்த ஐக்கியவாத சமயி அவனருள் எப்படிப்பட்டதென்று வினவிய அப்பக்குவிக்கு வகைப்படுத்தி விடையாகக் கூறினான்)

ஆல் (6-ஆம் அடி), ஏ (19-ஆம் அடி) அசைகள்.

ஐக்கியவாதி சங்கற்ப நிராகரணம்

முத்தி யென்ப தெவனோ [1]சுத்த
வறிவெனிற் பாசஞ் செறியா [2]மாயை
யுருவிரு வினையால் வருமிரு வினையு
முருவா லன்றி மருவா திவற்றின்
முந்திய தேதோ வந்தணை வதற்கோ

ரேது வேண்டுந் தானியல் பென்னின்
வீடுற் றவரினுங் கூடக் கூடு
மீங்கிவை நிற்க [3]நீங்காக் கருவிகள்
கொண்டறி வறியக் கண்டது மன்றி
மருவிய வுருவு துயில்பெறுங் காலைச்

சிறுபொறித் தறுகட் கறையணற் சுடிகைத்
துத்திக் கடுவுட் டுளையெயிற் றுரகக்
கொத்தயல் கிடப்பினுங் குவைதரு நவமணி
யொருபாற் றுதையினும் பெருகார் வத்தினோ
டச்சமு மணுகாக் கொச்சைமை யென்னே

கருவி யாவும் பிரிவுறு நிலையேற்
பொறிபுல னுதி குறைவற நிறைந்து
காட்சிய தளிக்கு மூட்சியின் முன்னாக்
கொடுத்தோ ராழி விடுத்தவர்நாடிக்
கொள்வோர்க் காணு துள்கி மீண்டுழித்

தந்தவர்க் கண்டாங் கந்தமி லதனைத்
தருக வென்னும் பெருமதி பிறங்கும
தறிவி லாமையென் றனையது மலமாக்
குறிகொ ளான ரறைகுவ ரன்றே
[4]யறிவிற் கறிவு செறியவேண் டின்றே

யுண்மையி லிருமையு மொளியே யெனிலொரு
தன்மை யாகமுன் சாற்றின ரிலரே
முன்பு நன்றுட ஞென்றிய காலை
யின்ப மெய்துதற் கிலதுயி ராதலி
னீயலை பொருத மாயா வாதி
யாயினை யவையு மருணிலை கேண்மதி.

(ஆன்மாச் சிவமாகிற) முத்தி என்பது—முத்தியாவது;
எவன்—என்னை? (அதற்கு விடை இந்நிராகரணத்துக்குப்
பின் என் மத சங்கற்பத்திற் கூறப்படும். ஆன்மா ஆதியில்)
1 சுத்த—பாச பந்த மில்லாத; அறிவு எனில்—அறிவுப் பொரு
ளென்றால் (அதனை); பாசம்—மாயை கருமங்கள் (இடையில்
வந்து); செறியா — பந்தியா. (அன்றியும் அதற்கு);
2 மாயை உரு—மாயா சரீரம்; இருவினையால்—கருமத்தால்.
வரும் — கிடைக்கும். (ஆனால்); இருவினையும் — கருமமும்
(அந்த மாயா) உருவால்—சரீரத்தால்; அன்றி—அல்லாமல்;
மருவாது—ஈட்டப்படாது. (ஆகலின் உயிருக்கு); இவற்றின்-
இம்மாயை கருமங்களில்; முந்தியது -முதற்பந்தம்; ஏது—
எது? (அன்றியும் அவ்விரண்டும் உயிரை); வந்து—வந்து;
அணைவதற்கு—பந்திப்பதற்கு (ஏதேனும்) ஓர் ஏது — ஒரு
காரணம்; வேண்டும்—இருத்தல் அவசியம். (அது யாது?
அந்த); தான்—பந்தம்; இயல்பு என்னின் காரணமில்லாத
தென்றால்; வீடு—முத்தியை; உற்றவரினும்—சேர்ந்தாரையும்
கூடக் கூடும்—பந்திக்கக் கூடும்; ஈங்கு—இவ்வளவில்; இவை—
இவ் விஷயம்; நிற்க—நிற்க; அறிவு—உயிர் (தன்னை விட்டு);
3 நீங்கா—நீங்காத; கருவிகள் கொண்டு — காரணங்களால்
(பொருள்களை); அறிய—அறிந்து வருவது; கண்டது—பிரத்
தியக்ஷம்; அன்றியும் — அல்லாமலும் (உயிர்); மருவிய—
பொருந்திய; உருவு—சரீரம்; துயில் பெறும்—தூங்குகிற;
காலை—சமயத்தில் சிறுபொறி—சிறிய கோடுகளையும்;
தறுகண்—அஞ்சாமையையும்; கறை—கறுப்பாகிய; அணல்—
பெரிய; சுடிகை—சுடிகையையும்; துத்தி — துத்தியையும்;
கடுஉள்—விஷத்தை உள்ளே (வைத்து); துளை—துவாரம்
(சேர்ந்த); எயிற்று—பற்களையுமுடைய; உரகக் கொத்து—
பாம்புக் கூட்டம் (அச்சரீரத்துக் கருகில்); அயல் — ஒரு
பக்கத்தில்; கிடப்பினும் — கிடந்தாலும்; குவைதரு—குவிய
லாக; நவமணி—நவரத்தினங்கள் (மற்றும்); ஒரு பால்—ஒரு
பக்கத்தில்; துதைபினும் — கிடந்தாலும் (அவ்வுயிர்க்கு
அக்குவியலால்); பெருகு—அதிகரிக்கிற; ஆர்வத்தினோடு —
உவகையோடு (அக்கூட்டத்தால்); அச்சமும் — நடுக்கமும்;

அணுகா– நிகழாத; கொச்சைமை — அறியாமை; என்– எதனுல் வந்தது; (உறக்கமாவது அவ்வுயிர்க்குச் சரீரத்தினிட முள்ள) கருவி யாவும்– எல்லாக் கரணங்களும்; பிரிவு உறு நீங்கிய; நிலேயேல்– நிலேயே; (அதனுல் அவ் வறியாமை வந்தது என்ருல்) பொறிபுலன் ஆதி — இந்திரிய விஷய முதலியன; குறைவு அற — குறைவில்லாமல்; நிறைந்து — நிறைந்து; காட்சியது—அறிவை; அளிக்கும் - கொடுக்கிற; ஊட்சியின் – விழிப்புச் சமயத்தில் (ஒருவன் சில நாட்களுக்கு); முன்னர்—முன்; ஓர் ஆழி—ஒரு மோதிரத்தை (இன்னெருவனிடம்); கொடுத்து—கொடுத்து (விற்று வாவென்று கூறி அவனே ; விடுத்து - போக்க; அவர்—விற்கச் சென்றவன்; கொள்வோர் — வாங்குவோரை; நாடி– தேடினுன். ஆனுல் காணுது—கணுமல்; உள்கி—அலுத்து; மீண்டுழி திரும்பிய போது (உடையவனிடங் கொடுத்தான். அவ்வுடையவன் தன்னிடம் மோதிரத்தை); தந்தவர்– கொடுத்தவனே (சில நாட்களுக்குப் பிறகு); கண்டு– சந்தித்து (விற்று); அந்தம் இல்—முடியாத; அதனே -அம் மோதிரத்தை (தன்னிடம்); தருக என்னும்—கொடுக்கும்படி கேட்கிற; பெருமதி மறதி (அவ்வுடையவனிடம்); பிறங்கும் — காணப்படுகிறது. (அம் மறதியாவது யாது? அது அஃதும்; அறிவு இலாமை — அறியாமையே; என்றனே—என்ருய். (அங்ஙனங் கரணங்கள் நீங்கியபோதும் சேர்ந்த போதும் நிகழுகிற); அது—அவ்வறியாமையை (செய்கின்ற வொன்றைத் தான் மலம் ஆ— ஆணவமென்று (முப்பொருளியல்பை); குறிகொளாளர் — நுனித்தறிந்த பெரியோர்; அறைகுவார் — சொல்லுவார்.

4 (ஆன்மா ஞானமயமாகில் அந்த) அறிவிற்கு—ஞானத்தில்; அறிவு– சிவஞானம்; செறிய– கலக்க; வேண்டின்று – அவசியமில்லே; உண்மையில்—சொருபத்தில்; இருமையும் — பதியும் பசுவும்; ஒளியே எனில்— ஞானமயமேயென்ருல்; (அந்த ஞானங்கள் ஒரு தன்மை ஆக– ஒரே தன்மையென வென்று (நீ சொல்வதற்கு ; முன்—முன்னர்: சாற்றினர்—சொன்ன மதவாதியர் (வேறு யாரும்); இலர்—இலர் (ஆன்மாவுக்குச் சிவச்சேர்வால் இன்புண்டென்ருல் அந்த); உயிர் ஆன்மா (மாயை கருமங்களோடு சேர்வதற்கு); முன்பு—மூந்தி; நன்றுடன் - சிவத்துடன்; ஒன்றிய – சேர்ந்திருந்த; காலே— காலத்தில் (அந்த); இன்பம்– இன்பத்தை; எய்துதற்கு இலது—அடைந்தபாடில்லே; ஆதலின்– ஆகையால்; நீ—நீ (மூடமாகிற); அலே பொருத—கடலில் மொத்துண்ட; மாயாவாதி— மாயாவாதியின் (தோழன்); ஆயினே—ஆனுய். (உன் மதாபாசம் இவ்வளவு காட்டப்பட்டது); அமையும்-போதும்.

(என்று இப்படியெல்லாம் அவ்வைக்கியவாதியின் சங்கற்பத்தை அவனுக் கருகிலிருந்த பாடாணவதி நிராகரணம் பண்ணினுன். பிறகு அவன் அப்பக்குவியை நோக்கி)

அருள்நிலை—முத்தி (எப்படிப்பட்டது? என்பதை நீ என்னிடம் கேள்—கேள். (என்று தொடங்கி முன் முத்தியென்பதெவனே? என்ற வினவுக்கு விடையாகத் தன் சங்கற்பத்தைக் கூறினுன்.

வரி 9 :- 'கண்டது மன்றி' என்பதைச் 'கண்டதன்றியும்' என மாறுக.

வரி. 19:— 'விடுத்து' என்பது 'விடுக்க' என்னும் பொருளது.

வரி. 22:— 'பெருமதி' என்பது இகழ்ச்சிப் பொருளில் வந்தது.

ஓ (அடி-1), ஓ (அடி-15), ஆங்கு (அடி-21), அன்றே (அடி-24), ஏ (அடி-25). ஏ (அடி-27), மதி (அடி-31) என்பன அசைகள்.

கருத்து

நிராகரணத்துக்கு ஏற்பச் சங்கற்பத்தில் முதல் மூன்றும் எதிர் நிரலில் எண்ணிடப்பட்டுள்ளன.

(பேதத்து விலக்கணை மறுப்பு)

1 சங்:- சூரியன் ஒளியுடையது. அப்படியே ஆன்மா அழுக்கற்ற அறிவுடையது. அவ்வொளி மறையுமாறு சூரியனை மேகம் ஆவரிக்கிறது. அப்படியே அவ்வறிவு மழுங்குமாறு ஆன்மாவைச் சரீரம் ஆவரிக்கும். ஆவரிக்கும்-கவிந்து மறைக்கும்.

நிரா:- ஆதியில் ஆன்மா நின்மல ஞானப் பொருளென்ருய்; அப்படியானுல் மாயா கருமங்கள் அதனை இடையில் வந்து பந்திக்க மாட்டா.

2 சங்:- உயிர் செய்த கருமத்தின் பயனுக மாயா சரீரம் அவ்வுயிரை வந்து பந்திக்கும்.

நிரா:- உயிர் தான் செய்த கருமத்துக் கேற்பச் சரீரத்தையெடுக்கு மென்ருய். ஆனுல் அது சரீரத்தை யெடுத்த பிறகே கருமத்தைச் செய்கிறது. அப்படியிருக்க உயிருக்கு மாயை கருமங்களுள் எது முதற் பந்தமாயிற்று? அப்பந்தத்தின் விளைவாகிய இரண்டாம் பந்தம் எது? இடையில் வரக்கூடிய எப்பந்தமும் காரணமின்றி வராது அந்தக் காரணம் யாது?

சங்:- காரணமின்றி வந்த இயற்கையே அப்பந்தம்.

நிரா.- உயிருக்கு அப்பந்தம் காரணமின்றியும் அதாவது இயற்கையாகவும் வருமென்ருய். அப்படியாளுல் முத்தருக்கும் அப்பந்தம் உண்டாகும்.

3 சங்:- மாயை கருமம் எனப் பாசம் இரண்டே.

நிரா:- உயிர் கரணங்களின் துணை கொண்டறிவது பிரத்தியக்ஷம். உறங்குகிற வொருவன் தனக்கருகில் ஒரு பக்கத்தில் பாம்புக் கூட்டங் கிடந்தால் அதை அறியாளுகலின் அஞ்சுவதும், மற்ளெரு பக்கத்தில் இரத்தினக் குவியல் கிடந்தால் அதை யறியாளுகலின் மகிழ்வதுஞ் செய்யான். அவ்வறியாமை ஓரிழிவு. அதற்குக் காரணம் என்னை?

சங்:- அவன் தூங்குகிற போது அவன் சரீரத்திலுள்ள கரணங்களெல்லாந் தொழிற்படா. அத்தொழிற் படாமையே அவ்வறியாமைக்குக் காரணம்.

நிரா:- ஆனல் அவன் விழித்திருக்கிறபோது சரீரத்திலுள்ள கரணங்களெல்லாந் தொழிற்படுகின்றன. அப்போது அவனுக்கு அடிக்கடி மறதி யுண்டாகிறது அம்மறதியாவது யாது?

சங் - அதுவும் அறியாமையே.

நிரா:- கருவி கரணங்க ளெல்லாம் மாயா காரியம். அவை நீங்கிய நிலையே உறக்கம். நீங்குதலாவது தொழிற்படாமற் கிடத்தல். அப்போது உண்டாகிற அறியாமைக்கு அந்நீக்கமே காரண மென்ருய். அக்கருவி கரணங்கள் கூடிய நிலைதான் விழிப்பு கூடுதலாவது தொழிற்பட்டுக் கொண்டிருத்தல். அப்போது மறதி யென்கிற வொன்று நிகழ்கிறது. அதுவும் ஓரறியாமையே. மாயா காரியம் அவனை விட்டு நீங்கிய போதும் அவனேடு கூடிய போதும் விலகாமலிருக்கிற அறியாமைக்கு மாயையெப்படிக் காரண மாகும்? கருமத்தைக் காரணமென்று நீயுஞ் சொல்ல மாட்டாய். ஆகலான் அவ்வறியாமைக்குக் காரணமாவது ஆணவமென்பது. அது மலமெனவும் படும். மாயை கருமங்களுக்கு வேருய பொருள் அது. ஆகவே ஆணவம் கருமம் மாயை யெனப் பாசம் மூன்றென்பை யறி

(முத்தி யிலக்கண மறுப்பு)

4 சங்:- நீரும் நீருஞ் சேர்ந்து நீரே யாகும். அப்படியே ஆன்ம ஞானமுஞ் சிவஞானமுந் தம்முட் கலக்க அதனல் ஆன்மாவும் பொருளால் ஒன்றே யாய் விடும். அதுவே ஆன்மாவுக்கு முத்தி.

நிரா:- ஆன்மா ஞானப் பொருளாயின் அந்த ஞானம் சிவ ஞானத்தோடு ஏன் கலக்க வேண்டும்? கலப்பதால் அந்த ஆன்ம ஞானத்துக்கு வருகிற இலாபம் எதுவுமில்லை.

சங்:- சொருபத்தில் ஆன்மாச் சிவன்போல் ஞானப் பொருளன்றோ?

நிரா:- ஆம். ஆனால் சிவஞானமும் ஆன்ம ஞானமும் ஒரே வியல்பின வென்று வேறெந்த மதவாதியுஞ் சொன்னதில்லை.

சங்:- சிவானந்தத்தை நுகரும் பொருட்டு ஆன்மாச் சிவனோடு கலக்கும்.

நிரா:- மாயை கருமங்களோடு சேர்வதற்கு முன் ஆன்மாச் சிவனோடு தானே சேர்ந்திருந்தது? அப்போது அவ்வான்மா ஏன் அவ்வானந்தத்தை யநுபவிக்கவில்லை? ஆகவே நீ முத்தியிலக்கணங் கூறுகிற வகையில் மாயா வாதியோடினப்பட்டாய்.

பாடாணவாதி சங்கற்பம்

[1]மூல மலத்தாற் சாலு மாயை
கருமத் தளவிற் றருமுரு விறைவன்
செறிந்திரு பயனு நுகர்ந்திடு முயிர்கள்
இருளுறு மலத்திற் பருவரற் படுதலி
[2]னிடையிரு நோக்குந் தடைப்பட் டோரிற்

றுயருறு மதனுற் செயிருறு துன்பங்
[3]கொத்தை மாந்த ருய்த்துறுந் துயில்போற்
காட்சி யென்னக் காணுத் துயர
மாட்சியை முத்தி யெனவகுத் தனரே.

(பதவுரை) :— இருள் உறு—அறியாமைக் குணமாகிய; மலத்தில்—ஆணவமலத்தால்; பருவரற் படுதலின்—துன்பப் படுதல் (உயிர்களுக்குக் கேவலநிலை) ஆகையால், (உயிர்களை அவற்றின் குணமாகிய)

1. மூலமலத்தால்—ஆணவமலங் காரணமாக; மாயை—மாயா மலம் சாலும் — வந்து கூடும்; இறைவன் — சிவபிரான்; கருமத்து —கரும மலத்துக்கு; அளவில்—தக்கபடி (அம்மாயா மலத்திலிருந்து கரணங்களோடு கூடிய); உரு —சரீரங்களை (ஆக்கி உயிர்களுக்கு); தரும்—கொடுப்பார்; உயிர்கள்—உயிர்கள் (அக்கரணங்களில்); செறிந்து—கூடி (கரும மல விளைவாகிய); இருபயனும்—சுக துக்கங்களை; நுகர்ந்திடும்—அனுபவிக்கும்.

2. இடை — இடைக்காலத்தில்; இருநோக்கும் — இரண்டு கண்களும்; தடை—படலத்தில்; பட்டோரின் — அகப்பட்டவர் போல (உயிர்கள் கரண சமூகத்தைச் சேர்ந்து); துயர்—அவத்தைகளை; உறுமதனுல் — அடைவதனுல் (அவ்வுயிர் களுக்கு அச்சேர்க்கையே); செயிர் உறு—பிறப்பைத் தருகிற (சகல நிலையாகிய); துன்பம்—துன்பமாகும்.

3, கொத்தை—அவத்தைப்படுகிற; மாந்தர்—மக்கள் (கரணங்களை); உய்த்து - விடுத்து (அதனுல் அறிவும் நுகர்ச்சியும் விடுபட்டு); உறும்—அடைகிற; துயில்போல்—உறக்கத்திற் போல (ஆசாரியனுபதேசத்தில் உயிர்கள் கரணங்களை விடுத்து அதனுல்); (காணு) — விடுபடுகிற; காட்சி என்ன—கரண ஞானத்தையும் அதுபோல் (கரும மலத்தை விடுத்து அதனுல்); காணு—விடுபடுகிற; துயர மாட்சியை — துக்க சுகங்களையும்; முத்தி என - வீடென்று (பெரியோர்); வகுத்தனர்—விரித்துரைத்தார்

என்று இப்படியெல்லாம் தனது மத சங்கற்பத்தை அந்தப் பாடாணவாத சமயி சிவனருள் எப்படிப்பட்டதென்று வினவியவனுக்கு வகைப்படுத்தி விடையாகக் கூறினன்)

ஏ (அடி 9) அசை.

பாடாணவாதி சங்கற்ப நிராகரணம்

வகுத்துரை பெருகத் தொகுத்திடு முத்தி
நன்று நன்றிரு ளொன்றிய மலத்தா
முளத்திற் குறுபொறி செறிபுல னுகர்தல்
விளக்கிற் றிகழு மேன்மைய தன்றே
கருவிக ளகல்வுழி மருவிய துயரமு
நன்றென வாகுந் துன்றிய படலத்
திடைதடைப் பட்ட சுடர்விழி மாந்தர்
படல நீங்குதல் கடனு தலினே
[3]காட்சி யென்னக் காணுத் துயர
மாட்சியை முத்தி யெனவகுத் துரைக்கிற்
கரணு பாவ மரணங் கருமர
மேய்ந்தவர் முத்தி சேர்ந்தவ ரன்றே
யனைய கதிக்கோர் முனைவரும் வேண்டா
தனிதரு துயர மெனுமிது திடமே.
பாடா ணத்திற் கூடா முத்தி.

(ப-ரை):— உரை—சொற்கள்; பெருக-மிகும்படி; வகுத்து—விரித்துரைத்து (பிறகு); தொகுத்திடு — முடிவாகக் கூறிய

(உனது); முத்தி—முத்தி; நன்று நன்று—மிக அழகிது! (அது பின்னர் நிராகரிக்கப்படும்).

1. இருள்—அறியாமைக் குணம்; ஒன்றிய—ஆகிய; மலத்து—ஆணவத்தோடு; ஆம் உளத்திற்கு—இயைந்த உயிர்களுக்கு; (தாம்) உறு—கூடிய; பொறி—கரணங்களின் (வாயிலாய்); செறி—வருகிற (சத்த முதலிய); புலன்—விடயங்கள்; நுகர்தல்—அனுபவமாதல் (இருளில்); விளக்கின்—விளக்கினது (உதவியால் பொருள்கள்); திகழும்—பிரத்தியக்ஷமாகிற; மேன்மையது—சிறப்புப் போன்றது (இது உயிர்களுக்குச் சகலநிலை).

2. துன்றிய—படர்ந்த; படலத்திடை—படலத்தால்; சுடர்—பார்வை; தடைப்பட்ட—மறைப்புண்ட; விழி—கண்ணை (உடைய); மாந்தர்—மனிதர் (அந்த); படலம்—படலத்திலிருந்து; நீங்குதல்—விலகவேண்டுவது; கடன்—அவசியப்; (அதனால் கண்ணின் பார்வைச் சத்தி ஒரிலாபமாய்) ஆதலின்—மீளுதல் போல்; கருவிகள்—(உயிர்களுக்கு) கரண சமூகப்; அகல்வுழி—நீங்கின பிறகு; மருவிய—உள்ள; துயரம்—துன்பமும்; நன்று—(ஓர்) இலாபகர மீட்சி; எனல் ஆகும்—என்று சொல்ல வேண்டிவரும்.

3. (உயிர்களுக்குக் கரண சமூகம் நீங்கி அதனால்) (காணு)—விடுபடுகிற; காட்சி என்ன—ஞானத்தைப் போன்று (கருமமும் நீங்கி அதனால்); காணு—விடுபடுகிற; துயர மாட்சியை—துக்கத்தையும் சுகத்தையும்; முத்தி என-வீடு என்று; வகுத்து—விரித்து: உரைக்கின்—சொன்னால்; கரண அபாவம்—கரண சமூகமில்லாத; மரணம்—மரணம்; கரு—கருப்பம்; மரம்—தாவரம் (ஆகியவற்றை); ஏய்ந்தவர்—பொருந்திய உயிர்களும் (ஞானமில்லாமையாலும், சுக துக்கானுபவ மில்லாமையாலும்); முத்தி—வீடு; சேர்ந்தவர்-அடைந்தன 'வாகும்; ஓர்முனை அனைய கதிக்கு—அத்தகைய வீட்டை (தருதற்கு); ஓர்முனை வரும்—ஓராசானும் (வேண்டுமா?); வேண்டா—வேண்டாம் (உயிர்கள் ஞானமின்றி அனுபவமின்றிக்கிடப்பதே உன் முத்தியாகலின் அம்முத்தியாவது ஆணவமலம்); தனி—தான் மாத்திரமாயிருந்து (அவற்றிற்கு) தரு—தருகிற (கேவல); துயரம் எனும்—துன்பம் என்கிற; இது—இம்முடிவே; திடம்—மெய். (ஆகையால் உயிர்கள்); பாடாணத்தில்—கல்லுப்போல் (கிடக்கிற); முத்தி—முத்தி; கூடா—பொருந்தாது. (என்று இப்படியெல்லாம் அப்பாடாணவாதியின் சங்கற்பத்தை அவனுக் கருகிலிருந்த பேதவாதி நிராகரணம் பண்ணினான்).

அன்றே (அடி-4), ஏ(அடி-8), அன்றே (அடி-12), ஏ(அடி14) என்பன அசைகள்.

கருத்து
(பெத்த மறுப்பு)

1 சங்:- உயிர் ஒரு பொருள். ஆணவமலம் அதன் குணம்; உயிர் அம்மலத்தில் மாத்திரங் கூடிக் கிடப்பது அதற்குத் துன்பந் தருவதாகிய கேவலநிலை. கேவலம்—தனி. அம்மலங் காரணமாக அவ்வுயிர்களிடம் மாயாமலம் வந்து கூடும். சிவபிரான் அம்மாயா மலத்திலிருந்து கருமமலத்துக்குத் தக்கபடி கரணங்களின் சமூகமாகிய சரீரத்தை யாக்கி அவ்வுயிருக்குக் கொடுப்பார். அவ்வுயிர் அக்கரண சமூகத்தைக் கொண்டு கருமமல பலனாகிய சுகதுக்கங்களை நுகரும்.

நிரா:- உயிர் ஒரு பொருள்; ஆணவ மலத்தை அறியாமையெனக் கொண்டு அது அவ்வுயிரின் குணம் என்றாய். அப்படியானால் அவ்வுயிர் கரணசமூகத்தைப் பெற்று அதன் துணைக் கொண்டு சுகதுக்கங்களை யெப்படி நுகரவல்லது? ஆணவமாகிய அறியாமையைக் குணமாகவுடைய பொருளுக்கு அறிவு தோன்றவே மாட்டா. குணி மாறாமல் குணம் மாறுதல் யாண்டுமில்லை. குணியாவது குணத்தன்மையுடைய பொருள். ஆகவே உயிர் கரணங்களைப் பெற்று அறிவு உண்டாகி இன்பத் துன்பங்களை நுகருமென்று நீ சொன்னது தவறு. ஆனால் உண்மையில், உயிர் போல் ஆணவமலமும் ஒரு பொருளே. உயிரின் குணம் அறிவு. ஆணவ மலத்தின் இயல்பு சடமாயிருந்து அறியாமையைச் செய்வது. உயிர் என்று உண்டோ அன்றே அம்மலமும் உண்டு. அன்று முதலே அம்மலம் உயிருடனிருந்து அதனறிவை விளங்கவொட்டாமல் தடை செய்து வருகிறது. இருள் கண்ணின் குணமாகிய பார்வையைத் தடுப்பது போலும் அது. இருளின் மறைத்தற் சத்தியைச் சிறிதே விலக்குவது விளக்கு. அவ்வளவில் கண்ணின் பார்வை உரம்பெற்றுக் கண்ணால் பொருள்களைப் பார்க்க முடிகிறது. அவ்விளக்குப் போல்வது கரண சமூகம். உயிர் அதனோடு கூடுவதால் உயிரினறிவு அவ்வாணவாந்தகாரம் சிறிதே நீங்குகிறது. அதனால் உயிர் அறியும் அவ்வளவில் விளங்கி அறியவும் நுகரவுங் கூடும். ஆகலான் உயிருக்குக் கேவலநிலையை விட அவ்வறிவு நிலை சிறப்புடைய தாயிற்றென்க.

2 சங்- கண்ணுக்குப் பார்க்குஞ் சக்தி இயற்கை, ஆனால் சில வேளைகளில் அக்கண்ணில் படலம் படரும். அஃதொரு நோய். கண் போன்றது உயிர். படலம் போன்றது கரண சமூகம். உயிர் கரணங்களோடு கூடுவதால் மாயா மலத்தாலும், அவற்றைக்

கொண்டு அனுபவிப்பதாகிய இன்ப துன்பத்தோடு கூடுவதால் கரும மலத்தாலும் பந்திக்கப்பட்டதாய் அவத்தைகளையடையும். அவத்தைகளால் உயிருக்கு வருவது பிறப்பு. அப்படி இரண்டு மலங்களிலும் உயிர் அகப்பட்டுப் பிறந்து பிறந்து வருவதுதான் அச்சகலநிலை. அதுவும் அக்கேவலம் போல் துன்பந் தருவதேயாம். கண்ணுக்குப் படலம் நீங்க வேண்டுவது அவசியம். அப்படியே உயிருக்குக் கரண சமூகச் சேர்க்கையாகிய சகலநிலை நீங்க வேண்டுவதும் அவசியம்.

நிரா:- கண்ணிற் படல நோயுடையான் அந்நோயை நீக்கிக் கொள்ள வேண்டும். அப்படியே உயிரும் கரண சமூகச் சேர்க்கையை நீக்கிக் கொள்ள வேண்டும் என்றாய். கண்ணுக்கு ஒளியுடைமை இயற்கை. ஒளி – பார்க்கிற சக்தி. படலம் படர்ந்தால் அவ்வொளி மறையும். கண்ணுக்கு அது துன்பம். படலம் நீங்கினால் அவ்வொளி மீண்டும் விளங்கும். அவவிளக்கம் அதற்கு இலாபமும் இன்பமும் ஆம். ஆனால் உயிருக்குக் கேவலத்தில் அறியாமை குணமென்றாய். கரண சமூகச் சேர்க்கையிற்றான் அறிவு விளங்குகிறது ஆகவே அக்கேவல நிலையைவிட இச்சகல நிலையே விரும்பப் படுவது. அறிவை விளக்குகிற கரண சமூகமும் நோவைத் தருகிற படலமும் நிகாராமா? படலம் போல் நீக்கிக் கொள்ளத் தக்கதா கரணசமூகம்? உயிருக்குக் கரண சமூகம் நீங்கினால் கேவலமாகிய அறியாமையே எஞ்சும். ஆகவே அறியாமையை உயிர்க்குணமெனக் கொண்ட நீ கரண சமூக நீக்கமும் ஒளியைக் குணமாகவுடைய கண்ணின் படல நீக்கமும் சமமெனச் சொன்னது பிழை.

(முத்தி மறுப்பு)

3. சங்:- ஒருவன் அயர்ந்து தூங்குகிறான். அப்போது கரண சமூகம் அவனை விட்டு விலகுகிறது. அதனால் அவனுக்கு அறிவில்லை. அதனால் இன்பத்துன்ப நுகர்ச்சியு மில்லை. தூக்கத்தில் அறிவும், நுகர்ச்சியும் சூனியமா மென்பது. அபபடியே ஆசானுபதேசத்துக்குப் பின் உயிர் மாயாமல காரியமாகிய கரண சமூகம் நீங்கி அறிவிலிருந்தும், இன்பத்துன்ப நுகர்ச்சி நீங்கிக் கரும மலத்திலிருந்தும் விடுபட்டுப் பிறப்பிறப்பற்றுக் கல்லுப்போற் கிடக்கும் அக்கிடையே வீடாகும். விடுபடுவதே வீடு.

நிரா:- உயிர் கரண சமூகத்தி லிருந்தும், இன்ப துன்பத்தி லிருந்தும் விடுபட்டுச் சதா கல்லுப் போற் கிடக்குங் கிடையே அதற்கு முத்தி யென்றாய். அப்படியானால் செத்தொழிந்த (மரணமான) உயிர்களுக்கும் கருப்பத்தில் நுழைகிற (ஜனன

மாகிற) உயிர்களுக்கும் கரண சமூகமில்லை. மரஞ் செடி கொடி யுயிர்களுக்கும் அஃதில்லை. அவ்வுயிர்களெல்லாம் முத்திபெற்றன வென்று சொல்லவேண்டும்' இம்முத்திக்கும் உன் முத்திக்கும் காரணுபாவத்தில் வித்தியாசங் கிடையாது. உயிர் கரண சமூகம் போய் அறிவிலிருந்தும், இன்ப துன்பம் போய் நுகர்ச்சியிலிருந்தும் விடுபட்டால் சகலத்திலிருந்து கேவலத்துக்கே சென்றதாகும். அக்கேவலக்கிடை கல்லுக்குச் சமந்தான். அது துயரநிலையே. உயிருக்கு அதனைத்தர ஞானுசிரியனும் வேண்டுமா? உயிர் சிவத்தைச் சார்தலும் சிவமாதலுமாகிய இன்பமுத்திநிலை உன் மதத்திலில்லை. அதனைத் தருதற்குத்தான் ஞானுசிரியன் வேண்டும்.

———

பேதவாதி சங்கற்பம்

ஈசன தருளாற் பாசத் தொகுதி
செறிவுறு செம்பிற் கறையுறு களிம்பு
குளிகை தாக்க வொளிபெற் றாங்கு
நித்த முத்த சுத்த ராக
5. வைத்தன ருலகின் மறைவல் லோரே.

(ப-ரை:) செம்பில் — செம்பில்; செறிவு உறு — கலந்துள்ள; கறை—கறுப்பு; உறு — பொருந்திய; களிம்பு — காளிதத்தை; குளிகை — இரச குளிகை; தாக்க—சேர்ந்து இல்லையாக்கினதும் (செம்பு); ஒளி பெற்றுங்கு — பொன்னுவது போல்; (உயிரிற் கலந்துள்ள) பாசத்தொகுதி — மும்மலங்களும் (இல்லையாகி அதுமுதல் அவ்வுயிர்); ஈசனது — சிவபிரானது; அருளால் — சத்தியால்; நித்த — என்றுமே; முத்த — விடுபட்ட; சுத்தர் ஆக — தூயதாகுமென்று; உலகில்—உலகத்தில்; மறை வல்லோர்—வேத விற்பன்னர்; வைத்தனர் — சொல்லியுள்ளார்.

[என்று இப்படி யெல்லாம் தனது மத சங்கற்பத்தை அந்தப் பேதவாதசமயி சிவனருள் எப்படிப்பட்டதென்று வினுவிய வனுக்கு வகைப்படுத்தி விடையாகக் கூறினுன்.)

ஏ' (அடி-5) அசை.

பேதவாதி சங்கற்ப நிராகரணம்

மறைக ளாகமத் துறைகண்மற் றெவையு
நாசமில் பதிபசு பாசமென் றுரைத்த
லயர்த்தோர் குளிகைச் சயத்தாற் ருமிரக்
காளித நாசம் பாசத் தேய்த்தல்
5 கூடா தன்றியுங் குளிகை சீருண

நீடா தழித்த நிலைநிலை யாதலிற்
பேத வாத மோதுதல் பிழையே
யின்னு மின்னுயி ரேமங் குளிகை
தன்னி லன்னியந் தருவது திடமே
வீடித் திறனிற் கூடக் கூடா

(பரை.-) மறைகள் — வேதங்களும்; ஆகமத் துறைகள்—ஆகமங்களும் (புராணேதிகாச முதலிய): மற்று எவையும் — பிற எல்லா நூல்களும்; பதி பசு பாசம்—பதி, பசு, பாசங்கள் (என்றுமே); நாசம் இல் என்று — அழியாதன வென்று; உரைத்தல் — சொல்லியுள்ளதை; அயர்த்து — மறந்து; ஓர் குளிகை — ஓர் இரச குளிகையினது; சயத்தால் — சமார்த்தியத்தால்; தாமிரம் — செம்பின்; காளிதம் — களிம்பு; நாசம்—அழிவதை; பாசத்து—மலங்களின் (அழிவுக்குத் திருட்டாந்தமாக) ஏய்த்தல் பொருத்துதல்: கூடாது — சரியன்று; அன்றியும்—அல்லாமலும்; குளிகை—இரச குளிகை; சீருணம் — செம்மையும்: நீடாது—நிலைக்க வொட்டாமல்; அழித்த — இல்லையாக்கிவிட்ட; நிலை—செய்தி; நிலை ஆதலின் — உண்மையாகையால் (அவ்வுயிருக்குஞ் சிவத்துக்கும்); பேதவாதம்—பேதவாதம்; ஓதுதல்—பேசுதல்; பிழை – குற்றம்; இன்னும்—மேலும் (அந்த); ஏமம்—பொன்னை விட்டு; குளிகை தன்னில் — இரச குளிகை விலகுதல் போல; இன்உயிர் — முத்திபெற்ற ஆன்மாவை விட்டு (அச்சிவசத்தி); அன்னியம் தருவது — விலகுதல் செய்யு மென்பது; திடம்—திண்ணம்; (உயிருக்கு) வீடு—முத்தி; இத்திறனில்—இந்த விதமாக; கூடக்கூடா—சித்திக்க மாட்டாது.

(என்று அப்பேதவாதியின் சங்கற்பத்தை அவனுக்கருகிலிருந்த சிவசமவாதி நிராகரணம் பண்ணினான்)

ஏ (அடி-7), ஏ (அடி-9) என்பன அசைகள்,

கருத்து

(முத்தி மறுப்பு)

சங்:- இரச குளிகை சேர்வதால் செம்பிலுள்ள களிம்பு அழிந்து இல்லாமற்போம். அப்படியே சிவசத்தி சேர்வதால் உயிரிலுள்ள ஆணவம் கருமம் மாயை யென்கிற முப்பாசங்களும் அழிந்து இல்லாமற் போம்:

நிரா:- செம்பிலுள்ள களிம்பு அழியு மியல்பை யுடையது: ஆகலின் இரசகுளிகையால் அதனை யழிக்க முடியும். அப்பாசங்களோ அழியா வியல்பின. அது வேத முதலிய சர்வ சாத்திர

சம்மதம். ஆகலின் அவற்றை யழிக்கச் சிவசக்தியால் முடியாது. அங்ஙனமாகப் பாசங்க ளழியுமெனக் கொண்டு களிம்பி னழிவை உவமை கூறுதல் சாலாது.

சங்:- இரசகுளிகையாற் செம்பு பொன்னுகிறது. அப்படியே சிவசத்தியாற் பெத்தான்மா சுத்தான்மா வாகும்.

நிரா:- இரச குளிகையைச் சிவத்துக்கும் செம்பைப் பெத்தான் மாவுக்கும், களிம்பைப் பாசத்துக்கும், பொன்னைச் சுத்தான் மாவுக்கும் உவமை கூறினுய். இரச குளிகையாற் செம்பு பொன்னுன போது செம்பு அழியும். பொன்னுன பிறகு அப்பொன் செம்பு மன்று, இரச குளிகையு மன்று; அச் செம்புக்கும் இரச குளிகைக்கும் வேருனதொரு வஸ்துவேயாம். அப்படியே சிவசத்தி யால் பெத்தான்மா சுத்தான்மா வாகும்போது அப்பெத்தான்மா அழிந்து சூனியமாகும். அச்சுத்தான்மா முந்திய பெத்தான்மாவு மன்று, சிவமு மன்று; அவவிரண்டற்கும் வேருனதொரு வஸ்து வாக வேண்டும். அஃதெது?

சங்:- சுத்தத்திற் சிவம் உபகரிக்கும். ஆன்மா அவ்வுபகாரத் தைப் பெறும். அம்முறையில் அவை வேறு வேறு பிரிந்தேயிருக்கும் அவ்விரண்டன் ஞானங்களும் அப்படி அச்சுத்தான்மா மலத்தி லிருந்து விடுபட்டதே யன்றிச் சிவத்தைப் பெற்றதில்லை.

நிரா:- சிவமும் ஆன்மாவும் உளவானுல் மாத்திரம் அவை தம்முட் பிரிந்து நிற்குமா? கூடி நிற்குமா? என்கிற விவகாரத்துக் கிடனுண்டு. அதுவேதான் சிவஞான ஆன்மஞான விஷயத்திலும். ஒன்று சூனியமானுலும்' சிவஞானம் ஆன்மஞானம் என்பவற்றுள் ஒன்று சூனியமானுலும் அவ்விவகாரங் கிடையாது. செம்பு பொன்னுகு மென்கிற உன் உவமையின்படி சுத்தத்தில் ஆன்மா சூனியமாகிறது. அதனை முந்தின நிராகரணங் காட்டும். எஞ்சி யுள்ளது சிவமொன்றே. அவ்வொன்றை வைத்துக் கொண்டு பேத வாதம் பேசுவது பைத்தியம். உபகாரத்தைப் பெறுகிற ஆன்மா இல்லையாகவே சிவம் உபகரிக்கிற தென்பதும் பொய்யாகும்.

சங்:- செம்பைப் பொன்னுக்குவது இரச குளிகை. அப்படியே பெத்தான்மாவைச் சுத்தான்மா வாக்குவது சிவசக்தி.

நிரா:- இரச குளிகை போல்வது சிவசத்தி யென்றுய் இரச குளிகை செம்பைப் பொன்னுக்கி விட்டு அப்பொன்னிலிருந்து விலகி விடுகிறது. அப்படியே சிவசத்தியும் பெத்தான்மாவைச் சுத்தான்மா வாக்கிவிட்டு அச்சுத்தான்மாவிலிருந்து விலகி விடு மென்பதாகும். அப்போது சிவமில்லாத இடமும் உண்டெனப் பட்டுச் சிவ வியாபகத்திற் குற்றம் வரும். இப்படிச் சிவசக்தியும் உயிரும் விலகி நிற்கக் கூடிய விதத்தில் உயிருக்கு முத்தி சித்திக்க மாட்டாது'

சிவ சமவாதி சங்கற்பம்

[1]பாசமும் பசுவு மீசனு மென்றிம்
மூவகை யுணர்வு தான்முதன் மையவாய்ப்
பாச வைம்புலன் றேசுற வுணர்த்தப்
பசுத்தனி ஞானம் புசித்திடு மன்றே
[2]யினைய ஞானம் பிரிவுற வெறியாச்
செந்தழ றகுநெறி யந்தமி லுயிரு
மறிவா யொன்று மறியா தன்றே
[3]யிவ்வா றொழுகு மேனை யுயிர்க்கு
முன்னோன் றனது முதிரொளி ஞான
மறியாப் பச்சைச் சிறுபுழுக் கவர்ந்த
வண்டென வுயிரைக் கொண்டிடு முயிரது
தன்னை நோக்கித் தானது வாகி
[4]யைவகைத் தொழிலு [5]மெய்வகை யுணர்வும்
பிரியா வாறு பெற்றுத்
[6]திரியாப் பெரியோர் திரட்சி சேர்ந்திடுமே.

(ப-ரை):- 1. பாசமும்—பாச ஞானமும்; பசுவும்-பசு ஞானமும்; ஈசனும் — பதிஞானமும்; என்று — என; இமூவகை—இப்படி மூன்று வகையான; உணர்வு — ஞானங்கள்; முதன்மைய—அநாதியே யுள்ளன; ஆய்–ஆகி, (அவற்றுள்); பாச—பாச காரியமாகிய; ஐம்புலன் — பஞ்சேந்திரிய ஞானங்கள் (சகலத்தில் விடயங்களை); தேசு உற — தெளிவு உண்டாகும்படி; உணர்த்த — அறிவிக்க; பசு– பசுவின்; தனி ஞானம்—உயர்ந்த ஞானம் (அறிந்து); புசித்திடும் — நுகரும்.

2. (கேவலத்தில் இந்திரியாந்தக் கரண ஞானங்களாகிய) இனைய ஞானம் — இப்பாச ஞானம்; பிரிவு உற — நீங்குதலை யடைய (பசு ஞானம் கொழுந்து விட்டு); எரியா — எரியாத; செம்தழல் — சிவந்த தீ; தகுநெறி — போன்ற தன்மை யுடையது. (அப்போது); அந்தம் இல் — அழிவில்லாத; உயிரும்—பசுவும் (அடங்கிய அந்த); அறிவு ஆய் — ஞானம் கொண்டு (துணை); ஒன்றும்—எதனையும்; அறியாது — அறிய மாட்டாது.

3. (முத்தி பெற்றொழிந்தன போக) இவ்வாறு — இப்படி (கேவல சகலங்களில் உழன்று); ஒழுகும்—வருகிற; ஏனை— மற்ற; உயிர்க்கு—உயிர்களுக்கு; முன்னோன் தனது — பதியின்; முதிர் ஒளிஞானம் — பூரணப் பிரகாச ஞானம் (உபகரிக்குங்கால் அவ்வுயிர்களின் பக்குவத்தில் ஒன்றும்);

அறியா — அறியாத; பச்சை — பசுமையான; சிறு புழு — சிறிய புழுவை; கவர்ந்த — எடுத்த; வண்டு என — வண்டு போல (அந்த); உயிரை — உயிர்களை; கொண்டிடும் — எடுத்துக் கொள்ளும். (அந்த) உயிர்—உயிர்கள்; அது தன்னை —அப்பதியையே; நோக்கி — தியானித்து; தான் — தாமும்; அது ஆகி—அது (போல் பதிகளே) ஆகி (வண்டு எடுப்பதால் புழு அதன் சொரூபத்தைப் பெற்று அதன் தொழிலையுஞ் செய்து மற்ற வண்டுகளின் கூட்டத்திற் சேர்ந்து விடுவது போல்);

4. ஐவகைத் தொழிலும்—பஞ்ச கிருத்தியங்களும்;

5. மெய்வகை — நிலையான; உணர்வும் — முற்றறிவும்; (தம்மை விட்டு) பிரியா ஆறு — நீங்காதபடி (அவற்றை); பெற்று—அடைந்து; (முன்னரே அப்படிப் பரமுத்தி பெற்று அதிலிருந்து என்றும்)

6. திரியா — மீளாத (உயிர்களாகிய); பெரியோர்-சிவன் களின்; திரட்சி—கூட்டத்தில்; சேர்த்திடும் — சேர்ந்து விடும்

(என்று இப்படி யெல்லாம் தனது மத சங்கற்பத்தை அந்தச் சிவசமவாத சமயி சிவனருள் எப்படிப்பட்டதென்று வினவியவனுக்கு வகைப்படுத்தி விடையாகக் கூறினான்.)

தான் (அடி-2) அன்றே (அடி-4), (அன்றே அடி-7), ஏ (அடி-15) என்பன அசைகள்.

———

சிவசமவாதி சங்கற்ப நிராகரணம்

[1]சேர்ந்த மும்மை வாய்ந்த ஞானமும்
மொருகா லன்றித் தெரிவுற நிற்கி
லொண்பொருள் காணும் பண்பினுக் கொருகாற்
பரிதியு மதியு மெரிதரு விளக்கும்
வேண்ட லின்றே காண்டகு காலை

யொன்றொன் றாக நின்றறி வுறுமெனி
லன்னிய மறியா மன்னுயிர் பொறிபுலன்
றானே வறியா தலைவற் குலகினை
யானு வறிவா லறியவேண் டின்றே
[2]கொழுந்தழ றகுமெனி லழுந்திடு மவத்தையிற்

றிரியாத் தலைவற் றெரியாத் தன்மைவந்
தெய்த லாகா [3]மெய்யுறு பொருட்கு
முன்னர்க் கீடந் தன்னென வெடுத்த
வேட்டுவ னியல்பு கூட்டல் பெருதே
வண்டிறும் பெடாவுட் கொண்டது தனக்கு
மந்திர வாதந் தந்தது மிலதே
யெடுத்திடு மதனு லடுத்ததென் றறையிற்
கருமயிர்க் குட்டி யிருசிறைப் பறவை
யாயின தெடுத்த தாயர்சாற் றிலரே
பிறவி பேதத் துறையிவை கிடக்க
வேயு மித்திற னுயுங் காலை
யோகத் தகுதி யாகத் தகுமே
ஞான மின்மையென் ருேதுவ தெவனெனி
லுயிரு முணர்வும் பயிலுத லின்றி
வேட்டுவ னுருவ மென்புழு வுணர்வு
கூட்டுத லாலுருக் கூடுத லானு
முத்தியி லிறையிற் பற்றுத லின்றித்
தன்னுரு வணைந்த பின்னத னுணர்வு
மாறுத லானு மூறுடைத் தன்றே
[4]யீசன தியல்பரு ளெய்துயி ரியற்றல்
பேசுத றவறெனப் பெருமறை யறைய
வைந்தொழி லுயிருந் தந்திட றகுமோ
வாவதென் முன்னு ளுவலர் பெருமான்
பண்டொரு முதலை யுண்ட மைந்தனை
வரவழைத் தனனென் ருய் பிழைப்பில தநீ
தந்திட வேண்டு மென்றன ரன்றே
யின்னவை கிடக்க முன்னவன் றன்மை
யெய்தின ரெல்லாச் செய்தியுஞ் செய்வ
ரிரும்பெரி யெய்தித் தருஞ்செய றகவெனிற்
பொருணிலை கிடக்க வொருதிட் டாந்தப்
பேறே யாயிற் சீருக் கதுவிய
புனலொரு புடைசேர் கனறகு மாயினும்
வேறொரு பொருளை நீருக் கிலதே
நெருப்பெனு மிதனி னுருத்தனி காட்டுக
வங்கியு மொன்றிற் றங்கினின் றலது

தன்ஞெழி னடத்தா தென்றறி யினிநீ
யிரும்பனற் செய்தி தரும்பரி சுளதோ
வதுவென்ஞே ரலகை பொதிதருங் காலே
யதன்செய லனைத்து மிவன்செய லாமா
லவனிவ ஞகி லிவனவன் செய்திக்
கென்னைவை யென்னிற் பின்னுறு செயலு
மதன்செய லன்றி யிவன்செய லாகி
லிவன்செயல் பேயின் றனசெய லாகி
யிருந்த வாவெனத் தெரிந்திட வேண்டுந்
தெரியா தாகிற் புரியிற் கடுங்கன
லெரிந்த தென்னு மிதுதகு மன்றியு
மவனிவ ஞகி லிவனவன் செய்தி
யென்று செய்வா [5]ஞென்றிய மதத்தா
யெல்லா மறிதல் செல்லா துயிர்கள்
சிற்றறி வெனுமிச் சொற்றவ ருகு
மென்பதெ னலகை தன்பத மடைந்தோர்
கொண்ட வாறு கண்டன மென்னின்
மூங்கை யந்தருற் ருேங்கிய குணங்குறி
செய்வதெ னின்னும் பௌவமுற் றழுந்தினு
நாழி கொள்ளா தாழியி னலைபுன
லதனுற் கருத்து முதலுள தாக
வேண்டு மன்றே யீண்டினி யமையு
மெல்லா மெனுமிச் சொல்லாற் படும்பொரு
ளனைத்துந் தாக்கா தனிப்பரத் துற்றவர்க்
கிவ்வகை யுணர்வு செய்வதென் செப்புக
[6]வொன்றி ஞென்ரு மொன்ரு துலகி
னின்ற போதுயிர் நேரா மன்றே
முத்தி யுற்ற நற்றவ ரவையிடைச்
சேர்வ ரென்றனே சார்தரு முத்தி
சாலோக் கியமோ சாயுச் சியமெனிற்
பந்த முற்றக் கந்தல கழித்த
வறிவினே டறிவு பிரியாப் பெற்றி
வேண்டு மென்றதற் கீண்டிவ ரிவ்வா
றிருப்ப ரென்பதற் குருத்தான் வேண்டு
மண்ணல தருளி னண்ணி யிருப்பினுஞ்

சீவன் முத்தரென் றோதின ரகன்று
நீங்கியு முருவ நீங்கா தாயி
னோங்கிய முத்தி யாவதென் னுரைக்க
செடியுட லணுகாக் குடிலை கொடுக்குமென்
றோதினை நீயே பேதாய் பகட்டுர

லொளிர்சினை முச்சித் தளிரெனு மிதுதகு
மிச்சா ரூப நச்சின ரென்னின்
மும்மலத் தேது மின்மைய தன்றே
யிதுவளர் முத்திப் பதமென வியம்புவ
ரீங்கிவை நிற்க

1. (உன் சங்கற்பத்தில்) சேர்ந்த—உளவாகிய; மும்மை வாய்ந்த —மூன்று; ஞானமும்—ஞானங்களும்; ஒருகால்—இடையில் (தோன்றுவதும் மறைவதும்); அன்றி—அல்லாமல் (பொருள் களை); தெரிவு உற—விடயிப்பதற்கு (தம்முட்கூடி); நிற்கில்—நின்றால் (கண்); ஒண்பொருள்—அழகிய பொருள்களை; காணும் பண்பினுக்கு—காண்பதற்கு; ஒருகால்—ஒருசமயத் தில்; பரிதியும்—சூரியனும்; (மற்றொரு சமயத்தில்) மதியும்—சந்திரனும் (வேறொரு சமயத்தில்); எரிதரு—எரிகிற; விளக்கும்—தீபமும்; (காட்டாக நின்று உபகரிக்க) வேண்டல் இன்று—வேண்டாம்; (பதி பசு பாச ஞானங்கள் மூன்றும் ஞானங்க ளாகலின் விடயங்களை) காண்டகு காலை—அறிகிற போது (தம்முட் கூடி நிற்க வேண்டு மென்ப தில்லை); ஒன்று ஒன்று ஆக—தனித்தனியாக; நின்று—இருந்து; அறிவு உறும் எனில்—அறியுமென்றால்: (விடயங்கள் தனக்கு) அன்னியம் — புறம்பே (இருப்பனவாதலால் தன்னளவில் வியாப்பியமா யுள்ள ஞானத்தோடு கூடிய); மன்உயிர் — நிலைபெற்ற பசு (அவற்றை); அறியா — அறிய மாட்டாது (பாசகாரிய மாகிய); பொறியோ — இந்திரியங்களோ (என்றால் அவை தம்மளவில்); புலன்—விடயங்களை; அறியா—அறிய வல்லன அல்ல; (ஆகலின் அறிய மாட்டா); தலைவற்கு — பதிக்கு (தனது); ஆனா அறிவால்—கெடாத முற்றறிவால்; உலகினை—விடயங்களை (புதுவதாகச் சுட்டி); அறிய வேண்டின்று—அறிய வேண்டாம். (இந்திரியாந்தக் கரண ஞானங்கள் உபகரியாமல்)

2. அழுந்திடும் — அடங்கிக் கிடக்கிற; (கேவலமாகிய) அவத் தையில் — அவத்தையில் (பசுஞானம் அடங்கிக் கிடக்கிற); எனில்—கொழுந் தழல்—பெரிய தீ; தகும் — போன்றது;

என்றால்; (அப்போதும் அப்பசுவை விட்டு) திரியா —வேறாய் நில்லாத; தலைவன் — பதியை; தெரிய — அறிய மாட்டாத; தன்மை — இழிவு (அந்த ஞானத்துக்கு); வந்து எய்தல் ஆகா—வருதல் கூடாது.

3. (உயிர்) மெய் — சுத்த நிலையை; உறு— அடைதலாகிய பொருட்கு - வீடு பேற்றுக்கு (அவ்வுயிரைச் சிவம் ஆசாரியனாய் வந்து ஆட்கொள்ளுதலாகிய); முன்னர் — முந்திய நிகழ்ச்சியோடு; கீடம்—புழுவை; தன்—தான் (ஆக்கவேண்டும்); என—என்று; எடுத்த — எடுத்த; வேட்டுவன் — வண்டின்; இயல்பு—செயலை; கூட்டல் — நிகராக்குதல்; பெருது — சாலாது. (ஏனெனில்); வண்டு—வண்டு; இறும்பு - புழுவை; எடா — எடுத்து; உட்கொண்டது—தானாக்கியது; தனக்கு— புழுவுக்கு; மந்திரவாதம் — மந்திரோபதேசம்; தந்ததும்— செய்ததாலும்; (புழு அம்மந்திரத்தின் வழி வண்டைத் தியானித்ததாலும்) இலது — இல்லை. (வண்டு புழுவை) எடுத்திடுமதனால் — எடுத்ததனாலேயே (புழுவுக்கு வண்டின் வடிவம்); அடுத்தது என்று—உண்டாயிற்றென்று; அறையில் —சொன்னால் (அப்படி); கருமயிர்க்குட்டி — கருமயிரையுடைய புழு; இருசிறை — இரண்டு சிறகுகளை (உடைய): பறவை— வண்டு; ஆயினது — ஆன செய்தியை; எடுத்த — எடுத்த; தாயர்—தாய் (ஆனவண்டு சொல்ல வேண்டும் அஃதப்படி); சாற்றிலர்— சொன்னது மில்லை. (ஆகலின்) இவை — இம மாறுதல்கள்; பிறவி பேதத்துறை — பிறவி பேதங்களேயாம்; கிடக்க — நிற்க; (உன் மதத்தில்) ஏயும் — வருகிற; இத் திறன்—இம்முத்தியை; (அவ்வுவமையில் வைத்து) ஆயுங்காலை—, ஆராயுங்கால் (இம்முத்தி); யோகத் தகுதி — யோகப்பயன் (ஆகிய சாரூபமே); ஆகத் தகும் — ஆகும் (ஞானப் பயனாகிய சாயுச்சியமாகாது.) ஞானம்—ஞானத்தின் (பயனாகிய சாயுச்சியம்); இன்மை என்று — ஆகாதென்று; ஓதுவது எவன்— சொல்லுவதேன்?; எனில் — என்று (நீ) வினவில்; உயிரும்— ஆன்மாவும்; உணர்வும் — சிவமும் (அத்துவிதமாய்); பயிலுதல் — இயைதலே (சாயுச்சியமாகலின் அவவியைபு); இன்றி—கெடும்படி; மென் பழு—சிறிய புழுவுக்கு (அதன் சொரூபமே நாசமாகக் கூடிய விதத்தில்); வேட்டுவன்— வண்டு (தன்னுடைய); உருவம்—உருவத்தையும்; உணர்வு— அறிவையும்: கூட்டுதலால் — இயைவித்தலால்; (அங்ஙனமே ஆசானால் ஆன்மாவுக்கு) உரு — சாரூபமே; கூடுதலானும் — கிடைக்கிறதென்பது பெறப்படுதலானும் (ஆன்மா பாசத்

தின்); முத்தியில் — நீக்கத்தில்; இறையில் — சிவத்தோடு (அத்துவிதமாய்); பற்றுதல்—இயைதல் (என்பது); இன்றி — கெட்டு (அச் சாரூபத்தால் சிவத்துக்கு வேருய்ப் புறம்பே இருப்பதுடன் அந்த); தன் உரு சாரூபம்: அணைந்தபின் — கிடைத்த பிறகு; அதன் — அந்த ஆன்மாவின்! உணர்வு— ஞானம்; மாறுதலானும் — வேறுபடுதலானும்: (சாயுச்சிய மன்றென்கிற) ஊறு — குற்றத்தை (இம்முத்தி); உடைத்து —உடையது

4. ஈசனது - சிவனது; இயல்பு—பஞ்ச கிருத்தியத்தை: அருள் எய்து—முத்தி பெற்ற; உயிர் இயற்றல் – ஆன்மாச் செய்தல் (உண்டு என): பேசுதல்—சொல்லுதல்; தவறு என—பாதக மென்று; பெருமறை—உயரிய வேதம்; அறைய - முழங்கவும் (அதற்கு மாருக நீ); ஐந்தொழில் — பஞ்ச கிருத்தியத்தை; உயிரும் — ஆன்மாவும்; தந்திடல் — செய்யுமென்றல்; தகுமோ — பொருந்துமோ? ஆவது என் — பொருந்துவது எப்படி? (என்று நான் வினவில் அதற்கு விடையாக); முன் நாள் — முன்னெரு காலத்தில்; ஒரு முதலே — ஒரு முதலே; பண்டு உண்ட—சில ஆண்டுகளுக்கு முன் விழுங்கிய; மைந்தனே —பிள்ளையை (அவ்வாண்டுகளுக்குப் பின்); நாவலர் பெருமான்—ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள்; வர அழைத்தனன் —வரச்செய்தார்கள்; என்ருல்—என்று (சரித்திரச் சான்று) காட்டினுய்; அது-அச் சரித்திரம்; (வேதத்துக்கு) பிழைப்பு இலது—விரோத மன்று. (அவர்கள் சிவபிரானே நோக்கி); நீ தந்திட வேண்டும் — நீ 'பிள்ளை தரச் சொல்லு காலனையே'; என்றனர்—என்று வேண்டினார்கள்; இன்னவை — இத்தகைய சரித்திரங்களை (ஒரு புறம்); கிடக்க—ஒதுக்கி விட்டு; இரும்பு— இரும்பு; எரி எய்தி — தீயை யடைந்து (தீயே யாகித்தியின் சுடுதற் ருெழிலை); தரும் செயல் தக — செய்கிற தன்மை போல; முன்னவன் தன்மை — சிவமாந் தன்மையை; எய்தி னர்—அடைந்த ஆன்மா (சிவமேயாகிச் சிவன் செய்கிற); எல் லாச் செய்தியும் — பஞ்ச கிருத்தியத்தையும்; செய்வர் — செய்யும்: எனில்—என்று (திருட்டாந்தங் காட்டிக்) கூறினுயா ஞல் (உன்); பொருள்—பிரதிஞ்ஞை; நிலை கிடக்க— நிலைக்கும் படி; ஒரு—ஒப்பற்ற; திருட்டாந்தம் — திருட்டாந்தமாக (நீ): பேறு—பெற்றதை; ஆயின்—ஆராயின் (இரும்பிற் சேர்ந்த தி வைக்கோற்போர் முதலியவற்றைச் சுட்டுச் சாம்பராக்குவது போல); சீரு — விரைந்து; கதுவ்ய — ஓடுமியல்புடைய; ஒரு புனல் புடை—நல்ல நீரில்; சேர்கனல்—சேர்ந்த தியும் (சுட !); தகும் ஆயினும் — வல்லதாயினும்; வேறு ஒரு பொருளை — வேறெப் பொருளையும்; நீறு ஆக்கிலது — சாம்பராக்க

மாட்டாது (மேலும் உன்னால் முடியுமானால்); நெருப்பு எனும் — தீயென்கிற; இதனின்—இப்பூதத்தின்; உரு—பிழம்பு (ஒன்றினும் பற்றாமல்); தனி — தாள் மாத்திரமாய் (நின்று எரிவதை); காட்டுக — காட்டு; (அது முடியாதாகலின்) அங்கியும்—தீயும் (ஏதேனும்); ஒன்றில் — ஒரு பொருளில்; தங்கி நின்று — சேர்ந்து நின்று (எரிந்தால்); அலது— அல்லாமல் (எரித்தலாகிய); தன் தொழில்—தனது தொழிலை; நடத்தாது என்று—செய்யாதென்று; இனி — இனியாயினும்; நீ அறி—நீ அறிந்து கொள். (தீயே இரும்பாதியவற்றைச் சார்ந்து நின்று தன் தொழிலாகிய எரித்தலைச் செய்யுமன்றி); இரும்பு — இரும்பு (முதலியன தீயைச்சார்ந்து); அனல் செய்தி—தீயின் தொழில் (ஆகிய எரித்தலை; தரும் பரிசு— செய்தல்; உளதோ — உண்டா? (இல்லை. அப்படியிருக்க). அது—அவ்விரும்புஅனல் செய்தி (திருட்டாந்த மாவது); என்—எப்படி? ஓர் அலகை — ஒரு பேய் (ஒரு மனிதனை); பொதி தருங்காலை—ஆவேசித்த போது; அதன்— அப்பேயின்; செயல்—செயல்கள்; அனைத்தும் — எல்லாம்; இவள்—அம் மனிதனின்; செயல்ஆம்—செயல்கள் ஆகும் (என்று சொல்கிற வழக்கு உலகில் உண்டு அப்படியே பஞ்ச கிருத்தியமும்; முத்தான்மாவின் செயலென்று சொல்லலா மென்றால்) அவன் — சிவனே (தன் கிருத்தியத்தைச் செய்வதற்கு அதிட்டித்தல் ஆவேசித்தல் முதலிய முறைகளால்); இவன்— ஆன்மாவில்; ஆகில்—தங்குகிறான் (என்பது உண்மை) ஆனால்; இவன் — முத்தான்மா (தனக்குரித்தல்லாத); அவன் செய்திக்கு—சிவகிருத்தியத்தைச் செய்தற் பொருட்டு (அம் முறைகளால் வேண்டப்படுந் தங்குமிடம் வேறு); என் - யாது? (அன்றியும் பிரித்தறிய மாட்டாமல் முத்தான்மாவின் செயலே); அவை — அக்கிருத்தியம்; என்னில் — என்று (நீ) மயங்கினால் (பேய் பிடியுண்டவன் பால் பேய் நீங்கிய); பின்—பிறகு; உறு செயலும் — உள்ள செயல்களும் (பிடிப்ப தற்கு முன்னுள்ள செயல்கள் போல); அதன் — அப்பேயின்; செயல் அன்றி—செயல்க ளல்லாமல்; இவன்—அம்மனிதனின்; செயல்—செயல்களாய்; ஆகில் — இருத்தலால் (பிடியுண்ட போது); இவன்—அவனிடம் (உள்ள); செயல்—செயல்கள்; பேயின்தன் — பேயினுடைய; செயல் ஆகி — செயல்களாய்; இருந்தவா என—இருந்தபடியா மென்று (நீ அதைப் பிரித்து); தெரிந்திட வேண்டும்—காணவேண்டும். (அப்படி) தெரியா தாகில் — காணமுடியவில்லை யென்றால் ('வைக்கோற் புரி எரிந்தது' என்கிற உலக வழக்கும் உளதாகலின், அந்தப்

புரிக்கு எரிகிற இயல்பில்லை, அந்த); புரியில் — புரியில் (பற்றிய); கடுங்கனல் — பெருந்தீயே; எரிந்தது — எரிந்தது; என்னும் — என்கிற (அவ்வழக்கினுடைய); இது — இந்தப் பொருளே (ஆன்மா பஞ்சகிருத்தியஞ் செய்ததென்கிற வழக் கிருந்தால் ஆன்மாவுக்கு அத்திறனில்லை, ஆன்மாவினுள்ள சிவமே அக்கிருத்தியத்தைச் செய்த தென்பதை விளக்கு தற்கு); தகும் — பொருத்தமாகும்; அன்றியும்—அல்லாமலும்; இவன்—ஆன்மா; அவன் — சிவம்; ஆகில் — ஆய்விட்டால்; (சிவசமமான) இவன் — இவ்வான்மா; அவன் — அச் சிவனுடைய; செய்தி — கிருத்தியத்தை; என்று — எவ்வளவு காலம்; செய்வான்—செய்து கொண்டிருக்கும்?

5. ஒன்றிய மதத்தாய் — மதாவேச முள்ளவனே!; (முத்தான் மாக்காள்) எல்லாம் — சர்வத்தையும்; அறிதல் — அறியு மென்றால்; செல்லாது — பொருந்தாது (பொருந்து மெனின்); உயிர்கள் — உயிர்கள் (அறிவிக்க அறிதலாகிய); சிற்றறிவு—கிஞ்சிஞ்ஞத்துவம் (உடையன); எனும்—என்கிற; அச்சொல் — உன்மதமே; தவறு ஆகும் — பொய்யாய்விடும்; என்பது — என்க; என் — 'என்னை! (சிவனுல கெய்திய வுயிர்கள் சர்வஞ்ஞத்துவம் பெறுவது); அலகை தன்பதம் — பைசாச வுலகை; அடைந்தோர் — எய்தியவுயிர்கள் (திரிகால ஞானம்); கொண்டவாறு — பெறுவதுபோல் (ஆகுமென நாம்); கண்டனம்—தெரிந்துள்ளோம்'; என்னில் —என்பாயாயின் (பிசாசு); மூங்கை—ஊமைகளையும்; அந்தர் —குருடர்களையும்; உற்று — பிடித்தாட்டினால் (அதனிடம்); ஓங்கிய — உள்ள; குணம் — திரிகால ஞானமும் (மற்றை); குறி — இயல்புகளும்; செய்வது என்—விளங்குவ தெப்படி?; இன்னும்—மேலும்; நாழி—நாழி; பௌவம்—சமுத்திரத்தை; உற்று — அடைந்து (ஆழ); அழுந்தினும் — அமுங்கினாலும்; ஆழியின் அலை — சமுத்திரத்தின் அலைகள் (மிகுந்த); புனல் — நீர் (முழுவதையும்); கொள்ளாது — முகவாது; அதனால் — அவ்வுவமையால்; கருத்து — தெரியக் கிடப்பது (ஆன் மாவின் கிஞ்சிஞ்ஞத்துவம்); முதல் — இயல்பு; அன்று — முத்தியிலும்; உளதாக வேண்டும்—இருத்தல் சத்தியம்(என்ப தாகும். இவ்விஷயம்); எல்லாம் எனும் — சர்வமென்கிற; இச்சொல்லால் — இந்தச் சொல்லினுள்; படும் — அகப்படு கின்ற; பொருள்—பொருள்கள்; அனைத்தும்—அத்தனையிலும்; தாக்கா— தோயாத; தனி—நிர்மலமான; பரத்து—சிவத்தில்; உற்றவருக்கு; —சேர்ந்த ஆன்மாக்களுக்கு; இ வகை உணர்வு — இந்த சர்வஞ்ஞத்துவம் (குணமாய்க் கிடைப்பதால்);

செய்வது — தருகிற இலாபம்; என்—யாது!; செப்புக— சொல்; ஈண்டு—இங்கு; இனி — இதற்குமேல்; அமையும் — வேண்டாம்.

6. (உயிர் பரமுத்தியில் சிவத்தோடு) ஒன்றின்—கலந்தால் (இரண்டும் பொருளால்); ஒன்று ஆம்— ஒன்று என்று ஆய் விடும்; (அப்படி) ஒன்ருது — கலவாமல், உலகில் — பிரபஞ்சத்தில் (சீவன்முத்தனுய்); நின்ற போது — திரிந்த போது (அந்த); உயிர்—உயிர் (சிவத்தோடு); நேர்ஆம்— சமமாகும். (பிறகு அவ்வுயிர்); முத்தி உற்ற— பரமுத்தியடைந்த (ஆனுற் சிவத்திற் கலவாத); நல்தவர் — உயிர்ச் சிவன்களது; அவையிடை - கூட்டத்தில்; சேர்வர் என்றனை—சேர்ந்து கொள்ளும் என்ருய் (அப்படி உயிர்கள்); சார்தரு முத்தி — அடைகிற முத்தி; சாலோக்கியமோ — சாலோக்கியந்தானே? (அதுவாய்த்தானிருக்க வேண்டும்) சாயுச்சியம் — சாயுச்சியந்தான்; எனின் — என்ருல்; பந்தம் — ஆணவம்; முற்ற — பக்குவப்படவும் (அதனேடு கர்மம் மாயை யென்கிற மற்றை); கந்து—பந்தங்களின்; அலகு — எண்களையும்; அழித்த—நீக்கிய; அறிவிேைடு— சிவத்தோடு; அறிவு — ஆன்மா (அத்துவிதமாய்); பிரியாப் பெற்றி — இயைந்திருக்கிற வியல்பே (சாயுச்சியத்தில்); வேண்டும்— சித்திக்கும்; என்பதற்கு—என்கிற வுண்மைக்கு (விரோதமாக முத்தியுலகில்); ஈண்டு—கூடிய; இவர் —ஆன்மாக்கள்;(தத்தந் தனிமை கெடாமல்)இவ்வாறு—நீ சொல்கிறபடி;(கூட்டமாய்) இருப்பார்—இருக்கும்; என்பதற்கு—என்பது உண்மையானுல் அதற்காக (ஒவ்வொரு முத்தான்மாவுக்கும்); உரு—சரீரம்; வேண்டும்—வேண்டப்படும்: (ஆனுல் யாரேனும்) அண்ணலது — சிவத்தினது. அருளில் — அருளில்; நண்ணி—தோய்ந்து; இருப்பினும் — இருந்தாலும் (அவர் சரீரத்தோடு கூடியி ருந்தால் அவரைப் பரமுத்த ரென்னுமல்); சீவன்முத்தர் என்று — சீவன் முத்தர் என்றுதான்; (அறிஞர்) ஓதினர்— சொன்னுர். (ஆனுல் பரமுத்தர்); அகன்று—விட்டு வியாபித்து; (பிரபஞ்சத்தை) நீங்கியும்— கடந்து நின்றும் (அவருக்கு); உருவம் - சரீரம் மாத்திரம்; நீங்காதாயின் —விலகாதென்ருல் (அவரடைந்தது); ஓங்கிய முத்தி—பரமுத்தி; ஆவது என்— ஆவது எப்படி?; உரைக்க—சொல்; பேதாய்—மூடனே; நீ- நீ; (பரமுத்தருக்கு) செடி உடல் — பிராகிருத சரீரம்; அணுகா - போய்விடும்; குடிலே - சுத்த மாயா சரீரம்; கொடுக்கும் - கொடுக்கப்படும்; என்று ஓதினே — என்று சொன்னுய் (அவ்விருவகைச் சரீரங்களுமே பந்தந்தான்) அது

வேப்ப மரத்தின்); உரல் பகடு—உரல் போன்ற அடிமரம்; ஒளிர்சினை — விளங்குகிற பெரியகிளை; முச்சி — இளங்கிளை; தளிர் — தளிர்; எனும் — என்கிற; இது — இப்பிரிவையே; தகும் —நிகர்க்கும்; (அம்முத்தர்) இச்சா — இச்சையினால்; ரூபம் — சரீரத்தை; நச்சினர் என்னில் — விரும்பினாரென்னில் (அவரை விட்டு); மும்மலத்து — மும்மலங்களில்; ஏதும் — ஒன்றேனும்; இன்மையது அன்று — ஒழிந்ததில்லை. (ஆகலின் உனது); இது — இம்முத்தி; (சாயுச்சிய மாகிய உண்மைப் பரமுத்திக்கு); வளர் — செலுத்துகிற (அதனிற் கீழிட்ட); முத்திப் பதம் என — பதமுத்தி யென்றே (அறிஞர்); இயம்புவர் — கூறுவர்.

(என்று இப்படி யெல்லாம் அச்சிவசமவாதியின் சங்கற்பத்தை அவனுக் கருகிலிருந்த சங்கிராந்தவாதி நிராகரணம் பண்ணினான். பண்ணி விட்டு) ஈங்கு — இவ்வளவில்; இவை — இந்நிராகரணப் பகுதிகள்; நிற்க — முடிக.

(எனக் கூறி முடித்துக் கொண்டு தன் மதசங்கற்பத்தைத் தொடங்க லானான்.)

ஏ (அடி-5), தான் (அடி-7), ஏ (அடி-9), ஏ (அடி-14) ஏ (அடி-16), ஏ (அடி-19), ஏ (அடி-22), அன்றே (அடி-29), அன்றே (அடி-36), ஏ (அடி-41), ஏ (அடி-43), ஆமால் (அடி-49), ஏ (அடி-67), அன்றே (அடி-72), தான் (அடி-79), ஏ (அடி-85), ஏ (அடி-88) என்பன அசைகள்.

கருத்து

1. சங்:- பதிக்குப் பதிஞான மென்றும், பசுவுக்குப் பசுஞான மென்றும், பாசத்துக்குப் பாசஞான மென்றும், ஞானங்கள் தனித்தனி குணமா யுள்ளன. அப்பதி பசு பாசங்கள் போல் அந்த ஞானங்களும் அநாதி. அவற்றுள் பாசத்தின் காரியம் பஞ்சேந்திரியங்கள். ஆகையால் அவற்றின் ஞானங்களும் பாச ஞானமே. அந்த ஞானங்கள் பசுவுக்குச் சகலாவத்தையில் விடயங்களைத் தெளிவுபெற அறிவிக்கும். அதனால் பசுஞானம் அவ்விடயங்களை அறிந்து அனுபவிக்கும்.

நிரா:- பசு விடயங்களை யறிகிறது; அதற்காகப் பசுஞான பாசஞானங்கள் தம்முட் கூடி விளங்கி நிற்கின்றன என்றாய். அவ் வகையில் பதிஞானம் உன்னால் விலக்கப்படவில்லை. அம்மூன்று ஞானங்களுமே கூடுகின்றன என்பதே உன்மதம். அப்படியானால் கண்ணறிவு பாசஞானங்களிலொன்று. அது ஒரு பொருளைப்

பார்க்கிறது. அப்போது பதிஞான பசுஞானங்களும் கூடவே விளங்கிக் கொண்டுதானிருக்க வேண்டும். ஆனல் அப்பொருளைச் சூரியனே சந்திரனே தீபமோ காட்டாவிட்டால் கண்ணுற் காண முடியவில்லையே. அஃதேன்? மூன்று ஞானங்களுங் கூடி விளங்குகிற சகலத்தில் கண்ணுக்குச் சூரியனுதி அப்பூத வொளிகளின் சகாயமும் வேண்டுமா?

சங்:- பொருள்களைப் பதிபசு பாசஞானங்கள் தம்முட்கூடி நின்று விடயிக்க வேண்டு மென்பதில்லை. அவை ஞானங்களாகலின் தனித்தனி நின்று விடயிக்கும்.

நிரா:- ஞானம் ஒரு குணம். அதனையுடைய பசு குணி. எந்தக் குணமுந் தன்குணியின் எல்லையைத் தாண்டிச் சரியாது. பசு ஏகதேசப் பொருள். அதன் குணமாகிய ஞானமும் அதனளவிற்று னிருக்கும். விடயங்கள் பசுவுக்குப் புறம்பேயுள்ளன. அவற்றை அந்த ஞானம் போய்த் தொட்டு அறிவ தெப்படி? ஆதலால் பசு ஞானம் விடயங்களை யறிய மாட்டாது. கண் முதலிய பஞ்சேந்திரியங்களுக்குப் பிரத்தியேக ஞானமில்லை. ஆதலால் அவையும் விடயங்களை யறியமாட்டா அவற்றின் வேறல்லாத பாசத்துக்கும் ஞானமில்லை யென்பதை அதனுல் தெரி. பதி சர்வ ஞானமுள்ளது. ஆதலின் அது விடயங்களில் தோய்ந்து அதனை யறிய மாட்டாது. ஆகவே தனக்கே ஞான மில்லாத பாசம் பசுஞானத்தை விளக்குமென்பதும், தன்னளவில் அடங்கிய வியாபக ஞானத்தையுடைய அந்த ஞானங்கொண்டு தனக்குப் புறம்பான விடயங்களை யறியவும் நுகரவும் செய்யு மென்பதும், பூரண ஞானமுடைய பதி அந்த ஞானத்தால் அதற்கு முற்றிலும் மாறுபட்ட கிஞ்சிஞ்ஞத்துவத்துக்கே விளங்கக் கூடிய விடயங்களில் தோய்ந்து அவற்றைப் புதுவதாகச் சுட்டி யறியு மென்பதும் பொருந்தா.

2. சங்:- பசுவுக்குப் பாச காரியங்களாகிய இந்திரியாந்தக் கரண ஞானங்கள் நீங்கி நிற்பது கேவலாவத்தை. அதில் பசு ஞானத்துக்குப் பாச ஞானங்கள் உபகரியா. ஆகலின் பசுஞானம் அடங்கிக் கிடக்கும். தீக் கொழுந்து விட்டெரியாமல் அடங்கிக் கிடப்பதுமுண்டு. கேவலத்தில் பசுஞானம் அடங்கிக் கிடப்பதும் அப்படியே. அவ்வடங்கிய ஞானங்கொண்டு பசு விடயங்களை யறியவும் நுகரவுமாட்டாது.

நிரா:- சுடர்விட் டெரியாமல் அடங்கிக் கிடக்கிற தீப்போன்று கேவலாவத்தையில் பாசஞானத்தின் சகாயமில்லாமையால் அடங்கிக் கிடக்கிற பசுஞானம் விடயங்களை யறிந்தனுபவியா

தென்ருய், விடயங்க ளெல்லாம் பசுவுக்கு அன்னியம், அவை அதற்குப் புறம்பே யுள்ளன. ஆகலின் அது அவற்றை யறிய மாட்டாது. அது சரி. ஆனுல் அக்கேவலத்திலும் பதி பசுவில் அந்தராத்மாவாய்க் கலந்து நிற்கிறது. பசுஞானம் அப்பதியை யாவது அறிய வேண்டும். ஆனுல் அறியவில்லை. அவ்விழிவுக்குக் காரண மென்னை? என்றுந் தன்னை விட்டு விலகாமல் தன்னோ டியைந்துள்ள பதியை யறிதற்குக் கூடப் பாச ஞானத்தி னுபகாரத்தைப் பசு ஞானம் நாடவேண்டுமென்பாய் போலும்.

3 சங்:- முத்தான்மாக்களுக்குக் கேவல சகலங்களில்லை. முத்தான்மாக்கள் போக எஞ்சியுள்ளன பெத்தான்மாக்கள். அவை கேவல சகலங்களிற் சுழன்று கொண்டிருக்கும். அவற்றுக்கும் பதியின் பூரணப் பிரகாச ஞானம் முத்தியைக் கொடுத்து உபகரிக்க வேண்டும் எப்படி? ஒரு வகைப் புழு வுண்டு; வண்டு, அதை வந்தெடுக்கும், அது அவ்வண்டைத் தியானிக்கும். அத் தியானத்தால் அதுவும் வண்டாக மாறும். அப்படியே அப் பெத்தான்மாக்களுட் பக்குவமான வுயிரினிடம் சிவபிரான் ஆசாரியனுய் வந்து அதனையாட்கொள்வார். அது அவ் வாசாரி யனைத் தியானிக்கும்; அதனுல் தானும் ஒரு சிவனுய் விடும் அதுவே முத்தி. அந்நிலை சுத்தாவத்தை.

நிரா:- சிவன் பக்குவான்மாவைச் சுத்தமாகிய முத்தியிற் சேர்ப்பிப்பான்; அதற்குப் பூர்வ நிகழ்ச்சி அவன் ஆசாரியனுய் வந்து அவ்வான்மாவை யாட்கொள்ளுஞ் செயல்; அது புழுவைத் தானுக்க வேண்டுமென் றெடுத்த வண்டின் செயலை யொக்கு மென்ருய். அது பொருந்தாது. ஆசாரியன் அவ்வான்மாவை யாட்கொள்ள அதற்கு மந்திரோபதேசஞ் செய்கிருன். அது அவ்வுபதேசத்தைப் பெறுகிறது; அவ்வழி நின்று அவனைத் தியானிக்கிறது வண்டு புழுவுக்கு மந்திரோபதேசஞ் செய் கிறதா? புழு அவவழிநின்று அவ்வண்டைத் தியானிக்கிறதா? இல்லை.

சங்:- வண்டு புழுவை யெடுக்கிறது. அவ்வெடுப்பே உப தேசம். அதனுல் அப்புழு வண்டாய் விடும். வேறும் ஒருபதேசம் ஏன்?

நிரா:- வண்டு தாயெனச் சென்று புழுவை யெடுக்கிறது. அவ் வெடுப்பே உபதேச மாமா? அத் தாய்க்கே அக்கொள்கை யில்லை. அதனை உபதேசமென்று அத்தாயே சொல்லாது. நீ சொன்ருய். அது உன் பிரமை. புழுவின் சரீரம் வண்டின் சரீரமாக மாறுவது பிறவிபேதம். பெத்தான்மா முத்தான்மா ஆவதற்கு அச்சரீர

மாற்றம் உவமை யாகாது. அவ்வுவமையை யங்கீகரிப்பதா யிருந்தால் உன் முத்தி சாரூபமே. அது யோகப் பயன். ஞானப் பயன் வேறு. அது சாயுச்சியம்.

ச:ங்- அம்முத்தி சாயுச்சிய மாகாதாயின் காரணங் கூற வேண்டும். இல்லையேல் அது சாயுச்சியந்தான்.

நிரா:- ஆன்மா சிவத்தோடு அத்துவிதமாய்க் கலந்து நின்று பேரின்ப நுகர்வதே சாயுச்சியம். உன் முத்தியில் அக்கலப்புக் கிடையாது. ஏன்? புழு வண்டாயிற்று. அதற்குக் கிடைத்தது வண்டின் உருவம். அப்போதும் அது தன்னை வண்டாக்கிய வண்டுக்குப் புறம்பாக வுள்ளது. அப்படியே ஆசானால் ஆட் கொள்ளப்பட்ட வுயிருக்கும் அவனுருவமே கிடைக்கும். அது தான் சாரூபம். அதனைப் பெற்ற அவ்வுயிரும் அவனுக்குப் புறம்பாகவே யிருக்க முடியும். உருவத்தைப் பெற்று அத்து விதமாய்க் கலக்க முடியாது. உருவம் பெறுதல் அக்கலப்புக்குத் தடை. இனிப் புழுத் தான் புழுவாயிருந்த காலத்தில் புழுவு ணர்வோ டிருந்தது. அது வண்டாயிற்று. தன் முந்தியவுணர்வு அதற் கிருக்குமா? இராது. வண்டானதும் புழுப் பிரஞ்ஞை யற்றுப்போம். அவ்வண்டு வண்டுணர்வோடு கூடித் தன்னை யென்றும் வண்டெனவே கொண்டிடும். அப்படியே ஆசானு ருவத்தைப் பெறுகிறது பக்குவான்மா. அதற்கும் அறிவு மாறி விடும். சிவரூபம் பெற்ற அது தன் முந்திய ஆன்மவியலை அறவே மறந்து என்றுமே தானொரு சிவனா யிருந்து வருவதாகக் கொண்டி டும். ஆகவே கலப்புக் கிடையூறு, உணர்ச்சி மாறுபாடு என்கிற இரண்டு குறைகள் உன் முத்தியிலுள. அதனைச் சாயுச்சிய மென்பது குற்றம். சாரூபமாகிய பதமுத்தி யென்றல் சிறிது பொருந்தும்.

4. சங்:- முத்தான்மாவும் பஞ்சகிருத்தியஞ் செய்யும்.

நிரா:- முத்தான்மாவும் பஞ்சகிருத்தியஞ் செய்யுமென்றாய். அக்கொள்கை பாதகமென வேதஞ் சொல்கிறது.

சங்:- அது வேதத்துக்குப் பொருந்தாமலிருக்கலாம்; ஆனால் அனுபவத்துக்கும் யுக்திக்கும் பொருந்தும்.

நிரா:- அனுபவமும் யுக்தியும் வேதத்தை விரோதியா, உன் கொள்கை அவற்றிற்கும் ஏலாது. ஏலுமாயின் காட்டு,

சங்:- ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஒரு முத்தான்மா. முதலையுண்ட பிள்ளையை அவர்கள் வரவழைத்தார்கள்' அது சரித்திரப் பிரசித்தம்.

நிரா:- அச் சரித்திரப் பகுதி உனக்கு அனுகூலமான தன்று. அவர்கள் அப்பிள்ளையைச் சிருட்டிக்கவில்லை; சிவபிரானை நோக்கிப் 'பிள்ளை தரச்சொல்லு சூலனையே' யென வேண்டினார்கள். அவ வேண்டுகோளுக் கிணங்கி அதனைச் சிருட்டித்துக் கொடுத்தவர் சிவபிரானே.

சங்:- அப்படியானால் சரித்திரச் சான்றுகளை விட்டு விடலாம். இருப்பு தீயைச் சேர்கிறது. அதனால் அது பழுத்துத் தீயேயாய் விடுகிறகிறது. தீ செய்வது எரித்தற் றொழில். அவ்விரும்பும் அத்தொழிலைச் செய்ய வில்லையா? அப்படியே ஆன்மாச் சிவத்தைச் சேர்கிறது. அதனால் அது சுத்திபெற்றுச் சிவமாய் விடுகிறது. சிவ கிருத்தியமாவது பஞ்ச கிருத்தியம், அதனை அம்முத்தான் மாவும் செய்யும்

நிரா:- சரித்திரத்தை விட்டாய். யுக்தி வாதத்தி லிறங்கினாய். திருட்டாந்தமுங் காட்டினாய். அது இரும்பனல் திருட்டாந்தம். தீயை இரும்புசேர்கிறது. அப்படியே தீ நீரிலும் சேரும். அப்போது அந்நீர் வெந்நீராம் வைக்கோற் போரில் அவ்விரும்பை வீசினால் அப்போர் எரியும்; சாம்பராகும். வெந்நீரை யூற்றினால் அப்போர் எரியுமா? சாம்பராகுமா! சாம்பராக்க அவ்விரும்பு வல்லதாயின் அந்நீரும் வல்லதாதல் வேண்டும். இரண்டிலுமே தீ யிருக்கிறது. தீ தான் மாத்திரமாய் நின்றெரிவதில்லை. விறகோ, திரியோ, இரும்போ, பிறிதோ எதையேனும் பற்றிக்கொண்டு தான் அது எரிய வேண்டும். அப்படி எரிவது அதன் சுபாவம். ஆகவே வைக்கோற் போரைக் கொளுத்துவது தீ சேர்ந்த இரும் பன்று, இரும்பைச் சேர்ந்த தீயே. தீப்போல்வது சிவம். எரித் தற்றொழில் போல்வது பஞ்ச கிருத்தியம். தீயைச் சேர்ந்த இரும்பு போல்வது முத்தான்மா. பஞ்சகிருத்தியத்தை அம்முத்தான்மா செய்யாது, அவ்வான்மாவில் விளங்குகிற சிவமே செய்யும். உன் திருட்டாந்தமே அதைக்காட்டுகிறது. ஆகலின் அது உன் பிரதிஞ்ஞையை யாதரியா திருப்பதைக் காண்.

சங்:- ஒரு பேய் ஒரு மனிதனை ஆவேசிக்கிறது. அப்போது அவன் பலசெயல்களைச் செய்கிறான். அவற்றை அப்பேய் செய்கிற தென்னாமல் அம்மனிதன் செய்கிறா னென்பது உலக வழக்கு. அப்படியே முத்தான்மா செய்யுஞ் சிவ கிருத்தியங்களும் முத்தான்ம கிருத்தியங்கள்தான்.

நிரா:- சிவபிரானே தம் கிருத்தியங்களைப் பக்குவான்மாவில் அதிட்டித்தோ ஆவேசித்தோ நின்றுதான் செய்வார். முத்தான்

மாவும் அப்படித்தானே செய்ய முடியும்? அது எதனை யதிட்டிக்கும்? ஆவேசிக்கும்?

சங்:- முத்தான்மா செய்கிற பஞ்ச கிருத்தியத்தைச் சிவ கிருத்தியமெனப் பிரித்துக் காணமுடியாது.

நிரா:- பேய் பிடியுண்டானெருவன். அது பிடிப்பதற்கு முன் அவன் பல செயல்களைச் செய்கிறுன். அப்பிடி விடுகிறது. பிறகும் அவன் பல செயல்களைச் செய்கிறுன். அவ்விரண்டு காலத்துச் செயல்களும் அவன் சொந்தச் செயல்களே. ஆனுல் அப்பிடியுண்ட காலத்து அவனிடங் காணப்படுகிற செயல்கள் அப்பேயினுடை யவே யாம். அப்படி ஏன் ஆராய்ந்து காணமுடியாது? அப்படியே முத்தான்மாவிடங் காணப்படுகிற பஞ்ச கிருத்தியங்களும் அவன் பால் விளங்குகிற சிவகிருத்தியங்களே யாமெனத் தெரிந்து கொள்ள வேண்டும். வைக்கோலுந் தீயும் வெவ்வேறு பொருள்கள் எரிகிற சுபாவம் வைக்கோலுக் கில்லை; தீக்கே யுண்டு. ஆனுல் வைக்கோற் புரி எரிந்தது என்கிற உலக வழக்கு முண்டு. உண்மை யாவதென்னை? எரிந்தது வைக்கோற் புரியன்று. அதைச் சார்ந்திருக்கிற தீயே. முத்தான்மா பஞ்ச கிருத்தியஞ் செய்கிற தென்பதன் உண்மையும் அதுவே. பஞ்ச கிருத்தியம் சிவ சுபாவம் அதனை முத்தான்மா செய்யாது. அதில் விளங்குகிற சிவமே செய்யும் என்று காண். முத்தான்மா பஞ்ச கிருத்தியத்தை முத்தான்மாவிலிருந்து சிவகிருத்தியமே யெனப் பிரித்துக் காண்ப தற்குப் பேயாவேசித்தான் செய்கிறு னென்கிற உலகவழக்கைவிட வைக்கோற்புரி யெரிகிற தென்கிற உலக வழக்கே சரியான சகாய மாயிற்று. மேலும் பஞ்ச கிருத்தியம் அநாதி நித்தியம் அது வேதபடிதம். முத்தான்மாவோ ஆதிமுத்தன். அவன் இடை யிற்றுன் பஞ்ச கிருத்தியந் தொடங்குவான். தொடக்கமுள்ள வற்றிற்கெல்லாம் முடிவுண்டு. அவன் தொடங்கும் பஞ்ச கிருத்தியமும் என்ருவது முடியவே செய்யும். அவன் அதனை எவ்வளவு காலஞ் செய்து கொண்டிருப்பான்? அது முடி வெய்தியதும் அவன் வேறென்ன செய்வான்?

5. சங்:- முத்தான்மாவும் சர்வஞ்ஞத்துவம் உடையதாகும்.

நிரா:- கிஞ்சிஞ்ஞத்துவம், சர்வஞ்ஞத்துவம் என்பன தம்முள் மாறுன ஞானங்கள். சர்வஞ்ஞத்துவம் சிவகுணம். கிஞ்சிஞ் ஞத்துவம் உயிர்க்குணம். அக்கொள்கை உனக்குஞ் சம்மதம். எந்தக் குணமும் அதனையுடைய குணியிருக்கிறவரை அதனிடம் இருக்கவே செய்யும். உயிர் முத்தியை யெய்திச் சிவமான போதும்

ஒரு பொருளே. ஆகலின் அதன் குணமாகிய கிஞ்சிஞ்ஞத்துவம் அப்போதும் அதனிடம் இருந்தே தீரும். அது சர்வஞ்ஞத்துவமாக மாற மாட்டாது. மாறுமென்ருல் உன் மதமே குற்ற முடைய தாகும்

சங்:- என்ன சொன்னுய்? உயிர்கள் இவ்வுலகத் தொடர்பி லிருக்கின்றன அப்போது அவற்றிற்குத் திரிகால ஞானங் கிடையாது. அவை வினைக்கீடாகப் பைசாச புவனத்தை யடையும் அவையும் பிசாசுகளாகும். அப்போது அவற்றில் அந்தஞானம் விளங்கும். அப்படியே உயிர்கள் சிவனுல கெய்தும், சிவன்களாகும். ஆனதும் சிவனுக்குரிய சர்வஞ்ஞத்து வத்தைப் பெறும்.

நிரா:- பேய் ஒருவனைப் பிடிக்கிறது. அவன் பேசுகிருன். அவன் திரிகால ஞானியென்பது அப்பேச்சால் தெரிகிறது. ஆனுல் அப்பேய் ஒருமையை ஒரு குருடனைப் பிடிக்கலாம் அவ் வூமை குருடரிடம் அந்த ஞானம் விளங்குமா? விளங்காது. ஏன்? அவ ரூமைத் தன்மையுங் குருட்டுத் தன்மையும் குறுக்கிடும். இன்னும் நாழி போல்வது உயிர், நாழியின் சிற்றளவு போல்வது உயிரின் கிஞ்சிஞ்ஞத்துதம், சமுத்திரம் போல்வது சிவம். சமுத்திர சலம் போல்வது சிவ சர்வஞ்ஞத்துவம். நாழி சமுத்திரத்தில் ஆழ அமுங்குகிறது. சமுத்திர சலமனைத்தையும் அது முகந்திடுமா? அப்படியே உயிர் எவ்வளவுதான் சிவத்தில் அழுந்தட்டும். சிவ சர்வஞ்ஞத்துவத்தைத் தன்குணமாக அது பெறவே மாட்டாது. முத்தியிலும் உயிரின் சுபாவமாகிய கிஞ்சிஞ்ஞத்துவம் உயிரை விட்டுப் போகா தென்பது கருத்து. மேலும் சிவம் ஒன்றிலுந் தொடக்குண்ணுதது. அதன் சர்வஞ்ஞத்துவம் முத்தான்மாக் களுக்குக் கிடைக்குமெனவே கொள்க. அதனுல் அவற்றுக்கு வரும் இலாப மென்னே? ஒன்றுமில்லே.

6. சங்:- உயிர்கள் பரமுத்தியில் தனித்தனி சரீரத்துடன் கூடி ஒரு சமூகமாயிருக்கும் அவையெல்லாம் உயிர்களாகிய சிவன்கள். புதுவதாக அம்முத்திக்குப் போகுமான்மாவும் அப்படியே சரீரத்தைப் பெற்று அக்கூட்டத்திற் சேர்ந்து கொள்ளும்.

நிரா:- பரமுத்தியில் உயிர் சிவத்துடன் கலந்தால் அவ்விரண்டும் பொருளால் ஒன்ருய் விடும். அது தவறு. அம்முத்திக்குப் போகாமல் இவ்வுலகிலேயே சீவன்முத்தனுய்த் திரியு மான்மா சிவ சமமாகும். பரமுத்தியில் அது சிவத்தோடு கலந்து விடாமல் தானும் ஒரு சிவனுய் அப்படியுள்ள மற்ற உயிர்ச் சிவன்களது

கூட்டத்திற் சேர்ந்து கொள்ளும் என்றாய். உயிர்கள் சிவன்களாகிக் கூட்டமா யிருக்குமாயின் அம்முத்தி பரமுத்தியாகாது; சாலோக்கிய மென்கிற பதமுத்தியே யாம்.

சங்:- இல்லை. சாயுச்சிய மென்கிற பரமுத்திதான் அது.

நிரா:- ஆணவம் கன்மம் மாயை யென்கிற மும்மலங்களும் நீங்கினால் நீங்கப் பெற்ற உயிர் சிவத்தோடு அத்துவிதமாய்க் கலக்கும். அக்கலப்பு உயிருக்கியல்பு. அப்படிக் கலத்த லென்பது தான் சாயுச்சியம். நீ அதற்குமாறு பேசினாய். எப்படி? சாயுச்சியமே பரமுத்தி; அது பெற்ற ஆன்மாக்கள் அங்குத் தம் தனிமையிற் கெடா; அவை கூட்டமாக விருக்கும் என்பது. அஃதுண்மையானால் ஒவ்வொரு முத்தான்மாவுக்கும் தனித் தனி சரீரம் வேண்டும். சரீரங்களிற் புகாமல் உயிர்கள் தனித்தனியிருப்பதில்லை. ஆனால் சீவன்முத்தனுக்குச் சரீரமுண்டு. பரமுத்தனுக்கு அஃதில்லை. அவ்விருவகை முத்தருக்கும் வித்தியாசம் அதுதான். அறிஞர் அப்படித் தான் சொல்வர். நீயோ பிரபஞ்சத் தொடர்பை அறவே விட்டு அப்பதேற் போனவன் பரமுத்தனென்று சொல்லிக்கொண்டு அவன் அந்நிலையிலும் சரீரத்தோடு மாத்திரங் கூடியிருப்பானென்றாய். அதனைப் பரமுத்தி யென்பதெப்படி?

சங்:- பரமுத்தரின் சரீரங்கள் பிரகிருதி மாயா ச்சரீரங்களல்ல; சுத்தமாயா சரீரங்களே.

நிரா:- வேப்பமரம் போன்றது மாயை. அம்மரத்தின் அடிமரம் கிளை தளிர் முதலிய பிரிவுகள் போன்றனவே மாயையிலுள்ள யிரகிருதி மாயை, சுத்த மாயை யென்கிற பிரிவுகள். அம்மரத்தின் அடிதொடுத்து நுனிவரையுள்ள எல்லாப் பிரிவுகளுங் கசப்பன. அப்படியே மாயையின் எல்லாப் பிரிவுகளும் உயிருக்குப் பேரின்பத்தைத் தடை செய்வனவே. ஆகவே பரமுத்தியில் உயிர் சுத்தமாயா சரீரத்தைப் பெற்றிருந்தாலும் மயக்கத்தையே யடையும். அம்முத்தி பரமுத்தி யாகாது.

சங்:- பரமுத்தர்க்குச் சரீரம் வினையால் வருவதன்று. வினைப் பயனாய் வருஞ் சரீரமே மயக்கஞ் செய்யும். அவர்தம் இச்சையாற் சரீரத்தைப் பெறுகின்றனர். அஃதவரை மயக்காது.

நிரா:- எந்த மாயையிலிருந்து வந்த சரீரமானாலுஞ் சரி; அதை உயிர் இச்சையாற் பெற்றதெனக் கொண்டாலும் மும்மல பந்தம் அவ்வுயிரை விடவில்லை யென்பது நிச்சயம். ஆகவே உயிர்

சரீரத்தோடு கூடியிருக்கிற முத்தி மேலான சாயுச்சிய மென்கிற பரமுத்தி யன்று; அதனிற் கீழிட்ட பதமுத்திதா 'னென்று அறிஞர் கூறுவர்.

சங்கிராந்தவாதி சங்கற்பம்.

[1]நீங்கா தொளிருயிர்

விளக்கென நிற்கு மளப்புறு மறிவின்
றிறைவற் கேது மறியவேண் டின்றே
மன்னு மான்ம சந்நிதி யளவிற்
[2]காந்த பசாசத் தேய்ப்ப வாய்ந்த
வுயிருட லியக்குஞ் [3]செயலுறு பூட்டைப்

பல்வகை யுறுப்பு மிலகிய தொழில்போ
லைம்பொறி புலன்க ளின்புறு மன்றே
யினைய வாய்தலி னிகழ்தரு பயனவை
யந்தக் கரண முந்தி யுணர்ந்திடு
மிவையகல் வுழிஇயைம் பொறிபுல னிகழா

வுயிர்நீங் கிடிலுடல் செயலில தன்றே
யிவ்வகை வினையின் செவ்விதி னடத்தும்
பழமல நீங்கி நிகழுங் காலை
[4]யேற்றோர் முகவொளி தோற்றுங் கலனெனத்
தலைவன தருளுயிர் நிலவிடு [5]நிலவக்

காட்டத் தங்கி மாட்டத் தங்கிய
தன்மையு [6]மெளத்துப் புல்வைமி னீப்பும்
போன்றது வாகித் தோன்றிடு [7]மதனுற்
பசுகர ணங்கள் சிவகர ணங்க
ளாக மாறி [8]யறிவு

மேக மாமுயி ரியானென தின்றே.

1. நீங்காது -விடாமல்; ஒளிர்—பிரகாசிக்கிற; விளக்கு என—விளக்குப்போல; உயிர் — ஆன்மா (அறிவு மாத்திரையாய்ப் பிரகாசித்துக் கொண்டு); நிற்கும்—நிற்கும் (ஆகலின் அது கர்த்தா. விளக்குப் பிரகாசித்தாலும் தனக்கென வொன்றையுங் காணுது. அதுபோல அக்கர்த்தாவும் அறிவாய்ப் பிரகாசித்தாலும் தனக்கென வொன்றை); அளப்பு உறும் — அறிதற்றன்மை பொருந்திய; அறிவு இன்று—அறிவு (அதற்கு) இல்லை. (ஏனெனில்); இறைவற்கு—அக்கர்த்தாவுக்கு; ஏதும் — எந்தப் பொருளையும்; அறியவேண்டின்று — அறிய வேண்டிய அவசியமில்லை.

2. காந்த — காந்தத்தின் (சந்நிதி மாத்திரத்தில்); பசாசத்து ஏய்ப்ப — இரும்பின் தொழிற்பாடு போல; மன்னும் - நிலை பெற்ற; ஆன்ம சன்னிதி — ஆன்மாவின் சந்நிதி; அளவில் — மாத்திரத்தில்; வாய்ந்த உயிர் — தொழிற்படுகிற பிராண வாயு; (தான் தொழிற்படு முகத்தால்); உடல்—சரீரத்தையும்; இயக்கும்—தொழிற்படுத்தும்; (அப்போது)

3. செயல் உறு—அசைவு பொருந்திய; பூட்டை – நீர் இரைக்கிற எந்திரத்தின்; பல் வகை உறுப்பும்—எல்லா அவயவங்களிலும்; இலகிய தொழில் போல்—காணப்படுகிற அசைவு போல்; ஐம்பொறி—பஞ்சேந்திரியங்களும்; புலன்கள் — விடயங்களை; இன்பு உறும் — அனுபவிக்கும். (அங்ஙனம்); நிகழ் தரு — அனுபவிக்கப்படுப்படுகிற; பயனவை – விடயங்களை; இவைய—இவ்விந்திரியங்கள்; ஆய்தலின் முந்தி—கிரகிப்பதற்கு முன்; அந்தக்கரணம்—அகக்கரணங்கள்; உணர்ந்திடும்—கிரகிக்கும்; இவை — இவ் வகைக் கரணங்கள்; அகல் வுழி இ — நீங்கினுல்; ஐம்பொறி—பஞ்சேந்திரியங்கள்; புலன்—விடயங்களின்மேல்; நிகழா — செல்லா. உயிர் — பிராண வாயு; நீங்கிடில் — பிரிந்தால்; உடல் செயல் இலது — சரீரம் பிணமாகும். இவ் வகை—இவ்விதமாக (பிராணவாயு சரீரத்தை); வினையின் – கருமத்துக்குத் தக்கபடி; செவ்விதியின் - முறையாக: நடத்தும் —செலுத்தும்.

4. (கண்ணுடியை) ஏற்ருேர் — எடுத்துப் பார்த்தவரின்; முக ஒளி—முக பிம்பம்; கலன்—அக்கண்ணுடியில் (சங்கிரமித்து); தோற்றும் என — தெரியும் (அது) போல; பழ மலம் — ஆணவம்; நீங்கி நிகழுங்காலை — விலகி யிருக்கும்போது; தலைவனது அருள் — முதல்வன்றிருவருள்; உயிர் — ஆன்மாவில்; நிலவிடும் — (சங்கிரமித்துத்) தோன்றும்; நிலவ — தோன்றவே.

5. காட்டத்து – விறகில்; அங்கி மாட்ட — தீயைப் பற்ற வைத்தலால் (அத்தீ அவ்விறகில்); தங்கிய தன்மையும் — விளங்கிய தன்மையும்;

6. அளத்து — உப்பளத்தில்; புல் வை யின் — புல் வைக்கோல் களின் (இயல்பு உப்பாகி); நீப்பும் போன்று — கெட்ட தன்மையும் போல (ஆன்மா); அது ஆகி – சிவமேயாய்; தோன்றிடும்—விளங்கும்.

7. அதனுல்—அக்காரணத்தால்; பசுகரணங்கள் – பசுகரணங்கள்: சிவ கரணங்கள் ஆக — சிவ கரணங்களாய்; மாறி—திரிந்து.

8. அறிவும்—(அவற்றின்) ஞானமும்; ஏகம் ஆம் — சிவஞானம் ஆகும். உயிர்—ஆன்மா; (பொருட்டன்மையால் தனக்குள வாய); யான் — தனிமையும்; எனது — தன்னியல்பும் (அந் நிலையில்) இன்று — இல்லாதன வாகும் (என்று இப்படி யெல்லாம் தனது மத சங்கற்பத்தை அச்சங்கிராந்தவாத சமயி சிவனருள் எப்படிப்பட்டதென்று வினவிய அப்பக் குவிக்கு வகைப்படுத்தி விடையாகக் கூறினுன்).

வரி 3இல் ஏ. 7 இல் அன்றே, 11ல் அன்றே, 21இல் ஏ அசைகள்.

இச் சங்கற்பத்து முதலடியின் பிற்பாதி முன் நிரா கரணத்து இறுதியடியின் முதற்பாதியோடு சேர்ந்து 90 என வரி எண் ஏற்றது. அப்பிரிவு கருத்து நோக்கி உளதாயிற்று.

—❖—

சங்கிராந்தவாதி சங்கற்ப நிராகரணம்

இன்றுன துரையி னன்றி யுயி[1]ரொளிர்
தீபம் போலத் தாபந் தரினிருள்
செறியுந் தன்மையெ னறிவில தாகி
லொளியென வுரைத்த தெளிவதற் கேதாஞ்
[2]சன்னிதி யளவில் மன்னுஞ் செயலுடல்

காந்தம் போல வாய்ந்த தென்ற
தன்மையு முணராப் புன்மைய தன்றே
யுயிருட லியக்கிற் றுயில்பெறுங் காலைச்
செய்ததென் [3]மனுதி யெய்துயிர் பொறிபுல
னடத்த வாவியுஞ் சடத்தன வாயிற்

பூட்டையிற் பூணி கூட்டல் பெறாதே
புலனைம் பொறியி னிலவிடு மென்றனை
யஞ்சு மொருகாற் றுஞ்சா தறிதற்
கழிவென் றருச்செழு மலரி லைபலங்
கனிதரு வதுபோ லினையவை யைந்து

மொன்றொன் றாக நின்றறி வுறுமெனி
லொன்றின் பயனனி யொன்றறி யாதா
லிதுவே யல்லது கதுமென விருசெவி
யிருகூற் றொருகாற் றெரியாத் தன்மைவந்
தெய்து மனாதியு மெய்யுயிர்ச் செயலுந்

தனக்கில தொருவற் கெனத்தெளி கிலையே
[4]நோக்கு முகவொளி நீக்கா தானெனக்
கவருந் தன்மை முகுரம் போலக்
கொடுத்தது கோடற் கடுத்ததுண் டன்றே
[5]காட்டத் தங்கிக் கூட்டக் கூடு

மிந்தனத் தியற்கை வெந்தழ றுங்கா
[6]வுப்பளத் தடுத்த புற்பலா லங்கள்
சடத்த வேனுங் கொடுத்தது கொள்ளுந்
தன்மை யுண்டுனக் கின்மைய தன்றே
[7]யவமுறு கருவி சிவமய மாமெனக்

கூறினை யாகம் வேறுருக் கவரா
தென்பதெ னவைமுற் றுன்பந் துடைக்குந்
திருவருண் மருவ வுரியன வென்னி
லருளுரு மாயா விருளின தாங்கொல்
சத்த பரிச ரூப ரசநறை

யெத்திறத் தினதரு ளியம்புக வன்றியு
நிறைந்து நீயாய் நின்றனை யேனு
மறைந்தைம் புலனாய் வாரா வென்றுங்
கரண மெல்லாங் கடந்தனை யென்று
மரணமை யைந்தி னப்புறத் தென்று

முன்னருட் டலைவர் பன்னின ரென்வு
மினையவை யொழிய வறிகுவ தெவ்வா
யென்ற நிற்கலிக் கொன்றிய வின்பங்
கூறுத றகுமருட் பேறினை யன்றே
[8]யேக முயிரறி வாக மொழிந்தனை

யிருபொரு ளொருமை மருவிய திலதே
யிவ்வகை கிடக்க மெய்வகை கேண்மதி.

உனது உரையில் — உன் சங்கற்பத்தில்; நன்றி இன்று — தருக்கமுறை யில்லை (எதனுலெனின், எப்போதும்)

1 ஒளிர் — பிரகாசத்தைத் தருகிற; தீபம் போல — விளக்குப் போல; உயிர் — ஆன்மா; தாபம் — (அறிவாகிய) பிரகாசத்தை; தரின் — தந்து கொண்டிருக்குமானுல் (அவ்வான்மாவுக்கு); இருள் — அறியாமை; செறியுந்தன்மை — உண்டாதல்; என் — எப்படி? (அவ்வான்மா அறிவாய்ப் பிரகாசித்தாலும் எதனையும் அறியவேண்டிய அவசியமில்லை யாகையால்); அறிவு இலது ஆகில் — அறியாத தாயிருக்கின்ற தென்ருல் (அறிவாகிய); ஒளிஎன — பிரகாசமுடைய தென்று; உவரத்த — (நீ) சொன்ன; தெளிவு — (இலக்கண) விளக்கம்; அதற்கு — அவ்வான்மாவுக்கு; ஏது ஆம் — எப்படிப் பெருந்தும்?

2 (ஆன்மாவின்) சன்னிதி அளவில் — சன்னிதியில்; உடல் மன்னும் — சரீரத்திற் பொருந்திய; செயல் — தொழிற்பாடு: காந்தம் போல — காந்தத்திற் (பசாசம்) போல: வாய்ந்தது என்ற — உள்ளது என்ற; தன்மையும் — கொள்கையும்; உணரா — அறியாமையால் நேர்ந்த; புன்மையது — தவற்றையுடையதாகும்; (எப்படி யெனில் ஆன்மசன்னிதியில்); உயிர் — பிராணவாயு; உடல் — சரீரத்தை; இயக்கிய — தொழிற்படுத்துமானுல்; துயில் பெறுங் காலை — உறக்கத்தில்; என் செய்தது — என்ன செய்துகொண் டிருந்தது?

3 உயிர் — பிராண வாயுவே; மனுதி — மனமுதலிய அகக்கரணங்களை; எய்தி — பற்றி நின்று; பொறி — பஞ்சேந்திரியங்களை; புலன் — விடயங்களின்மேல்; நடத்தவும் — செலுத்தவும்; ஆவி — ஆன்மா; (அறிவா யிருந்தும் அறியாமலும் செய்யாமலும்); சடத்தன ஆயின — சடம் போ லிருக்கும் என்றால்; பூட்டையில் — நீர் இறைக்கின்ற எந்திரத்தில்: பூணி கூட்டல் — எருதுகளைப் பூட்டல்; பெருது — வேண்டாம். புலன் — விடயங்கள்; ஐம்பொறியில் — பஞ்சேந்திரியங்களிலேயே; நிலவிடும் என்றனை — தங்கி விடும் என்ருய்; அஞ்சும் — பஞ்சேந்திரியங்களும்; ஒருகால் — ஏக காலத்தில்; (விடயங்களை) துஞ்சாது — தவறாமல்; அறிதற்கு — அறிவதற்கு; அழிவு — இயலாமை; என் — எதனுல் (நேர்ந்தது?) தரு — மரம்; செழுமலர் — செழித்த பூவையும்; இலை பலம் கனி —

இலை காய் பழங்களையும் (வேறு வேறு காலங்களில்); தருவது போல் — வெளிப்படுத்துவது போல; இனையவை ஐந்தும் — இப்பஞ்சேந்திரியங்களும்; ஒன்று ஒன்று ஆக — தனித்தனி யாக (வேறுவேறு காலங்களில் விடயங்களைப் பற்றி) நின்று அறிவு உறும் எனில் — நின்று அறியும் என்றால்; ஒன்றின் — ஓ ரிந்திரியத்தின்; பயன் — விடத்தை; ஒன்று — (வேறு) ஓரிந்திரியம்; நனி அறியாது—செவ்வையாக அறியமாட்டாது; இது அல்லது — இஃதல்லாமல்; கதும் என—தீடீரென்று; இரு கூற்று—இரண்டு சொற்களை (காதுக்கு ஒன்றாக); இருசெவி —இரண்டு காதுகளாலும்; ஒரு கால்—ஏக காலத்தில் (கேட்டு) தெரியா — அறிந்து கொள்ள மாட்டாத; தன்மை — அசக்தி (அக்காதுகளுக்கு): வந்து எய்தும் — வந்து சேர்கிறது. (ஆகையால்) மனுதியும் — மனமுதலியவற்றின் செயல்களும்; மெய் உயிர் — சரீரம் பிராணவாயு (என்கிற இவற்றின்); செயலும் — செயல்களும்; தனக்கு — அவ்வவற்றுக்கு; இலது — (சொந்தமாய்) இல்லை; ஒருவற்கு — ஆன்மாவுக்கே; என — (உரியன) என்று; தெளிகிலை — அறியாமலிருக் கிறாய்.

4 நோக்கும்—பார்க்கிற; முக ஒளி — முகத்தின் பிம்பத்தை; நீக்கா — விடாமல்; தான் என — தன்னில் வேறாகதபடி; கவரும் தன்மை — கிரகிக்கிற குணமுடைய; முகுரம் போல — கண்ணாடி போல (முதல்வனால்): கொடுத்தது — கொடுக்கப்பட்ட அருளை; கோடற்கு — (தன்னிடம்) கிரகிப் பதற்கு (ஆன்மாத்தன்னை): அடுத்தது — பக்குவப்படுத்திக் கொண்டது; உண்டன்று — (ஒன்றும்) இல்லை.

5 (யாரேனும்) காட்டத்து அங்கி — விறகில் தீயை; கூட்ட — பற்றவைத்தாற்றான்; கூடும் —(அது) பற்றும். (அப்போதும்); இந்தனத்து இயற்கை — விறகின் தன்மை: வெம்தழல் — கொடுந்தீயை; தாங்கா — சகியாது.

6 உப்பளத்து—உப்பளத்தை: அடுத்த—சேர்ந்த; புல் பலாலங் கள் — புல்லும் வைக்கோலும்; சடத்த வேனும் — சடத் தன்மையுடையன. அப்படி யிருந்தும்; (தமது சொரூபத்தை அவ்வுப்பில்) கொடுத்து — இழந்து; அது—அதன் சொரூபத் தை; கொள்ளும் தன்மை—கொள்ளக் கூடிய ஆற்றல்; உண்டு —(அவற்றில்) இருக்கிறது, உனக்கு — ஆன்மாவுக்கு; அது இன்மை — அவ்வாற்றல் இல்லை.

7 அவம் உறு — இழிவு பொருந்திய: கருவி — பசு கரணங்கள்; சிவமயம் ஆம்—சிவகாரணங்களாகும்; எனக் கூறினை—என்று சொன்னாய். ஆகம்—பசுகரணங்கள்; வேறு—(தமக்கு) மாறான உரு — சிவத்தன்மையை; கவராது — ஏற்றுக்கொள்ளாது. என்பது—'நீ இப்படிச் சொல்வது; என்—எப்படிப் பொருந்தும் அவை — அப்பசு கரணங்களும்; முன்—அநாதியாய்; துன்பம் —(வருகிற பிறவித்) துயரை; துடைக்கும் — போக்கவே உதவுவன. (ஆகலின்); திரு அருள் மருவ—சிவமயம் ஆதற்கு; உரியன என்னில்—உரியனவே, என (நீ) கூறி மறுத்தல்; அருள் உரு—சிவ காரணங்களும் (அவ்வேதுவால்); மாயா இருளினது — அசத்து; ஆம்— ஆகவும் கூடும்.

சத்தம் பரிசம் ரூபம் ரச நறை — ஐம்புலன்களையும் (நுகருகிற இந்திரியங்களுக்கு); அருள் — திருவருள்; எத்திறத்தினது — எத்துணை மேம்பட்டது? இயம்புக — சொல். அன்றியும் — அல்லாமலும் (சிவபிரானை நோக்கிச் 'சுவாமீ! நீ அகிலமும்); நிறைந்து — வியாபித்து; நீ ஆய் — (அது) உன்மயமாய் (விளங்கும்படி); நின்றனை யேனும் — நின்றாயானாலும்; மறைந்து — (உன்னியல்பு) இல்லையாம் படி; ஐம் புலன் ஆய் — பஞ்சேந்திரியங்களாய்; வாராய் என்னும் — மாறமாட்டாய்' எனவும், கரணம் — '(மாயா) கருவிகள்; எல்லாம் — எல்லாவற்றையும்; கடந்தனை என்றும் — தாண்டினாய்' எனவும், ('உன்நிலை உயிர்களின்); அரணம் — கோடாகிய; ஐ ஐந்தின் — இருபத்தைந்து தத்துவங்களுக்கும்; அப்புறத்து என்றும் — அப்பாற்பட்டது' எனவும்;'முன்—முன் காலத்திலேயே; அருள்தலைவர்—திருவருள் பெற்ற பெரியோர்; பன்னினர்—சொன்னார்; எனவும்—என்று (யாம்) தெரிவித்தும்; இனையவை — இம்மாயா கருவிகள் (சிவகரணங்களாகி உபக்கிரியாமால்); ஒழிய — நீங்கினால்; அறிகுவது — (ஆன்மாசிவத்தைத்) தரிசிப்பது; எவ்வாறு — எப்படி; என்ற நிற்கு — என்று வினவுகிற உனக்கு (அப்பெரியோர் வாக்கை யெடுத்துக்காட்டினது); அலிக்கு - ஆண்தன்மை யில்லாதவனுக்கு; ஒன்றிய — (ஒருவன்) அனுபவித்த; இன்பம் — (காம) இன்பத்தை; கூறுதல் தகும் — எடுத்து உரைப்பதை ஒக்கும். (ஏனெனில் அவன் ஆண்மையின்மையைப் பெற்றிருப்பது போல் நீ); மருள் பேறினை — மயக்கத்தைப் பெற்றிருக்கிறாய். (திருவருளோடு)

8 ஏகம் உயிர் — ஒன்றான ஆன்மா (பொருளாலும்); அறிவு ஆக — சிவமேயாகு மென்று; மொழிந்தனை — சொன்னாய். இரு பொருள் (அநாதியே வேறு வேறு இயல்புகளை யுடைய);

— இரண்டு பொருள்கள் (இடையில் பொருளால்); ஒருமை மருவியது — ஒன்றே யாயின (என்பது); இலது — செல்லாது (என்று இப்படி யெல்லாம் அச்சங்கிராந்தவாதியின் சங்கற்பத்தை அவனுக்கருகிலிருந்த ஈசுர அவிகாரவாதி நிராகரணம் பண்ணினுன். பிறகு அவன் அப்பக்குவியை நோக்கி இந்நிராகரணம்); இவ்வகை கிடக்க — இவ்வளவில் நிற்க; மெய் வகை — (இனிஎனது) சங்கற்பத்தை; கேள் — கேள் (என்று தொடங்கி சிவனருள் "எப்படிப்பட்டது என்ற முன் வினுவுக்கு விடையாகத்தன் மத சங்கற்பத்தை கூறுகிறுன்)

வரி 7இல் அன்றே, 11இல் ஏ, 17இல்ஆல் 18இல் ஏ, 21இல் ஏ 29இல்அன்றே, 34இல் கொல், 44இல்அன்றே, 46இல் ஏ, 47இல் மதி அசைகள்.

வரி 9இல் 'எய்தி உயிர்' என்பது 'எய்துயிர்' என நின்றது.

வரி 10இல் 'நடத்த வாவியும்' என்பதை 'நடத்தவும் ஆவி, எனப் பிரித்துக் கூட்டுக.

௬௫௩

(பெத்த மறுப்பு)

1. **சங்:-** விளக்குப் பிரகாசிக்கிறது. அந்தப் பிரகாசத்துள் அகப்பட்ட பொருள்களும் பல. ஆனுல் அவற்றுள் எதனையும் அவ்விளக்குத் தனக்கெனக் காணுது. அப்படியே ஆன்மா அறிவுமாத்திரையா யிருக்கிறது. அந்த அறிவின் எல்லைக்குட்பட்ட பொருள்களும் பல. ஆனுல் அவற்றுள் எதனையும் அவ்வான்மாத் தனக்கென அறியுந்தன்மை யுடைத்தன்று.

நிரா:- ஆன்மா அறிவு மாத்திரையாய்ப் பிரகாசித்தாலும் பொருள்களை யறியாதென்பதற்கு நீ கூறிய விளக்குவமை யிருக்கட்டும். ஆன்மாவில் அவ்வறியாத் தன்மையு மிருக்கிற தென்ருய். அதற்குக் காரண மென்னே? விளக்குவமையால் அதனைத் தெரிந்துகொள்ள முடியவில்லே. நீயே கூறு.

சங்:- ஆன்மா அறிவுமாத்திரையா யிருப்பதுதான். ஆனுல் பொருள்களைத் தனக்னெ அறிய வேண்டிய அவசியம் அதற்கில்லே. ஆகையால் அவ்வறியாமைத் தன்மை யுளதாயிற்று.

நிரா:- அப்படியானால் ஆன்மா அறிவு யுடையதென்று நீ கூறுகிற அவ்விலக்கணம் பொய்யாகும். ஆகாதெனின் அவ் விலக்கணத்தை விளக்கு.

2. **சங்:-** காந்தம் இருந்தபடியே யிருக்கிறது. அதன் சன்னிதியில் இரும்பு தானே தொழிற்படுகிறது. அப்படியே ஆன்மா இருந்தபடியே யிருக்கிறது. அதன் சன்னிதியில் பிராண வாயு தானே தொழிற்பட்டுக்கொண்டு சரீரேந்திரியங்களையுந் தொழிற்படுத்துகிறது.

நிரா:- காந்தத்தின்முன் இரும்புபோல் ஆன்மசன்னிதி யில் பிராணவாயு தானே தொழிற்பட்டுக்கொண்டு உடலையும் பொறிகளையுந் தொழிற்படுத்து மென்றாய். உறக்கத்தில் உட லாதியன உன்னல் உரைத்தல் உண்ணல் முதலிய எத்தொழிலு மின்றிக் கிடக்கின்றன, அப்போதும் ஆன்மசன்னிதி யுண்டு. பிராணவாயுவும் இயங்கிக்கொண்டுதா னிருக்கிறது. ஆனால் உடல் முதலியவற்றை உன்னல் முதலியவற்றில் அவ்வாயு தொழிற்படுத்தவில்லை. அஃதேன்? உறக்கம் பிரஞ்ஞையற்ற பிரேதக் கிடை. அதுவுமா பிராணவாயுவின் தொழிற்பாடு?

சங்:- கிணற்றிலிருந்து நீரிறைப்பதற்கென ஒருவகை எந்திர முண்டு. அது பூட்டை யெனப்படும், உருளை வாளி கயிறு முதலியன அதன் புவவாய அவயவங்கள். அந்த எந்திரம் வேலை செய்கிறது. அப்போது அந்த அவயவங்களும் வேலை செய்யும். அப்படியே பிராணவாயு வேலை செய்கிறது. அப்போது முதலில் அந்தக்கரணங்களும் பிறகு அவற்றின் மூலம் பாஹியக்கரணங் களும் வேலை செய்யும்: அத்தக் காரணங்கள் வேலைசெய்யா விட்டால் பாஹியக் கரணங்களும் விடயங்களின் மேற் செல்லா. பிராணவாயு தொழிற்படாமல் விலகினால் சரீரம் பிணமாகும். கருமத்துக்குத் தக உடலைப் பிராணவாயு காரியப்படுத்துகிற விதம் இது.

நிரா:- பிராணவாயுவே அந்தக்கரணங்களைப் பற்றி நின்று பஞ்சேந்திரியங்களை விடயங்களிற் செலுத்தும்; ஆன்மாச் சடம் போல் அந்தப் பிரவிருத்தியிற் சிறிதும் பிரவேசியாமல் சன்னிதி மாத்திரமாய் நிற்கும் என்று கூறிப் பூட்டை உவமை காட்டினாய். பூட்டை பிராண வாயுவுக்கும், பூட்டையிலுள்ள அவயவங்கள் இந்திரியங்களுக்கும் உவமையாயின. அப் பூட்டையில் எருதுகளைக் கட்டிவிடுவானேன்? எருதுகள் சேதனம்.

அவை நகராமல் பூட்டையும் அதனுறுப்புக்களும் வேலை செய்யா. அப்படியே ஆன்மாவாகிய சேதனம் வேலை செய்யாமல் அசேதனங்களாகிய பிராணவாயு உடல் இந்திரியங்களும் வேலை செய்யா.

சங்:- விடயங்களைப் பஞ்சேந்திரியங்களே அறியும்; ஆன்மா அறியாது.

நிரா:- கண் காணுகிறது. அப்போது காது கேளாது. காது கேட்கிறது. அப்போது மூக்கு மோவாது. அப்படி ஓரிந்திரியம் தனக்குரிய விடயத்தைக் கிரகிக்கிற அதே கணத்தில் இன்னொரிந்திரியம் தனக்குரிய விடயத்தைக் கிரகிப்பதில்லை. அப்படி ஏக கால நிகழ்ச்சி அவ்விந்திரியங்களுக்கே கூடாதிருப்பதேன்?

சங்:- இலை பூ முதலியவற்றை மரம் வெவ்வேறு காலங்களில் வெளிப்படுத்துகிறது. அப்படியே ஒவ்வோரிந்திரியமும் தன் தன் விடயத்தை வெவ்வேறு காலங்களிற்றான் அறியும்.

நிரா:- கண் கேளாது. காது சுவையாது. மூக்குப் பரிசியாது. அப்படி ஓரிந்திரியம் மற்றோரிந்திரிய விடயத்தை யறிய மாட்டாது அக்குறைக்குக் காரணமென்னை? ஒருவகை விடயத்தை யறிதற்கு ஒருவகை யிந்திரியமே தகுதியுடைத்தென்கிற நியமம் அநாவசியம். காலம் வேறுபட்டாலும் எல்லாவிந்திரியங்களும் எல்லா விடயங்களையும் அந்த நியமமின்றியறிவதற்குத் தடையொன்றும் இருக்கக்கூடாதன்றோ? இனிக் காதுகளிரண்டு. அவை ஓரேயிந்திரியந்தான். இரண்டுபேர் ஏக காலத்தில் திடீரென இரண்டு சொற்களை உச்சரிக்கின்றனர், அவ்விரண்டு சொற்களையும் அவ்விரண்டு காதுகளும் தனித்தனி ஏககாலத்தில் கேட்கவல்லனவா? இல்லையே. அச்சொற்களைக் கேட்கவும் வெவ்வேறு காலங்கள் வேண்டும் மென்பதென்னை; பிராணவாயு முதலில் அந்தக் கரணங்களைப் பற்றிநின்று பிறகு புறக் கரணங்களை யியக்கு மென்றாய் புறக்கரண வியக்கத்துக்குக் காட்டப்பட்ட நிராகரணமே அகக்கரண வியக்கத்துக்கு மாம், அக்குறைபாடுகளனைத்துக்கும் காரணம் அவ்வகக்கரண புறக்கரணங்கள், சரீரம், பிராணவாயு என்பவற்றின் செயல்களெல்லாம் அவற்றுக்குச் சொந்தமல்ல என்பதே. ஆன்மாவே அக்கரணமாதிய வற்றினிடமாக நின்று அவற்றை யியக்குகிறதென்பதை யறி.

(முத்தி மறுப்பு)

4. **சங்:-** கண்ணாடி சுத்தமாக இருக்க வேண்டும். அதைப் பார்ப்பவனது முகம் அதில் விளங்கும். அப்படியே ஆன்மா சுத்தமா யிருக்கவேண்டும். ஆணவம் நீங்குதலே அது சுத்திப்படுதலாம். அப்போது முதல்வன் திருவருள் அவ்வான் மாவில் சங்கிரமித்து விளங்கும். சங்கிரமித்தல் — ஒன்றனைப் போய்ப் பற்றுதல். அதாவது சிவபிரானது குணங்கள் ஆன்மா வைப்போய்ப் பற்றுதல் என்பது.

நிரா:- எப்போதும் ஆன்மா சுத்தமுள்ளது, ஆணவ முதலியவற்றால் அசுசிப்படாதது என்பது உன்மதம். ஆகையால் முதல்வன் திருவருள் எப்போதுமே அதில் விளங்கிக் கொண்டுதா னிருக்கவேண்டும். அங்ஙனமாக, அவ்வருள் விளக்கத்தின் பொருட்டு ஆன்மாத் தன்னைப் புதுவதாகப் பக்குவப்படுத்திக் கோடற்கவசிய மென்னை?

5, **சங்:-** விறகில் தீயைப் பற்றவைத்தால் அத்தீ விளங்கி யெரிகிறது; அப்படியே முதல்வன் திருவருள் ஆன் மாவில் சங்கிரமித்தால் விளங்கிப் பிரகாசிக்கும்.

நிரா:- தீயை விறகிற் பற்ற வைக்கத் தீக்கும் விற குக்கும் வேறாய்த் திரித்தீயைக் கையிற் பிடித்திருக்கிற வொருவர் வேண்டும். அப்படியே அவ்வருளை ஆன்மாவில் தோற்றுதற்கு அவ்விரண்டற்கும் வேறாய் ஒருவர் வேண்டும். அவர் யார்? ஆசிரியன் வேண்டு மென்ற கொள்கை உன்மதத்தி லில்லை. அன்றியும் திரியிலுள்ள தீயை விறகில் பற்ற வைத்தாலும், திரித்தீ வேறு விறகிற் பற்றிய தீ வேறுதான், திரித்தீ விறகில் வந்து சங்கிரமிக்கவில்லை. அன்றியும் தீப் பற்றிய விறகு அழியும். அப்படியே திருவருள் பற்றிய ஆன்மாவும் அழியுமெனச் சொல்ல வரும், அழிவதாயின் அதனை விகார மற்ற தென்ப தெப்படி?

6. **சங்:-** உப்பளம் தன்பாற் போடப்பட்ட புல்லையும் வைக்கோலையும் உப்பாக மாற்றிவிடும். அப்படியே சிவனருள் தான் சங்கிரமித்துள்ள ஆன்மாவைச் சிவம் ஆக்கிவிடும்.

நிரா:- புல்லும் வைக்கோலும் சடங்கள். சடங்களே பரிணமிக்கும். ஆகலின் அவை உப்பாகப் பரிணமித்தல் கூடும். ஆனல் ஆன்மாச் சடமு மன்று, பரிணமிக்கவும் மாட்டாது என்று நீயுஞ் சொல்வாய், அது சிவமாதல் எப்படி?

7. **சங்:-** பசுகரணங்கள் சிவகரணங்களாக மாறும். பின்னர் அவைகொண்டு ஆன்மாச் சிவத்தை யறியும்

நிரா:- பசுகரணங்கள் சிவத்தன்மையைப் பெற்றே சிவகரணங்கள் ஆகவேண்டும். ஆனுல் பசுகரணங்கள் தமக்கு மாறுன சிவத்தன்மையை ஏலா. சிவத்தன்மையும் தன்குணியாகிய சிவத்தைவிட்டு விலகிப் பசுகரணங்களிற் சங்கிரமியாது. ஆகலின் பசுகரணங்கள் சிவகரணங்கள் ஆதலில்லை. ஆன்மாச் சிவத்தை யறியவுஞ் செய்யாது.

சங்-: சரீரேந்திரியங்களும் முதல்வன் திருவருளும் ஆன்மாக்களின் பிறவித்துன்பத்தைப் போக்கவே உளவாயின, அப்பயப்பாடுபற்றிப் பசுகரணங்கள் சிவகரணங்களாய் ஏன் மாறு?

நிரா:- பிறவித்துன்பத்தைப் போக்கும் ஏதுவால் சரீரேந்திரியங்கள் போன்றதே சிவத்தன்மை யென்றுய், சரீரேந் திரியங்கள் அசத்து, சிவத்தன்மையை மாத்திரம் சத்தென்றல் ஏன்? அதுவும் மாயாகாரியங்கள் போல் அசத்தாகலாம், அப் படித்தானு? உண்மையில், இந்திரிய வியாபாரங்களும் முதல்வன் திருவருளும் தம்முள் நெருங்கா. பெரியோர்களும் 'நிறைந்தெங்கு நீயேயாய் நின்றுலு மென்று, மறைந்தைம் புலன்காணவாராய்'. 'ஐயஞ்சினப்புறத்தான்' என்றருளினுர்கள். அவற்றையறிந் திருந்தும் சிவகரணமாய் மாறிய இந்திரிய வுபகாரத்தா லன்றி ஆன்மாச் சிவனைத் தரிசிப்ப தெப்படியெனச் சந்தேகித்தாய், உன்னைத் தெளிவித்தல் கஷ்டம். காமவின்பத்தை யெடுத்து எவ்வளவு விளக்கினுலும் ஆணல்லாதவன் அறிந்து கொள்ள மாட்டான். அவனும் நீயும் சரி. உன்மடமை அவ்வளவினது.

8. **சங்:-** ஆன்மாவும் சிவனும் பொருளால் ஒன்றே யாய்விடும். அதாவது அவ்விரண்டும் ஐக்கிய மாய்விடு மென்பது: அப்பால் உயிரென வொருபொரு ளிருத்தலில்லை. அதற்கென வோரியல்பு மில்லை.

சங்:- எது எதனிலிருந்து பரிணமித்ததோ அதற்கே அதனுபாதனத்தில் ஐக்கியமுண்டு. குடம் மண்ணில் ஐக்கிய மாகும். ஆனுல் ஆன்மாவும் சிவனும் அநாதியே வேறுவேறு பொருள்கள். அவை ஐக்கியமாய்விடு மென்றுய். அநாதியாக வெவ்வேறியல்புடைய இரண்டுபொருள்கள் ஒருபொருளாய்விடு மென்பதற்குத் திருட்டாந்த மில்லை. ஆகலின் அது முடியாத காரியம்

ஈசுர அவிகாரவாதி சங்கற்பம்

[1] பஃறுளைக் குடத்தி னுள்விளக் கேய்ப்ப
வறிவுள தாகு முருவுறு முயிர்கள்
[2]கண்ணா லோசையுங் கந்தமுங் கருத
வொண்ணா தென்னு முணர்வுடை மையினா
லவ்வப் புலன்கட் கவ்வப் பொறிகள்

செவ்விதி னிறுவிச் சேர்ந்தவை நுகரு
[3]மூல மலத்தின் பாகம்வந் துதவுழீஇ
யிருடரு மிற்புக் கொருபொருள் கவரத்
தீபம் வேண்டு மானவா போல
மோக மாமலம் போக ஞான

விளக்கர னருளாற் றுளக்கறப் பொருந்தி
[4]நீர்நிழ லனைய சீர்பெறு கடவுளைச்
சலமில னாகிச் சார்ந்தவர்க் கென்று
நலமிக நல்கு நாதனை யணைந்து
பூழி வெம்மை பொருந்தா துயர்ந்த

நீழல் வாழு நினைவினர் போலத்
திருவடி நீழல் சேர்ந்து
கருவுறு துயரங் களைந்திருந் திடுமே.

1. பல்துளை — பல துவாரங்கள் (உள்ள); குடத்தினுள் — குடத்துள் (இருக்கிற); விளக்கு ஏய்ப்ப — விளக்குப் போல (பல துவாரங்கள் உள்ள); உரு—சரீரங்களுள் உறும் உயிர்கள் — இருக்கிற உயிர்கள்; அறிவு உளதாகும் — அறிவு உடையனவாயிருக்கும்.

2. (அவை) கண்ணால் — கண்ணிந்திரியத்தால்; ஓசையும் — சத்தத்தையும்; கந்தமும்—நாற்றத்தையும்; கருத ஒண்ணாது என்னும் – அறிய முடியாது என்கிற; உணர்வு— (நியமமான) அறிவை; உடைமையினால் — உடையவா யிருத்தலால்; அவ்வப் புலன்கட்கு — அந்த அந்தப் புலன்களுக்கு (என); அவ்வப் பொறிகள்—அந்தஅந்த இந்திரியங்களை; செவ்விதின் நிறுவி — சரியாக நியமித்து; சேர்ந்து — (அவற்றைப்) பொருந்தி; அவைநுகரும் – அப்புலன்களை விடயிக்கும்.

3. மூலமலத்தின் பாகம் — ஆணவமலத்தின் பரிபாகம்; வந்து உதவு ழீஇ—வந்து சேர்ந்தபோது; இருள்தரும் — இருண்ட; இல் புக்கு — வீட்டில் புகுந்து; ஒரு பொருள் கவர — ஒரு பொருளை எடுத்ததற்கு;

தீபம் வேண்டும் ஆனவா போல —விளக்கின் உதவி வேண்டப்படுவது போல;

(உயிர்கள்) மோக மா மலம் — அவ்வாணவக் கொடு மலம்; போக — நீங்குதற்காக; ஞான விளக்கு — ஞான தீபத்தை; அரன் அருளால் — சிவ கிருபையால்; துளக்கு அறப் பொருந்தி -கேடின்றி ஏற்று;

4. நீர் நிழல் அனைய—குளிர்ந்த (மர) நிழலைப் போன்ற; சீர்— தன்மையை; பெறு கடவுளை — பெற்றுள்ள ஈசுரனை; சலம்— வேண்டுதல் வேண்டாமை; இலன் ஆகி — இல்லாதவனாகி (இருந்தும் தன்னை); சார்ந்தவர்க்கு — அடைத்தவருக்கு; என்றும்—எப்பொழுதும்; நலம் — சுகத்தை; மிக நல்கும் — பூரணமாகக் கொடுக்கிற; நாதனை — ஈசுரனை; அணைந்து— அடைந்து; (வெயிற்காலத்து) பூழி வெம்மை—புழுதியின் சூடு; பொருந்தாது—தாக்காமல்; உயர்ந்த நீழல் — சிறந்த (மர) நிழலில்; வாழும் நினைவினர் போல — தங்கும் விருப்பினர் போன்று;

(ஈசுரனுடைய) திருவடிநீழல் சேர்ந்து — சீபாத நிழலில் தங்கி (அதற்கு முன் வரை); கரு உறு — பிறவிகளால் அடைந்த; துயரம் களைந்து — துக்கத்தைப் போக்கி; இருந்திடும்—இன்பத்தில் வாழும் (என்று இப்படியெல்லாம் தனது மத சங்கற்பத்தை அந்த ஈசுர அவிகார வாத சமயி சிவனருள் எப்படிப்பட்டதென்று வினவிய அப்பக்குவிக்கு வகைப்படுத்தி விடையாகக் கூறினன்).

வரி 18இல் ஏ அசை.

ஈசுர அவிகாரவாதி சங்கற்ப நிராகரணம்

இருந்ததுன் கேள்வி [1]திருந்திடு முயிர்க
ளறிவெனில் வாயிற் பொறிபுல னென்னை
மற்றவை பற்றி யுற்றறிந் திடுதலி
னறிவென வழங்கு முயிரென வுரைத்தல்
5. காணுங் கண்ணினன் கைகொடு தடவிப்

பூணும் பொருளின் பெயர்பல புகற
லென்னுங் கிளவி தன்னொடு தகுமே
[2]யவ்வப் புலன்கட் கவ்வப் பொறிகளைச்
செவ்விதி னிறுவலி னறிவெனச் செப்பினை
யறிவி லாமைகண் டனமணை புலற்குப்

பொறிக ளேவலி னறிவோடு பொருந்தில்
கண்டதோர் பொறியாற் கொண்டிட வேண்டு
முதவிய தொன்ருற் கதுமென வியற்றின
ருண்டோ வென்னிற் கண்டன மேனுட்
கடவுளிற் கடிமலர் முடுகிய மதன

னங்க மனங்கந் தங்கிடக் கிடந்தது
வையின் றிரளிற் செய்ய சிறுபொறி
மாட்டி மூட்டின தன்றே மீட்டுந்
தேனமர் தவிசி ஞன்முக னுச்சி
யறுத்ததுங் கருவி பொறுத்தோ வன்றே

யீசன தியல்பு பேசுத றவிர்க
காழி மாநகர்க் கவுணியர் கடவுண்
ஞான மாகிய நற்பதி கங்க
ளெழுதுற மன்பர்த மின்புறு மொழியாற்
களிறென வணைந்த கண்மனப் புத்தன்

முருட்டுச் சிரமொன் றுருட்டின ரஃறி
வாய்ந்த வாளொன் றேந்தின ரிலரே
யென்றது மீர்வாள் கொன்றதென் பதுபோற்
றனித்துணை யருளாற் றுணித்தன ரென்ப
வாதலின் வாயி லளவினி லறுதலி

னேதமி லறிவுயிர்க் கெய்துத லிலதே
[3]யிருட்கு விளக்கொன் றேந்தினர் போல
மருட்கு ஞான மன்னுத லுளதே
யென்றனை கருவிக ளியாவு[1] மசேதனந்
துன்றிய வுயிருந் துரியத் தன்மைய

ளுதலி னந்த ரனைவருங் கூடித்
தீதற வருநெறி தெரியுமன் றற்றே
[4]நீர்நிழ லனைய சீர்பெறு கடவுளைச்
சேர்ந்தவர்க் கின்பம் வாயந்திடு மென்றனை
பாதவ மென்றுஞ் சேதன மின்மையி

ளிளேத்தோர் வம்மி னென்பதுந் துன்பம்
விளேத்தோர் தம்மில் வெறுப்புமொன் றிலதே
பொடித்திடு கொப்புள் வெடித்திடு பாதம்
வெய்ய பூழியி னுள்ளுற வழுங்கி

யாற்றுத லின்றி யாறியங் கினர்முன்
தோற்றிடு மென்று சொல்லவு மிலதா
லிவ் வகை கடவுட் கியம்புத றவறே
பாச ஞானப் பழிவழி யொழிக
வீசன தருள்வழி யியம்புவன் கேண்மதி.

(இப்படி) உன் கேள்வி — உன் (மத) சங்கற்பம்; இருந்தது—இருந்தது.

1. திருந்திடும்—சகலத்திலுள்ள; உயிர்கள் — உயிர்கள்; அறிவு எனில் — அறிவுடையன என்ருல்; (அவற்றிற்கு) வாயில் — வாயில்கள் (ஆகிய); பொறி — இந்திரியங்களின்; புலன் என்னே—அறிவு ஏன்? (குடத்து ளிருக்கிற விளக்கிஞெளி அக் குடத்துப் பல துவாரங்களின் வாயிலாய் வெளியில் வருகிறது. அப்படியே உயிர்களினறிவும்); அவை பற்றி — அவ்விந்திரியங் களிற் கூடி; உற்று — (விடயங்களேப்) பொருந்தி; அறிந்திடு தலின் — அறிதலான்; உயிர் அறிவு என — உயிர்கள் அறிவு டையன என்று; வழங்கும் என — சொல்லப்படுமென; உரைத்தல் — (நீ) சொல்வது; காணும் — பார்க்கிற; கண்ணினன்—கண்ணுடையா ஞெருவன்; கைகொடு தடவி— கையினுல் தடவி; பூணும்—அகப்படுகிற; பல பொருளின் — பல பொருள்களின்; பெயர் புகறல் — பெயர்களேச் சொல்லுதல்; என்னும் கிளவிதன்ஞெடு — என்கிற வழக்கோடு; தகும் — பொருந்தும்.

2. அவ்வப் புலன்கட்கு — அந்தந்தப் புலன்களே யறிதற்கு அவ்வப் பொறிகளே—அந்தந்த இந்திரியங்களே; செவ்விதின்— தக்கவாறு; நிறுவலின் — நியமித்தலான் (உயிர்களே நீ); அறிவு என — அறிவுடையன என்று; செப்பினே— சொன்னுய். (அந்தக் காரணத்தாலேயே உயிர்கள்); அறிவு— அறிவுடையன; இலாமை—அல்ல வென்பதை; கண்டனம் — (நாம்) தெரிந்தோம். (எப்படி?) அணே — அறிய வேண்டிய; புலற்கு — (அந்தந்தப்) புலன்களுக்கு (தக்கபடி அந்தந்த); பொறிகள் — இந்திரியங்களே; ஏவலின் — நிறுவிக்கொள்ளு தலினுலே; அறிவொடு — (உயிர்கள்) அறிவுடன்; பொருந்

தில்—கூடின என்ருல். (அவை இன்ன புலனை யறிதற்கு இன்ன இந்திரியந்தான் வேண்டு மென்ற நியமத்தை அவசியம் நேர்ந்தபோது விட்டுத் தாற்காலிகமா யாவது); கண்டது — அகப்பட்டதாகிய; ஓர் — ஒரு (புலனுக்குரிய); பொறியால் — இந்திரியத்தால் (இன்னொரு பொறிக்குரிய புலனை); கொண்டிடவேண்டும் — அறியவும் வேண்டும். (அஃதில்லை அப்படி இன்ன காரியத்துக்கு இன்ன கருவிதான் வேண்டுமென்ற நியமத்தைக் கடந்து); உதலியது—கிடைத்த ஒன்ருல்—(ஏதேனும்) ஒரு கருவியால் (அதனோடு தொடர் பல்லாத ஒரு காரியத்தை); ஈதும்என — திடீரென; இயற்றினர்—செய்தவர்; உண்டோ — உளரோ? என்னில் — என்று நீ வினவில் (ஆம். உளர். அவரை நாம்) கண்டனம்—தெரிந்துள்ளோம். மேல் நாள் — முன்னொரு காலத்தில்; கடவுளில்—சிவபெருமானிடத்தில்; கடி — வாசனை (பொருந்திய); மலர் — புஷ்பங்கள் (ஆகிய பாணங்களை); முடுகிய — செலுத்திய; மதனன் அங்கம்—மன்மதனது சரீரம்; அநங்கம் தங்கிட — சாம்பராகி; கிடந்தது—கிடந்தது (அச்சரீரத்தை); வையின் திரளில் — வைக்கோற் குவியலில் (இட்டு); செய்ய சிறு—சிவந்த சிறிய; பொறி— தீப்) பொறியால்; மாட்டி — பற்றவைத்து; மூட்டினது அன்று — எரித்ததனுல் இல்லை. மீட்டும்—இன்னும்; தேன் அமர்— தேன் தங்கிய; தவிசின்—(தாமரை ஆசனத்தில் (இருக்கிற): நால்முகன் உச்சி — பிரமனது சிரசை; அறுத்தும்—(அக்கடவுள்) துண்டித்ததும்; கருவி — (கத்தி முதலிய) கருவிகளை; பொறுத்ததோ — தாங்கியதனுலோ (நிகழ்ந்தது?); அன்று—இல்லை. ('அவை யெல்லாம்); ஈசனது இயல்பு — சிவபிரானது ஆற்றல்: (ஆகையாய் திருட்டாந்தங்க ளாகா. அவற்றை இங்கு எடுத்து); பேசுதல் தவிர்க்க — பேசாதே. (மக்கட் செயல் களிலிருந்து திருட்டாந்தாங் காட்டு' என்று சொல்வா யானுல்; காட்டு'); களிறு என — யானை போல; அணைந்த — எதிர்த்த; கல் மனப் புத்தன்—கல் நெஞ்சப் புத்தனின்; முருட்டுச்சிரம் ஒன்று—வலிய ஒரு தலையை; காழிமாநகர்க் கவுணியர் — திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் (அருளிச் செய்த); கடவுள் ஞானம்—சிவஞானம்; ஆகிய—பிரகாசிக்கிற; நல் பதிகங்கள் — திருப்பதிகங்களை (அவவப்போது சுவடி களில்); எழுதுறும்—எழுதிக் கொண்டு சென்ற; அன்பர் — சம்பந்த சரணுலயர்; தம் இன்பு உறு — தமது இனிமை பொருந்திய; மொழியால் — வாக்கால்; உருட்டினர் — உருண்டு விழச் செய்தனரே; அன்றி — அல்லாமல் (அதற்காக)

வாய்ந்த - உதவக்கூடிய; வாள் ஒன்று—ஒரு வாளை; ஏந்தினர் இலர் - (கையிற்) பிடித்தா ரிலர்; என்றதும் — (அப்படி) இருந்தும் (அத்தலை); ஈர் வாள் — அரிவாள் கொண்டு; கொன்றது — வெட்டப்பட்டது; என்பது போல் — எனச் சொல்லக்கூடிய விதத்தில் (அவர் திருத்தேவாரத்தாற் பதப்பட்ட); தனித்துணை — ஒரே கருவியாகிய; அருளால் — (தம் வாக்கு) வலிமையால்; துணித்தனர் — (அதனை) வெட்டி யுருட்டினர்: என்ப — என்று சொல்லுவார் (பெரியோர்)

ஆதலின்—ஆகையால் (உயிர்கள் அந்த அந்த); வாயில் அளவினில்— இந்திரியத்தின் எல்லையில் (இருந்து கொண்டே அதற்கு அதற்கு உரிய புலனை); அறிதலின்—அறிந்து வருத லினாலே; ஏதம் இல் அறிவு—களங்க மற்ற அறிவு; உயிர்க்கு—உயிர்களுக்கு; எய்துதல் இலது — இருக்க முடியாது (என்க.)

3 இருட்டு — இருளை நீக்கிக்கொள்வதற்கு; விளக்கு ஒன்று — ஒரு விளக்கை; எந்தினர் போல — தாங்கிச் செல்வர் மாந்தர்; அவர்போல் (உயிரும் பாகமுற்ற); மருட்டு — ஆணவத்தை நீக்கிக் கொள்வதற்கு; ஞானம் — ஞானத்தை (கர்த்தாவின் கிருபையால்); மன்னுதல் உள்து என்றனை — பொருந்துகிறது என்றாய். கருவிகள் யாவும் .— கரணங் களெல்லாம்; அசேதனம் — சடங்கள். துன்றிய உயிரும் — (அவற்றைச்) சேர்ந்த உயிரும்; துரியத் தன்மையன் — அறியாத் தன்மையது. ஆதலின் — ஆகையால் (அவ்வுயிர் அக்கருவிகளுடன் கூடுவதால் ஞானத்தைப் பெறுமென்றல்); அந்தர் அனைவரும் — குருடர்பலரும்; கூடி — (தம்முள்) கூடுவதால்; தீது அற — கஷ்டம்நீங்கும்படி; வரும் நெறி — செல்வதற் கேற்ற வழி (தமக்கு); தெரியும் அற்று — தெரியும் (என்று அவர் சொல்வது) போலும்.

4 நீர் நிழல் அனைய — குளிர்ந்த (மர) நிழலைப் போன்ற, சீர் பெறு கடவுளை — தன்மையையுடைய ஈசுரனை; சேர்ந்த வர்க்கு; இன்பம் — இன்பம்; வாய்த்திடும் என்றனை — கிடைக்கும் என்றாய். பாதவம் — மரம்; என்றும் — எப் பொழுதும்; சேதனம் இன்மையின் — அறிவுள்ளது அன்றாக லின் (பிரயாணிகளைப் பார்த்து, வெயிலின் கொடுமையால்); இளைத்தோர் — வதங்கியவர்களே! (இளைப்பாற என்னிடம்) வம்மின் — வாருங்கள்' என்பதும் — என (இரங்கி); துன் பம் — (வெட்டுவதாகிய) துன்பத்தை; விளைத்தோர் தம் மில் — (தனக்குச்) செய்தவரிடம் ('நீர் போம்' என இரக்க மின்றிக் கூறி); வெறுப்பும் — வெறுப்பு(க் காட்டுவது)ம்;

(ஆகியவற்றுள்); ஒன்று இலது — எதனையுஞ் செய்யாது. (அன்றியும் வெயிலில் நடத்தலால்); பொடித்திடு — குருக் கிற; கொப்புள் — கொப்பளங்கள்; வெடித்திடு பாதம் — விரிந்த அடிகள்; வெய்ய பூமியினுள் — சூடுள்ள புழுதியில்: உற அமுங்கி — பட்டு வருந்தி; ஆற்றுதல் இன்றி — சகிக்க மாட்டாமல்; ஆறு இயங்கினர் முன் — வழி நடப்பார்க்கு முன்பு (நிழல்தர வேண்டு மென்ற கருணையோடு மரம்); தோற்றிடும் என்று — சென்று உதவு மென்று; சொல்லவும் இலது — சொல்லவு முடியாது. (ஆகையால்); இவ்வகை — இக்குளிர்ந்த நிழலை; கடவுட்கு — ஈசுரனுக்கு (திருட்டாந்தங் கூறி அவிகார வாதம்); இயம்புதல் தவறு — பேசுதல் குற்றம். பாச ஞானப் பழி — (இனிப்) பாச ஞானக் குற்றமான; வழி — உன் சங்கற்பத்தை; ஒழிக — விடு

(என்று இப்படியெல்லாம் அவ் வீசுர அவிகாரவாதியின் சங் கற்பத்தை அவனுக் கருகி லிருந்த நிமித்தகாரண பரிணும வாதி நிராகரணம் பண்ணினுன். பிறகு அவன் அப்பக் குவியை நோக்கி, 'உனக்கு); ஈசனது அருள் — பதிஞான மாகிய; வழி — (எனது) சங்கற்பத்தை; இயம்புவன் — (நான்) சொல்வேன். கேள்—(நீ) கேள்; (என்று தொடங்கி முத்தி யென்பதெவனே என்ற முன் வினுவுக்கு விடையாகத் தன் மாத சங்கற்பத்தைக் கூறுகிறுன்).

வரி 3இல் மற்று, 7இல் ஏ, 18இல் ஏ, 20இல் ஏ, 27இல் ஏ, 31இல் ஏ, 33இல் ஏ, 37இல் அன்று, ஏ, 2இல் ஏ, 46இல் ஆல், 47இல் ஏ, 49இல் மதி அசைகள்.

வரி 46இல் தோன்றிடும் என்பது 'தோற்றிடும்' என நின்றது.

கூருந்நூ

(பெத்த மறுப்பு)

1\. **சங்:-** பல துவாரங்களை யுடையது குடம். அதனுள் விளக்கு வைக்கப்பட்டிருக்கிறது, அப்படியே பலதுவாரங்களை யுடையது சரீரம். அதனுள் உயிர் வைக்கப்பட்டிருக்கிறது. விளக்குப் பிரகாசத்தை யுடையது. அப்படியே உயிரும் அறிவை யுடையது. பிரகாசம் போல்வது அறிவு.

நிரா:- உயிர் அறிவுடையது என்ருய். அது தானே அறியலாம். ஆனல் இந்திரியங்களின் சகாயத்தைக் கொண்டே அஃதறிகிறது. அஃதறிவுடையதாயின் அச்சகாய மேன்? ஆகை யால் அதற்குத் தன்னளவில் அறிவில்லையென்பதே உண்மை.

சங்:- குடத்துளிருக்கிற விளக்கின் பிரகாசம் அத் துவாரங்களின் வழியாய் வெளியில் வருகிறது. அப்படியே உயி ரின் அறிவும் இந்திரிய துவாரங்களின் வழியாய் வெளியிற் சென்று விடயங்களைப் பொருந்தி அறிகிறது. அது இந்திரியங்கள் அறிவதுபோல் தோன்றுகிறது. ஆகவே உயிர் தன்னளவில் அறி வுடையதே.

நிரா:- கண்ணுடையவன் கண்ணுற் காணக் கூடிய பொருள்களைக் கையால் தடவிப்பார்த்துத்தான் அவை இன்ன பொருள்களெனச் சொல்ல வேண்டுமா? கண்ணிருக்கிறபோது கையால் தடவுவானேன்? அப்படியே உயிர் அறிவுடையதா யிருக்கிறபோது இந்திரியங்களின் துணையை நாடவேண்டாம்; விடயங்களை நேரே யறியலாம். அஃதில்லை. ஆகலின் உயிர் தன் னளவில் அறிவில்லாததே.

2. **சங்** - உயிர் அறிவுடைய தன்ருயின் உருவை மூக் காலும், ஓசையை மெய்யாலும் அப்படியே மற்றவற்றிலும் ஒரு பொறியின் புலனை இன்னெரு புலனின் பொறியாலும் அறிய முனைந்து அறிய மாட்டாமல் இடர்ப்படும். அஃதில்லை. அவ்வுயிர் புலன்களுக் கேற்றவாறு பொறிகளை நியமித்துக் கொண்டு அந்தந்தப் பொறியின் வாயிலாகவே அந்தந்தப் புலனை யறிந்து வருகிறது. அதனுலும் அஃதறிவுடையதென்பது வெளி.

நிரா:- உயிர் அந்தந்தப் புலனை யறிதற்கு அந்தந்த இந்திரியத்தை நியமித்திருக்கிறது, அதனுலேயே அறிவுடையது என்ருய். அதனுலேயே உயிர் அறிவுடைய தன்று என்பது எமது தீர்மானம். எப்படி? சாவதான காலங்களில் அந்த நியமம் இருப்பது சரி. ஆனல் அதனை மீறவேண்டிய நிர்ப்பந்த நேரங் களும் வரக்கூடும். கண்ணிற் படலம் படர்கிறது. பார்வை மடங்குகிறது. அந்நோய் தீர்கிறவரையாவது உயிர் அந்நிய மத்தைச் சிறிது ஒதுக்கிவைத்தா லென்னை? அது மற்றையிந்திரி யங்களில் ஏதாவ தொன்றைக்கொண்டு கட்புலனை (உருவத்தை) விடயித்துவரலாம், காது நோயாற் கேள்வி மடங்கியபோது அந் நோய் தீரும்வரை மற்றைப் பொறிகளில் ஏதாவ தொன்றைக்

கொண்டு செவிப்புலனை (ஓசையை) விடயித்துவரலாம். அப்படி யானுற்றுன் உயிர் அறிவுடையதென்று சொல்லத்தகும். கண் ணோய்க் காலத்திற் பார்வை கெட்டது. காதுநோய்க் காலத்திற் கேள்வி கெட்டது: அதனுல் உயிர் வருந்தாம விராது; அஃ தொரு நஷ்டம். அந்நியமத்தை மீறினுல் அந்நஷ்டத்திற் கிட மேது? ஆனுல் மீறுந் திறனின்றி யிருக்கிறது உயிர். அதற்குத் தன்னளவில் அறிவு கிடையா தென்பதை அத்திற னின்மை யாலுந் தெரி.

சங்:- கருமத்துக் கேற்ற கருவி யென்கிற நியமம் கூடாது; எந்தக் கருமத்தையும் எந்தக் கருவிகொண்டும் செய்யுந் திறன்வேண்டும். அத்திறனுடைமையே அறிவுடைமைக் கடை யாளம் என்றீர். அப்படிச் செய்தவர் யார்? உதாரணங் கூற உம்மால் முடியாது. ஆகையால் எந்தக் கருமத்தையும் அதற் குரிய கருவிகொண்டு செய்வதுதான் அறிவுக்கு இலக்கணம். உயிர் அந்நியமத்தில் வழுவவில்லை. அவ்வப் பொறி கொண்டே அவ்வப் புலனை அஃதறிந்துவருகிறது. ஆகையால் அஃ தறிவுடை யதே.

நிரா:- ஒரு சரீரத்தைச் சாம்ப ராக்க வேண்டும். வைக்கோல் விறகு தீக்குச்சி முதலியன அதற்கு அவசியம். அவை கருவிகள். ஈசுரன் மன்மதனுடைய சரீரத்தைச் சாம்பராக்கினுர். அக்கருவிகளுள் எது உபயோக மாயிற்று? இன்னும் ஒரு தலை யைக் கொய்யக் கத்தி வேண்டும். கத்தியே அதற்கேற்ற கருவி அக்கடவுள் பிரமனது சிரசைக் கொய்தார். அதிற் கத்தி உபயோக மாயிற்ரு? அக்கருமங்களை முடித்தற்கு அவருடைய கண்ணுங்கையுமே கருவிக ளாயின. அவ்வவயவங்கள் அக்கருமங் களுக்கென நியமமான கருவிகளா? அல்ல. எம் தீர்மானத்துக்கு ஈசுரனே உதாரணமாகிருர். ஆகையால் அறிவுக்குக் கருமஞ் செய்தற்கண் கருவி நியமம் வேண்டாம். அதை யறி. உயிருக்கு அந்நியமம் உண்டு. அதனுல் உயிர் அறிவுடையதன் றென்பது நிச்சயம்.

சங்:- அச்செயல்கள் ஈசுர னுடையன. அவன் முழுமுதற் கடவுள். அவ்வுதாரணம் சரியன்று. மனிதருள் கருவிநியமமின்றிக் கருமஞ் செய்தாரை உதாகரித்தல் வேண்டும் அப்போதுதான் உம் தீர்மானம் நிலைக்கும்.

நிரா:- சம்பந்த சரணுலய ரென்பார் ஒரு மனிதர். திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகளின் தேவார பதிகங்களைப்

பாடிப்பாடி அவர் வாக்கு வன்மைபெற் றிருந்தது. அவரைப் புத்த நந்தி யென்பவன் எதிர்த்தான். அவ்வாக்கால் அச்சுவாமி களின் தேவார பதிகம் பாடப்பட்டது. அவன்தலை அறுந்து விழுந்தது. சரணாலயர் கத்தியை ஏந்த வில்லை. அப்படியிருந்தும் கத்திகொண்டு வெட்டப்பட்டதுபோல் வெட்டியுருட்டப்பட்டது அத்தலை. அவர்தம் வாக்கையே கத்தியாக உபயோகித்தார். வாக்கு அக்கருமத்துக்கு நியமமான கருவி யன்று. நீ கேட்டபடி மனிதரொருவர் இதோ உதாரணமாகத் தரப்பட்டார். அறி விற்குக் கருமஞ் செய்தற்கண் கருவீநியமம் மிகையே. அதனை இப்போதாவது தெரி. ஆகையால் ஒருபொறியைக்கொண்டு அதற்குரிய புலனை மாத்திரம் அறிந்துவருகிற நியமத்தினால் உயிர் தன்னளவில் அறிவுடைதன் றென்பதே சித்தம்.

(முத்தி மறுப்பு)

3. **சங்:-** உயிருக்கு ஆணவம் நீங்கவேண்டும். அம்மலத் துக்கு அப்பருவம் வரும். இருண்ட வீட்டில் இருள் நீங்கு வதற்கு உதவுகிறது விளக்கு. அப்படியே அம்மலம் நீங்குவதற்கு உதவுவது ஞானம். உயிர் அப்பருவத்தில் அந்த ஞானத்தைப் பெறும். கொடுப்பவன் ஈசுரன். தீபம் போல்வது ஞானம்.

நிரா:- கருவிகரணங்க ளெல்லாம் அறிவற்றன. உயிர் அறிவுடைய தென்றாய். உன் வாதத்தால் அதுவும் அறி வற்ற தென்றே சித்தித்தது. அம்மூட வுயிரும், அச்சட தத்துவங் களும் தம்முட் கூடின, அவ்வுயிர் ஆணவத்தை நீக்கிக்கொள் வதற்காக ஞானத்தைப் பெறும், அதனை ஈசுரன் கொடுப்பான் என்றாய். அதனைக் கொடுக்கிற கருணாசாலிதான் அவன். சந்தேக மில்லை. ஆனால் அதனைப் பெறுவதும் ஒரு சாமர்த்திய மன்றோ? அச்சாமர்த்தியம் தத்துவங்களுக்குண்டா? இல்லை. ஏன்? அவை சடம். உயிருக்காவது உண்டா? இல்லை. அதுவும் அவைபோல் அறிவற்றதே. அவையும் அதுவுங் கூடியபோதிலும் ஞானத்தைப் பெறமுடியாது. குருடனுக்கு வழிதெரியாது. அவ் விஷயத்தை நீயும் அறிவாய். ஆனால் இருவர் மூவர்முதற் பல குருடர் தம்மிற் கூடுகின்றனர். அப்போதாவது அவர்களுக்கு வழி தெரிந்திடுமா? தெரிந்திடாதே. ஆனால் அப்போது தெரிந் திடுமென்று சொல்வதுபோ லிருக்கிறது அறிவில்லாத உயிரும் அறிவில்லாத தத்துவங்களும் தம்முட் கூடினால் அப்போது உயிர் ஞானத்தைப் பெறு மென்று நீ சொல்வது.

சங்:- வெயிலில் நடந்து இளைத்தா ரொருவர். அவர் அவ்விளைப்பைப் போக்கிக் கொள்ளவேணடும். குளிர்ந்த நிழலை யடைந்து அதில் தங்குகிறார் அவர். அவ்விளைப்பு நீங்குகிறது. அந்நிழல் போன்றவன் ஈசுரன். பிறப்பு இறப்பு என்னுஞ் சுழற்சியிற் பட்டு இளைத்தது உயிர். அதற்கு அவ்விளைப்பு நீங்க வேண்டும். அது ஞானக்கண்ணைப் பெற்று அவ்வீசுரனுடைய சீபாத நிழலில் தானே சென்று தங்கி அவ்விளைப்பைப் போக்கிக் கொண்டிருக்கும்.

நிரா:- குளிர்நிழல் போன்றவன் ஈசுவரன் என்றாய். அந்நிழல் சடம். நிழலில் ஒதுங்கவருவார் மரத்துக்கு அன்பு காட்ட வேண்டு மென்கிற அவசிய மில்லை. அன்பிலார்க்கும் அந்நிழல் கிடைக்கும். இளைத்து ஒதுங்க வருபவரை நோக்கி 'என் நிழலில் வந்து இளைப்பாறுக' என மரம் இரங்கி யழைப்பது மில்லை. இன்னும் அதனை வெட்டி வீழ்த்த அதனிடம் வருவாருமுளர். அவரைத் துரத்தவும் அதற்குஅறிவில்லை. ஆனால் ஈசுரன் தன்பால் அன்பு செய்பவருக்கே தன் சீபாத நீழலைக் கொடுப்பான். ஆகலின் அந்நிழலுக் காசைப்பட்டார் அக்கடவுளுக்கு அன்பு செய்தே யாக வேண்டும். மரத்தை வெட்டித்தள்ள முனைபவரிடம் மரம் கோபப்படுவதில்லை. ஆனால் ஈசுர நிந்தை செய்வாரை ஈசுரன் தண்டிப்பா ரென்பது உறுதி. அப்படிப்பட்ட கடவுளை மரத்துக்குச் சமமெனப் பேசலாமா? மேலும் இளைத்தவர்பாற் கருணைவைத்து அவரிருக்கு மிடம் நோக்கி மரத்தாற் போக முடியாது. மரம் இருந்தவிடத்திலேயே யிருக்கும். ஈசுரன் அப்படி யல்லர், தன்அன்பர் இருக்குமிடஞ் செல்வன், அவருக்குத் தன் திருவடி நீழலைக் கொடுப்பன். அப்படிச் சென்று உபகரிக்கிற அவன் அதுபற்றி விகாரி யாகான். அவனை இருந்தவிடத்திலிருந்து பெயர மாட்டாத மரத்துக்குச் சமமெனப் பேசற்க. இருந்த விடத்திலிருந்து பெயர மாட்டாத மரம் அப்பெயராமைபற்றி அவிகாரியாயிடாது. இப்படியே விவகரித்து மறுக்கப்படும்.

நிமித்த காரண பரிணாமவதி சங்கற்பம்.

[1]புவன மியாவையும் புனிதன துருவாஞ்
[4]சிவமுஞ் சத்தியு மெனத்தெளி [2]யவற்று
ளசேதன மென்றான் றறைதற் கிலதது
சேதன னுகர்பொழு திரண்டுமோர் திறத்தே
5. யிதுவெனு மொன்றை யதுவாய்ப் படுத்துப்

பொதுமையி னிற்கும் போதமென் றறிக
[3]பொற்பணிப் பேதம் புரைவழி யொருவழி
நற்பொனிற் றிகழ்வெ ன நயப்பதொன் றன்ரு
[5]லாவது மாகா தொழிவது மெனுமிப்
பாவக முண்மை பாரா தோர்க்கே

பாரா தோரெனப் பல்லுயிர் பகர்தலி
ஞராய்ந் துரைக்கி னவைபிற வல்ல
பலபல பேத மிலவென் போருமில்
[6]கண்ணின தொளியைக் கண்ணின தெனிலது
திண்ணிய விருளிற் செறிபொரு டெரித்தலு

மின்மை மின்மினி யெனவிரு கண்மணித்
தன்மை தானுந் தாவில ததனுற்
கண்ணின துருவு மதிற்கதி ரொளியு
நண்ணருஞ் சத்தி சத்தர்க ணடிப்பே
[7]யுலகே ழெனத்திசை பத்தென வொருவன்

பலவாய் நின்ற படியிது வென்று
மூனு யுயிரா யுணர்வா யென்று
மானக் கண்ணே மணியே யென்றுந்
தாமே தானுச் செய்தன ரென்று
நாமே சிவமாய் நண்ணின மென்றுங்

காயாய்ப் பழமாய்ச் சுவையாய் நுகர்வு
மோயா துண்போன் ருனே யென்று
மறிவோன் ருனு மறிவிப் போனு
மறிவா யறிகின் றேனு மறிவுறு
மெய்ப்பொரு டானும் வியந்திது வெனப்படு

மப்பொரு ளியாவு மவனே யென்றுந்
தாய்தலைப் பட்டங் கொன்ருய்த் தென்று
மேதம தறநான் கெட்டே னென்று
மின்னு மின்னு மிறையோ னளித்தவை
பன்னி லெண்ணரும் பாண்மைத் [8]தாதலிற்

றருபொருள் கொள்பொரு டருவோன் கொள்வோ
னெரு பொரு ளிருவிப லுவப்பென வுணர்க
[9]நுகர்பொருள் சத்தி நுகர்வோன் சத்தெனன்
றிகலறு முணர்வுவந் தெய்துத லரிதே
[10]நானவ னெனுமிது நவைவழி நல்வழி

தானவ னுகை யிதுசா யுச்சிய
[11]மித்திறன் றெளிய வுய்த்திடு மளவு
மியாதொரு வகையி னீதிய தாகத்
தானறி வழியே தலைநின் றென்று
மூனுயிர் சிவத்தி லொடுங்கிட நடத்தி

[12]மூடு முழுமலம் வீடுங் காலைக்
கருவிக ளளவிற் புரிதரு மறிவு
சாக்கிரங் கனவு நீக்கமில் சுழுனை
துரிய மென்றவை பயிறரு மறிவு
துரியா தீதந் திரியாத் தன்மையி

[13]லிறையரு ளுதவுங் கறையற மாறி
யறிவே யாகும் [14]பிறியாக் கருவிக
ணிறைமுத லவத்தையி லறிவில தாகத்
துரியா தீதத் தோற்றந்
திரியா ததுநற் சிவகதித் திறனே.

——

1. புவனம் யாவையும் — எல்லாப் பிரபஞ்சமும் புனிதனது — சிவபிரானின்; உருஆம்—வடிவம் ஆகும்.

4. (அப்பிரபஞ்சத்தின் அருவப் பகுதி ; சிவமும் — சிவபிரானும் (உருவப் பகுதி அவருடைய); சத்தியும் — சத்தியும் ஆகும்; என தெளி—என்று (நீ) அறி.

2. அவற்றுள்—அப்பகுதிகளுள்; ஒன்று—எதனையும்; அசேதனம் என்று—சடம் என்று; அறைதற்கு இலது — சொல்வதற்கு (இடம்) இல்லை. (ஏனெனில்); சேதனன் — அறிகிறவன்: நுகர்பொழுது — அறிகிறபோது (அறிவும் விடயமும் ஆகிய); அது இரண்டும் — அவ்விரண்டும் (அறிவு என்கிற ; ஓர் திறத்து—ஒரு தன்மையவாய் (இருக்கும் எப்படியெனில்); போதம்—அறிவு; இது எனும் — (தான்) சுட்டி யறிகிற; ஒன்றை—விடயத்தை; அது ஆய் — தன் மயம் ஆகும்படி; படுத்து—செய்து (அதனில்); பொதுமையில் — பிரிப்பின்றி; நிற்கும்—இருக்கும்; என்று அறிக—என்று நீ தெரி.

3. (அறிவுக்கும் அறியப்படுகிற பிரபஞ்சத்துக்கும் உள்ள பேதம்) பொன்—பொன்னுக்கும்; பணி — (அதனாலாய) நகைக்கும்; பேதம்—(உள்ள) பேதத்தை; ஒரு வழி — ஒரு வகையில்; புரை வழி— ஒத்திருப்பது. (ஆனால்); நல்பொனின் — நல்ல

பொன்னினது; திகழ்வு என—மாற்று (நகையிலும் ஆம் என்பது) போல (சேதனத்தின் தன்மை அதன் காரியமாகிய பிரபஞ்சத்திலும் இருக்குமாயினும்); நயப்பது ஒன்று — விரும்பத்தக்க விதத்தில்; அன்று – (வெளிப்படத் தோன்றுவது) இல்லை.

5. (நிற்க,); ஆவதும்—விதியும்; ஆகாது ஒழிவதும் — விலக்கும்; எனும்—(உள) என்கிற பேதமாகிய); இப்பாவகம்—இந்தப் புத்தி; உண்மை — மெய்ஞ்ஞானத்தை; பாராதோர்க்கே — அடையாதவர்க்குத்தான் (உண்டு). பாராதோர் என— அடையாதவர் என்று; பல் உயிர் — பல வுயிர்கள்; பகர் தலின்—சொல்லப்படுவதால் (உயிர்கள் பலவோ என்பதை'; ஆராய்ந்து – யோசித்து; உரைக்கின் சொல்வதா யிருந்தால்; அவை — (பலவாயினும்) அவ்வுயிர்களும் (சிவனுக்குப் பொருளால்); பிற அல்ல — வேருவன அல்ல; (என்பது தெரியும். சிவன் ஆன்மா பிரபஞ்சம் எனப் பொருள் வகையில்); பல பல பேதம் இல — பல பேதங்கள் இல்லை. (பல பல பேதம் —பல பேதங்கள் என் போரும்; இல் —(உள) என்கிற (பிறமத) வாதியரும் இலர்.

6. (உயிரறிவுக்குத் திருட்டாந்தமாகிய); கண்ணினது ஒளியை— கண்ணொளியை; கண்ணினது எனில் — கண்ணினுடையதே யென்றால்; அது—அவ்வொளி; திண்ணிய இருளில் — திணிந்த இருளில்; செறிபொருள் — இருக்கிற பொருளை (தான் காணுததோடு பிறர்க்கு); தெரித்தலும் இன்மை காட்டுவது மில்லை. (ஏனெனில் இருளைச் சிறிதாயினும் கடக்கிற); மின்மினி—மின்மினிப் பூச்சியின் ஒளி; என — போலாவது; இருகண்மணி—இரண்டு கண்களின்; தன்மையும் — ஒளியும்; தாவுஇலது — (இருளைக்) கடக்க மாட்டாது. அதனல் — அக்காரணத்தால்; கண்ணினது உருவும்—கண்ணிந்திரியமும்; அதில்—அதில் (படுகிற ; கதிர்ஒளியும் — சூரியனது ஒளியும் (வாச்கு மனங்களால்); நண்அரும் — எட்டுதற் கரிய (முறையே); சத்தி சத்தர்கள் — சத்தி சிவங்களின்; நடிப்பே—நாடகமே.

7. (அதற்குப் பிரமாணங்கள் திருவாசகத்தில்)

உலகு ஏழ் எனத்திசை பத்து என ஒருவன் பல ஆய் நின்ற படி இது என்றும்	‘உலகே ழெனத்திசை —பத்தென வொருவனுமே பலவாகி நின்ற வா’ என்றும்:

(தேவாரத்தில்)

ஊன் ஆய் உயிர் ஆய் உணர்வு ஆய் என்றும்	ஊனுகி யுயிராகி யதனு ணின்ற வுணர்வாகி—நின்ருய்' என்றும்,
மான—பெருமை தங்கிய	
கண்ணே மணியே என்றும்	'கண்ணே கண்ணிற் கருமணியே' என்றும்,
தாமே தான் ஆய்ச் செய்தனர் என்றும்	'தாமே தானுகச் செயு மவன்' என்றும்,

(திருவாசகத்தில்)

நாமே சிவம் ஆய் நண்ணினம் என்றும்	'நா மொழிந்து சிவமான வா' என்றும்,

(தேவாரத்தில்)

காய் ஆய்ப் பழம் ஆய்ச் சுவைஆய் நுகர்வும் ஓயாது உண்போன் தானே என்றும்	'காயாகிப் பழமாகிப் பழத்தினின்ற விரதங்கணுகர் வானுந் தானே யாகி' என்றும்

(அம்மை திருவாக்கில்)

அறிவோன் தானும் அறிவிப் போனும் அறிவுஆய் அறிகின் ரேனும் அறிவு உறு மெய்ப் பொருள்தானும் வியந்து ஈது எனப்படும் அப்பொருள் யா வும் அவனே என்றும்	'அறிவானுந் தானே யறிவிப்பான் ருனே யறிவா யறிகின்ருன் ருனே—யறிகின்ற,மெய்ப் பொருளுந்தானே விரிசுடர் பா ராகாய மப்பொருளுந் தானே யவன்' என்றும்,

(திருவிசைப்பாவில்)

தாய் தலைப்பட்டு அங்கு ஒன் று ஆய்த்து என்றும்	'தாய்தலைப் பட்டங் குருகி யொன்ருய்' என்றும்,

(திருவாசகத்தில்)

ஏதமது அற—குற்றம் அறும்படி; நான் கெட்டேன் என்றும்—'நான் கெட்ட' என்றும்; இன்னும் இன்னும்—(இப்படி)

மேலும் மேலும்; இறையோன்—சிவபிரான்; அளித்தவை—அருளிய சுருதிகளை; பன்னில் — எடுத்துக் காட்டுவதானால்; எண் அரும் பான்மைத்து—(அவை) அளவி லடங்கா.

8. ஆதலின் — ஆகையால்; தருபொருள் — கொடுக்கப்படுகிற பொருள்; தருவோன் — கொடுக்கிறவன்; கொள்வோன்—கொள்கிறவன்; ஒரு பொருள் — (ஆகிய எல்லாம்) சிவமே. இருஇயல் — (அதனுடைய இப்) பேதங்கள்; உவப்பு — (அதற்கொரு) மகிழ்ச்சி; என உணர்க—என்று (நீ) அறி.

9 (அங்ஙனம்) நுகர்—அனுபவிக்கப்படுகிற; பொருள்—(சத்தாதி) விடயங்கள்; சத்தி—சத்தி (அவற்றை); நுகர்வோன்—அனுபவிக்கிறவுயிர்; சத்தன் என்ற—சிவன் என்கிற; இகல் அறும் — குற்றமற்ற; உணர்வு வந்து எய்துதல் — அறிவு சித்தித்தல்; அரிது—மிகவுங் கஷ்டம்.

10. நான்—உயிர் (வேறு), அவன்—சிவன் (வேறு); எனும் இது—என்கிற இத் துவித பாவனை; நவை வழி—குற்றவழி (ஆகும்). நல்வழி—நல்ல வழியோ; தான் — உயிர் (இல்லை யாகி); அவன் ஆகை—சிவன் ஆதல் (என்கிற அத்துவித பாவனையே; இது—இப்பாவனையே; சாயுச்சியம்—சாயுச்சியம்.

11 இத்திறன் — இப்பாவனை; தெளிய — நிலைக்கும்படி (உயிர் தன்னை); உய்த்திடும் அளவும் — செலுத்திகிற வரையில்; யாதொரு வகையில் — எவ்வகையாலாவது; நீதியது ஆக—நீதியோடுகூடி (அம்முத்திக்குச் சாதனமான தென); தான் அறி வழி—தான் கருதியதொரு மார்க்கத்தில்; தலைநின்று—ஒழுகி; என்றும் — எப்போதும்; ஊன் உயிர் — உடம்பையும் தன்னையும்; சிவத்தில் — சிவனது வசத்தில்; ஒடுங்கிட — கிடக்கும்படி நடத்தி—செலுத்தி (வரவேண்டும்).

12. மூடும் — மறைத்திருக்கிற; முழுமலம் — ஆணவம்; வீடுங் காலை — நீங்குகிற போது; (அறிவைத் தருகிற) கருவிகள் — இந்திரியாதிகள் (ஏறியும் குறைந்தும் உயிருடன் சேர்கிற); அளவில்—அளவில் (உயிருக்கு); புரிதரும் அறிவு — உண்டாக்குகிற அறிவு, நீக்கம்—இல்—நீங்குதல் இல்லாத; சாக்கிரம்—சாக்கிரம்; கனவு—சொப்பனம்; சுழுனை—சுழுத்தி; துரியம்—துரியம்; என்றவை—என்கிற நாலு அவத்தைகளிலும்; பயில் தரும் — சஞ்சரிக்கிற; அறிவு — (ஏகதேச) அறிவே. (அவ்விந்திரியாதிகள்): துரியாதீத்ம் — துரியாதீதம் (என்கிற

கேவலாவத்தையில் உரு); திரியாத் தன்மையில் — மாருத விதத்தில் (இருப்பதால் அவற்றை உயிருக்கு)

13. இறை அருள்—சிவசத்தி; உதவும் — கொடுக்கும். (அதனுல் உயிர்க்குச் சகலாவத்தையில்) கறை—ஆணவம்; அறமாறி—முழுக்க நீங்கி (கருவிகளுடன் கூடிய); அறிவு ஆகும் — அறிவு வரும்.

14. பிறியா—விலகாத; கருவிகள் — (முப்பத்தாறு) கருவிகளும்; நிறை—நிரம்பிய; முதல் அவத்தையில் — சாக்கிரத்தில்; அறிவு — (அக்கருவிகளின்) அறிவு; இலது ஆக — நீங்கின விடத்து உண்டாகிற (சுத்தாவத்தை யாகிய); துரியாதீதத் தோற்றம்—துரியாதீத தரிசனம்; திரியாது — (எப்போதும்) மங்காது, அது — அந்த விளக்கமே; நல்சிவகதித்திறன் — முடிவான முத்தி.

(என்று இப்படி யெல்லாம் தனது மத சங்கற்பத்தை அந் நிமித்தகாரண பரிணுமவாத சமயி சிவனருள் எப்படிப்பட்டதென்று வினவிய அப்பக்குவிக்கு வகைப்படுத்தி விடையாகக் கூறினுன்).

வரி 4இல் ஏ, 8இல் ஆல், 17ல் தான், 39இல் ஏ, 44ல் ஏ, 52இல் ஏ, 55இல் ஏ அசைகள்.

வரி 38, 39இல் என்ற இகல் என்பது 'என்றிகல்' என நின்றது.

நிமித்தகாரண பரிணுமவாதி சங்கற்ப நிராகரணம்

திறம்பெற நீயிங் கறைந்தமை கருதிற்
[1]புவன மியாவையும் புனிதன துருவெனி
லவன்முதற் காரண மன்ரு மென்னி
னிமித்த காரண நிகழ்த்துக வென்னீ
யவனே காரண மனைத்துமென் றைறந்தனை

மண்டனிக் குலாலன் றண்டசக் கராதி
காரண மூன்று மோர்பே ரணைந்த
தித்தா ரணிதனிற் கண்டது சாற்றுக
வத்த னியற்று மித்தொழில் பிறர்க்கோ
தனக்கோ வீஞே வெனக்கீ தியம்புக

வீணெனிற் பித்தர் மாண்பறுந் தொழில்போற்
றலைமையு மறிவு மிலதென விகழ்வர்
தனக்கெனி லஃதுமு னிற்பதொன் றன்றே
ஈன்போ லறிஞருந் தலைவரு மிலரான
மின்போ னிலைமையை வேண்டலும் பழுதே

பிறர்க்கெனிற் பிறரும் பிறர்க்காம் பொருளும்
பொருட்கமை கருவியு மதற்குபா தானமுஞ்
செய்கையு மென்றூ ரைவகைத் தாளெடு
மாருச் சைவர் கூரு ரென்ரு
னிச்சித் தாந்த மவசித் தாந்த

மென்சித் தான்ற வசித்தைமற் றீரு
[2]தசித்தில தென்னி லசித்ததென் னுலகி
லுலகா யதனும் பூதக் கூட்டஞ்
சலமேற் கொப்புட் டகுமெனச் சாற்றினன்
றீய கருமச் சீனர்சா வகர்பிறர்

ஞேய மில்லென நிகழ்த்தின ரிலரே
காண்டல் விரோத நிற்பிறர் கணித்தில
ரீண்டுன துரைக்குமற் றியார்கரி யுடலுஞ்
சித்தோ சித்தின் சேர்வாற் சித்தெனிற்
கடப டாதியு முடற்கட் சிதைவென்

ருபர வுயிர்போற் றனுவொழிந் திவற்றின்
மேவிய வுணர்வு விரவிடு மென்னிற்
சடத்துயிர் போலெனச் சாற்றினை யாகலி
னுடற்குயி ரிறையை யொழிந்துண் டன்றே
தருதிட் டாந்தமுந் தாட்டாந் திகமு

மொருபொரு ளாகி லுவமை பெருதே
யொன்றே யாகி லுடற்கிறை தாபரத்
தொன்றிய நிலையில் விசேடமென் னுரைக்க
பூதச் சேர்வைப் பேதமென் றறையிற்
சேர்வைப் பேத மென்கொடு செப்புக

கருமத் தளவில் வருமெனிற் பித்த
ருரையிற் றிகழு முணர்வொழிந் தனையே
கருமஞ் செய்வோன் கடவுளன் றுடலு
மருவிநின் றிருவினை வளரா நுகரா
கடவுளு முடலின் கண்பட றுஞ்ச

லிடர்நல முறுத லிறங்குத லேறுத
லெவ்வகை யேனுஞ் செய்கையின் ருதலும்
பலகலை யுலகி னிலவுத லானு
மெண்ணரும் பொருளு மிரவியு மொழியக்
கண்ணென வொன்று காண்கையி னுலும்

மாசப் பகுதியு மீசனு மொழியப்
பசுவு முண்டென் றிசையவேண் டின்றே
யிதுவெனு மொன்றை யதுவாய்ப் படுத்துப்
பொதுமையி னிற்கு மாயையின் பொற்பென
[3]பொற்பணி யாவும் பொன்னுந் தன்மையி

னிட்கள சகளத் திருவுரு நிலையு
மீச னேயெனப் பேசுவ ரன்றி
[4]யருவுரு வாகி வருமுல கென்னி
லனைத்து மாயை யெனத்தெளி கிலையே
[5]யாவது மாகா தொழிவது மிலதெனும்

பாவக முலகா யதனது பான்மை
கட்கொலை வெகுளி காமங் களவுக
ளுட்படு மிவைவிட மொழியா தாரிலர்
சோம பானஞ் சுராபா னங்க
ளாமென மறைக ளார்செவிப் பறைந்தன

மறையோன் புலைச்சியை மருவு மென்பது
முறையோ வெனிலது புனைமொழி யென்னிற்
சாதி பேத நீதிநீ தவறினு
மேதியை யேறு விழையா விரும்புங்
[6]கண்ணின துருவு மதிற்கதி ரொளியு

நண்ணருஞ் சத்தி நாடக மெனிலதற்
கேதுவும் பயனு மோத வேண்டு
நின்மொழி விரோதமு நீடுல கியற்கையுந்
தன்மசாத் திரமுஞ் சகலமு மென்செயு
[7]முலகே ழெனவிறை பலவாந் தன்மை

கடமொடு சார்வங் கலச மாதிக
ளடலுறு குயவ ஞயின னென்ருற்
ருனே யாகா வவைதா ஞகா
ஞயின னென்ப தாக்கின னெனவே
யாஞ யென்ப தனைத்து மவ்வகை

தானு காமையைச் சாற்றிடு மென்க
தாமே யெனுமித் தனியே கார
மழிந்தில ரதுவே யாய்த்தில ரதுவிட்
டொழிந்திலர் பிரிவில ரெனுமிவை யுணர்த்துங்
காயும் பழமுஞ் சுவையு நுகர்வ

தாயவன் றானு மவன்முதற் றென்னு
மகிலமுந் தெளிய வறிவோன் றானு
மகிலமு மறிஞரை யறிவிப் போனு
மறிஞர்க் கறிவா யறிகின் றோனு
மறிவிற் கறிபொரு ளாவோன் றானு

மகிலமு மேனி யானவ னென்னுந்
[8]தருபொருள் கொள்பொரு டருவோன் கொள்வோ
னொருபொரு ளாயி னுவப்புண் டென்க
நுகர்வோன் றனக்கு நுகர்பொருள் வேண்டிற்
றிகலறக் கிடையா திருந்ததெ னிரயமும்

வேண்டா ராயினு மெய்யுறு வியாதிக
ளீண்டா தொழியா விறைக்கிவை யீடல
[9]சத்தியுஞ் சிவமுந் தாமே நுகருமென்
றித்திற வுணர்வுவந் தெய்துவ தெவர்க்கோ
தமக்கே யென்னிற் றாமுண ராமையு

மமைப்பற வுணர்தலு மவர்க்கடை வன்றே
[10]நானு மவனு நவையு நலனுந்
தானவ னாகையு நின்சா தனத்தில்
சகயோ கத்தைச் சாயுச் சியமெனப்
பகர்வது பதிபசு பாசத் தவர்க்கே

[11]யாதொரு வகையென வோதிய திறைநூல்
சொன்னவற் றென்றன் றென்னில்வீ டெளிதே
தானறி வழியே தலைப்பொருள் பிடித்து
மேனிகழ் பலமும் வீடளித் திடுமே
னிலையாக் கருவியை நிலையாக் கருதிப்

புலையா டுதலு முலகா யதன்பொருள்
[12]குட்டிய மின்றிநற் கோல மெழுதுத
லிட்டம தாயிற் கருவியு மிடங்களுங்
கருத்துற வுரைக்கத் தெரித்திடு மீதத்
[13]தறிவொன் றில்லோர்க் கிறையரு ளுதவுதல்

பிறிவறி வரியச் செறியிரு ளிடத்தோ
ரந்தகர்க் காண வந்தோ ரெம்மை
நீவிருங் காண வேண்டு மென்றுங்
கெடுத்தோர் தீபங் கொடுத்ததை யொக்கு
மிச்செயற் கிறைவன் கொச்சைய னன்றே

கருவி வசத்திற் றெரிவுறக் காண
வேண்டுந ரிலரா லீண்டறி வியாவுஞ்
சிவமே யென்று செப்பினை யவமுறு
பொறிபுல னறியா வறிவது பிரம
மென்றோர்க் குன்போ லிடர்ப்பட லிலதே

[14]யேற்றங் கருவி யிருபதோ டிரண்டும்
போற்றுமைந் தவத்தையும் புகறிரி மலமு
மீசனு முயிரும் பேசினை யஃதொழிந்
தொன்றே யாகு மென்றநின் னியல்பு
தாயர் மனைவியர் தாதியர் தவ்வைய

ராயவ ரெவரையு மோர்மையிற் காணுங்
கோகழி தூர்த்தர் கொடுந்தொழி றகுமே
யாக மற்றத னருணிலை தன்னிலை
யேக நாயக னாகிய விறைநிலை
நாசமில் பாசம் வீசிய வியனிலை

யினையவை யொன்று நினைவினு மின்றி
யுண்டெனு முணர்விற் கண்டது கருதி
லிழுக்கெனும் புலன்வழி யொழுக்க மதுவாக்
கொண்டு பண்டையி லெண்டரு மடங்கு
வந்தவர் செய்த தந்தையை யன்றே

புன்மைக ளீங்க வுண்மை கேண்மதி.

திறம் பெற — அச் சிவகதியை யடைய; நீ இங்கு — நீ இப் போது; அறைந்தமை—சொன்ன சங்கற்பத்தை; கருதில் — ஆராய்ந்தால்,

1. புவனம் யாவையும் — எல்லாப் பிரபஞ்சமும்; புனிதனது — சிவபிரானின்; உரு எனில் — வடிவம் என்றால் (அப்பிர பஞ்சத்துக்கு); அவன் — அக்கடவுள்; முதற்காரணம் — உபா தான காரணம். (அதுவா? இல்லையென்றால்); என்—என்ன காரணம்? நிகழ்த்துக — சொல். அவன் — சிவன் (நிமித்த

உபாதனே சககாரி என்கிற); காரணம் அனைத்தும்—எல்லாக் காரணங்களும்; என்று—(ஆவன்) என்ற; நீ அறைத்ததனை—நீ சொன்னாய். (உபாதான மாகிய) மண் மண், (நிமித்த மாகிய) தனிக்குலாலன்—சிறந்த குயவன், (சககாரியாகிய): தண்ட சக்கர ஆதி—தண்ட சக்கர முதலியன; காரணம் மூன்றும் — (என்கிற) மூன்று காரணங்களும்; ஓர் பேர்— ஒரே பெயரை (ஒரே பொருள்); இத்தாரணிதனில் — இவ் வுலகில்; அணைந்தது — பெற்றிருப்பதை; கண்டது — (நீ) தெரிந்திருந்தால் அதை; சாற்றுக—சொல். அத்தன் — சிவ பெருமான் (பிரபஞ்சத்தை);இயற்றும்—காரியப்படுத்துகிற; இத்தொழில் — இக்கிருத்தியம்; பிறர்க்கோ — பிறர் பொருட்டா?; தனக்கோ—தன் பொருட்டா? வீணோ—வீணா?; எனக்கு—எனக்கு; ஈதுஇயம்புக – விடை சொல். (அக் கிருத்தியம்); வீண் எனில் — விருதா என்றால்; பித்தர்— (அதனைப்) பைத்தியக்காரனுடைய; மாண்பு அறும் — பெருமை யில்லாத; தொழில்போல்—செயல்போல; தலைமை யும்—முதன்மையும்; அறிவும் — ஞானமும்; இலது என— இல்லாத தென்று; இகழ்வர்—(அறிஞர்) நிந்திப்பர். தனக்கு எனில்—தன் பொருட்டு என்றால்; அஃதும்— அதுவும்; முன்— ஆராய்ச்சியில்; நிற்பது ஒன்று அன்று—நிலையுறுங் கொள்கை யன்று, (எப்படி யெனில்) தன்போல் — சிவன் போன்று; அறிஞரும் — சர்வஞ்ஞரும்; தலைவரும் — சர்வகர்த்தரும்; இலர் — (வேறு) இலர். (ஆகையால் அவன்); மின்போல் — மின்னல் போன்ற; நிலைமையை — (அழிகிற தன்மையை (உடைய பிரபஞ்சத்தைத் தன் பொருட்டு); வேண்டலும்— விரும்பினு னென்றலும்; பழுது—குற்றம்; பிறர்க்கு எனில்— பிறர் பொருட்டு என்றால்; பிறரும் — அப்பிறரும், பிறர்க்கு ஆம்—அவர்க்கு வேண்டிய; பொருளும் — விடயங்களும். (அவற்றால் வருகிற); பொருட்கு— அனுபவங்களுக்கு; அமை கருவியும்—வேண்டிய கருவிகளும்; அதற்கு —அக்கருவிகளுக்கு (வேண்டிய); உபாதானமும்— உபாதான காரணமும், (அவை காரியப்படுதற்கு வேண்டிய); செய்கையும்; என்ற—கிருத்திய மும் என்கிற; ஓர் ஐ வகை—ஐந்து பொருள்கள் (அக் கர்த்தா வாகிய); தானொடு—சிவன் ஆகியவற்றுக்கு; மாறு ஆ— மாறாக (கர்த்தா மாத்திரமே யுளனென்று); சைவர்— சைவவாதியர்; கூறார்—சொலவ மாட்டார். என்றால் — ஆகையால்; (பிர பஞ்சத்துக்கு எல்லாக் காரணங்களுமாயிருப்பவன் சிவனே என்கிற); இச்சித்நாந்தம் — உன் தீர்மானம்; அவ சித்தாந்தம்—தப்புச்சித்தாந்தம்; என் — என்று அறி; ஆன்ற

சித்து—தூய சேதனம் (ஆகிய நிமித்த காரண சிவன்தானே பரிணமித்து உபாதான காரண மாகி) அசித்தை — சடப் பிரபஞ்சத்தை; ஈனுது—உண்டாக்கமாட்டான்.

2. உலகில் — உலகத்தில்; அசித்து — அசேதனம் (என ஒரு வஸ்துவும்); இலது என்னில் — இல்லை யென்ருல் (சாத்திரங்களில் இது இது) அசித்தது — அசேதன மானது (என்கிற வழக்கிருப்பதற்குக் காரணம்); என் என்ன;; உலகாயதனும் — சாருவாகனும்; பூதக் கூட்டம் — பிரபஞ்சத்தை; சல மேல் கொப்புள்—நீர்மேற் குமிழியை; தகும் என—நிகர்க்கும் என்று; சாற்றினன் — சொன்னுன். (பிரபஞ்சம் சேதன மானுல் அப்படி அழியாது). தீய கரும — தீச்செயல்களை யுடைய; சீனர் சாவகர் — பௌத்தரும் சமணரும்; பிறர்—மற்றச் சமயிகளும் (கூட); ஞேயம் இல் என — காணப்படும் பொருளைச் சூனியமென்று; நிகழ்த்தினர் இலர் — சொல்ல வில்லை. (மேலும்) காண்டல் விரோதம் — பிரத்தியட்ச விரோதம்;நின்—உன்னை(ப் போன்று); பிறர்—வேறு யாரும்; கணித்திலர்—சொல்ல வில்லை. (ஆகையால்); ஈண்டு—இங்கு; உனது உரைக்கு — உன் கொள்கைக்கு; யார்கரி — எவர் பிரமாணம்?; உடலும் சித்தோ — சரீரமும் சேதனமோ? (ஆம்; ஆனுல் அது); சித்தின் — சேதனத்தின்; சேர்வால் — சேர்க்கையால்: சித்து எனில் — சேதனமே யென்ருல்; கட பட ஆதியும் — கடம் படம் முதலியவும்; உடல் — சரீரம் (கொண்டுள்ள); கண் — சைதன்யத்தைத் தம் பால்); சிதைவு என்—கொள்ளாமை ஏன்? (கடபடாதிகளி லுள்ள சைதன்யம் ; தாபரம் — மரஞ்செடிகளில் (உள்ள); உயிர் போல்—உயிர்போல; (இருப்பது ஆகையால்); தனுஒழிந்து— உடம்பில் தவிர்ந்து; இவற்றில் — இக்கடபடாதிகளில்; மேவிய — கலந்திருக்கிற; உணர்வு — சைதன்யம் (மரஞ் செடிகளை உயிர் அசைவியாமல் அவற்றிற் கலந்திருப்பது போல); விரவிடும் என்னில் — கலந்திருக்கும் என்ருல்; சடத்து — கடபடாதிகளில் (உள்ள சைதன்யம் தாவரத்திலுள்ள); உயிர்போல்என—உயிர் போலும் என்று (திருட்டாந்தம்); சாற்றினை ஆகவின்—சொன்னு யாகலான்;உடற்கு —உடம்பில்; இறையை ஒழிந்து -- சிவனைத் தவிர; உயிர் உண்டு — உயிரும் உண்டு (என்பது சித்திக்கும். நீ) தரு— காட்டாய (உயிராகிய); திட்டாந்தமும்—திருட்டாந்தமும்; தாட்டாந்திகமும் — (சிவனுகிய) தாட்டந்தமும்; ஒரு பொருள் ஆகில்—ஒரே பொருள் என்ருல் (உன் பிரதிஞ்ஞை); உவமை பெருது — திருட்டாந்தம் பெற்றதாகாது, (இன்னம் அச்

சிவனும் உயிரும்); ஒன்றே ஆகில் — ஒரு பொருளேயானல்; இறை—சிவன் (அசைக்கக் கூடாதவாறு); தாபரத்து —மரஞ் செடிகளில்; ஒன்றிய நிலையில்—உள்ள நிலையைக் காட்டிலும் (அசைக்கக் கூடியவாறு); உடற்கு — உடம்பில் (உள்ள); விசேடம் என் – சிறப்பு என்ன?; உரைக்க—சொல், (அது) பூதச் சேர்வை—பூதங்களின் சேர்க்கையால்; (உண்டாகிற); பேதம் என்று — ஏற்றக்குறை வென்று. அறையில் — சொன்னல்; சேர்வை— அச்சேர்க்கையும்; பேதம் — ஏற்றக் குறைவும்; என்கொடு — எதனுல் உளவாவன?; செப்புக— சொல். (அவை); கருமத்து அளவில் — கருமத்தால்; வரும் எனின்—உளவாகும் என்ருல் (உன் பேச்சு); பித்தர்—பைத்தியக்காரனின்; உரையின் திகழும் — பேச்சுப்போல் இருக்கும். உணர்வு ஒழிந்தனை — (நீ) புத்தி கெட்டாய். கடவுள் — சிவன் (கர்த்தா; ஆதலின்) கருமம் — இருவினைகளை; செய்வோன் அன்று — செய்பவன் ஆகமாட்டான்; உடலும் — சரீரமும் (சடமாகலின் கருமத்தை); மருவி நின்று—சார்ந்து; இருவினை — புண்ணிய பாவங்களை; வவரா — செய்ய மாட்டாது; (அவற்றின் பலனை); நுகரா — அனுபவிக்க மாட்டாது கடவுளும் — சிவனும்; உடலின்கண் — தேகத்தில்; படல்—பிரவேசித்தல் (பிறத்தல்). துஞ்சல்—இறத்தல், இடர்—துன்பத்தையும்; நலம் — இன்பத்தையும்; உறுதல்— அனுபவித்தல், (அவத்தைகளிற் கீழ் நோக்கிச் சென்று); இறங்குதல் — ஒடுங்குதல், (மேல் நோக்கிச் சென்று); ஏறுதல்—விரிதல் ; என்பவற்றை ; எவ்வகையேனும் — எந்த விதத்தாலும்; செய்கை இன்று — செய்யமாட்டான். ஆதலும்—ஆதலினுலும், உலகில்—உலகத்தில்; பல கலை—பல சாத்திரங்கள்; நிலவுதலானும் — உளவாதலினுலும்; எண் அரும்—கணக்கில்லாத; பொருளும் — (காட்சிப்) பொருள்களும் (அவற்றைக் காட்டுகிற); இரவியும் — சூரியனும்; ஒழிய—தவிர (க் காண்கிற); கண் என ஒன்று — கண் என்கிற ஒன்று; காண்கையினுலும் — (இடையில்) இருப்பதினுலும் (அறியப்படுகிற); பாசப்பகுதியும் — பாச காரியமும். ஈசனும்—(அறிவிக்கிற) பதியும்; ஒழிய—தவிர, (அறிகிற); பசுவும்—பசு என்பதும்; உண்டு என்று — இருக்கிறதென்று (யாரும்); இசைய வேண்டின்று — சம்மதிக்கவே வேண்டும் (விடயமே); இது எனும் ஒன்றை—சுட்டறிவை; அது ஆய்— தன்மய மாகும்படி; படுத்து—செய்து (அதனில்); பொதுமையில்—பிரிப்பின்றி; நிற்கும்— நிற்கும், (அது); மாயையின் — பிரபஞ்சத்தின்; பொற்பு என்—சமார்த்தியம் என்று அறி.

3. பொன்—பொன்னின்; பணி யாவும் — ஆபரணங்களெல்லாம் (பொருளால்); பொன் — பொன்னே; ஆம் தன்மையின் — ஆதல் போல (சிவனுடைய); நிட்களம் சகளம் — அருவம், உருவம், (அருவுருவம் என்கிற மூன்று); திரு உருநிலையும் — திருமேனிகளும்; ஈசனே என — சிவனேயென்று; பேசுவர்— (பெரியோர்) சொல்வர். அன்றி—(அஃது) அல்லாமல்;

4. உலகு—பிரபஞ்சம்; அரு — அருவப்பகுதியில் (சிவமாகியும்); உரு - உருவப்பகுதியில்: ஆகி — (சத்தி) ஆகியும்; வரும் என்னில்—இருக்கும் என்றால்; அனைத்தும் — அவ்விரண்டு பகுதிகளும்; மாயை என—மாயையே யென்று; தெளிகிலை— (நீ) அறியவில்லை.

5. (நிற்க); ஆவதும்—விதியும்; ஆகாது ஒழிவதும் — விலக்கும்; இலது எனும்—இல்லை என்கிற; பாவகம் — (அபேத) புத்தி; உலகாயதனது பான்மை — பிராகிருதனுடையபகுதி; கள் — கட்குடி; கொலை—கொல்லுதல்; வெகுளி—கோபம்; காமம்— ஆசை; களவுகள் — களவு முதலியன; உட்படும் இவை — அடங்கிய இவ்விலக்குகளை; விட—விடும்படி; மொழியாதார்— உபதேசியாதவர்; இலர் — (மெய்ஞ்ஞானியருள் எவரும்) இலர் (அவ்வுபதேசம் தமக்கன்று, பிராகிருதருக்கே யாமென அவர் சொல்லவில்லை. அன்றியும்); சோமபானம்— சோமபானம்; சுராபானங்கள்—சுராபானங்கள்; ஆம் என— தகும் என்று; மறைகள்—வேதங்கள்; ஆர் செவி — யாருக்கு; பறைந்தன—விதித்தன? (என நீ வினவலாம். விலக்காகிய ஒன்று ஒரு சந்தர்ப்பத்தில் விதியுமாயிற்று. அதனை யாதாரமாகக் கொண்டு); மறையோன்—பிராமணன்; புலைச்சியை— பறைச்சியை; மருவும் என்பது — புணரலாம் என்பது; முறையோ — (அவனுக்கு) விதியாகுமா; எனில் — என்று (நான்) வினவினால்; அது—அப்புணர்ச்சியை (விதி யென்பதும் விலக்கென்பதும்); புனை மொழி—கற்பனையே; என்னில்— என்று (நீ) விடை தருவாய். தந்தால்; சாதிபேதம் — சாதி வித்தியாசங்களையும் (அவற்றுக்குரிய); நீதி—விதி விலக்கு களையும்; நீ—நீ (கற்பனை யெனக் கூறி); தவறினும் — கை விட்டாலும்; ஏறு — இடபம் (புணர்ச்சிக்கு); மேதியை — எருமையை; விழையா — விரும்பாமல்; விரும்பும்— (பசுவையே) விரும்பும். (அதிலிருந்தாவது விதி விலக்குக்கள் இயற்கையிலேயே யுள, அவை மெய்ஞ்ஞானிக்கும் ஆம் என்பதைத் தெரி.)

6. கண்ணினது உருவும்— கண்ணின் வடிவமும்; அதில் — அதில் (படுகிற); கதிர் ஒளியும் — சூரியனின் ஒளியும் (முறையே வாக்கு மனங்களுக்கு); நண் அரும்—எட்ட முடியாத; சத்தி—சத்தி (சிவங்களின்); நாடகம் எனில் — நடிப்பே யென்ருல்; அதற்கு—அந்நடிப்புக்கு; ஏதுவும் பயனும் — காரணமும் பலனும் (நீ); ஓதவேண்டும்—சொல்லவேண்டுவது அவசியம். (அவை இவையென்று நீ என்ன சொன்னுலும் அதில்); நின்மொழி—உன் மதமே; விரோதமும் — கண்டிக்கப்படு மென்பதும், (நல்லவர் இவர், தீயவர் இவர் என்று மதித்து வருகிற); நீடு—பெரிய; உலகு இயற்கையும்—உலக நடை முறையும், (அதற்கான); தன்ம சாத்திரமும் — தர்ம சாத்தி ரங்களும்; சகலமும் — (ஆகிய) எல்லாமும்; என் செயும்—பயனற்றன (என்பதும் பெறப்படும்).

7. உலகு ஏழ் என—'உலகேழ்' என்பது முதலாக (உள்ள மூன்று பிரமாணங்களில்); இறை — சிவன்; பல — (பிரபஞ்சப் பொருள்கள்) அனைத்துமாய்; ஆம் — (மாறி) இருக்கிருன் (என்கிற); தன்மை — கொள்கை; கடமொடு — குடம்; சார்வம்—சருவம்; கலசம் ஆதிகள்—கலயம் முதலியன (ஆக அவற்றைச் செய்த); அடல் உறு—வலிமை மிக்க; குயவன்—குயவனே; ஆயினன் என்ருல் — மாறினுன் என்ருல்; (எப்படியோ அப்படியாம். உண்மையில், அப்பாத்திரங்கள்); தான் ஆகா குயவனுக மாரு. அவை—அப்பாத்திரங்களாக; தான்—ஆகான்—குயவன் மாருன். (ஆகையால் சிவன் பிரபஞ்சப் பொருள்களாக); ஆயினன் என்பது — ஆயினுன் என்பதற்கு; ஆக்கினன் — (அவற்றை) ஆக்கினுன்; என — என்று பொருள்கொள். (பிரபஞ்சப் பொருள்கள்); அனைத்தும்—எல்லாமும்; ஆனுய் என்பது — ஆனுய் என்பது; அவ்வகை—அப்பொருள்களாக; தான்—சிவன்; ஆகாமையை —மாறவில்லை யென்பதையே; சாற்றிடும் என்க—தெரி விக்கும் என்று அறி. ('தாமே தானுக' என்கிற பிராமணத் தில்); தாமேனும்—தாமே என்கிறதிலுள்ள; இத் தனி—இந்த ஒப்பற்ற; ஏகாரம்—ஏகாரமானது; அழிந்திலர் — (உயிர்கள்) அழியவில்லை, அதுவே ஆய்த்திலர்—சிவமே ஆகவில்லை, அது விட்டு—சிவத்தை விட்டு ஒழிந்திலர் — புறம்பா யில்லை, பிரிவு இலர்—சுயேச்சையா யில்லை; எனும் இவை — என்கிற இக் கருத்துக்களையே; உணர்த்தும் — தெரிவிக்கும் (நாமே சிவமாய்' என்கிறதிலுள்ள ஏகர்ரமும் அதுவே).

காயும் பழமும் சுவையும் நுகர்வது ஆயவன் தானும்	}	'காயாகிப் பழமாகி' என்கிற பிரமாணம்

அவன் —(சர்வமும்) சிவனே; முதற்று — தலைவனாகவுடையன; என்னும் — என்று கூறும். ('அறிவானும்' என்கிற பிரமாணத்தில் சிவன்); அகிலமும் — எல்லாவற்றையும்; தெளிய — தெளிவாக; அறிவோன்றானும் — அறிகிறவனும், அகிலமும் — எல்லாவற்றையும்; அறிஞரை — பக்குவருக்கு; அறிவிப்போனும் —அறிவிக்கிறவனும், அறிஞர்க்கு —அறிகிற உயிர்களுக்கு; அறிவு ஆய் — (அவற்றின்) அறிவே யாகி; அறிகின்றானும் — அறிகிறவனும், அறிவிற்கு —அறிவினுக்கு; அறி பொருள் — அறியப்படுகிற வஸ்து; ஆவோன்றானும் — ஆகிறவனும் (ஆக இருக்கிறான் என்பது அவன்); அகிலமும்— சர்வ பிரபஞ்சங்களையும்; மேனி ஆனவன் — திருமேனியாக வுடையவன்; என்னும்—என்று கூறும்.

('தாய் தலை', 'நான் கெட்ட' என்கிற பிரமாணங் களுக்கும் அப்படியே ஏற்பப் பொருள் கொள்க).

8. தரு பொருள் — கொடுக்கப்படுகிற பொருள்; கொள் பொருள் — கொள்ளப்படுகிற பொருள்; தருவோன் — கொடுக்கிறவன்; கொள்வோன் — கொள்கிறவன் (ஆகிய எல்லாம்); ஒரு பொருள் ஆயின் — சிவமே யானால் (அப் பேதங்களில் அச்சிவத்துக்கு); உவப்பு — மகிழ்ச்சி; உண்டு என்க—இருக்கிறது என்று சொல்; (ஆனால்) நுகர்வோன் தனக்கு—அனுபவிக்கிறவனுக்கு; நுகர் பொருள் — அனுபவப் பொருள்கள் (தடையின்றி);வேண்டிற்று—வேண்டப்படுவன. (ஆனால் அவை அவனுக்கு); இகல் அற — தடையில்லாமல்; கிடையாதிருந்தது — கிடைக்கிற தில்லை. என் — (அக்குறை அவனுக்கு) ஏன்? (அவன் சுகத்தை விரும்புகிறான். அப்படியே) நிரயமும்—துக்கத்தையும்; வேண்டார் ஆயினும் — வெறுக் கிறான். ஆனாலும்; மெய் உறு — (அவனைச்) சரீரத்திற் பொருந்திய; வியாதிகள் — நோய்கள்; ஈண்டாது ஒழியா — வருத்தாமல் விடா; இறைக்கு — சிவனுக்கு; இவை — இவ் வெளிமைகள்; ஈடு அல—பொருந்தா.

9. (நுகர் பொருளும் நுகர்கிறவனு மாகிய) சத்தியும் சிவமும் — சத்தி சிவங்கள்; தாமே—தாமே (வினைகளைச் செய்து); நுகரும் என்ற—அனுபவிக்கும் என்கிற; இத்திற உணர்வு — இந்த ஞானம்; வந்து எய்துவது—உண்டாவது; எவர்க்கு — யாருக்கு? தமக்கே என்னில் —சத்தி சிவங்களுக்கே யென்றால்;

தாம்—அவை (ஒன்றை); அமைப்பு அற — தெளிவில்லாமல்; உணர்தலும்—அறிதலும் (ஆகிய அற்ப ஞானம் ; அவர்க்கு—அவற்றிற்கு; அடைவு அன்று—உரிய தன்று. (ஆகலின் அந்த ஞானத்தை அவை விரும்பா).

10. நானும்—உயிரும், அவனும்—சிவனும், நவையும்— பந்தமும், நலனும் — மோக்ஷமும், தான் அவன் ஆகையும் — உயிர் சிவனுதலும்; நின் சாதனத்து இல் — உன் மார்க்கத்தில் இல்லே. (உயிர் சிவத்தில் இரண்டற) சக யோகத்தை—கூடிக் கலத்தலே; சாயுச்சியம் என—சாயுச்சிய (பத) மென்று; பகர்வது — சொல்வது; பதி பசு பாசத்தவர்க்கே — திரி பதார்த்த வாதியர்க்குத்தான் (தகும்)

11. யாதொரு வகை — எந்த மார்க்கத்தையும்; என—(ஆசரிக் கலாம்) என்று; ஓதியது — (நீ) சொன்னது; இறைநூல் — வேதாகமங்கள்; சொன்னவற்று— சொன்ன மார்க்கங்களுள்; ஒன்று—(பாவகன் விரும்புகிற) மார்க்கம்; அன்று — ஆகாது. என்னில்—(ஆகும்) என்ருல்; வீடு எளிது — சாயுச்சியம் சுலப சாத்தியம் (என்பது பெறப்படும். வேதாகம ரீதியாக ஆசாரியன் உபதேசித்த மார்க்கமன்றி அவன்); தான் அறி—தன்மனம் போன; வழியே—மார்க்கமே; தலைப் பொருள் — முத்தி மார்க்கம்; பிடித்து — (எனக்கொண்டு அதனை) ஆசரிக்க, (அதனேடு அம்மார்க்கத்தின் விளைவாக); மேல் நிகழ் பலமும்—முடிவில் உண்டாகிற பயனும்; வீடு — சாயுச் சியத்தை; அளித்திடுமேல்—தருமானுல்; நிலையா — அநித்திய மான; கருவியை—தேகாதி பிரபஞ்சத்தை; நிலை ஆ கருதி—நித்திய மென்று நினைத்து; புலை — (பல) கொடுமைகளை; ஆடுதலும் — செய்தலும்; உலகாயதன் — நாஸ்திகன் (ஆசரிக்கிற மார்க்க மாகலின் அதுவும்); பொருள் முத்தி—மார்க்கம் (என்று சொல்ல வேண்டும்).

12, குட்டியம் இன்றி — சுவரில்லாமல்; நல்கோலம் — நல்ல சித்திரம்; எழுதுதல் — உருப் பெறுதல்; இட்டமதாயின் — முடியுமானுல்; கருத்து உற — உயிரிற் சாரவைத்தே; கருவி யும்—தனுகரணங்களும்; இடங்களும்—புவன (போக)ங்களும் (உருப்பெறுவதை வேதங்கள்); உரைக்க — சொல்லி யிருக்க (அதற்கு மாருக உயிரிற் சாராமல் அவை); அதீதத்து — தனித்து; தெரிந்திடும்—உருப்பெற முடியும்.

13. (தன்னளவில்);அறிவு ஒன்று—அறிவு சிறிதும்;இல்லோர்க்கு—இல்லாத உயிருக்கு (அறிவை யுண்டாக்குதற்காக); இறை

அருள்—சிவசத்தி (தனு கரணுதிகளை); உதவுதல்—கொடுக்கு மென்பது; பிறிவு –விலகுதலை; அறிவு அரிய—அறிதலில்லாத; செறி இருளிடத்து—நெருங்கிய இருளில்; ஓர் அந்தகர் — ஒரு குருடரை; காண—பார்க்க; வந்தோர் — வந்த (கண்ணுடையார் ஒரு)வர்; எம்மை நீவிரும்—'எம்மை நீரும்; காண வேணும் என்று—பார்க்க வேண்டும்' என்று கூறி; ஆங்கு ஓர் தீபம் — அவ்விருளில் ஒரு விளக்கை; எடுத்து — கொண்டு வந்து (அக்குருடர்க்கு); கொடுத்ததை — கொடுத்தாரென்பதை; ஒக்கும் — நிகர்க்கும். இச் செயற்கு — இத்தகைய செயலைச் செய்தற்கு; இறைவன் — சிவன்; கொச்சையன் அன்று—அறிவில்லாதவன் அல்லன். (அன்றியும்); கருவி — தனுகரணங்களால்; அசத்தில்—பிரபஞ்சத்தில்; தெரிவு உற— (எதனையும்) விளங்க; காண வேண்டுநர் — காண விரும்புகிற சிவஞானிகள்; இலர்—இல்லை. ஆதலால்; ஈண்டு — பொருந்திய; அறிவு யாவும் — (கருவி கரண) ஞானமெல்லாம்; சிவமே என்று — சிவஞானமே யென்று; செப்பினை — சொன்னுய். அவம் உறு — சடத்தன்மை பொருந்திய; பொறி—இந்திரியங்கள்; புலன் அறியா—விடயங்களை அறிய மாட்டா, அறிவது பிரமம்—அறிகிற வஸ்து பிரமமே; என்ருேர்க்கு—என்கிற மாயாவாதிக்கு; உன் போல் — உனக்குப் போல்; இடர்ப்படல் இலது—சங்கடமுண்டாத தில்லை.

14. (அவன் தத்துவங்கள் பதினுன்கே உளவெனக் கூற, நீயோ ஆகமங்கள் பேசுகிற); ஏற்றம் கருவி— அதிகமான தத்துவங்கள்; இருபதோடு இரண்டும் — இருபத்திரண்டும், (அவன் அவத்தைகள் மூன்றே உள வெனக் கூற. அந்நூல்கள்); போற்றும்—பேசுகிற; ஐந்து அவத்தையும்—ஐந்து அவத்தைகளும்; புகல்—(மேலும் அந்நூல்கள்) பேசுகிற; திரி மலமும் —மும்மலங்களும், ஈசனும் உயிரும்—சிவனும், ஆன்மாவும்; பேசினை — (உளவெனச் சம்மதித்துப்) பேசினுய். அஃது ஒழிந்து—அதனை மறந்து. (அவையெல்லாம்); ஒன்றே ஆகும்— சிவமே யாகும்; என்ற—என்று பேசுகிற; நின்இயல்பு — உன் செயல்; தாயர் மனைவியர் — தாய், மனைவி, தாதியர் தவ்வையர் — வேலைக்காரி. அக்கை; ஆயவர் எவரையும் — ஆகியோரனைவரையும் (அரசன் உள்ளபோதன்றி மற்ற வேளைகளில் காம மேலீட்டால்) ஓர்மையில் — சமம் என; காணும் — கொண்டொழுகுகிற (வரும்); கோ — அரசன் (தண்டித்து நாட்டை விட்டு); கழி—துரத்தத் தகுந்த (வரும் ஆகிய); தூர்த்தர் — துன்மார்க்கரின்; கொடுந்தொழில்— பாதகச் செயலுக்கு; தகும்—ஈடாகும். (ஆதலின்); ஆக—

(அவ்வளவில்) நிற்க. அதன்—(நீ முற்கூறிய) அச்சிவத்தின்; அருள் நிலே—சக்தி நிலே, தன் நிலே — உயிர்நிலே, ஏகநாயகன் ஆகிய — ஒரே தலேவனுயிருக்கிற; இறை நிலே — சிவ நிலே, வீசிய—(உயிரில்) பரவிய; நாசம் இல் — அழிவில்லாத; பாச வியன் நிலே — பாசப் பெரு நிலே; இனேயவை — (ஆகிய) இவற்றுள்; ஒன்றும் — ஒன்ருயினும்; நினேவினும் இன்றி— (உன்) ஞாபகத்திலு மில்லாமல், உண்டு எனும் — உண்மை என(நீ)சொல்கிற; உணர்வின்—துரியாதீதத் தோற்றத்தால்; கண்டது—அடைந்ததாக உள்ள (உன்) சிவகதியை; கருதில்— ஆராய்ந்தால், இழுக்கு எனும்—குற்றமாகிய; இழுக்கு எனும் — குற்றமாகிய, புலன் வழி—விடயப்போக்கில்; ஒழுக்கமும்— நிகழ்கிற தீய ஆசாரங்களேயும்; அது — அக்கதிக்குரிய தூய ஆசாரங்கள்; ஆ கொண்டு — எனக்கொண்டு; வந்தவர் — (அவற்றையும் அக்கதியில்) வந்தவர்; பண்டையின் — (தம்) பெத்த நிலேயிற் காட்டிலும்; எண் தரு—எட்டா (அதிகமா) கப் பெருகுகிற; மடங்கு—அளவு (ஆசரிக்க அது); செய்தது— இடங் கொடுத்தது. அந்தை — (ஆகலின் அது) அந்த காரமே (என்று இப்படி யெல்லாம் அந்நிமித்த காரண பரிணும வாதியின் சங்கற்பத்தை அவனுக்கருகிலிருந்த சைவ வாதி நிராகரணம் பண்ணினுன். பிறகு அவன் அப் பகுவியை நோக்கி 'உன்); புன்மைகள் நீங்க — கிலேசங்கள் ஒழியும்படி; உண்மை—(எனது மத) சங்கற்பத்தை; கேள்— கேள்' (என்று தொடங்கி சிவனருள் எப்படிப்பட்டது என்ற முன் வினுவுக்கு விடையாகத் தன்மத் சங்கற்பத்தைக் கூறு கிருன்.)

வரி 3இல் ஆம், 5இல் ஏ, 13ல் அன்றே, 14 இல் ஆல் 15இல் ஏ, 21இல் மற்று, 26ல் ஏ, 28 இல் மற்று, 34 இல் அன்றே, 36இல் ஏ, 42இல் ஏ, 52இல் ஏ, 59இல் ஏ, 78இல் ஏ, 79இல் ஏ, 99இல் ஓ, 101இல் ஏ, 107 இல் ஏ, 120ல் ஏ, 122 இல் ஆல், 125இல் ஏ, 132இல் ஏ, 133இல் மற்று அன், 140இல் ஐ அன்றே, 141இல் மதி அசைகள்.

வரி 18இல் என்ற ஓர் என்பது 'என்ருேர்' எனவும், வரி 98 இல் என்ற இத்திற என்பது 'என்றித்திற' எனவும் நின்றன.

———

கருத்து

நிராகரணத்துக் கேற்பச் சங்கற்பத்திலுள்ள 'சிவமுஞ் சத்தியு மெனத் தெளி'யென்கிற பகுதியை 4 ஆவது சங்கற்பமாகக் கொள்க. மற்றைச் சங்கற்ப நிராகரணங்கள் வரிசையாக உள்ளன.

(பெத்த மறுப்பு)

1 சங்:- எல்லாப் பிரபஞ்சமும் சிவபிரானின் வடிவம்.

நிரா:- எல்லாப் பிரபஞ்சமும் சிவபிரானின் வடிவம் என்ருய். பிரபஞ்சத்துக்கு அவன் உபாதான காரணமா? இல்லையென்ருல் நிமித்த காரணமா? இல்லையென்ருல் வேறு என்ன காரணம்? சொல்.

சங்:- நிமித்தம், உபாதானம், சககாரியென்கிற மூன்று காரணங்களுமாய் அவன் இருக்கிருன்'

நிரா:- கடம் ஒரு காரியம். அதற்குக் காரணங்கள் மூன்று மண், குயவன், தண்டசக்கரங்கள் என்பன அவை. அறிஞர் மண்ணை உபாதான மென்பர், குயவனை நிமித்த மென்பர், தண்ட சக்கரத்தைச் சககாரி யென்பர். அப்பெயர்களால் அக்காரணங் களின் வித்தியாசம் விளங்குகிறது. அவை வெவ்வேறு பொருள்களு மாம். அவை ஒரே காரணம், வெவ்வேறு பொருள்க ளல்ல என்று கொள்ளக்கூடிய விதத்தில் அவற்றிற்கென ஒரு பெயர் உண்டா? எங்காவது கண்டிருக்கிருயா? ஆகையால் பிரபஞ்சத் துக்குச் சிவனுகிய ஒரு பொருளே அம்மூன்று காரணங்களு மான தென்றல் தவறு.

இன்னென்றுங் கேள். சிவன் பிரபஞ்சத்தைக் காரியப் படுத்தினுனே; அது பிறர் பொருட்டா? தன் பொருட்டா? வீணு? வீண் வேலையென்ருல், அவன் பித்தனே ஆனல் சர்வ கர்த்திருத்துவம், சர்வஞ்ஞத்துவம் என்கிற குணங்களுடையவன் அவன். அவன் விருதாவேலை செய்யமாட்டான்: செய்வா னெனில் அவனுக்கு அக்குணங்க ளில்லை யெனக் கூறி அறிஞர் நிந்திப்பர். தன் பொருட்டென்ருல், அப்போதும் அவனுக்கு அந்நிந்தை யுண்டு. எப்படி? சர்வஞ்ஞனும் சர்வ கருத்தனும் அவனே; வேறு யாருமிலர்- தனக்கென ஒன்ருனுங் குறை வில்லாதவன் அவன். ஆகலின் அவன் தனக்கென எதனையும் விரும்பமாட்டான். அன்றியும் பிரபஞ்சம் மின்னல் போலத் தோன்றும். மறையும். அச் சுபாவ முடையது அது. அதனையா

அவன் விரும்புவான்? பிறர் பொருட்டென்ருல், அவனுக்கு வேருகப் பிறரென ஒரு கூட்டத்தார் உளரென்பது பெறப்படும். அவர், அவருக்கு வேண்டிய விடயங்கள், அவற்றை அனுபவித் தற்குத் துணையாகிய கருவிகள், அக்கருவிக ளெல்லாங் காரிய மாகலின் அதன் உபாதானம், காரியப்படுத்துங் கிருத்தியம், அக் கிருத்திய கர்த்தா எனப் பொருள்கள் ஆறு கிடைக்கின்றன. அத்தனை பொருள்க ளில்லை, கர்த்தா வொருவனே உளனெனச் சைவவாதியர் மாறுகூருர். நீயோ சிவனெருவனே அவ்வெல்லா மான நித்திய னெனச் சித்தாந்தப்படுத்தினுய் அது அவசித் தாந்தம். சிவன் நிமித்தகாரணனே. அவன் சித்துப் பொருள். உபாதான காரணங்களெல்லாஞ் சடப்பொருள்களே. அச்சித்து அச்சடமாகப் பரிணமிக்கமாட்டாது. அதனுல் உன் நிமித்த காரண பரிணுமவாதஞ் செல்லாது.

2. சங்:- பிரபஞ்சத்துள் எதுவுஞ் சடமன்று.

நிரா:- பிரபஞ்சத்துள் அசேதனப் பகுதி எதுவு மில்லை. என்ருய். அப்படியானுல் பிரபஞ்சத்தில் இது இது அசேதனம் என்கிற வழக்கு வேதமுதலிய சாத்திரங்களில் வருகின்றதே, அதன் கதி யென்ன? புறச்சமயிகளுள் மிகக் கீழ்ப்பட்டவன் சார்வாகன். அவனும் பிரபஞ்சந் தோன்றி யழியு மென்ருன். பிரபஞ்சம் சேதனமாயின் நீரிற் குமிழியாகுமா? பௌத்தர் சமணர் முதலியோரும் புறச்சமயிகளே. அவரும் ஈசுரனைத்தான் இல்லை யென்பர், காணப்படும் பொருள்களை இல்பொருள் களென்று சொல்லார். அவரெல்லாம் பிரத்தியக்ஷவாதியர். நீ பிரத்தியக்ஷத்துக்கும் விரோதம் பேசினுய்; அதனுல் அவரினுங் கீழானுய். உடலில் அறிவு காணப்படுகிறது. அப்படியிருந்தும் அதில் உயிரில்லை யென்ருய். உன் கொள்கையை ஆதரிக்கிற பிரமாண புருஷர் வேறு யார்? உடம்பில் சேதனங் காணப் படுகிறது. அதனுல் உடம்பே சேதன வஸ்து என்பாயா?

சங்:- ஆம். உடம்பு குணம். சேதனம் குணி. அதன் சம்பந்தத்தால் உடம்புஞ் சேதனமே.

நிரா:- உடம்புஞ் சேதனமே யென்ருய். கடபடாதிகளும் உடம்பு போன்றனவே. அவையும் அது போலச் சேதனத்தின் குணங்களாய்த்தா னிருக்கும். ஆனுல் அச்சைதன்யத்தால் உடம்பு சைட்டிக்கிறது. கடபடாதிகள் சைட்டிக்கவில்லை. அதனுல் கடபடாதிகள் அசேதனம். அவைபோலுள்ளது உடம்பு. அதுவும் அசேதனமே.

சங்:- கடபடாதிகள் அசையவில்லை. அதனால் அசேதனம் என்றாய். மரஞ்செடிகளும் இடம் பெயரா. அவற்றை அசேதனம் என்னலாமா? அவற்றில் உயிருண்டு. அது சேதனம் அஃது அவற்றை அசைப்பதில்லை. ஆயினும் அச்சேதனம் அவற்றிற் கலந்துள்ளது. ஆகையால் அவையுஞ் சேதனங்களே.

நிரா - மரஞ் செடிகளில் ஆத்ம சைதன்யங் கலந்துள்ளது; அப்படியே கடபடாதிகளில் சிவசைதன்யங் கலந்துள்ளது என்றாய். அவ்வுவமையில் உயிர் திருட்டாந்தம், சிவன் தாட்டாந்தம். அதனால் உயிர் வேறு, சிவன் வேறு என்பது பெறப்பட்டது. ஆனால் அவ்விரண்டும் ஒரு பொருளே யென்கிற சித்தாந்தி நீ. ஒரு பொருளே திருட்டாந்தமுந் தாட்டாந்தமும் ஆகாது. உன் பிரதிக்ஞை திருட்டாந்தம் பெருமையால் தவறும். நீ உயிரென வொன்றைத் திருட்டாந்தம் ஆக்கினாய். அதனால் உயிர் உள்பொருளென்பது உனக்குச் சம்மதமாயிற்று. அது உன் சித்தாந்தத்தை மறுக்கும்.

சங்:- உயிரைச் சிவனுக்குத் திருட்டாந்தங் கூறினேன். அதனாலேயே சிவனென ஒரு பொருளும், உயிரென ஒரு பொருளும் உளவென நான் சம்மதித்ததாக நீ எண்ண வேண்டாம். அவ்விரண்டும் ஒரே பொருள்தான்.

நிரா:- பொன்னுங் கொன்றையும் வெவ்வேறு பொருள்கள். ஆகையால் பொன்போலுங்கொன்றை யென்னலாம். பொன் திருட்டாந்தம். கொன்றை தாட்டாந்திகம். ஆனால் பொன்னுங் கனகமும் வெவ்வேறு பெயர்கள்; பொருள் ஒன்றுதான், பொன் போலுங் கனகமென்று சொல்லலாமா? ஆகாது. ஏன்? பொன்னாகிய திருட்டாந்தமுங் கனகமாகிய தாட்டாந்தமும் ஒரு பொருளே. அப்படியே நீ திருட்டாந்தமாகக் கூறியது உயிர்; தாட்டாந்தமாகக் கூறியது சிவன். அவ்விரண்டும் ஒரு பொருளே யென்றாய். அதனால் உயிர்போலுஞ் சிவனென்பது பொன்போலுங் கனகமென்பது போல்வது அது தவறான உவமை. ஆகையால் கடபடாதிகளுஞ் சேதனமே யென்கிற உன் பிரதிக்ஞை தகுந்த திருட்டாந்தத்தைப் பெறவில்லை. அது கிடக்க. உயிருஞ் சிவனும் ஒரு பொருளே யாகுக. அச்சைதன்யம் மரஞ்செடிகளையோ, கடபடாதிகளையோ அசைக்கவில்லை; உடம்பை அசைக்கிறது. அப்படி அசைப்பதற்கு அம்மரமாதியவற்றின் நிலைமையிற் காட்டிலும் உடம்பின் நிலைமையில் விசேட அமைப்பு ஒன்றுமில்லையே. இருந்தாற்சொல்.

சங்:- எல்லாப் பொருள்களும் பஞ்சபூதங்களின் கூட்டமே. ஆனுல் அப்பூதங்கள் தம்மில் மிகுந்துங் குறைந்துஞ் சேரும். அதனுல் மரமுதலியன அசையக்கூடாதவாறும், உடம்பு அசையக் கூடியவாறும் அமைந்தன. அப்படி அமைந்ததே உடம்பின் விசேடம்.

நிரா:- உடம்பு அசைவதற்குப் பூதங்களின் ஏற்றக்குறைச்ச லான அமைப்பே காரணம் என்ருய். அந்த ஏற்றக் குறைச்சலான அமைம்புக்குக் காரணம் வேண்டும். அஃதெது?

சங்:- அதற்குக் காரணம் கருமம்.

நிரா:- நீ யொரு பித்தன். உன்புத்தி கெட்டது. சிவனே சர்வகர்த்தா. அவன் கருமத்தி லகப்பட்டு வினைகளைச் செய்ய மாட்டான். சரீரமோ சடம். அதுவும் கருமத்தி லகப்படல், வினைகளைச் செய்தல், பயனை நுகர்தல் செய்யாது. சிவனுக்குப் பிறப்பு, இறப்பு, இன்பத்துன்ப நுகர்ச்சி, சாக்கிராதிகளிற் போக்குவரத்து என்பன எவ்விதத்தானு மில்லை. அன்றியும் உலகில் வேதாகமாதி சாத்திரங்கள் பரந்துகிடக்கின்றன. அவை யார் பொருட்டு உளவாயின? சிவன் அவற்றைப் படித்துத் தன் அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டிய அவசியம் அவனுக் கில்லை. அவன் சர்வஞ்ஞன். ஆகையால் அவை அவனுக்காக உளவாயின வென்று சொல்ல முடியாது. உடம்போ சடம். அதன் பொருட்டும் அவை வேண்டப்படா. ஆனுல் அவை யிருப்பது கொண்டு அவற்றைப் படித்துப் பயனடையக் கூடிய தொருபொருள் அச்சர்வஞ்ஞனுக்கும் அச்சடத்துக்கும் வேரு யுண்டென்பது சித்திக்கும். அப்பொருள்தான் உயிரெனப்படுவது. உலகில் காட்சிப்பொருள்கள் பல. அவற்ருல் ஒன்றைக் காண முடியாது. சூரியன் காட்டும் பொருள். அஃது ஒன்றைக் காட்டவே செய்யும். தான் காணுது. அவ்விரண்டற்கும் வேருக வுள்ளது கண். அதுவே சூரியன் காட்டக் காட்சிப்பொருள்களைக் காணும் அக்காட்சிப்பொருள்கள் போன்றது பாசம். சூரியன் போன்றது பதி. கண்போன்றது பசு. ஆகவே பதி பசு பாசம் என்கிற மூன்று பொருள்களும் இருக்கவே வேண்டுமென்பது யாரும் சம்மதிக்கக்கூடிய விதத்தில் நிச்சயமாயிற்று.

சங்:- அறிகிறவனுடைய அறிவு அறிகிறது. அது சுட்டறிவு. விடயம் அறியப்படுகிறது. அப்போது அவ்வறிவும் விடயமும் அறிவாகவே யிருக்கும். எப்படி? அவ்வறிவு அவ்விடயத்தைத் தன்மயமாகும்படி செய்கிறது. பிறகு அதிற்பிரிப்பின்றி நிற்கிறது.

அறிவு வேறு, விடயம் வேறு என்ற பிரிவுக்கு இடமில்லை. பிரபஞ்சமே விடய வடிவம். ஆகலின் அதுவுஞ் சேதனமே.

நிரா:- அறிவு விடயத்தை அறிகிறது, அப்போது விடயமே அறிவுமய மாகும் என்ருய். அஃதில்லை அறிவே விடயத்தி லழுந்தி விடய மயமாய் விடுகிறது. அப்படி அறிவை விடயமேயாக்குவது மாயையின் சாமர்த்தியம். ஆகையால் விடயங்களை யறிகிற அறிவும் அசேதனமே.

3 சங்:- பொன்னும் ஆபரணமும் உருவத்தால் வேறு வேருவன, மாற்ருல் ஒன்றே. அப்படியே அறிகிற சிவனும் அறியப்படுகிற பிரபஞ்சமும் உருவத்தால வெவ்வேறு அது பேதம். சைதன்யமாயிருப்பதில் ஒன்றே. அஃது அபேதம். ஆகவே சிவனுக்கும் பிரபஞ்சத்துக்கு முள்ள சம்பந்தம் பேதாபேத மென்பது. ஆனுல் பொன்னின் மாற்று நகையிலும் வெளிப்படத் தோன்றும் சிவ சைதன்யம் பிரபஞ்சத்தில் அப்படித் தோன்ருது.

நிரா:- சிவசைதன்யம் பிரபஞ்சத்தில் வெளிப்படத் தோன்ருது என்ருய். அதற்குக் காரணங் கூறிலை. சைதன்யம் வெளிப்படத் தோன்ருமையால் பிரபஞ்சம் அச்சேதனமே. பொன்னும் பணியுமாகிய உன் திருட்டாந்தம் சிவபிரானுக்கும் அவன் கொள்கிற மூவகைத் திருமேனிகளுக்குமே பொருந்தும். அவைதான் அருவம், அருவுருவம், உருவம் என்பன. அவற்றிற் சைதன்யம் வெளிப்படத் தோன்றும்.

4. சங்:- பிரபஞ்சம் இரண்டுபகுதிப்படும். அவற்றுள் ஒன்று அருவப்பகுதி. அது சிவமயம், மற்ரென்று உருவப்பகுதி. அது சத்திமயம்.

நிரா:- பிரபஞ்சத்தின் அருவப்பகுதி சிவமும், உருவப்பகுதி சத்தியும் அல்ல. அவ்விருபகுதிகளுமே மாயாமயம். அவற்றின் உபாதானம் மாயை அதைச் சிவமெனக் கூறிஞய். உன் மயக்கம் அது.

5. சங்:- இதைச் செய் என்பது விதி இதைச் செய்யாதே என்பது விலக்கு. சுருதி விதிப்பதே விதி. விலக்குவதே விலக்கு. விதியைக் கொள்ளவேண்டும். விலக்கைத் தள்ள வேண்டும். ஆயினும் விதியையும் விலக்கையும் பகுத்தறிவது பேதபுத்தி. அது பிராகிருதருக்கே யுண்டு. மெய்ஞ்ஞானிக்கு விதி விலக்கு என்ற

வரம்பு இல்லை. ஏன்? அவன் அபேத புத்திமான். ஆகலின் அவன் விதியை விடவுஞ் செய்வான், விலக்கைத் தொடவுஞ் செய்வான். அதனால் அவனைத் தோஷம் பற்றாது. மெய்ஞ்ஞானத்தை யெய்தாத வுயிர்கள், எய்திய வுயிர்கள் என இங்குப் பேதஞ் சொல்லப் பட்டது. ஆயினும் அவை பொருளால் சிவனுக்கு வேறானவை வல்ல. சிவசீவ பேதத்தை என்மதமும் அங்கீகரியாது, வேறு எம்மதங்களும் அங்கீகரியா.

நிரா:- விதி இது, விலக்கு இது எனக் காண்பது பேத புத்தி, அதனை யுடையவன் பிராகிருதனே என்றாய். அது தவறு. பிராகிருதனுக்கே அவ்விரண்டிலும் அபேத புத்தியுண்டு. அதனால் அவன் விதியை விடவுஞ் செய்வான், விலக்கைத் தொடவுஞ் செய்வான். அவன் விலங்கினுங் கடையனாவான். தோஷம் அவனைச் சாராமலும் இராது. மெய்ஞ்ஞானிக்கே விதிவிலக்குக் களைப் பகுத்தறிய முடியும். அந்தப் பேதபுத்தி கொண்டு விதியைத் தொட்டும், விலக்கைவிட்டும் அவன் ஒழுகுவான். ஏனென்றால். கட்குடி, கொலை முதலிய எந்த விலக்கையுஞ் செய்யாதேயென்று மெய்ஞ்ஞானியே உபதேசிப்பவன். பொல்லாங்குகளெல்லாம் தமக்கு மாத்திரம் விலக்காகா. பிராகிருதனுக்கே விலக்காவன என்று பேதங்காட்டியா அவன் உபதேசிப்பான்? மாட்டான் நிற்க, மெய்ஞ் ஞானத்தை யடைந்தவர், அடையாதவர் எனப் பேதங் கூறினாய். ஒவ்வோருயிரும் வெவ்வேறு பொருள். அத்தனைக்கும் வேறான பொருள் சிவம் என்கிற பேதம் அக்கூற்றால் சித்திக்கிறது அது கண்டு அஞ்சாதே. உன் சித்தாந்தத்துக்கு மாறுதான் அப்பேதம். உயிர்கள் வேறு, சிவன் வேறு என்பதற்குக் கண் சூரியன் திருட் டாந்தம். அதை 2ஆவது நிராகரணம், 6ஆவது பகுதியிற் காண்.

சங்:- சோமபான சுரபானங்கள் மதுபானங்களே. அவை விலக்கு. ஆனால் அதை வேதம் சிலவிடங்களில் விதியென வைத்தது. அவ்விதி யாருக்காக வுள்ளது? மெய்ஞ்ஞானிக்காகத் தான் அவ்விதி உளதாயிற்று. ஆகையால் மெய்ஞ்ஞானிக்கு விதி விலக்காகிய வரம்பு இல்லை யென்பது வேதசம்மதமாதல் புலனாம்.

நிரா:- அது யாருக்காகவேனும் இருக்கட்டும், விதியை விட்டால் தண்டனை, விலக்கைத் தொட்டால் தண்டனை; அது நிச்சயம். அம்மது பானங்கள் விலக்கே. அவற்றைத் தொடக் கூடாது. ஆனால் வேதத்தில் அவை விதிக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் அஃதொரு சந்தர்ப்ப விதிதான். அச்சந்தர்ப்பத்தைக் கொண்டு அப்பானங்கள் விடத்தக்கனவா தொடத்தக்கனவா

என்பதை ஆராயவேண்டும். அப்படி ஆராய்ந்தால் ஒரு சந்தர்ப் பத்துக்கு அது வேண்டப்படும் விதியென்பது பெறப்படும். வேதமும் அவ்வளவிற்குள் அவ்விதியை ஏற்றது. சுருதியில் அன்ன சந்தர்ப்ப விதிகள் மிகச்சிறுபான்மை. மனிதன் வேத்விரோதமாக விதிவிலக்காகிய வரம்பை மாற்றிக்கொள்ள அனுமதி யில்லை. அவன் தன் ஆசையை வேத வரம்பில் அடக்கி நிறுத்த வேண்டும். அவனே மனிதன். தன் ஆசைக்கு அல்லது விருப்பத்துக்கு முதன்மை கொடுப்பவனுக்கு விதி யேது? விலக் கேது? அவன் விரும்பினுல் எந்த விதியையும் விடுவான், எந்த விலக்கையுந் தொடுவான். மனிதனுக்கு நலஞ்செய்வதே வேதவரம்பு. அதைத் தன் ஆசையால் அவன் அழிக்கிருன். விதிவிலக்காகிய மூக்காங்கயிற்ருல் இகசுகத்தாசை யென்கிற எருதை யடக்கி நெறிப்படுத்திச் செலுத்தாத வண்டிக்காரனுகிய அவனுக்கு வருவது துன்பம். அதுதான் தண்டனை யென்பது. அதன் வரலாறு அவனுக்குத் தெரியாமலிருக்கலாம். அல்லது அத்தண் டனைக்குக் காரணம் உண்மையில் ஒன்றிருக்க அவன் வேறென் றெனக்கொண்டு ஏமாறவுஞ் செய்யலாம். எப்படியும் தொட் டால் தண்டனை தரக்கூடிய விலக்கு சோமபான சுராபானச் செய்தி, அது வேதத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் ஆற்றல்படைத்த விதியாயிற்று. அதை யெடுத்துக்காட்டி மெய்ஞ்ஞானிக்கு விலக் கென்ப தில்லை, அவன் எந்த விலக்கையுந் தொடலாம், தண்டிக் கப்படான் என்ருய். ஒரு பிராமணன் ஒரு பறைச்சியைப் புணர் கிருன். அதனைக் குற்றம் அதாவது விலக்கு என்பாயா?

சங்:- எந்தச் சாதியினனும் எந்தச் சாதியினளையும் புணரலாம். இன்பத்தில் ஏற்றக்குறைச்ச லில்லை. பேறுஞ் சாத்தியமே. ஆகையால் சாதிகள், அவைபற்றிய விலக்குகள் எல்லாம் பொய். அவ்விலக்குகளை மீறினுர்க்குத் தண்டனையுங் கிடையாது. பரந்த நோக்கமுடைய அவர் மெய்ஞ்ஞானியரே.

நிரா:- சாதிகள் கற்பனை, அவைபற்றிய விதிவிலக் குகள் கற்பனை என்ருய். வரம்பு கடந்தவன் மெய்ஞ்ஞானி, வரம்பழிந்தவன் பிராகிருதன். சாதி கடந்தவன் மெஞ்ஞானி, சாதி கெட்டவன் பிராகிருதன். ஒருவகையில் அந்த மெஞ் ஞானியனையவனே அந்தப் பிராகிருதன், எவ்வகையில்? அதனைத் 'தேவ ரனையர் கயவர்' என்ற குறளுரையிற்காண். அந்தப் பிராகிருதனுக்கு உன் சங்கற்பமே துணை. எப்படி? இடபமும் எருமையும் ஓரேயினம், ஆனுல் வேறு வேறு சாதியின. அச்சாதி வித்தியாசம். கற்பனை யன்று, உண்மை. இடபம் புணர்ச்சி

யின்பத்தின் பொருட்டு எருமையை விரும்புகிறதில்லை. பசுவையே விரும்புகிறது. அவ்விரும்புந் தொழில் இடபத்தி னுடையது. எருமையும் பசுவும் இன்பப்பொருள்கள். இன்பப்பொருள்களா யிருக்குந் தொழில் அப்பெட்டைகளி னுடையது. இடபம் விரும்புவதால் பசுவிடமிருந்து இன்பம் அடைகிறதா? பசு இன்பப் பொருளா யிருப்பதால் இடபம். அதை விரும்புகிறதா? விரும்பு தலே காரணம். இன்பம் அதன் பயனே. இன்பப் பொருளா யிருப்பது காரணம், விரும்புதல்அதன் பயன் என்பது பொருந் தாது. எருமையும் இன்பப்பொருள்தான், ஆயினும் இடபத்தை வசீகரிப்பதில்லை, இன்பப் பொருள் இன்பப் பொருள்களா யிருத்தல் கொண்டே எருமையும் பசுவும் ஏகசாதியாய்விடுமோ? அப்படியே பார்ப்பனியும் பறைச்சியும் இன்பப் பொருள்கள் தான். ஆயினும் அவ்விருவரும் ஏகசாதியாய்விடார். இடபம் எருமையை விரும் பாது. அப்படியே பார்ப்பனனும் பறைச்சியை விரும்பாம விருக்க வேண்டும். ஆனல் அவன் இடபத்தினுங் கடையனுனன், அதனல் பறைச்சியை விரும்பினுன். அக்காரணத்தால் அவனது சம்பந்தம் அவனுக்கு இன்பமாகிய பயனைத் தந்தது. இடபமும் எருமையை விரும்பினுல் இன்பமாகிய பயனை எய்தவே செய்யும். ஆகவே பார்ப்பனியிடமும் பறைச்சியிடமும் இன்பம் சமமாய்க் கிடைக் கிறது, அதனல் அவரது சாதிபேதம் கற்பனையே யென்பது சரி யன்று, இனி, இடபம் எருமையை விரும்புகிறதில்லை. ஏன்? பசு தன்சாதி, எருமை வேறுசாதி; அவ்வித்தியாசத்தைக் காண்கிற ஆற்றல் இடபத்தின் இயற்கை யுணர்ச்சிக் குண்டு. அதனல் இடபம் எருமையைத் தன்சாதியின தன்றெனக் சுண்டுவிலகு கிறது; பசுவைத் தன்சாதியினதெனக் கண்டு கூடுகிறது. அதற்கு எருமை இயற்கை விலக்கு, பசு இயற்கை விதி.

மனிதப்பிறவியில் அவ்வியற்கை யுணர்ச்சியும், அதன் வழி வரக்கூடிய இயற்கை விதிவிலக்குகளுங் கீழ்ப்பட்டுவிடு கின்றன. அப்பிறவியின் இருதகைமை அது. அதனுலன்றே மனிதன் முறையையும் அதிக்கிரமிக்கிறுன். தங்கை இன்பப் பொருள். அண்ணன் விருப்பம் அவள்மேற் செல்கிறது. அவனல் அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. 'முறை ஏன் குறுக்கிட வேண்டும்? புணர்ச்சி கஷ்டமா? இன்பமும் உண்டே. பேறும் எய்தலாம்' என்றெல்லாம் பகுத்தறிவு பேசுகிறுன் அவன் அம்மட்டே? மனிதன் மிருகங்களையும் புணர்கிறுன். அதற்குக் காரணம் அவனுடைய விருப்பமா? அவை இன்பப்பொருளா யிருத்த லென்பதா? அவனுசையே காரணம். அவை இன்பப் பொருளா யிருக்கின்றவ வென்பது காரண மன்று. மனிதரெல்

லாம் ஒரே இனம். ஆனல் அவருள் பலசாதிகள் உள. மாவெல்லாம் ஒரே இனம், ஆனல் பல சாதிகளை யுடையது. வாழையும் அப்படியே. அப்படியே மக்களினமும் சாதிகளுமா மென்க. அச்சாதிகளையும் அவை பற்றிய விதிவிலக்குகளையும் சுருதி பிரஸ்தாபித்து, மக்கள் அவற்றை ஆசரிக்கவேண்டுமெனக் கட்டளையுமிட்டது. மெய்ஞ்ஞானியா யுள்ளவன் அதற்கடங்கியே யொழுகவேண்டும். இன்றேல் அவனுந் தண்டிக்கவேபடுவான். சாதிக் கலவைப் புணர்ச்சியாற் கேடில்லையென்ருல் எருமையைப் புணரவொட்டாமல் இடபத்தை அதன் இயற்கை யுணர்ச்சி ஏன் தடுக்கவேண்டும்? அதைச் சிந்தித்தா யில்லை. ஓரினத்து வேற்றுச்சாதி மிருகங்களுள்ளுங் கலவைப் புணர்ச்சி சாத்திய மில்லையென்றுஞ் சொல்லமுடியாது. மக்கள் முயற்சியால் அவற்றுள் நிர்ப்பந்தத்தாலோ, ஏமாற்றத்தாலோ நடத்தப்பட்டுவரும் புணர்ச்சிகள் பல. அப்புணர்ச்சியிற் பேறு உண்டென்றுஞ் சொல்லப்படுகிறது.

6. **சங்:-** கண்ணுக்கு ஒளி யிருந்தால் அது சூரியனெளியின் உபகார மில்லாமலே பொருள்களைக் காணவேண்டும்; காட்டவும் வேண்டும். அவ்விரண்டு மில்லை. அன்றியும் மின்மினிப்பூச்சியி னெளி மிகச்சிறியது. அது அவ்வளவில் இருளை யோட்டுகிறது. அப்படிக் கண்ணெளி செய்கிறதா? இல்லை. ஆகையால் கண்ணுக்கு ஒளியில்லை யென்பதே மெய். கண்மணியில் சூரியனெளிபடும். அதனுற் கண்மணியும் ஒளியுடையதாகும், சூரியனெளி சிவம், கண்மணி சக்தியெனக் கொள்வதே நியாயம். சக்தி கண்மணி யாகவும், சிவம் கதிரவ னெளியாக நடிக்கின்றன. ஆகவே உயிரென ஒரு கூட்டம் சிவனுக்கே வேருக உண்டென்பதைக் கண்திருட்டாந்தத்தாற் சாதிக்கமுடியாது.

நிரா:- சிவம் சூரியவொளி போலவும், சத்தி கண்மணி போலவும் நடிக்கின்றன என்ருய். அந்நடிப்புக்கு முன்னுள்ள காரணமென்ன? பின் விளையக்கூடிய இலாபமென்ன? நடிப்பாயினும் அவை இருக்கவே வேண்டும். அவற்றை விளக்கு. அக்காரணம் இது, இலாபம் இது என்று நீ என்ன சொன்னுலும் சொல். உன்மதம் உன்னுலேயே கண்டிக்கப்பட்டதாகும். எப்படி? சத்தி சிவங்கள் வாக்கு மனுதீதம். உன்மதம் அது. அதாவது சிவன் விசுவாதிகன் விசுவாதீதன் என்பது. அவன்தான் சூரியனெளியாகவும், தன்சக்தி கண்மணியாகவும் இருந்து கொண்டு பொருள்களைக்காண்பதும், அதனுல் விளையக்கூடிய இலாபத்துக்கு இச்சிப்பது அவனுக்குப் பந்தமே. அதனுள் அவன் அகப்படுகிருன். அவன் விசுவாதிக னுதல் எப்படி? உன்மதத்துக்கு அதுஹானி யில்லையா? இன்னும்

அதனுல் இவர் நல்லவர், தீயர் என்கிற உலகநடைப்பாகுபாடு இல்லாமற்போம். மக்கள் உருப்படுதற்கு உளவாயின தரும சாத்திரங்கள், அவையும் வேண்டாதனவாகும்.

7. **சங்:-** சத்தி சிவங்களின் நடிப்பே சகலப் பிரபஞ் சங்களு மா மென்பதற்கு, 'உலதேழ்' 'ஊனுய்' 'கண்ணே' 'தாமேதான்' 'நாமே சிவம்' 'காயாய்' 'அறிவோன்' 'தாய் தலை' 'நான் கெட்ட' என்ற சுருதிகள் பிரமாணங்க ளாகும். அன்ன பிரமாணங்களுக்கு அளவில்லை.

நிரா :- சிவன் பிரபஞ்ச மானுனென்பது உன் மதம். சிவன் கர்த்தா. பிரபஞ்சங் காரியம். கர்த்தாவே காரியமாகப் பரிணமிப்பானு? குயவன் கர்த்தா. குடம் சட்டி கலயம் முதலி யவற்றை அவன் செய்தான். அவை காரியம். கர்த்தாவாகிய குயவனே குட முதலிய காரியமாகப் பரிணமிப்பானு? மாட்டவே மாட்டான். அப்படியே சிவனுகிய கர்த்தாவும் பிரபஞ்சமாகிய காரியமாகப் பரிணமிக்க மாட்டான். ஆனுல் நீ காட்டிய முதல் மூன்று பிரமாணங்களில் ஒருவனே 'உலகு ஏழ் ஆய்', திசை பத்து ஆய்', 'ஊன் ஆய்', 'உயிர் ஆய்', 'உணர்வு ஆய்', 'கண் ஆய்', 'மணிஆய்' என வருகின்றன, சிவனெருவனே ஏழுலகும், பத்துத் திசையும், உயிரும், உடம்பும், உணர்வும், கண்ணும், மணியும் ஆனுன் என்பது பொருள். ஆனுன் என்பதை மாறினுன், பரிண மித்தான் எனக்கொண்டாய். மேற்காட்டிய குயவன் குட திருட் டாந்தத் தால் உன்னறிவு தெளியலாம். தெளிந்தால் ஆனுன் என்பதற்குப் பொருள் வேறு கிடைக்கும் என்னே? ஆனுன் என்கிற தன்வினை ஆக்கினுன் எனப் பிறவினைப் பொருளில் வந்தது. சிவனே ஏழு வகையும் ஆக்கி அதிற் கலந்துநின்ருன். பத்துத்திசைகளையும் ஆக்கி அவற்றில் வியாபித்தான். உடம்பை ஆக்கி உயிருக்குக் கொடுத்து அதிலிருந்தான். உயிரை உடம்பிற் புகுத்தி வினைகளை யீட்டுமாறு ஆக்கி உயிருக் குயிரென நின்ருன். உயிரின் உணர்வு விடயங்களிற் செல்லுமாறு ஆக்கி உணர்வுக் குணர்வானுன். கண், கண்ணுட் கருமணி யென்பவற்றை ஆக்கி அவற்றின் உள்ளொளி யானுன். அப்படியே சிவன் பிரபஞ்சப் பொரு ளானுனெனப் பலவிடங்களில் வரும். அங்கெல்லாம் அதற்குப் பரிணமித்தான் என்பது பொருளன்று, பிரபஞ்சங்களை யாக்கி அவற்றிற் பலபடியாலுங் கலந்திருந்தா னென்பதே பொருள். இனித் 'தாமே' 'நாமே' என்கிற பிரமாணங்களிலுள்ள ஏகாரம் தனிச்சிறப்புடையது. தாம், நாம் எனபன உயிர்கள். அவை அழியாதன. சிவமே யாகிச் சொரூபம் சூனிய மாகாதன' சிவத்துக்குப் புறம்பாகாதன, சுவேச்சை யற்றன என்கிற நான்கு

பொருள்கள் அவ்வேகாரத்துக் குள. அதனுலும் உயிர்த்தொகை சிவத்துக்குப் பொருளால் வேறென்பது விளங்கும். 'காயாய்' என்கிற பிரமாணம் சிவபிரானது முழு முதன்மையைத் தெரிவிப்பது. 'அறிவோன்', 'தாய்தலை', நான் கெட்ட' என்கிற பிரமாணங்கள் சர்வபிரபஞ்சங்களும் சிவபிரானுக்குத் திருமேனியென்கிற உண்மையை உணர்த்தும்.

8. **சங்:-** கொடுக்கிற பொருள், கொள்ளுகிற பொருள். கொடுக்கிறவன், கொள்ளுகிறவன் என்பன பேதங்கள். ஆயினும் அவை சிவமாகிய ஒரு பொருள் தான். அது தானுகவும் சத்தியாகவும் இருந்து அப்படி நடிக்கிறது. அந்நடிப்பு அதற்கொரு மகிழ்ச்சி.

நிரா:- தரு பொருள், கொள்பொருள். தருவோன் கொள்வோன் என்ப வெல்லாம் ஒரே பொருள், அது சிவம், அப்பேதங்கள் அதற்கொரு மகிழ்ச்சிவிளையாட்டு என்ருய். ஆனல் அனுபவிக்கிறவனுக்கு வேருக அனுபவப்பொருளென வொன்றிருக்கவேண்டும். அப்போதுதான் அவனுக்கு அனுபவங் கூடும். அவ்விரண்டும் ஒரு பொருளே யாளுல் அஃதில்லை. இன்னும் சிவனை உயிரென மயங்கி நுகர்கிறவ னென்றும், சத்தியைப் பிரபஞ்சமென மயங்கி நுகர்பொரு ளென்றும் சொன்னுய். அந்நுகர்வோனுக்கு அந்நுகர்பொருள் அவன் விரும்புகிறபோதெல்லாம் தடையின்றிக் கிடைக்கிறதா? இல்லை. அஃது அவனிடமுள்ள எளிமைக்கே சான்று. அவனுக்கு அவ்வெளிமை யிருக்கலாமா? மேலும் அந்நுகர்வோன் துக்கத்தை வெறுக்கவே செய்வான், ஆயினும் நோய்கள் அவனுடலைப் பற்றுகின்றன. அவன் வருந்துகிருன். அஃது ஆகுமா?

9. **சங்:-** அனுபவிக்கப்படுவன சத்தாதி விடயங்கள் அவையெல்லாஞ் சத்தி, அனுபவிப்பன உயிர்கள் அவையெல்லாஞ் சிவம். இந்த ஞானம் சித்திப்பது அருமையினும் அருமை,

நிரா:- நுகர்பொருள் சத்தி. நுகர்வோன் சிவம் என்ருய். அப்படியானுல் சத்திசிவங்கள் தவிர வேறு பொருள் இல்லையென்ப தாயிற்று. அந்தஞானம் யாருக்கு உண்டாக வேண்டும்?

சங் - அச்சத்தி சிவங்களுக்கே யுண்டாக வேண்டும்.

நிரா:- அப்படித்தான் உன்னுற் சொல்ல முடியும். வேறு வழியில்லை. ஒன்றை அறியா திருத்தலும் இன்னென்றைத் தெளிவில்லாமலறிதலும் ஏகதேச ஞானம். அதனை யுடையவரே

வினைகளின் வயப்பட்டு அவற்றைச் செய்வர். பலனை நுகர்வர் சத்திசிவங்களுக்கு ஏகதேசஞானம் ஏது? அவை கருமவசப் படா, வினைகளைச் செய்யா, பயன்களை நுகரா.

(முத்தி மறுப்பு)

10. ***சங்:-*** உயிர் வேறு, சிவன் வேறு எனப் பாவித்தல் துவிதபாவனையாகும். அது குற்றம். அங்ஙனம் பாவிப்போனை அது முத்தியிற் செலுத்தாது. உயிர் சூனியமுற்றுச் சிவமாக வேண்டும். அதற்குரியது அத்துவித பாவனை. முத்திமார்க்கம் அதுவே. அதன்முதிர்ச்சிதான் சாயுச்சியம்.

நிரா:- உயிர், சிவன், பந்தம், மோக்ஷம், உயிர் சிவனுதலாகிய சாயுச்சியம் முதலிய வுண்மைகளுக்கு உன் மதத்தில் இடமில்லை. சாயுச்சியத்தைப் பற்றிப் பேசுகிற வுரிமை திரிபதார்த்த வாதியருக்கே யுண்டு.

11. ***சங்:-*** முத்தியில் நிலைப்பிப்பது அத்துவித பாவனை யொன்றே. அது கைகூடுவ தென்றோ அன்று அப்பாவகன் ஏதேனுமொரு மார்க்கத்தை யாசரிக்க வேண்டும். அஃது இதுவாய்த்தா னிருக்க வேண்டுமென்ற நியம மில்லை. அவன் தன்புத்திக் கிசைந்த எம்மார்க்கத்தையும் ஆசரிக்கலாம். அதை யாசரித்துக்கொண்டு தன் உடம்பையும் உயிரையும் சிவவியா பாகத்துள் அடங்கும்படி அவன் செலுத்தவேண்டும்.

நிரா:- அப்பாவகன் எந்த மார்க்கத்தையும் ஆசரிக் கலாம் என்றாய். அத்துவிதபாவனையை முதிர்விக்கிற மார்க் கங்கள் சில. அவை இவைதானென்ன வேதாகமங்கள் வரையறுத் துள்ளன. மனம்போனபடி எந்தமார்க்கத்தையும் ஆசரிக்கலா மென்பதும் அவற்றுள் ஒன்றாக இல்லை. இருக்குமானால் எல் லார்க்கும் முத்தி எளிதிற் கிடைத்துவிடும், அன்றியும் வேதாகம ரீதியான முத்திமார்க்கத்தை உபதேசிப்பவன் ஆசாரியன் அதையே ஆசரிக்க வேண்டும். முத்தி அப்போதுதான் நிச்சயம், அதைவிட்டு மனம்போன மார்க்கத்திற் சென்றால் துன்பமே பிராப்தம். அது சாயுச்சியந் தருமா? நாஸ்திகனுக்கு உலகமே சதம். ஆகையால் அவன் புலைமார்க்கத்தையே யாசரிக்கிறான். அதற்குப் பயனுந் துன்பமே. அப்புலைமார்க்கமும் அதன்பயனுங் கூட சாயுச்சியத்தைத் தர வல்லன என்று சொல்லவரும்.

12. ***சங்:-*** உயிருக்கு ஆணவமலம் நீங்குகிற பருவம் வரும். அப்போது இந்திரியாந்தக் கரணங்கள் உயிரிற் கூடும். அவையே அறிவைத் தருகிற கருவிகள். உயிருக்கென அறிவில்லை

அக்கருவிகள் தொகையில் ஏறிக்குறைந்து உயிரிற் சேரும். அப்படி ஏறிக் குறைவதால் உயிருக்குச் சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் என்கிற அவத்தைகள் உளவாகின்றன, உயிர் அவற்றிற் சஞ்சரிக்கும். அப்போது அதனறிவு ஏகதேச மாகும். துரியாதீதம் என்பதும் ஓ ரவத்தை. அஃது ஐந்தாவதா யுள்ளது. அதில் கருவிக ளனைத்தும் உயிருக்கு வேருய் உருமாரும லிருக்கும். அவற்றிற்கு அந்நிலை கேவல மாகும். உயிர் அக்கருவிகளுக்கு வேரு யிருப்பது. அதற்குக் கேவலம். கேவலம் - தனி.

நிரா:- உயிர் கேவலத்தி லிருக்கிறபோது தனு கரணுதிகளும் தத்தம் உருவோடு விலகிக் கேவத்தி லிருக்கும் என்ருய். சுவரின்றிச் சித்திரம் உருப்பெருது. அச்சித்திரம் தனித் திருத்தலு மில்லை. அப்படியே உயிரின் சார்பாகவே தனு கரணுதிகள் உருப்பெறுவன. அது சுருதிசம்மத மாகும். உயிரைச் சாராமல் அவை உருப்பெரு, தனித்து நில்லா.

13. *சங்:-* கேவலத்தில் உயிருக்கு அறிவில்லை, அவ் வுயிரில் இந்திரியாதிகள் கூடும், கூட்டுபவன் சிவன். உயிர் அவற்றைப் பெற்று ஆணவம் நீங்கி அறிவுடையதாகும், அந் நிலையே அதற்குச் சகலம். சகலம்-இந்திரியங்களோடு கூடிய நிலை.

நிரா:- இருள் மிகுந்த இடத்தில் குருட ஞெருவ னிருக்கிருன். கண்ணுடையா ஞெருவன் அங்கு வந்து ஒரு விளக்கை அவன் கையிற் கொடுத்து, 'நீ இதனுதவியால் என்னைப் பார்' என்ருல், அவனுற் பார்க்கமுடியுமா? முடியாது. அவ்விருள் போல்வது கேவலம். குருடன் போல்வது உயிர். விளக்கு போல்வன இந்திரியாதிகள். கண்ணுடையான் போல்வன் சிவன். ஆகவே கேவலத்தில் அறிவின்றிக் கிடக்கிற வுயிருக்குச் சிவன் இந்திரியாதிகளைக் கொடுத்தாலும் உயிர் அறிவைப் பெறமுடி யாது. குருடனுக்கு விளக்குக் கொடுக்கிற கண்ணுடையவன் போன்று மூடனல்லன் சிவன், மேலும் இந்திரியாதிகளுக்குப் பிரபஞ்சப் பொருள்களே விஷயமாம். சிவஞானியா யுள்ளவன் அக்கருவிகளால் அவற்றை யறிதற்கு விரும்பமாட்டான்.

சங்:- கருவி கரண ஞானம் சிவஞானமே.

நிரா:- பிரமம் சித்துப் பொருள், அது சீவனுகிறது இந்திரியங்களைக்கொண் டறிகிறது, அவ்விந்திரியாதிகளும் அவற்ருல் அறியப்படுகிற பிரபஞ்சமும் மாயையாகிய அசேதனமே என்பான் மாயாவாதி. அறிகிற பிரமம், அறியப்பட்டுச் சட மாகிற பிரபஞ்சம் என வைத்துக்கொண்டு விவரிக்கிற அவன்

உன்போல் இடர்ப்பட்டான். நீ பிரபஞ்சத்தையும் சித்தென்ருய். எல்லாஞ் சித்தெனக் கொண்டு விவகரிக்கிற உனக்கு அறியப் படுகிற பொருளென ஒன்றுமில்லை. அதனுல் அறிவென்பதும் இல்பொருளே. ஆகவே அனைத்துஞ் சடமென்கிற முடிவு சித்திக்கிறது. உன்பேச்சிலுள்ள அர்த்த விபரீதத்தைக் காண்.

14. **சங்:-** அச்சகலத்தில் உயிருக்கு முப்பத்தாறு தத்துவங்களுங் கூடி அறிவை யுண்டாக்குகிற அவத்தை சாக்கிரம். அச்சாக்கிரத்திலேயே அக்கருவிகளினறிவு நீங்குகிற நிலை உயிருக்கு வரவேண்டும். வந்தால் அதுவுந் துரியாதீத மெனப்படும். அச்சாக்கிர துரியாதீதமே உயிருக்குச் சுத்தம். அச்சுத்தாவத்தையில் அத்துரியாதீதத்தை அவ்வுயிர் எப்போதும் தரிசித்துக்கொண் டிருக்கும். அத்தரிசனமே உயிருக்குச் சிவகதி.

நிரா:- ஞானேந்திரியம் ஐந்து, கர்மேந்திரியம் ஐந்து, அந்தக்கரணம் நான்கு எனக் கரணங்கள் பதினுன்கு உள, சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி என அவத்தைகள் மூன்று உள என்ருன் மாயாவாதி. நீயோ ஆகமத்திற் கண்டவாறு தடத்த லக்கணப்பகுதியில் பூதம் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, கர்மேந் திரியம் ஐந்து, தன்மாத்திரை ஐந்து, அந்தக்கரணம் நான்கு, அசுத்த மாயா தத்துவம் ஏழு, சுத்தமாயா தத்துவம் ஐந்து எனத் தத்துவங்கள் முப்பத்தாறு உள, சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என அவத்தைகள் ஐந்து உள பதி பசு பாசம் எனப் பொருள்கள் மூன்று உள என்ருய். சொரூப லக்கணப்பகுதியில் அவை யெல்லாம் உன் நினைவைவிட்டும் போயின. அதனுல் இப்போது சிவமொன்றே உளது எனப் பேசினுய். சிவமொன்றே மெய், அதனை யெய்தியவனே ஞானி, விதிவிலக் கென்கிற வரன்முறை அவனுக் கில்லைஎன்பதை உன் மெய்ஞ்ஞானிக்கு இலக்கணமாகக் கொண்டாய். அவன் சாதி களைக் கற்பனை யென்பவன், அப்படியே தாய் மனைவி தாதி தமக்கை முதலிய முறைகளுந் தடத்தப் பார்வையில் கற்பனையே யென்று கூறி முறைகெட்ட காரியங்களுஞ் செய்வான். அந்த ஞானத்துக்கும் தூர்த்தத்தன்மைக்கும் பேதமில்லை. உயிரின் பெத்தநிலையைக் கூறுகிறபோது அருள்நிலை, ஆன்மநிலை, சிவநிலை, பாசநிலை ,இவற்றை விளக்கிவிட்டு முத்திநிலையைக் கூறுகிற போது அவையனைத்தையும் மறந்தாய். உன் துரீயாதீதத் தோற்றமோ சிவகதியோதான் எப்படி? தீய வொழுக்கங்களைத் தூயயொழுக்கங்களெனக் கொண்டு பெத்தநிலையைக் காட்டிலும் அதிகமாக ஆசரித்துவருவதற்கிடஞ் செய்வதே அது. ஆகலின் அது அந்தகார கதியே.

சைவவாதி சங்கற்பம்

[1]அறிவா யறிவு மறிவுயிர் [2]கேவலத்
தறிவில னிருளொடும் பிரிவில [3]னண்ணல்
கலைமுத லாக நிலவிய கருவிகள்
விளக்கென வுதவுந் துளக்கறப் பொருந்தி
யிருவினை நுகர்வில் வருவினை செய்து

மாறிப் பிறந்து வருநெடுங் காலத்
[4]திருண்மல பாகமுஞ் சத்திநி பாதமு
மருவுழி [5]யருளுரு மன்னவ னணைந்து
[6]செல்கதி யாய்ந்து பல்பணி படுத்திக்
[7]கருவியு மலமும் பிரிவுறப் பிரியா

ஞான நல்கலுந் [8]தானது நோக்கித்
[9]தன்னையு மதனையுந் தன்முதற் பொருளையு
மின்னவென் றறியா [10]திருவரு முயங்கி
யொன்று [11]யுறுபய னுவப்பு
மின்றாய் நிற்கு மிதுசிவ கதியே.

1. (ப-ரை):- (சகலாவத்தையில்); அறிவு உயிர் — அறிவோடு கூடிய உயிர் (வேறொன்றன் சகாயத்தைப் பெறாமலே); அறிவு ஆய் — அறிவா யிருந்து; அறியும் — (விடயங்களை) அறியும்.

2. கேவலத்து—கேவலாவத்தையில்; அறிவு இலன்— (அவ்வுயிர்) அறிவில்லாதது; இருளொடு — ஆணவ மலத்தோடு; பிரிவு இலன்—பிரியாமலு மிருப்பது.

3. அண்ணல்—சிவபிரான்;
கலை முதல் ஆக - கலாதத்துவ முதலாக;
நிலவிய கருவிகள்—விளங்கிய தத்துவங்களை
(கண்ணுடையானுக்குக் கொடுக்கப்படும்);
விளக்கு என - விளக்கைப் போன்று;
உதவும்—(அவவுயிர்க்குக்) கொடுப்பான்.
(அவ்வுயிர் அத்தத்துவங்களை);
துளக்கு அற — அசையாமல்;
பொருந்தி — பற்றிக்கொண்டு;
இருவினை —(பிராரத்த) சுகதுக்கங்களை;
நுகர்வில் — அனுபவிக்கும்போது;
வருவினை—ஆகாமியங்களை;

செய்து—சம்பாதித்து; மாறி — (அதன் பயனுக அச்சு) வேறு பட்டு; பிறந்து வரும்—சன்மித்து வருகிற; நெடுங்காலத்து—பல்கோடிப் பிறப்புக்களுள்;

4. இருள்மல பாகமும்—ஆணவ மலத்தின் பரிபாகமும், சத்தி நிபாதமும்—சத்தி நிபாதமும்; மருவுழி — வந்த புண்ணியப் பிறப்பில்

5. அருள் உரு—அருள் வடிவம் (தாங்கிய); மன்னவன் அணைந்து—ஆசாரியன் வந்து;

6. செல்—(அவ்வுயிர்) அடைதற்குரிய; கதிஆய்ந்து — முத்தியை ஆராய்ந்து (அவ்வுயிரைச் சரியை முதலிய);பல் பணி - மூன்று. தொண்டுகளிலே; படுத்தி—நிறுத்தி;

7. கருவியும்—(சகலத்திற் கூடிய) தத்துவங்களும்; மலமும்—(கேவலத்திற் கூடிய) ஆணவமலமும்; பிரிவு உற — நீங்குதலை அடையும்படி; பிரியா—(தன்னை விட்டு) விலகாத; ஞானம்—சிவஞானத்தை; (அத்தொண்டுகளின் பயனுக அவ்வுயிர்க்கு); நல்கலும்—கொடுப்பான். கொடுத்தலும்;

8. தான்—(அந்த) உயிர்; அது நோக்கி — அதனைத் தரிசித்து

9. தன்னையும் — (ஞாதுருவாகிய) தன்னையும்; அதனையும்—(ஞானமாகிய) அச்சிவஞானத்தையும்; தன் — அந்த ஞானத்துக்கு; முதல்—மூலமா யுள்ள; பொருளையும்— (ஞேயமாகிய) சிவனையும்; இன்ன என்று அறியா — இவ்வியல்பின என்று அறியாமல்;

10. இருவரும்—தானும் சிவனும், முயங்கி — (தம்முள்) கூடி; ஒன்று ஆய்—ஒரு பொருளே யாகி;

11. உறு பயன்—(முத்திப்) பெரும் பயன் (எனப்படும்); உவப்பு இன்று ஆய்—இன்பமும் இல்லாமல்; நிற்கும் இது— இருக்கிற இந்நிலையே; சிவகதி—சிவசாயுச்சியம் ஆகும். (என்று இப்படி யெல்லாம் தனது மத சங்கற்பத்தை அச்சைவவாத சமயி சிவனருள் எப்படிப்பட்ட தென்று வினவிய அப்பக்குவிக்கு வகைப்படுத்தி விடையாகக் கூறினன்)

வரி 15இல் ஏ அசை.

சைவாதி சங்கற்ப நிராகரணம்

இதுகதி யாக [1]முதலறி வுயிரேற்
பொறிபுல னீங்க வறிவுயி ரன்றே
யடைகாய் நூறி னிடைசேர் சிவப்பென
விந்தியத் தொகையின் வந்தறி வொன்றுநின்
றின்று மென்ற லன்றே யெந்தை

[2]யறிவில னதீதச் செறிவிலென் றுரைத்த
நின்மொழி விரோதமும் பின்முன் மலைவு
மன்வயி னிகழா [3]மலமிரு ளிறையொளி
யான்மா விளக்கிற் றகுமருட் கலாதிக
ளீனமி லிவனிடத் தெவ்வா றிசைந்தன

விசைந்த தாயினு மிசையா தாயினு
மசைந்திடு முத்தி சாதன மவமே
சத்தி நிபாதமோ தருமல பாகமோ
[4]வுய்த்த காரண காரிய மோதுக
பாகங் காரண மாகின் மற்றது

காலா வதியிற் காயா வதியின்
மேலா மென்னும் வினையுறு மவதியிற்
றுயரென வுயிர்க்குத் தோன்றிடு மவதியி
னயமிகு மிறைவ னல்கிடு மவதியி
லேதிற் கூடு மோதுக விருவினை

யொத்த வெல்லையில் வைத்தன ரென்னி
லருவினை தூக்க வருவினை நில்லா
வொருவினை புரிகா விருவினை யாகா
வொப்புறு மாறு செப்புக [5]தேசிக
னருளுரு வென்ற பொருளினை யாயின்

மாயா வுருவன் மாயா வுருவினை
யேயா னேய்ந்தவ ரெம்ம னோரே
[6]பல்பணி ஞான காரண மென்னிற்
றொல்பணி தொறும்பயன் றொடுப்பத னாலு
மொருபணி செய்யாச் சிரபுரச் சிறுவரு

மரச ராய தருணத் தலைவரு
முதிர்பர சமயத் திதமுறு மரசரு
ஞானம் பெற்ற நன்மையி னாலு
மீனமில் பணியருட் கேதுவன் றென்றான்
ஞானேற் பத்தி நிமித்தமித் தொழிலன

வேனோர்க் கிறைநூ லியம்பிற் றென்னுங்
[7]கருவியு மலமும் பிரிவுற வருடரு
மென்றனை கேவலத் தேது மறிவிலன்
றுன்றிய சகலத் தருணிலை தோன்ரு
வெவ்வ வத்தையி லிறையருள் பெறுகுவஞ்

[8]செவ்விய ஞான தெரிசன மாவது
நால்வகை மாயைப் பால்வரு ஞானம்
பண்டை ஞான மிதுவறி தாவரக்
கண்ட ஞான மிதுவரக் காணி
லீன ஞானிக ளென்போர் யாருமில்

ஞான வேற்றுமை நாடலு மரிதே
[9]தானு ஞானமுந் தலைவனு மென்றனை
யானபி னிவனு மிவனது ஞானமும்
பாசமும் பாச ஞானமு மென்றிவை
பேசுவ ரொன்ருப் பெற்றிய வாகலின்

மும்மைப் பொருட்கு மும்மைத் தனமை
செம்மைத் தென்னிற் செலவுக ளெழுதுக
[10]விருவருங் கூடியொருபய னுய்த்தென்
றருளினை யிவ்வா றபேதிக ணிலையே
பதிபசு பாச முதிரறி வுகளுட

ஞரு முன்னர்க் கூருப் பின்ன
ரிருபொரு ணீத்துமற் றெருநால் வகையு
மீனமில் ஞாதுரு ஞான ஞேயமென்
றிசைய மூன்ருய்ப் பசுபதி யென்றவற்
றிரண்டா யிரண்டு மொன்றினுன் ருகத்

திரண்டாம் பயனெனுந் திருவரு டெளியிற்
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்ரு
மென்றிறை யியற்கை யியம்புத றகுமே
யொன்ரு மென்ற லன்றியு [11]முவப்பு
மின்ரு மென்ரு லென்பய னியம்புக

வென்றனை வினவு மியாவும் விளங்க
வென்றிகொள் கருத்தின் விளம்பினை யாயி
னதிக்கரை யானெனக் கொதித்தல மந்து
வெண்ணையம் பதிதிகழ் மெய்கண் டவனரு
ளுண்ணிலை யுடையோ னெருவ னுரைத்த

தவப்பிர காசத் தன்மையில் விரித்த
சிவப்பிர காசச் செழுந்தமி ழுண்மையை
யருளுட னுய்ந்து கொள்ளத்
திருவருள் வினவ றிருந்திடு மன்றே.

———

இது—(நீ கூறுகிற) இந்நிலை; கதி ஆக — முத்திஆகுக, (அது பின்னர் விசாரிக்கப்படும்).

1. உயிர்—உயிர்; முதல்—அநாதியே; அறிவேல் — அறிவுடைய தாயின் (உறக்கத்தில்); பொறி — இந்திரியங்களும்; புலன் — விடயங்களும்; நீங்க—(தன்னை விட்டு) விலகினதும்; உயிர் — அவ்வுயிர்; அறிவு இன்று—அறிவுடையதா யில்லை.(அன்றியும்) அடை—வெற்றிலையையும்; காய்—பாக்கையும் (சுண்ணும்பை யும் சேர்த்து); நூறின்—மென்றால்; இடைசேர்—புதுவதாகத் தோன்றுகிற; சிவப்பு என—சிவப்புப் போல; அறிவு ஒன்று — (உயிரில்) ஓரறிவு; இந்தியத் தொகையின்— இந்திரியங்களின் சேர்க்கையால்; வந்து நின்று — தோன்றி (அவற்றின் பிரிவால்); இன்று ஆம்—மறையும்; என்றால்—என்றாய். அது (கணபங்கம் ஆகலின் உனக்கே); அன்று எந்தை — விரோதம் என் அப்பனே!

2. (உயிர் அறிவுடையதென்று சொல்லிவிட்டு) அதிதச் செறிவில்—கேவலப் பிணிப்பில்; அறிவு இலன் என்று — அறி வில்லாத தென்று; உரைத்த—சொன்ன; நின் மொழி — உன் வசனத்தின் விரோதமும் — முரண்பாடும் (அதனால் நேர் கின்ற); பின் முன் — பின் (வசன) முன் (வசனங்களின்); மலைவும் – ஐயப்பாடும்; மன் வயின் நிகழா — பெரியோரிடம் செல்லா.

3. மலம் இருள்—ஆணவம் இருள்வடிவம்; இறை ஒளி — சிவன் சோதிவடிவன். ஆன்மா — உயிர் (ஒளியற்ற); விளக்கின் தகும்—விளக்கைப் போன்றது. கலாதிகள் — கலையாதி (தத்துவங்) கள்; மருள் — மயக்கஞ் செய்வன. (அப்படி அறிவின்றிக் கேவலத்திற் கிடந்த); ஈனம் இல் இவனிடத்து— கெடாத உயிரினிடத்தில் (கலாதிகள்); எவவாறு இசைந்தன —எப்படி வந்து பொருந்தின? (அவை); இசைந்தாயினும்— பொருந்தில என்றாலும்; அசைந்திடும்—நிலையில்லாத; முத்தி சாதனம்—(உன்) முத்தி மார்க்கமும்; அவம் — பயனற்றது.

4. (எப்படி?); உய்த்த காரணம்—ஆக்குகிற காரணம்; காரியம்—(அல்லது) காரியம் (ஆக இருப்பது); சத்தி நி பாதமோ—சத்திநி பாதமா?; தகு மல பாகமோ — தகுந்த ஆணவ மல பரிபாகமா?; ஓதுக—சொல். பாகம்—மலபரிபாகம்; காரணம் ஆகில்—காரணம் என்றால்; அப்பரிபாகம்; கால அவதியில்—கால எல்லையில்; காய அவதியில்—சரீர எல்லையில். (ஒன்றுக் கொன்று); மேல் ஆம் — மிகுந்து வரக் கூடியன; என்னும்—என்று சொல்லப்படுகிற; வினை—புண்ணிய பாவங்கள்; உறும் அவதியில்—(சமம்) ஆகிற எல்லையில், (பிறப்புத் தருவது); துயர் என — துன்பம் என்று: உயிர்க்கு — உயிருக்கு; தோன்றிடும் அவதியில் - தெரிகிற எல்லையில், நயம் மிகும்—நன்மை மிகுந்த; இறைவன்—சிவன்; நல்கிடும் — அருள வேண்டும் (எனச் சங்கற்பிக்கிற); அவதியில் — எல்லையில் (ஆகிய எல்லைகள் ஐந்தனுள்); எதில்—எந்த எல்லையில்; கூடும் ஓதுக—(உயிருக்கு) வரும்? சொல். (பெரியோர் அதனை); இருவினை—புண்ணிய பாவங்கள்; ஒத்த எல்லையில் — ஒத்த லாகிய எல்லையில்; வைத்தனர்—(வரு மெனக்)கொண்டனர்; என்னில்—என்பா யாகில்; வினை அரு — புண்ணிய பாவங்கள் அருவம். தூக்க — (ஆகலின் தராசிலிட்டு) நிறுக்க; அரு வினை—அருவமாகிய புண்ணிய பாவங்கள்; நில்லா — இடங் கொடா, ஒருவினை—(அன்றியும்) ஒரு வினையை; புரிகால்—செய்கிற போது (அதில் முரணான); இருவினை — இரண்டு பயன்கள்; ஆகா—விளையா. (ஆகலின் புண்ணிய பாவங்கள்); ஒப்பு உறுமாறு—சமம் அடைகிற விதம்; செப்புக—(எப்படி?) சொல்.

5. தேசிகன்—ஆசாரியன்; அருள் உரு என்ற—அருள் வடிவினன் என்கிற; பொருளினை—கொள்கையை யுடையாய். ஆயின்—ஆனால் (அவன்); மாயா உருவன்—மாயை யால் ஆகிய சரீரி (என்றாய். சிவன் ஆசாரியனாய் வர); மாயா உருவினை — மாயையிற் சரீரத்தை; ஏ யான் — தாங்கான். (அதனை); ஏய்ந்தவர் — தாங்குகிறவர் அனைவரும்; எம்மனோரே — எம் போன்ற உயிர்களே. (சரியை கிரியை யோகம் என்கிற)

6. பல்பணி — மூன்று தொண்டுகளும்; . ஞானம் — ஞானம் (உண்டாதற்கு); காரணம் என்னில் — காரணம் என்பா யாகில்; தொல்—பழைய (அம்மூன்றனுள்); பணிதொறும்—ஒவ்வொரு தொண்டுக்கும் (முறையே சாலோகம், சாமீபம், சாரூபம் எனச் சாத்திரங்கள்); பயன் தொடுப்பதனாலும் — பலன் சொல்வதனாலும்; ஒரு பணி செய்யா—ஒரு தொண்டுஞ்

செய்யாத; சிரபுரச் சிறுவரும் — சீகாழிப் பாலரும்; அரசர் ஆய—அரசரிடம் வளர்ந்த; தருணத் தலைவரும் — குமாரத் தலைவருள் (தொண்டு செய்யாமையோடு); பரசமய—அந்நிய சமயமாகிய சமண; திதம் உம் உறு—நிலையிலும் நின்று (மீண்ட); முதிர் அரசரும் — விருத்த ராஜரும்; ஞானம் பெற்ற — ஞானத்தைப் பெற்ற; நன்மையினாலும் — நலத் தாலும்; ஈனம் இல்—குற்ற மில்லாத; பணி — (அம் மூன்று) தொண்டுகளும்; அருட்டு — ஞானம் உண்டாதற்கு; ஏது அன்று — காரணம் ஆகா. என்றால் — அங்ஙனமாக; ஏனோர்க்கு—மற்ற வுயிர்களுக்கு (ஞானம் உண்டாக்குவதில் இத்தொண்டுகள்); என் ஆம்—எப்படிக் காரணம் ஆகும்? இத் தொழில் — இத்தொண்டுகள்; ஞான உற்பத்தி — ஞானம் உண்டாதற்கு; நிமித்தம் என—வாய்ப்பு அளிப் பனவே யென்று; இறைநூல் இயம்பிற்று — வேதம் சொல்லியது.

7. (உயிருக்குச் சகலாவத்தையைத் தருகிற கலை முதலிய) கருவியும் —தத்துவங்களும் (கேவலாவத்தையைத் தருகிற); மலமும்—ஆணவ மலமும்; பிரிவு உற—நீங்கும்படி; அருள்— (ஆசாரியன்) ஞானத்தை; தரும் என்றனை — கொடுப்பான் என்றாய். கேவலத்து — (உயிர்) கேவலத்தில் (தத்துவங் களோடு கூடாமையால்); ஏதும் அறிவு இலன் — சிறிதும் அறிவில்லாத தாயிற்று. துன்றிய — (தத்துவங்களோடு) கூடிய; சகலத்து — சகலத்தில் (அவ்வுயிர்க்கு); அருள் நிலை தோன்று — சிவஞானம் உண்டாகாது. (வேறு அவத்தை களும் உன்மதத்திற் கிடையா. அப்படியிருக்க உயிர்களாகிய யாம்); எவ்வவத்தையில்—எந்த அவத்தையில்; இறை அருள் பெறுகுவம்—சிவஞானத்தை அடைவோம்?

8. (உன் மதத்தில்); செவ்விய ஞான — சிவஞான; தெரிசனம் ஆவது — தரிசனம் என்பது (தனுகரண புவன போகம் என்கிற); நால் வகை—நான்கு வகைய வாகிய; மாயைப் பால்—மாயா காரியப் பகுதிகளின்; வருஞானம்—(சம்பந்தத் தால்) வருகிற ஞானம் (ஆகும். ஆனால்) பண்டை — தொன்மையாகிய; ஞானம் இது — (உயிரின்) இந்த அறிவு; வறிது ஆ-இல்லையாக; வரக் கண்ட — (அதன் பிறகு) உண் டான; ஞானம்—சிவஞானமும் (அவ்வுயிரினிடம் அம்மாயா காரியங்களின்); இது — இச்சம்பந்தத்தால்; வரக்காணில்— உண்டானால்; ஈன ஞானிகள்—அற்ப ஞானியர்; என்போர்— என்பவர்; யாரும் இல்—யாரும் இருக்க மாட்டார். (எல்லா

ருமே சிவஞானியர்தாம். அன்றியும் இது பதிஞானம், இது பசுஞானம் என்கிற; ஞான வேற்றுமை—ஞானங்களின் வேறு பாட்டை நாடலும் அரிது—கண்டு கொள்ளலும் முடியாது.

9. தானும்—உயிரும், ஞானமும்—சிவஞானமும், தலைவனும்—சிவனும்; என்றனை—என்று பிரஸ்தாபித்தாய். ஆனபின்—பிரஸ்தாபித்த பிறகு; இவனும் — பசுவும். இவனது ஞானமும் — பசுஞானமும். பாசமும் — பாசமும், பாச ஞானமும்என்ற — பாசஞானமும் என்கிற; இவை — இவற்றையும்; பேசுவர் —(உனக்கு எம்மவர்) நினைவூட்டுவர். (ஆக ஆறு பொருள்கள் உளவாயின. அவை தம்முள்); ஒன்றுப் பெற்றிய — கலவாத இயல்புடையன. ஆகலான்—ஆதலால்; மும்மைப் பொருட்கு—பதி பசு பாசங்களுக்கு; மும்மைத் தன்மை — பதிஞான பசுஞான பாசஞானங்கள்; செம்மைத்து என்னில் — உரியன என்றால் (உயிர் சிவஞா னத்தோ டியைந்து சிவத்தில் ஒன்றாய்ப் போகிற உன் முத்தி யில் பசுஞானமும், பாசமும் பாசஞானமும் அடைகிற) செலவுகள் எழுதுக—கதிகள் (என்னை?) விளக்கு.

10. இருவரும் கூடி — உயிரும் சிவமும் கலந்ததால்; ஒரு பயன் ஆய்த்து—ஒரு பொருளே ஆயிற்று; என்றருளினை — என்றாய்; இவ்வாறு — இப்படி; அபேதிகள் நிலை — மாயாவாதிகளின் மதம் (இருக்கும்); பதி பசு பாசம் — பதி பசு பாசங்கள்; முதிர்—(அவற்றின்) சிறந்த; அறிவுகளுடன்—ஞானங்களுடன் (சேர்ந்து பொருள்கள்); ஆறு ஆ — ஆறு என்று; முன்னர் கூறு—(நீ) முதலில் கூறி; பின்னர் — பிறகு; இரு பொருள்—பாசத்தையும் பாச ஞானத்தையும்; நீத்து—விலககி; மற்ற ஒரு நால் வகையும்—மற்ற நான்கு பொருள்களையும் (கூறி, அதன்பிறகு பசுஞானத்தை நீக்கி); ஈனம் இல் — இழி வில்லாத; ஞாதுரு ஞானம் ஞேயம் — ஞாதுரு ஞானம் ஞேயம்; என்று இசைய — என்று (சொல்லுதற்குப்) பொருந்தும்படி; மூன்று ஆய்—(பொருள்கள்) மூன்று என்று (கூறி, அதன் பிறகு); அவற்று — அம்மூன்றனுள் சிவ ஞானத்தை நீக்கி); பதி பசு என்ற—உயிரும் சிவனும் என்கிற; இரண்டு ஆய் (பொருள்கள்) இரண்டு என்று (கூறி, அதன் பிறகு அப்பொருள்கள்); இரண்டும் — இரண்டும்; ஒன்றின் ஒன்று—சிவத்தோடு உயிர். (முன் விடப்பட்ட பொருள்களின் கதி போல்); ஆகத் திரண்டு — ஆகும்படி கலந்து (சிவம் ஒன்றே); ஆம் பயன் – மிஞ்சக்கூடிய பொருள்; எனும் – என்று கூறகிறு; திரு அருள் — (உன்) முத்தி நிலையை; தெளியின்—ஆராய்ந்தால்;

சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றும் என்று } 'சென்று சென்றணு வாய்.........' என்று (திருவாசகத்தில்); இறை இயற்கை—சிவத்தின் இயல்பை; இயம்புதல் — விளக்கியிருப்பது (உன் முத்தி நிலைக்குப் பிரமாணமா யிருக்க); தரும்—தக்கது எனக் கருதிக் கொண்டிருப்பாய் போலும். முத்தியில் உயிரும் சிவமும் பொருளால்); ஒன்று ஆம் - ஒன்றே ஆய்விடும்; என்றல் அன்றியும்—என்றாய் அல்லாமலும்; உவப்பும் — (உயிருக்கு) இன்பமும்; இன்று என்றால் இல்லை என்றாய். அங்ஙனமாயின் (அதற்கு அம் முத்தியில் வரக்கூடிய); பயன் என் இயம்புக — இலாபந்தான் என்ன? சொல் (என்று இப்படியெல்லாம் அச்சைவவாதியின் சங்கற்பத்தை அவனுக்கருகிலிருந்த சித்தாந்தசைவர் நிராகரணம் பண்ணினார். பிறகு அவர் அப்பக்குவியை நோக்கிச் சிவனருள் எப்படிப்பட்டதென்று நீ); என்றனை — என்னை; வினவும் — வினவித் தெளியவேண்டிய; யாவும்— எல்லா வுண்மைகளையும்; விளங்க—தெளிந்து கொள்ள; வென்றிகொள் —(புலன்களை) வென்ற; கருத்தின் — உள்ளத் தினால்; விரும்பினை — விரும்பினாய்; ஆயின் — ஆகையால் (தாகங்கொண்டு); நதிக்கரை—ஆற்றங்கரைக்கு(ச் செல்கிற); ஆன் என — பசுப்போல்; வெண்ணை — திருவெண்ணெய் நல்லூர் (என்கிற); அம்பதி —அழகியநகரில்; திகழ் —விளங்கிய; மெய்கண்டவன் — ஸ்ரீமெய்கண்டார் (என்கிற காரண இடு குறித் திருநாமத்தை யுடையவரும்); அருளுள் — சிவஞானா னுபவத்தில்; நிலையுடையோன் — திரமாகத் திளைத்திருப்ப வரும்; ஒருவன் — (ஆகிய) ஒப்பற்ற ஆசாரிய மூர்த்திகள்; உரைத்த—உபதேசித் தருளிய; தவப் பிரகாசம் - தவப் பயனாகிய சிவஞானம் (அச்சந்தானத்தில் தமக்குக் கைவந்த); தன்மையில்—சிறப்பினால் (ஸ்ரீமத் உமாபதி சிவசாரியார்); விரித்த—விரைத்துரைத்த; சிவப்பிரகாசம் — சிவப்பிரகாசம் (என்கிற திருப்பெயர் கொண்ட சைவ); செழுந்தமிழ்—வளங் கொழிக்கிற தமிழ்நூலின்; உண்மையை — உட்பொருளை; கொதித்து அலமந்து—மிக விரும்பிச் சுழன்று (அப் பெருமானாரை யடைந்து அவர்பால் விளங்குகிற); அருளுடன்— திருவருளைத் துணைக்கொண்டு; ஆய்ந்து கொள்ள — ஆராய் வாயே யானால்; திரு அருள்—சிவனருள் (எப்படிப்பட்டது என்கிற உன்); வினவல் - வினா; திருந்திடும் (விடை) தெளிவாகக் கிடைக்கும் (என்றார். அவனும் அப்படியே செய்து அறிவு தெளியப்பெற்று நலன் எய்தினான்)

வரி 2 இல் ஏ, 5 இல் எ, 12 இல் ஏ, 15 இல் மற்று, 46 இல் ஏ, 54 இல் ஏ, 63இல் ஏ, 65இல் ஆம் 76 இல் அன்றே அசைகள். வரி 32 'திதமுறும்' என்பதை திதமும் உறு என மாறுக.

வரி 49. 'என்றிவை' என்பதை என்ற இவை எனப் பிரிக்க.

வரி 57. 'மற்றெரு' என்பதை மற்ற ஒரு என்க.

வரி 59. 'என்றவற்று' என்பதை என்ற அவற்று என்க.

௬௫ருத்ரூ
(பெத்த மறுப்பு)

1. சங்:- உயிர் ஞான சொரூபி. சகலாவத்தையில் அது வேறொன்றன் துணையையும் நாடாமலே விடயங்களை அறிய வல்லது.

நிரா:- உயிர் அநாதியே அறிவுப் பொருள் என்றாய். உறக்கத்தில் உயிரைவிட்டு இந்திரியங்களும் விடயங்களும் விலகுகின்றன. உயிர் அறிய வல்லதாயின் அப்போதும் அறிய வேண்டும் அஃதில்லை.

சங்:- வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு இவற்றைக் கூட்டி மென்றால் இடையில் சிவப்புத் தோன்றும். அவை கூடாவிட்டால் அது தோன்றாது. அப்படியே உயிர் இந்திரியங்கள் விடயங்கள் என்பன சேர்ந்தால் இடையில் அறிவு தோன்றும். அவை சேரா விட்டால் அது தோன்றாது. அப்படித் தோன்றுதலுந் தோன்றாமையும் அடுத்தடுத்து நிகழும்.

நிரா:- அறிவு அடுத்தடுத்துத் தோன்றியுந் தோன்றாமலு மிருக்கும் என்றாய். அது பௌத்தரின் கணபங்கவாதம்; உனக்குப் பொருந்துவ தெப்படி?

2. சங்:- உயிர் அறிவுடையதாயினும் ஆணவ மலத்தோடு கூடிக் கேவலாவத்தையிற்பட்டு அறியமாட்டததா யிருக்கும்.

நிரா:- உயிர் அறிவுடையது, கேவலாவத்தையில் அறிவில்லாதது என்றாய். அவ்விரண்டும் முரணுகின்றன. அவ்விரண்டிலும் உண்மை கூறும் வசனம் எதுவோ வென்கிற சந்தேகமுந் தப்பவில்லை. அப்படி முரண்பாட்டிற்கும் ஐயப்பாட்டிற்கும் இடனாமாறு பேசுவது அறிஞர் சபையில் செல்லாது.

3. சங்:- கண்ணுடையவனுக்கு இருளில் விளக்குக் கொடுக்கப் பட்டுக் காட்டாக வுதவும். அப்படியே உயிர் கேவலத்தில் ஆணவ மலத்தோடு கூடிக் கிடக்கும், அப்போது அதற்கு அறிவில்லை. அதனைச் சுடரற்ற விளக் கென்னலாம். சிவபிரான் அதற்குக் கலைமுதலிய தத்துவங்களைக் கொடுப்பான். அது அவற்றைத் தனக்குக் காட்டாகக் கொண்டு அறிந்து பிராரத்தங்களை யனுபவித்துவரும். அப்படி வருகையில் அதற்கு ஆகாமியங்கள் ஏறும். பிறப்புக்களும் பலவாய் வந்துகொண்டிருக்கும்.

நிரா:- ஆணவமலம் இருள்வடிவினது. சிவன் ஒளிவடிவினன். உயிர் சுடரற்ற விளக்கு. கலை முதலிய தத்துவங்கள் மயக்க வடிவின. சிவன் முன் நிற்கமாட்டாதன. அவற்றை அவன் கொடுத்தலும் அறிவற்ற வுயிர் ஏற்றலும் எப்படி? உயிர் அவற்றைப் பொருந்திச் சகலத்தை யெய்தினும் எய்துக, பொருந் தாமற் கேவலத்திற் கிடக்கினுங் கிடக்க. உன் முத்தி மார்க்கமும் பயனற்றதே.

(முத்தி மறுப்பு)

4. சங்:- உயிர் பலபிறப்புக்களை யெடுத்து வருகிறபோது, அதற்கு ஆணவமலத்தின் பரிபாகமும், சத்திநிபாதமும் எய்தக் கூடிய புண்ணியப் பிறப்பு வரும்.

நிரா:- ஆணவமலத்தின் பரிபாகங் காரணமும், சத்திநிபாதம் அதன் காரியமுமா? சத்திநிபாதங் காரணமும் ஆணவமலத்தின் பரிபாகம் அதன் காரியமுமா?

சங்:- ஆணவமல பரிபாகமே காரணமாகும்.

நிரா:- உயிர் உடலெடுக்கத் தொடங்கியதிலிருந்து இவ்வளவு காலத்திற்குப் பிறகு மலபரிபாகத்தை யெய்துமென் றிருக்க வேண்டும். அது கால எல்லை. உயிர் உடலெடுக்கத் தொடங் கியதிலிருந்து இத்தனையாவது உடலில் மலபரி பாகத்தை யெய்து மென்றிருக்கவேண்டும் அது சரீர எல்லை. உயிர் தன் புண்ணிய பாவங்களின் சமநிலையில் மலபரிபாகத்தை யெய்து மென் றிருக்க வேண்டும். அது இருவினை யொப்பு எல்லை. உயிர் பிறப்பை இன்பமாகக் கருதிவந்து பிறகு துன்பமென வுணர்கிறபோது மலபரிபாகத்தை யெய்து மென் றிருக்க வேண்டும். அது பிறப்புத் துன்பமென்கிற வுணர்ச்சி எல்லை. ஒருயிரைக் குறித்து இவ் வுயிருக்கு அருள வேண்டுமெனச் சிவபிரான் கருணையினால் நிர் ஹேதுகமாகச் சங்கற்பிக்கிறபோது அவ்வுயிர் மலபரிபாகத்தை

யெய்து மென்றிருக்கவேண்டும். அது சிவபிரானின் சங்கற்ப எல்லை. ஆக எல்லைகள் ஐந்து. அவற்றுள் ஏதாவதொன்றுதான் ஆணவமல பரிபாகத்துக்குரிய சந்தர்ப்பமா யிருக்கமுடியும். அஃதெது?

சங்:- இருவினை யொப்பு என்கிற எல்லையிற்றான் அம்மல பரிபாகம் வரும்.

நிரா:- நல்வினைக்குந் தீவினைக்கும் உருவமிருந்தால் அவற்றைத் தராசிலிட்டுச் சமங்காணலாம். ஆனல் அவை அருவம். அவற்றை நிறுக்கமுடியாது. சமங் காண்பதெப்படி? அன்றியும் ஒரு வினையைச் செய்தால் அதுவே புண்ணியமும் பாவமுமாகிய இரண்டுமாகாது. அது நல்வினை யானல் புண்ணியத்தையும். தீவினை யானல் பாவத்தையுந் தரும். புண்ணியத்துக்கு இன்பமும், பாவத்துக்குத் துன்பமும் நிச்சயம். அப்படி முற்றிலும் முரணுவன மூவகை யிருவினைகளும். அவை துலை யொப்பது எப்படி?

5. **சங்:-** உயிருக்கு அனுக்கிரகிக்கும் பொருட்டுச் சிவபிரான் ஓ ராசிரிய வடிவந் தாங்குவார்.

நிரா:- ஆசாரியன் அருள்வடிவினன் என்றாய். அவன் எதிலிருந்து சரீரங்கொள்வான்?

சங்:- அவன் மாயையிலிருந்து சரீரங்கொள்வான்.

நிரா:- அவன் மாயையிலிருந்து சரீரங்கொண்டால் சிவனுகான், உயிரே யாவன்.

6. **சங்:-** ஆசாரியன் தன்னை யடைந்த உயிரின் தகுதியைக் கருதி அவ்வுயிரைச் சரியை கிரியை யோகங்க ளாகிய மூன்று தொண்டுகளிலே நிறுத்தி அதற்கு ஞானத்தைக் கொடுப்பான், அத்தொண்டுகள் காரணம். அதன் காரியம் ஞானம்.

நிரா:- அத்தொண்டுகளின் காரியம் ஞானம் என்றாய். அவை காரணமா யிருந்து தருகிற பலன் வேறு. அதுதான் சரியைக்குச் சாலோகமும். கிரியைக்குச் சாமீபமும், யோகத்துக்குச் சாரூபமு மாம். சாத்திரங்களும் அப்படியே சொல்லுகின்றன. அன்றியும் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும், திருநாவுக்கரசு சுவாமிகளும் அத்தொண்டுகளைச் செய்யாமலே ஞானத்தைப் பெற்றார்கள். திருநாவுக்கரசு சுவாமிகள சமணத்துக்கும் போய்வந்தவர்கள். அப்படியெல்லாமிருக்க அத்தொண்டுகளை ஞானத்துக் காரண மென்றல் செல்லாது. அவை ஞானமுண்டாதற்குச் சந்தர்ப்பமளிக்கும். அத்தனையே.

7. சங்:- உயிருக்குக் கருவிகளுடன் கூடியது சகலாவத்தை; ஆணவமலத்துடன் மாத்திரங்கூடியது கேவலாவத்தை. அவ்விரண்டும் நீங்கவேண்டும். அதற்காகவே ஆசாரியன் தன்னிற் பிரிவிலாத சிவஞானத்தைக் கொடுப்பான்.

நிரா:- உயிருக்குச் சகலாவத்தையைத் தருகிற தத்துவங்களும், கேவலாவத்தையைத் தருகிற ஆணவமலமும் நீங்குதற்காகவே ஆசாரியன் ஞானத்தைக் கொடுப்பான் என்றாய். உயிருக்குக் கேவலத்தில் தத்துவங்களில்லை. அதனால் அறிவுங் கிடையாது. அந்நிலையிற் சிவஞானங் கைகூடுவது எப்படி? சகலத்தில் உயிருக்குத் தத்துவங்கள் மயக்க அறிவையே உண்டாக்கும். அந்நிலையிலும் சிவஞானம் பலித மாகாது. அவ்விரண்டவத்தைகள் தவிர வேறும் அவத்தை உன்மதத்திலில்லை. உயிர் சிவஞானத்தை எந்த அவத்தையிற் பெறும்?

8. சங்:- உயிர் அச்சிவஞானத்தைத் தரிசிக்கும்.

நிரா:- அத் தரிசனமும் தனு கரண புவன போக மென்கிற மயாகாரிய சம்பந்தத்தால் வரக்கூடியது என்றாய். சிவஞான தரிசனத்தில் உயிரறிவு இல்லையாகிறது. அத்தரிசனமும் மாயா காரிய சம்பந்தமுடையது என்றால் ஈன ஞானியரென யாருமிரார். எல்லாருமே சிவஞானியர்தான் அப்படிச் சொல்ல நேரும். அதனால் பதிஞான பசுஞானங்களின் வேற்றுமையும் புலனாகாமற்போம்.

9. சங்:- உயிர் தன்னையும், சிவஞானத்தையும், சிவனையும் இவ்வியல்பின என்று பிரித்தறிய மாட்டாது.

நிரா:- உயிர், சிவஞானம், சிவம் என மூன்று பொருள்களைப் பிரஸ்தாபித்தாய். பசுஞானம், பாசம், பாசஞானம் என்கிற மூன்று பொருள்களை மறந்தாய். அப்பொருள்கள் ஆறும் தம்முட் கலக்கமாட்டா. பதிக்குப் பதிஞானமும், பசுவுக்குப் பசுஞானமும், பாசத்துக்குப் பாசஞானமும் உரியன, அங்ஙனமாக, உன் முத்தியில் உயிர் சிவஞானத்தோடு இயைந்து சிவத்தில் ஒன்றாய்ப் போம் என்றாய். எஞ்சியுள்ள பசுஞானம். பாசம். பாசஞானம் என்கிற மூன்றும் என்ன கதியை அடையும்? அதை விளக்கு.

10 சங்:- முத்தியில் உயிருஞ் சிவமும் கலந்து ஒரு பொருளேயாய்விடும்.

நிரா:- உயிருஞ் சிவனுங் கூடி ஒருபொருளே எஞ்சும் என்றாய். அது மாயாவாதம் நீ முதலில் பதி. பதிஞானம், பசு, பசுஞானம். பாசம், பாசஞானம் என ஆறுபொருள்கள் கூறினாய். பிறகு பாசத்தையும் பாசஞானத்தையும் விலக்கி நான்கு பொருள்கள் கூறினாய் அதன்பிறகு அவவிரண்டோடு பசுஞானத்தையும் விலக்கி ஞாதுரு ஞானம் ஞேயம் என்கிற பரிபாஷையால் மூன்று பொருள்கள் கூறினாய். அதன்பிறகு சிவஞானத்தையும் விலக்கி உயிர் சிவம் என இரண்டு பொருள்கள் கூறினாய். இறுதியில் அவ்

விரண்டுந் திரண்டு எஞ்சக்கூடிய பொருள் ஒன்றே யெனக் கூறினாய். இப்படியாக உன் ஆறு பொருள்களும் ஒன்றன்பின் ஒன்றாகத் தேய்ந்து தேய்ந்து சூனிய மாகி ஒருபொருளே யென்கிற அளவிற் போய் நின்றன. அதனை யாராய்ந்தால் 'சென்றுசென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந் தொன்றாய்' என்கிற திருவாசக அடி நினைவுக்கு வருகிறது. ஒருக்கால் உன்முத்தி நிலைக்கு அந்த அடியைப் பிரமாண மாக்கிக் கொண்டாய் போலும். அவ்வடி அதன்பொருள் தெரியமாட்டாத உன்னைத் தெருவில் விட்டது.

11. சங்:- முத்தியில் உயிருக்கு இன்பநுகர்ச்சி யில்லை.

நிரா:- உயிருக்கு முத்தியில் இன்பமும் இல்லை என்றாய். அம் முத்தி எப்பயனும் அற்றது என்பதாயிற்று. அதனை யெய்து தற்குச் சாத்திரங்களிற் கூறப்பட்டுள்ள சாதனங்க ளெல்லாம் விருதாகோஷம், மனிதன் படுகிற பாடெல்லாம் வீண் வேலை யென்று நீ கூறினை யானாய். அத்தோஷம் உன்னை விடாது.

இப்படி அச்சித்தாந்த சைவர் சைவவாதியின் சங்கற்பத்தை நிராகரணம் பண்ணி விட்டுத் தம் எதிரில் நின்ற அப்பக்குவியை நோக்கி, 'அன்பனே, நான் ஆசரித்து வருகிற சித்தாந்த சைவம் பற்றி என்னை வினவித் தெளிந்துகொள்ள விரும்பினாய். புலனடக் கத்தால் உன் உள்ளம் பக்குவப்பட்டிருக்கிறது. அவ்விருப்பத் துக்குக் காரணம் அதுவே. ஆகையால் நான் சொல்வதைக் கேள். திருவெண்ணெய்நல்லூரில் அவதரித்தவரும், சிவஞானனுபூதிப் பெருஞ்செல்வரும், மெய்கண்டார் என்கிற திருநாமததை யுடையவரும் ஆகிய ஒப்பற்ற ஆசாரிய மூர்த்திகளின் சந்தானத் தில் அந்த முப்பொருளுண்மை உபதேசிக்கப்பட்டு வருகிறது. அச் சந்தானத்தில் வந்துளளார் ஸ்ரீமத் உமாபதிசிவா சாரியார். அவர் அருளிச் செய்த நூல் சிவப்பிரகாசம் என்பது. நீர்வேட்கையை யுடைய பசு ஆற்றங்கரையை யடையும். அப்படியே பிறவி நீக்க வேட்கையுடைய நீ அவரைச் சரணடை. அவரநுக்கிரகத்தைப் பெறு. அத்துணைகொண்டு அந்நூலை யாராய் சிவனருள் எப்படிப்பட்டது என்கிற உன் வினாவுக்கு யாராலும் நிராகரணம் பண்ணமுடியாத திருத்தமான விடை கிடைக்கும். உன் வேட்கை தணியும். உனக்கு உய்தி கூடும். சத்தியம்' என்றுரைத்தார். அவனும் அவ்வுரையைச் சிரமேற்கொண்டு அப்படியே செய்து சிவமாந்தன்மைப் பெருவாழ் வெய்தினான்.

திருச்சிற்றம்பலம்.

சங்கற்ப நிராகரணம் மூலமும்
''வ்ருஷபத்வஜம்'' என்னும் உரையும்
நிறைவேறின.

பழைய வைதிக சைவம் பரக்கவே.
ஸ்ரீமெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.
ஸ்ரீ உமாபதிசிவம் திருவடி வாழ்க.
Jai Bharath.

உ

பிற் சேர்க்கை 1

சித்தாந்தசைவம்	ஐக்கியவாதம் சைவம் எனப்படும்வீரசைவம்
1. நாம் சித்தாந்த சைவசமயத் தினேம்.	சைவத்திற்கு மிகவும் கீழ்ப் பட்ட ஐக்கியவாத சைவ மெனப்படும் வீரசைவசமயத் தினர். திருப்பாதிரிப் புலியூர், பேரூர் போன்ற மடத்து வழியினர்.
2. நமக்குத் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தர மூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள். ஆகிய நால்வரும் மெய் கண்டதேசிகர். அருணந்தி சிவம்,மறைஞான சம்பந்தர் உமாபதிசிவம் ஆகிய நால்வரும் முறையே சமய ஆசாரியரும் சந்தான ஆசாரியரும் ஆவர்.	வீரசைவ சமயத்தினருக்கோ. ரேணுகர். அல்லமர். வசவர் முதலானவர்களே ஆசாரிய ராவார். அங்ஙனமாகவும் அவர் "ஊரார் உடைமைக்குப் பேயாய்ப் பறப்பவர் போல" நமக்குரிய ஆசாரியரான மாணிக்கவாசக சுவாமிகளைத் தமக்குரிய ஆசாரியரென்று அபகரிப்பதும், நெருக்கிக் கேட்ட காலத்து மாணிக்க வாசக சுவாமிகள் சித்தாந்த சைவரே யென்பதுமாகிய தடுமாற்ற நிலையினர்.
3. நாம் திருக்கைலாய பாம் பரை மெய்கண்ட சந்தானத் தேம்.	அவர் நமது சந்தான ஆசாரி யரால் பாஷண்டிகளாகக் கருதப்பட்டுச் சங்கற்ப நிரா கரணம் பாஷண்ட நிரா கரணம் என்னும் நூல்களால் கண்டித்து ஒதுக்கப்பட்ட மற் றொரு மரபினர்.
4. சிவாகமங்களில் விதித்துள்ள சமயம், விசேடம். நிரு வாணம் ஆகிய தீக்ஷைகளே நமக்கு உரியவைகள்	அவர் அத்தீக்ஷைகளை வேறு பிரகாரத்தால் உடையவர்.

5. வேத சிவாகமங்களில் விதிக்கப்பட்ட சிவசின்னங்களாகிய விபூதி உருத்திராக்கங்களே நாம் அணிவன. “பரமசிவன் அமலன் பத்தர்க்குச் சின்னம், உருவுடலிற் கண்டியும் நீறும்” என்று சைவ சமய நெறிக்குறளும் கட்டளையிடுவதாயிற்று.	அவர் வேதசிவாகமங்களில் சின்னமாக விதிக்கப்படாத ‘லிங்கதாரண’மும் செய்பவர்.
6. சிவமூர்த்தியை இடதுகையால் தொடுதலும் ஆகாதென்பது சிவாகம விதி.	அவர் சிவமூர்த்தியை இடதுகையில் வீற்றிருக்கச் செய்து பூசை புரிவதையே வழக்கமாகக் கொண்டவர்.
7. உண்ணுமுன் மாத்திரம் சிவபெருமானுக்கு நிவேதனம் செய்வதே சிவாகமம் விதித்த ஆசாரம்.	அவர் இடதுகையில் சிவபெருமானை வைத்துக்கொண்டு முதலில் ஒரு பிடி உணவை நிவேதனம் செய்து தாம் உட்கொண்டு எச்சிலான மீதி உணவையும் பிடிபிடியாகச் சிவலிங்கப் பெருமானுக்கூட்டுபவர். “பிடிக்குப் பிடி நமசிவாயமா” என்று உலகத்தார் இழித்துக் கூறும்பழக் மொழியும் இவரது ஆசாரத்தைக் குறித்தே வழங்குவதாயிற்று.
8. நம்மவரில் சிவபூசையேற்ற ஒருவர் இறந்து விடுவாரானால், நாம் அவர் பூசித்த சிவ மூர்த்தியை வேறு சிவ பூசை புரிபவரிடத்தில் ஒப்புவிப்போம்.	அவரைச் சார்ந்தவரில் ஒருவர் இறந்து விடுவாரானால் இறந்த சவத்தோடு சிவமூர்த்தியையும் ஒருங்கு சேர்த்துப் புதைப்பது அவர் வழக்கம். ஐயோ பாதகம்! பாதகம்!

9. நாம் ஆணவம். மாயை, கன்மம் என்னும் மும்மலங்களும் அநாதி நித்தியம் என்று கூறுவோம்.

அவர் எல்லாப் பெருங்கேட்டிற்கும் மூல காரணமாகிய ஆணவ மலம் இல்லை என்று கூறுவர். அல்லாமலும், ஆணவ மலம் உண்டு என்று நிச்சயிக்கும் சிவாகம வாக்கியங்களை நிந்திப்பர்.

10. நாம் ஆணவ மலத்தினால் மறைக்கப்பட்ட ஆன்மாவினது அறிவு, இச்சை, செயல்கள் மாயையிலிருந்து செய்யப்பட்ட உடம்போடு கூடிய வழி விளங்கும் என்போம்.

அவர் சூரியனை மேகம் மறைத்தாற்போல மாயையே ஆன்மாவினது அறிவு இச்சை செயல்களை மறைத்து விடுகிறது என்பர்.

11. உயிர் கண்ணொளியெனத் தானென வேற்றுமை இல்லாமல் உடனாய் விரவி நின்று கண்ணுக்குக் காட்டிய அதனைக் கண்கண்டதென்றும் கண்ணை அதிட்டித்து நின்ற உயிர் கண்டதென்றும் பகுத்தறியவாராது அத்துவிதமாகி ஒருங்கே நிகழ்ந்தாற் போல முதல்வனை இன்றியமையாத உயிர் ஒரு விடயத்வத அறியுங்கால் முதல்வனது சிற்சத்தி ஆன்ம சிற்சத்தியெனத் தானென வேறு இல்லாமல் உடனாய் விரவி நிற்ப முதல்வனும் அவ்வாறு விரவி நின்று ஆன்மாவிற்கு அறிவித்ததொன்றனை அவ்வான்மா அறிந்ததென்றும் அதனை அதிட்டித்து நின்ற தான் அறிந்தானென்றும் பகுத்தறிய வராது அத்துவிதப்படுவதே வேத சிவாகமம் விதித்த பேரின்ப முத்தி.

நீரும் நீரும் ஒன்று சேருவது போல அறிவும் அறிவும் செறிவதே முத்தி என்பது அவர் கொண்ட முத்தி.

இதுபற்றியே உமாபதி சிவம்

''நீயலை பொருத மாயாவாதியாயினை அமையும்'',

என்று சங்கற்ப நிராகரணத்தில் கட்டளையிடுவதாயிற்று.

இவ்வுண்மைகளைச் சித்தாந்த சைவர்கள் நன்கு உணர்ந்து அந்நிய மதத்தினர் போதனைக்கு உட்படாதிருப்பாராக.

மேற்கண்ட பகுதி 'திருநெல்வேலி, மெய்கண்ட சந்தானத்தான், என்பவரால் "ஓர் அறிவிப்பு" என்னுந் தலைப்பில் 13—4—1920 இல் பாளையங்கோட்டை, டார்லிங் பிரிண்டிங் பிரஸ்-இல்' அச்சிட்டு வெளிப்படுத்தியவாறு தரப்பட்டுள்ளது. 1-இல் மட்டும் பதிப்பாசிரியரால் சிறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஐக்கியவாதி முத்தி மறுப்பிற்குப் பிரமாணம்

சென்றணையு நிழல்போலச் சிவனிற்ப னென்னிற்
சென்றணையு மவன்முதலி சிவத்தையணைந் தொன்றாய்
நின்றதுயிர் கெட்டடென்னிற் கெட்டதணை வின்று
நின்றதேற் கேடில்லை யணைந்துகெட்ட தென்னிற்
பொன்றினதேன் முத்தியினைப் பெற்றவரார் புகனீ
பொன்றுகையே முத்தியெனிற் புருடனித்த னன்று
மொன்றியிடு நீரொடுநீர் சேர்ந்தாற்போ லென்னி
னொருபொருளா மதிபதியோ டுயிர் பொருள் ஒன் றன்றே

—சிவஞானசித்தியார்-11.9.

உ

பிற்சேர்க்கை 2

சிவாத்துவித சைவம் வேறு சித்தாந்த சைவம் வேறு என்பதற்கு அவ்வச்சமயக் கொள்கைகளிற் சிலவற்றைப்பிரமாண சகிதம் கீழே காணலாம்:

சிவாத்துவித சைவக் கொள்கைகள்	சித்தாந்த சைவக் கொள்கைகள்
1. சிவசிற்சத்தியே உலகமாகப் பரிணமித்தது. (நாமரூபவிபாகஅநருகமாய சூக்கும சிதசிற்சத்தி விசிஷ்டராகிய சிவபெருமான் காரணர்: நாமரூப விபாக அருகமாகிய ஸ்தூல சித்சிற்சத்தி விசிஷ்டராகிய சிவபெருமான் காரியம்' — பிரமசூத்திரம். I i 5 நீலகண்டருரை)	1. அசுத்த மாயை உலகமாகப் பரிணமிக்கும் (நான்கு வாக்குக்களும் ...... சுத்த மாயையினின்றும் விருத்தியாய்க் காரியப் படுவனவன்றி அசுத்தமாயா காரியம் போலப் பரிணமமாய்க் காரியப்படுவனவல்ல – சித்தியார் I. 24 உரை.
2. சிவமே பாசத்தை அறிவது ('பற் பல வஸ்து சமூகங்களைப் பார்த்தறியும் ஞானம் எவர்க்குளதோ அவர் விபச்சித எனப் படுவராகலின் விரோதமில்லை' — பிரம சூத்திரம் III. Ii 16 நீலகண்டருரை.)	2. பசுவாகியஆன்மாபாசத்தையறிவது ('சத்தசத்தறிவ தான்மா — சித்தியார் I 24 உரை.
3. சிவத்தொடு பொருந்தினவன் மீளினும் இழுக்கில்லை (முத்தருக்குச் சதேகத் தன்மையும் விதேகத்தன்மையுமாகிய இரு பிரகாரமும் பொருந்துகின்றன — IV. iv 12. நீலகண்டருரை.)	3. சிவத்தொடு பொருந்தினவன் கருவிக் கூட்டத்திற் சொல்வானல்லன். (பொருந்திடுவன் சிவத்தினொடும் போதான் பின்னை'-சித்தியார் VIII. 37.)

இவவுண்மைகளைக் குசாக்கிர புத்தியுடையோர் தாமே யறிவார்; ஏனையோர் தொல்லாணை நல்லாசிரியனை வழிபட்டு அறிய முயல்வர். அவ்வாறன்றிப் பிறிதுபிறிதுரைப்பார்க்கு நான் செய்யக்கடவ தொன்றுமில்லை. மேற்காட்டியவாற்றான் சிவாத்துவித சைவமும் சித்தாந்த சைவமும் தம்முள் வேறென்பது பெறப்படும்.

இனி சித்தாந்த மாபாடியம் பக்கம் 4. வரிகள், 21,22, பக்கம் 6. வரிகள் 32-34, பக்கம் 7 வரிகள் 1-8, பக்கம் 126 வரிகள் 26-31, பக்கம் 127 வரிகள் 15.16. சிவஞான சித்தியார் சுபக்கம் (II. 53) பக்கம் 83 வரி 17, (VII-1) பக்கம் 135 வரிகள் 24-25, (VIII. 38) பக்கம் 166 வரிகள் 4-7, சிவப்பிரகாசம் செய்யுள் 99, சங்கற்ப நிராகரணம் செய்யுள் 11:- இவற்றில் சிவாத்துவித சைவம் சித்தாந்த ஆசிரியன்மாரால் கண்டிக்கப்பட்டிருத்தலின் சிவாத்துவித சைவம் வேறு சித்தாந்த சைவம் வேறு என்பது தெளியப்படும்.

இன்னும் 'ஏனைப் பாடாணவாத சைவர் முதவிய அறுவரும் பொருளுண்மையெல்லாம் சித்தாந்த சைவரோடு ஒப்பக் கொள்ளும் அந்தரங்க வுரிமை யுடையராயினும் அவ்வப்பொருள் கட்குக் கூறும் தன்னியல்பு பொதுவியல்பு மாத்திரையின் முரணுதலான் அவர் சமயம் அகச்சமயம் என வேறு வைத்தெண்ணப்பட்டன' (சித்தாந்த மாபாடியம் பக்கம் 6. வரிகள் 25-29) என ஸ்ரீ சித்தாந்த பாஷ்யாசாரிய சுவாமிகள் அருளிச் செய்தமையான் மேலது நன்கு அறியப்படும்.

மேற்கண்ட பகுதி, ராஜவல்லிபுரம், காருடை. சு. சூரியமூர்த்தி பிள்ளையவர்கள் 12-6-1917 இல் 'பிரமசூத்திரம் ஏகாத்ம வாத நூல்... ..'முதலிய 4 விஷயங்கள் பற்றி 15 பக்க அளவில் வெளிப்படுத்திய துண்டுப் பிரசுரம் பக் 12-13 இல்'' உள்ளபடி இங்கு வெளியிடப்பட்டுள்ளது.

உ

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
VI	9	நுண் பொருருளை	நுண் பொருளை
XI	18	சாந்தி	சாத்தி
XIII	32	சுலோகபஞ்விஷயம்	சுலோகபஞ்சக விஷயம்.
XV	35	18—12—83	18—12—82
XVI	2	48ஆம்	47 ஆம்
,,	25	நெஞ்சந்து றப்பில்	நெஞ்சந்து றப்பிப்
2	34	இன்பின்	அடி 13இல் ஏ அசை (விடுபட்டுள்ளது, சேர்க்க)
4	18	நிகழ்தர	திகழ்தர
7	10	யிலக்கணங்கள்	யிலக்கணங்களை
,,	17	நவிறறுவன்	நவிற்றுவன்
,,	26	மதின்மர்	பதின்மர்
8	36	இன்பின்..........	அடி 5 இல் ஆல், அடி 6ல் அன்றே அடி 40இல் மற்று, அடி 45இல் மற்று, அடி 50ல் ஏ என்பன அசைகள் (விடுபட்டுள்ளன சேர்க்க)
11	27	பிரமந் தோன்றிய	பிரமந் தோற்றிய
12	18	போன்று	போன்றும்
,,	20	வரும்	வரு
13	26	தன்னில்;	தன்னில்—தன்னில்;
14	23	தான் ஒழிந்து— தன்மாத்திரம்	தன் ஒழிந்து— தான் மாத்திரம்
15	7	பாயுறு	பாயுரு
,,	11	தொழிற்படுஞ் சுழுத்தி	தொழிற்படுஞ் சொப்பனம் சித்த மட்டில் தொழிற்படுஞ் சுழுத்தி
,,	12	'தோன்றிய'	'தோற்றிய'
,,	13	இன்பின்	அடி 36இல் ஏ, 49இல் ஏ, 58இல் ஏ என்பன அசைகள் (விடுபட்டுள்ளன, சேர்க்க)
18	27	பாநற்	பசுநற்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
21	12	தென்ஞற்	தென்ருற்
22	27	வெளியிடுகிற	வெளியிடுகிறபடி
23	16	அனவஸ்ததோஷம்	அனவஸ்தாதோஷம்
24	17	அறைந்தற்கு	அறைந்தற்று
27	26	சொன்ஞம்	சொன்ஞய்
29	14	அனனியம்	அன்னியம்
,,	30	பெற்ரேற் போல்	பெற்ருற் போல்
31	10	பிரமும்	பிரமம்
,,	38	இவ்வினேயும்	இருவினேயும்
32	23	கிடையாது	அடையாது
33	4	—விரோதமும், (என்பதன் பின்)	காட்சி — அனுபவத்துக்கு; விரோதத்தன்மையும் — விரோதமும்; (விடு பட்டுள்ளன, சேர்க்க)
,,	32	தரும் எனில்—	தகும் எனில்
35	15	ஒன்றே ஒன்று	ஒன்றே என்று
36	11	முத்தியை; (என்பதன் பின்)	அடைந்திட வேண்டும் — சேரவேண்டும்; அறிந்தோர் —ஞானம் பெற்ற சீவரே, முத்தி — முத்தியை (விடு பட்டுள்ளன, சேர்க்க)
,,	26	கருமகாண்டத்து	கரும காண்டத்தில்
37	26	உடலுள்ள	உடலிலுள்ள
		போதின்றி	போதன்றி
38	15இன்பின்	அடி 31, 38, 41, 45. 51, 54. 80, 91, 97, 119, 126, 130, 132. 140 142, 158, 184; 187. 193, 196, 200, 202, 207, 223, 236, 254 இல் ஏ,	

அடி 47. 69. 109, 115. 139. 162, 169. 231இல் அன்றே, அடி. 46, 48, 82, 87, 107, 191இல் ஆல், அடி, 40, 89, 96, 161. 204இல் தான்,

அடி 35, 137இல் மற்று. அடி 8. 97இல் ஆம், அடி 59 இல் ஆங்கொல், அடி 72ல் என்ப, 72இல் கொல். அடி 228இல் தாம், அடி 254இல் ஓ என்பன அசைகள் (விடு பட்டுள்ளன, சேர்க்க)

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
40	21	பிரமும்	பிரமம்
,,	,,	வேதம்	வேதமே
41	2	பிரமும்	பிரமம்
,,	4	பசுக்களுக்கு	பசுக்களுக்கே
43	7	யுண்டெண்ப தாயிற்று	யுண்டென்பதாயிற்று
45	13	உவமையாத லில்லை	உவமையாகாது. (அதன் பின்) அதனுல் சிலந்தியும் பிரமத்துக்குச் சரியான உவமையாதலில்லை (என்ற தொடர் விடுபட்டுள்ளது சேர்க்க)
,,	14	யுண்டாக்குமென்கிற	யுண்டாக்குமென்ற
47	7	திபத்துக்	திபத்துக்கு
,,	9	திபமிருக்கிற போதே (என்பதன் பின்)	நசிக்கும், பிரமமும் பிர பஞ்சம் இருக்கிறபோதே (என்பது விடுபட்டுள்ளது சேர்க்க)
,,	28	அவ்வுபாதிகள் (என்பதன் பின்)	காரணம் வேண்டாமை யால் (விடுபட்டுள்ளது. சேர்க்க)
49	6	நுழைக்க வேண்டும் (என்பதன் பின்)	அப்படியே பிரமம் சரீரங் களில் நுழைந்து கொள்ள மாட்டாது. அதனை அவற் றில் ஒருவர் நுழைக்க வேண்டும் (என்ற வாக்கி யங்கள் விடுபட்டுள்ளன. சேர்க்க)
,,	15	பிரதிபிம்பமெனக் காணுது	பிரதிபிம்பமெனத்தானே காணுது.
50		முதல் 3 வரிகள்	மீள அச்சாகிவிட்டமை யால் நீக்கிவிடுக.
51	15	சரீரங்களில்	சரீரங்களில் தங்கி
,,	17	லினைகள்	வினைகள்
52	17	பிரதிபிம்பத்துள்ள	பிரதிபிம்பித்துள்ள
53	2	பிரமி	பிரமிதி
,,	34	ஸத்தத்தில்	பெத்தத்தில்
55	7	பிரகாசித்தல்	பிரகாசித்தால்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
55	17	புலியும்	புலியும் பொருளால்
..	27	என்பதே	என்பதே உலகறிந்த
56	27	என்ருல்	என்ருய்
57	31	யுதவுகித	யுதவுகிற
58	25	மாயவாதப்	மாயாவாதப்
.,	37	கருமுகி	[1]கருமுகி
60	11	அவனருள்	சிவனருள்
.,	32	முன்னாக்	முன்னர்க்
	38	குறிகொ ளான	குறிகொ ளாஊ
61	7	யாயினே யவையு	யாயினே யமையு
63	9	எஸ்பதைச்	என்பதைக்
,,	12	ஒ (அடி. 15)	(ஓ அடி. 5) ஏ (அடி. 15)
64	32	மூன்றென்பை	மூன்றென்பதை
.,	35,36	ஆன் மாவும் பொருளால்	ஆன் மாவும் சிவமும் பொருளால்
66	27	நன்றென வாகுந்	நன்றென லாகுந்
	36	10	15
68	18	குணமாகவுடைய பொருளுக்கு	குணமாகவுடைய தெனப் பட்ட உயிர் எதனேயும் நுகர மாட்டாது. நுகர் தற்கு அறிவு வேண்டும். எத்தனே கரணங்கள் சேர்ந் தாலும் அறியாமையைக் குணமாகவுடைய பொரு ளுக்கு
,,	19	மாட்டா	மாட்டாது.
71	16	செம்மையும்	செம்பையும்
72	18	பெறுற்	பெறும்.
,,	19	அப்படி	அப்படியே.
76	15	யெல்லா	யெல்லா
78	3	தெரிய—	தெரியா—
79	35	திருட்டாந்தம்—	திட்டாந்தம்—
80	4	தனி — தாள்	தனி — தான்
,,	18	இவள்—	இவன் —
81	18	அச்சொல்—	இச்சொல்
82	13	என்றளே	என்றனே
.,	32	—விட்டு வியாபித்து	—வியாபித்து
83	6	ரென்னில்	ரென்ருல்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
,,	18	தான் (அடி-7)	தான் (அடி—8)
84	21	அதனை யறிய	அவற்றை யறிய
,,	23	ஞானத்தையுடைய அந்த	ஞானத்தையுடைய பசு அந்த
85	29	அவவழி நின்று	அவ்வழிநின்று
87	23	எரிய வேண்டும்	எரியும்.
88	12	சிவகிருத்தியங்களே	சிவ பிரானுடைய கிருத்தியங்களே
90	2	உயிர்கள் சிவன்	உயிர்கள் முத்தியிற்சிவன்
,,	17	அப்பறே்	அப்பாற்
93	2		நிலவ—தோன்றவே (என்ற பக் 92 கடைசி வரியை இங்கு முதலில் கூட்டுக)
,,	21	முதற்பாதியோடு	முற்பாதியோடு
96	36	—(அவற்றில்)	—(அவற்றிற்கு)
,,	24	கோடாகிய	பற்றுக்கோடாகிய
,,	28	உபக்கிரியாமல்)	உபகரியாமல்)
99	19	சங்:-	3. சங்:-
102	18	ஐயஞ்சினப்புறத்தான்'	என்பதன்முன் 'கரணங்களெல்லாங் கடந்து நின்ற கறை மிடற்றன்' (என்ற மேற்கோள் விடுபட்டுள்ளது சேர்க்க)
104	5	எடுத்ததற்கு	எடுத்தற்கு
105	20	ளெழுதுற	ளெழுதுறு
,,	21	கண்மனப்	கன்மனப்
,,	26	லறுதலி	லறிதலி
107	9	உதலியது—	உதவியது—
	24	அறுத்தும்—	அறுத்ததும்—
108	17	எந்தினர்போல—	ஏந்தினர்போல—
,,	18	மருட்டு—	மருட்கு—
,,	31,32	சேர்ந்தவர்க்கு;	சேர்ந்தவர்க்கு'—அடைந்தவர்க்கு;
,,	32	வாய்த்திடும்	வாய்ந்திடும்
,,	37	என (இரங்கி)	என(இரங்கி)அழைப்பதும்;
109	5	வெய்ய பூமியினுள்	வெய்ய பூழியினுள்
,,	6	உற அமுங்கி	உற அழுங்கி
109	21	தன் மாத	தன்மத

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
,,	23	ஏ, 2இல்	ஏ, 42இல்
111	2	செவிப்யுலனை	செவிப்புலனை
112	10	கருவீநியமம்	கருவிநியமம்
113	2	சங்:-	4. சங்:-
,,	3,4	குளிர்ந்த நிழலை	குளிர்ந்தமர நிழலை
115	31	தீ தெரி	(நீ) தெரி.
118	6	பொருள் (என்பதன்பின்)	கொள்பொருள் — கொள்ளப்படுகிறபொருள் (விடுபட்டுள்ளது. சேர்க்க)
,,	32	நீக்கம்-இல்-நீங்குதல்	நீக்கம்இல்—நீங்குதல்
119	29	றைறந்தனை	றறைந்தனை
121	7	மாசப் பகுதியு	பாசப் பகுதியு
123	7	வசத்திற்	வயத்திற்
	34	உபாதானகாரணம் (என்பதன்பின்)	(அதுவா?) அன்ரும் என்னின் — இல்லையென்ருல்; நிமித்த காரணம் —நிமித்த காரணம் (விடுபட்டுள்ளது; சேர்க்க)
124	3	அறைத்தனை—	அறைந்ததனை—
125	37	காட்டாய	காட்டிய
126	18	வவுரா—	வளரா
128	24	தான்—ஆகான்—குயவன்	தான்ஆகான்—குயவன்
	31	பிராமணத்தில்	பிரமாணத்தில்
130	2	(ஒன்றை);(என்பதன்பின்)	உணராமையும் அறியாதிருத்தலும் (அதனை அறியாமலிருந்து கொண்டே இன்னென்றை); (என்ற பகுதி விடப்பட்டுள்ளது சேர்க்க)
,,	28	பொருள்முத்தி—	பொருள்—முத்தி
	36	தெரிந்திடும்	தெரித்திடும்—
134	35	சைட்டிக்கிறது	சேட்டிக்கிறது
,,	,,	சைட்டிக்கவில்லை	சேட்டிக்கவில்லை
135	6	கலந்துள்ளது (என்பதன்பின்)	ஆகலின் அவையும் சேதனமே. அப்படியே கடபடாதிகளிலுள்ள சைதன்யமும் அவற்றை அசைப்பதில்லை, ஆயினும் அவற்றிற்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
			கலந்துள்ளது. (என்ற வாக்கியங்கள் விடுபட்டுள்ளன. சேர்க்க)
136	9	அமைம்புக்குக்	அமைப்புக்குக்
,,	21	கருமத்தி லகப்பட்டு	கரும மலத்தி லகப்பட்டு
137	18	அச்சேதனமே	அசேதனமே
139	4	அவ்வளவிற்குள்	அவ்வளவிற்றூன்
140	11	இன்பப் பொருள் இன்பப் பொருள்களா யிருத்தல்	இன்பப் பொருள்களா யிருத்தல்
,,	17	அவனது சம்பந்தம்	அவளது சம்பந்தம்
,,	30	இருதகைமை	இழிதகைமை
,,	36	அம்மட்டே?	அம்மட்டோ?
141	25	சிவனுக்கே	சிவனுக்கு
142	2	தீயர்	இவர் தீயர்
,,	20	உயிரும்	உடம்பும் உயிரும்
145	32	கரண ஞானம்	கரண ஞானமும்
,,	37	விவரிக்கிற	விவகரிக்கிற
146	25	கிவமொன்றே	சிவமொன்றே
,,	27	அனனுக் கில்லே	அவனுக்கில்லே
,,	30	தடத்தப்பார்வையில் கற்பனேயே	தடத்தப் பார்வையில் மெய்யாயிருந்தாலும் சொரூபப் பார்வையில்
,,	37	தூயயொழுக்கங்களெனக்	தூய வொழுக்கங்களெனக்
147	22	பிரிவு இலன்—	பிரிவும் இலன்—
148	26	உவப்பு இன்று ஆய்—	உவப்பும் இன்று ஆய்—
149	2	சைவாதி	சைவவாதி
150	26	மொன்றிஞன்	மொன்றினென்
151	35	பொருந்தில	பொருந்தின
152	6	அப்பரிபாகம்;	அது—அப்பரிபாகம்
153	4	தலேவருள்	தலேவரும்
,,	9	அருட்டு—	அருட்கு—
154	33	பதி பசு என்ற—	பசுபதி என்ற
,,	39	கூறுகிறு	கூறுகிற
155	6	தரும்—	தகும்—
,,	22	விளங்கிய;	விளங்கியருளிய;
156	3	76இல்	74இல்
,,	7	'மற்றெரு'	'மற்றெருரு'
157	7	பிராத்தங்களே	பிராரத்தங்களே
158	17	ஒராசிரிய	ஒராசாரிய
,,	35	ஞானத்துக் காரண	ஞானத்துக்குக் காரண
159	17	மயாகாரிய	மாயாகாரிய
160	13	யெய்துதற்குகுச்	யெய்துதற்குச்
III	8	தெள்னேணங்	தெள்ளேணங்

வரி பக்க என் முதலாக எண்ணப்பட்டுள்ளது. குறியீடுகளில், ; — முதலிய பல விடுபட்டுள்ளன, அடைப்புக்குறிகள் விடுபட்டனவுள. அவற்றைப் பெய்து கொள்க. ஒற்று விடுபட்டனவற்றையும் பெய்து வாசிக்க. பிழைகள் நிகழ்ந்தமைக்குப் பொறுத் தருள்க.

உ

சிவமயம்

செய்யுள் முதற் குறிப்பகராதி

சங்கற்ப நிராகரணம் என்னுமிந்நூல் 12 அகவல்கள் கொண்டது. ஆயினும் காப்பு, பாயிரம், மாயாவாதி முதல் சைவ வாதி வரை மதமும் நிராகரணமும் ஆக 20 பாடல்களாக இங்கே கொடுக்கப்பட்டுள்ளன. அம்முறையில் இங்கே செய்யுள் முதற் குறிப்பகராதி தரப்பட்டுள்ளது.

[எண் பக்க எண்]

அரிதேர்ந்	58
அறிவா	147
இதுகதி	149
இருந்துன்	104
இன்றுன	93
ஈசன	70
உரைதரு	15
சேர்ந்த	74
திருந்திய	1
திறம்பெற	119
நவிற்றிய	9
நீங்கா	91
பஃறுளைக்	103
பாசமும்	73
புவன	113
பெருங்கட	3
மறைக	70
முத்தி	60
மூலமலத்தாற்	65
வகுத்துரை	66

உ

விரைவில் வெளிவர இருக்கும் எமது வெளியீடுகள் :

1. சிவப்பிரகாசம்.
2. நெஞ்சு விடு தூது.
3. திருவுந்தியார்.
4. திருக்களிற்றுப்படியார்.

உரையாசிரியர் :

சிவஸ்ரீ. ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளையவர்கள்.

ஆசிரியரது உரைநடை நூல்கள் :

5. தமிழ்ச் சிவஞானபோதம் முதல் நூலன்று, மொழிபெயர்ப்பே (120 காரண மறுப்பு)
6. கருங்குழிப் பிள்ளை பாடல்கள். (ஆராய்ச்சி)

ரெக்ஸி, நெல்லை-1. போன்: 26139